மின்தமிழ் மேடை

"தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம்"

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)
வெளியிடும் காலாண்டு மின்னிதழ்
மின்தமிழ்மேடை - காட்சி: 11
அக்டோபர் — 2017

THF
தமிழ் மரபு அறக்கட்டளை

மின்தமிழ் மேடை

காட்சி: 11

அக்டோபர் - 2017

“தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம்”

முன்அட்டைப் படம்: அழகன்குளத்தில் அகழ்வாய்வுப் பணி

THF

தமிழ் மரபு அறக்கட்டளை

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு

http://www.tamilheritage.org/

இதழ் தொகுப்பு: தேமொழி

தலையங்கம்: தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம்

வணக்கம்.

தமிழகத்திற்கும் உலகின் ஏனைய பாகங்களுக்குமான கடல்வழிப்பயணம் என்பது பன்னெடுங்காலமாகத் தொடர்வது. ஐரோப்பியர்களும் அரேபியர்களும் தான் கடல் வழிப்பாதையை ஆட்சி செய்தவர்கள் என்றும், தமிழர்களுக்குத் தம் நாட்டினை விட்டுத் தூர நாடுகளுக்குச் செல்வது புதிய முயற்சியே, என்ற தவறான சிந்தனையானது, உலகில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களை அறியாதோர் கொண்டிருக்கும் தவறான கருத்தாகும்.

இன்றைக்கு 4,000 ஆண்டு வாக்கில் தென் கிழக்கு நோக்கிச் சென்ற தமிழ்மக்கள் இந்தோனிசியா, பாப்புவா நியுகினி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவுகளிலும் தங்கள் தடம் பதித்துள்ளனர். இன்று இப்பகுதிகளில் வாழும் பூர்வ குடி மக்களிடையே நிகழ்த்தப்பட்டு வருகின்ற பல்வேறு வகைப்பட்ட ஆய்வுகள் இவ்வகைப் பயணங்களின் வழி தமிழகத்திலிருந்து கடல்வழியாக இவர்கள் சென்றிருக்கக்கூடும் என்ற அனுமானங்களை உறுதி செய்வனவாக உள்ளன.

தொல்லியல் ஆய்வுகள் தான் தமிழகத்தின் பண்டைய நாகரிகத்தின் வயதினைக் கண்டறிய நமக்கிருக்கும் ஒரே சாதனம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை அதன் கடற்கரைப் பகுதிகள் குறிப்பிடத்தக்க துறைமுகப் பகுதிகளைக்கொண்டிருந்தன என்பதைக் காணமுடிகின்றது. தொண்டி, பட்டணம், முசிறி, அரிக்கமேடு, வசவசமுத்திரம், மரக்காணம், காரைக்காடு/குடிக்காடு, காவிரிப்பூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை போன்றவை சங்ககாலத்து துறைமுகப் பட்டினங்களாகத் திகழ்ந்தன. ஆனால் கால ஓட்டத்தில் அரசியல் மாறுபாடுகளினால், இயற்கை

சீற்றத்தினாலும், சமூக நிலை மாற்றங்களினாலும் இந்தப்பகுதிகள் அதன் சிறப்பையும் வளத்தையும் இழந்து இன்று முக்கியத்துவம் அற்ற பகுதிகளாக மக்களால் அறியப்படும் நிலையைக் காண்கின்றோம்.

ஆயினும் இத்தகை நிலப்பகுதிகளில் சங்க இலக்கியங்கள் காட்டும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், இன்று சாதாரணமாக அப்பகுதியைக் காணும் போது கிடைக்கின்ற பண்டைய தொல்லியல் சின்னங்கள் மற்றும் மக்களின் வாழ்வியல் கூறுகளை உற்று நோக்கும் போதும் அப்பகுதிகள் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட வேண்டிய பகுதியே என்ற சிந்தனை நிச்சயம் ஏற்படும். இப்படி அடையாளப்படுத்தி ஆராய முற்படும் போது தமிழர் நாகரிகத்தின் தொன்மையை அறிந்து கொள்ள உதவும் சான்றுகள் பல கிடைப்பது சாத்தியப்படும்.

கீழடியில் நிகழ்த்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பல தடைகளைக் கடந்து மூன்றாம் கட்டத்தை முடித்துள்ளது. அங்கு இனி ஆய்வு செய்ய ஒன்றுமில்லை என்ற கருத்துக்கு எதிராக மீண்டும் அப்பகுதியில் அகழ்வாய்வு செய்யப்படாமல் விடுபட்டுப் போன பகுதிகளையும் செய்ய வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கத்தொடங்கி உள்ளது. இந்த நிலையில் அண்மைய

காலத்தில் தமிழகத்தில் நிகழ்த்தப்பட்ட மிக முக்கிய அகழ்வாய்வாக அழகன்குளம் ஆய்வு திகழ்கின்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அழகன்குளத்தில் இந்த ஆண்டு மே மாதம் அகழ்வாய்வுப் பணியைத் தமிழக தொல்லியல் துறை தொடங்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்துள்ளது. இந்த ஆய்வின் போது 52 இடங்களில் குழிகள் தோண்டப்பட்டன என்றும் அதில் சங்ககாலத்து கட்டுமானங்கள் சுடுமண் பாண்டங்கள், தமிழி எழுத்து பொறித்த மண்பாண்டங்கள், மணிகள் என ஏறக்குறைய 13,000 தொல்லியல் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன என்பதும் அவை தமிழகத்திற்கும் ரோமானியர்களுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இருந்த வணிகத் தொடர்பினை உணர்த்துவதாகவும் இருக்கின்றன என்பதையும் அறியுக்கூடியதாக இருக்கின்றது.

அழகன்குளத்தில் வெற்றிகரமாக ஆய்வினை நடத்தி முடித்த தமிழக தொல்லியல் துறையே, தேங்கி நிற்கும் கீழடி அகழ்வாய்வுப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும் என்பதைத் தமிழ் மரபு அறக்கட்டளை வலியுறுத்துகின்றது.



தமிழகத்தின் தொன்மையான தத்துவங்களில் ஒன்று சமணம். சமணச் சுவடுகளை அடையாளம் கண்டு அவற்றைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைச் சேகரித்து அவற்றை ஒரு பிரத்தியேக வலைப்பக்கத்தில் உள்ளீடு செய்து வைக்க வேண்டும் என்ற தமிழ் மரபு அறக்கட்டளையின் எண்ணமும் இந்த மாத தொடக்கம் நிறைவேறியது. http://jainism.tamilheritage.org/ என்ற வலைப்பக்கம் இதுவரை நாம் வெளியிட்டுள்ள பதிவுகளையும் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வகையில் ஆய்வுத்தளத்தில் ஈடுபடுவோருக்குப் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மரபு அறக்கட்டளையின் தொடரும் செயல்பாடுகளில் இணைந்து கொள்ளுங்கள். உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்!

அன்புடன்
முனைவர்.க.சுபாஷிணி
அக்டோபர் 15, 2017

இந்த இதழில் ...

மின்தமிழ் மேடை - காட்சி: 11; அக்டோபர் - 2017

இந்த இதழில் “தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம்”

(மின்தமிழில் ஜூலை 16, 2017 - அக்டோபர் 15, 2017 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு)

உள்ளடக்கம்

தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம் – முனைவர். சுபாஷிணி — ii

1. அந்தியூர்ப் பகுதியில் தொல்லியல் தடயங்கள் – து. சுந்தரம் — 1
2. ஊத்துக்குளிப் பகுதியில் தொல்லியல் தடயங்கள் – து. சுந்தரம் — 22
3. மறுதால்தலை பிராமி கல்வெட்டும் சமணர் கற்படுக்கைகளும் – முனைவர். சுபாஷிணி — 36
4. கள்ளிகுடி கல்வெட்டு – கல்வெட்டுத் தகவல் — 39
5. திருவாரூர் கொடுங்கைக் கல்வெட்டு – கல்வெட்டுத் தகவல் — 43
6. கல்லணை ஆஞ்சநேயர் கோயில் கல்வெட்டு – து. சுந்தரம், நூ த லோ சு — 45
7. வீரக்கை என்னும் சதிக்கல் – து. சுந்தரம் — 50
8. காஞ்சியில் பல்லவர்கால பாணியில் அமைந்த கற்றளிகள் – நூ த லோ சு — 57
9. மானம்பாடி அருள்மிகு நாகநாத ஸ்வாமி திருக்கோயில் – நூ த லோ சு — 69
10. தாராபுரம்-கோட்டையும் கோட்டைக் கோயிலும் – து. சுந்தரம் — 73
11. விஜயநகரர் ஆட்சியில் கொங்குநாடு – து. சுந்தரம் — 87
12. கங்கைகொண்டசோழபுரச் சலுப்பையும் சாளுக்கியரும் – து. சுந்தரம் — 95
13. அரேபியர் வணிகமும் இந்திய மேலைக் கடற்கரையும் – து. சுந்தரம் — 106
14. சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம் – நூ த லோ சு — 112
15. குன்று முட்டிய குரீஇயும், குறிச்சி புக்க மானும் – நூ த லோ சு — 118
16. கோழியூர்க் கதைகள் – தேமொழி — 125
17. பழந்தமிழ்ப் பாடல்களாக உரைகாரர் காட்டும் விடுகதைகள் – நூ த லோ சு — 136
18. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு – ஆமோஸ் நவீன் இளையராஜா — 143
19. வட்டார வழக்கு: வேலூர்–திருவண்ணாமலை பேச்சு வழக்கு – சுரேஷ்குமார் — 147
20. சாயர்புரத்தில் வாழும் நெசவுக்கலை – முனைவர். சுபாஷிணி — 149
21. அந்தியூரன் பழமைபேசி நினைவில் ஊரகவியல் – பழமைபேசி — 153
22. பெயரில் என்ன இருக்கிறது? – தேமொழி — 158
23. கவிமணி ஒரு வரலாற்றாய்வாளர் – து. சுந்தரம் — 164
24. ரொசெட்டா ஸ்டோன் – செல்வன் — 172
25. தீதும் நன்றும் பிறர்தர வாரா - இயற்பியலாளரின் பார்வையில் – நடராஜன் ஸ்ரீதர், சந்திரமோகன் — 180
26. மலையாளி பழங்குடி மக்களின் இடப்பெயர்வும் தோற்றத் தொன்மங்களும் – ம. செல்வபாண்டியன் — 187
27. Kavari in Tirukkuṟaḷ and Sangam Texts – முனைவர். நா. கணேசன் — 201
28. கவிதை: பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி – ருத்ரா இ.பரமசிவன் — 207
29. கவிதை: கொடுவரி முதலை குடை தண் துறைய – ருத்ரா இ.பரமசிவன் — 212
30. கவிதை: எங்கிருந்தாவது ஒரு புயல் – ருத்ரா இ.பரமசிவன் — 215
31. கவிதை: நண்பனே! நண்பனே! நண்பனே! – ருத்ரா இ.பரமசிவன் — 217
32. கவிதை: மனிதம் சுடர்க! – ருத்ரா இ.பரமசிவன் — 218
33. கவிதை: கோர(க்)ப்பூர் – ருத்ரா இ.பரமசிவன் — 220

தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள் — 222

தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள் — 232

1. அந்தியூர்ப் பகுதியில் தொல்லியல் தடயங்கள்

— **து. சுந்தரம்**

முன்னுரை:

அண்மையில் ஜூன் 18-ஆம் நாள், திருப்பூர் மாவட்டம் அந்தியூர்ப் பகுதியில் தொல்லியல் தடயங்கள் சிலவற்றைக் காண ஒரு பயணம் மேற்கொண்டோம். நண்பர் தென்கொங்கு சதாசிவம் தாம் பார்த்திருந்த ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டைப் படிக்கும் முயற்சியாக என்னை அழைத்திருந்தார். கோவையிலிருந்து அவரும் நானும் புறப்பட்டு சத்தியமங்கலத்தில் வரலாற்று ஆய்வாளரான திரு. இராமசாமி அவர்களையும், வரலாற்று ஆர்வலர் ஃபவுசியா அவர்களையும் இணைத்துக்கொண்டு அந்தியூர் சென்றோம். அந்தியூரை அடுத்துள்ள தாமரைக்கரை என்னும் ஊரில் மேலும் ஒரு வரலாற்று ஆர்வலரான நந்தீசுவரனும் அவரது நண்பர் மாதேசுவரனும் எங்களுடன் இணைந்துகொண்டனர். அப்பயணத்தின் பகிர்வு இங்கே.

மலைப்பாதையில் பயணம்:

வழியில் பசுமை

அந்தியூர்-பர்கூர் சாலையில் தொடங்கிய பயணம் சிறிது நேரம் வரை மலைப்பாதையில் நீடித்தது. மலைப்பாதைக்கே உரிய வளைவுச் சாலையும், இருபுறமும் பசுமைக் காடும், சத்தியமங்கலம் பகுதியின் பச்சை மடிப்புகளுடன் தெரிந்த மலை அடுக்குகளும் கண்ணுக்கும் உள்ளத்துக்கும் அழகு சேர்த்தன.

எந்நேரமும் எதிர்கொள்ள வேண்டிவரும் யானைகளின் உலா ஒரு புறம் அச்சம் சேர்த்தது. இருப்பினும் அப்பகுதி மக்கள், இந்த நாள்களில் பகலில் இப்பகுதியில் யானைகளின் நடமாட்டம் இல்லை என உறுதியாகக் கூறவே அச்சம் ஒதுக்கிப் பயணம் தொடர்ந்தோம். அக்கூற்று மெய்யாயிற்று. போகும் வழியிலும் திரும்பும் வழியிலும் யானைகளை நாங்கள் சந்திக்கவேயில்லை.

வறட்டுப்பாளையம் அணை:
போகும் வழியில், வறட்டுப்பாளையம் என்னும் பகுதியில் ஒரு சிறிய அழகான அணையினைக் காண நேர்ந்தது. இது போன்ற பயணங்களின்போதுதான் சிறு சிறு அணைகளின் இருப்பை அறியும் நிலை ஏற்படுகிறது. தமிழகத்தில் உள்ள பல்வேறு அணைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், நீர்க்கால்கள் போன்றவற்றைப் பேணும்-மேம்படுத்தும் வழிவகைகளை நீர்மேலாண்மையில் வல்ல அறிஞர்கள், பொறியாளர்கள் ஆகியோரின் துணைகொண்டு அரசு என்னவெல்லாம் செய்ய இயலும் எனவொரு சிந்தனையும் எழுந்தது.

வறட்டுப்பாளையம் அணைப்பகுதி



தாமரைக்கரை:
வழியில் தாமரைக்கரை என்றொரு ஊர். பெயருக்கேற்றவாறு ஒரு தாமரைக் குளம் இருந்தது. இலைகளும் பூக்களும் நீர்ப்பரப்பில் படர்ந்து அழகாகக் காட்சியளித்தது.

தாமரைக்குளம்

மூங்கில் மரங்கள்:

தாமரைக்கரைக்கு அப்பால், பாதை முழுதும் இரு புறங்களிலும் ஓங்கி உயர்ந்த மூங்கில் மரங்கள் கண்கொள்ளாக் காட்சி.

மூங்கில் மரங்கள்

தேவர்மலை பந்தீசுவரர் கோயில்:

தேவர் மலை என்னும் ஊரில் உள்ள பந்தீசுவரர் கோயிலில் இருக்கும் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டைக் காணும் இலக்கில், தேவர் மலையை அடைந்து கோயிலுக்குச் சென்றோம். ஊர், மலையின் மேல் அமைந்திருக்கவில்லை. சமவெளிப்பகுதிதான். கோயில், பெரியதொரு பரப்புடன் சுற்றுச் சுவருடன் பழமையானதொரு தோற்றத்துடன் கூடிய கற்றளியாகக் காட்சியளித்தது. திருப்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. கருவறையும் அதனையடுத்து அர்த்தமண்டபமும் இருந்தன. அர்த்தமண்டபத்திலும் ஒரு வாயில் காணப்பட்டது. ஜகதி, முப்பட்டைக்குமுதம் ஆகிய உறுப்புகளுடன் எளிய அதிட்டானத்தைக் கொண்டிருந்தது. "கருடகம்பம்" என அழைக்கப்படும் ஒரு விளக்குக் கம்பமும், சிறியதொரு நந்தி மண்டபமும் உள்ளன. நந்தி மண்டபத்தில் இரு நந்திச் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று பழமைத் தோற்றத்தில் இருந்தது. அர்த்தமண்டபச் சுவரில் தேவ கோட்டம் ஒன்றும் காணப்பட்டது. தேவகோட்டத்தின் இரு புறங்களிலும் பாம்புப் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. மற்றொரு சுவரில் ஆமைச் சிற்பம் உள்ளது. மதிற்சுவரின் ஒரு பகுதியில் உச்சியில் பழமையான திருவாசி போன்ற அமைப்பில் காணப்படும் வட்டக் கட்டுமானம் புலப்பட்டது.

நந்திமண்டபத்தில் இரு நந்திகள்

கருவறைத் தோற்றம்

சுவரில் பாம்புப் புடைப்புச் சிற்பம்

சுவரில் ஆமைச் சிற்பம்

இறைவன்- பந்தீசுவரர்:

கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் பந்தீசுவரர். இலிங்கத்திருமேனி. இப்பெயர் சற்றுப் புதுமையாக இருந்தது. இப்பகுதி தமிழகத்தின் பகுதியாக இருப்பினும் கருநாடகத்துடன் மிகுந்த தொடர்புடைய ஒரு பகுதி. கன்னட மொழி பேசும் மக்கள் போசளர் (ஹொய்சளர்), மைசூர் உடையார் ஆகிய அரசர்களின் காலத்தில் புலம் பெயர்ந்தவர்களின் வழியினர் இருக்கும் பகுதியாகத் தெரிகிறது. கோயிலில் நாம் சந்தித்தவர்கள் தமிழ் கலந்த கன்னடம் பேசினர். கோயில், மேற்சொன்ன அரசர்கள் காலத்தில் கட்டப்பெற்றிருக்கக் கூடும். கல்வெட்டுச் சான்றுகளைத் தேடவேண்டும்.

வீரபத்திரர் வழிபாடு:

வீரபத்திரர்

இலிங்கத்திருமேனி இருக்கும் கருவறைக்கு வெளியே, அர்த்தமண்டபத்தில் வீரபத்திரரின் சிற்பம் வழிபாட்டில் உள்ளது. வீரபத்திரர் வழிபாடு, கருநாடகத்தில் விசயநகரப் பேரரசின் காலத்திலிருந்து சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தது. வீரபத்திரருக்குத் தனிக்கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அவ்வகையில் இக்கோயிலிலும் வீரபத்திரர் வழிபாடு இருப்பதால் கன்னட அரசர்கள் காலத்தில் இக்கோயில் கட்டப்பெற்றிருக்கலாம் என்னும் கருத்து வலுப்பெறுகிறது. சத்தியமங்கலம் பகுதி கருநாடகத் தாக்கம் உள்ள பகுதி என்பதில் ஐயமில்லை. இரு கைகளுடன் காணப்படும் வீரபத்திரரின் வலக்கையில் தடித்த பெரிய வாளும், இடக்கையில் பெரிய வில்லும் உள்ளன. தலையில் இருப்பது கரண்ட மகுடம் எனத் தோன்றுகிறது. மார்புப் பகுதி, கை,கால்கள் ஆகிய பகுதிகளில் நிறைய அணிகலன்கள் உள்ளன. சிற்பத்தில் செதுக்கப்பட்டுள்ள அணிகளுக்குமேலே, மார்பில் ஆரங்களும், கால்களில் தண்டைகளும் அணிவித்திருக்கிறார்கள்.

கீழே பீடம், மேலே திருவாசி என முழு அளவில் வேலைப்பாட்டுடன் கற்சிற்பம் அழகாக அமைந்துள்ளது. அருகிலேயே, செப்புத்தகட்டினால் புடைப்புருவமாகச் செய்யப்பட்ட வீரபத்திரர் உருவங்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் வீரபத்திரருக்கு இரு கைகளுக்குமேல் காட்டப்பெற்றுள்ளன. இந்தச் செப்புருவங்களுக்கு அருகில் ஓர் ஆயுதத்தை வைத்திருக்கிறார்கள். ஒரு நீண்ட கோலுடன் ஒரு வளைதடியை (Boomerang) இணைத்ததுபோன்ற தோற்றத்தில் இந்த ஆயுதம் அமைந்துள்ளது.

வீரபத்திரர்-செப்புருவம்- வளைதடி ஆயுதத்துடன்

வீரபத்திரரும் "சதி"யும்:

தட்சன் தான் நடத்திய அசுவமேத வேள்விக்குச் சிவனை அழையாதிருந்தும் சக்தி, வேள்விக்குச் சென்றதும், தட்சன் சக்தியை இழிவுபடுத்தியதும், அதன் விளைவாகச் சக்தி தன்னுள்ளிருக்கும் "யோகாக்னி" என்னும் நெருப்பில் தன்னை மாய்த்துக் கொண்டதும், சிவன் சீற்றமுற்று தட்சயாகத்தை அழிப்பதற்காக வீரபத்திரரை உருவாக்கியதும் பெரும்பாலும் அனைவரும் அறிந்த தொன்மக்கதை. இக்கதையில் தட்சனின் மகளான சக்தியைச் சதி

என்னும் பெயரால் குறிப்பது கருதத்தக்கது. சதி தன்னைத் தீயில் மாய்த்துக்கொள்வதாலேயே உடன் கட்டையேறும் (தீப்பாய்ந்து மாயும்) சமுதாய வழக்கத்துக்குச் "சதி" என்னும் பெயர் அமைந்தது போலும். வீரபத்திரர் முக்கண்ணுடைய சீற்றக்கடவுள். மீசையுடன் நிறைய அணிகலன்களுடன் காணப்படும் தோற்றமுள்ளவர்.

ஹம்பியில் அகழ்வைப்பகத்தில் - வீரபத்திரர் சிலை

வீரபத்திரர் - மற்றுமொரு அழகான சிற்பம்

கல்வெட்டும் செய்தியும்:

கோயிலின் ஒரு பக்கச் சுவரின் தேவகோட்டத்துக்குக் கீழே தரையில் ஒரு பலகைக் கல்லில் கல்வெட்டு காணப்படுகிறது. தரைக்குமேல் ஆறு வரிகள் தெரியும்படியுள்ள ஒரு கல்வெட்டு. ஆறு வரிகளும் ஐந்து நேர்கோடுகளுக்கிடையில் எழுதப்பட்டுள்ளன. கோவையில் உள்ள இராசகேசரிக் கல்வெட்டிலும், ஆலத்தூர் சமணக்கோயிலில் இருக்கும் திருக்களிற்றுப்படிக் கல்வெட்டிலும் இது போலவே கோடுகளுக்கிடையில் எழுத்து வரிகள் பொறிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். தரைக்குக் கீழுள்ள கல்லின் பகுதியிலும் எழுத்துகள் இருக்கக் கூடும். கோயில் திருப்பணி நிறைவுற்றதும் முழுக்கல்லையே வெளியே எடுத்து வைப்பதாகக் கோயிலார்

கூறினர். தரைக்கு மேலே இருக்கும் எழுத்துகளை முழுமையாகப் படிக்க இயலவில்லை. ”ஸ்ரீ” என்னும் எழுத்தோடு தொடங்கும் கல்வெட்டில் ”அருளவிட்டார்”, “பட்டாரகனுக்கு” என ஓரிரு தொடர்கள் மட்டுமே படிக்க இயன்றது. கல்வெட்டின் செய்தியும், கல்வெட்டின் காலமும் இன்னதெனத் தெரியவில்லை. முழுக் கல்லையும் தோண்டியெடுத்த பின்னர் கல்வெட்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

வட்டெழுத்துக் கல்வெட்டு

தாமரைக்கரையில் நடுகற்சிற்பங்கள்:

தாமரைக் கரை. வனச்சரக அலுவலகம் உள்ள ஊர். ஊருக்கு வெளியே, ஒரு காலத்தில் பசுமையான விளை நிலங்களாயிருந்த ஒரு பகுதி. தற்போது “பார்த்தீனியம்” செடிகள் கண்ணுக்கெட்டிய தொலைவு புதர்க்காடாய் மண்டிக்கிடந்தன. அவற்றுக்கிடையில் ஒரு நடைப்பயணம். மூன்று நடுகற்சிற்பங்கள் ஒரே இடத்தில் காணப்பட்டன. மூன்றுமே அடுக்கு நிலை நடுகற்கள். இப்பகுதி கன்னட நாட்டின் சாயலைக்கொண்டுள்ளது என்பதற்கு இந்த நடுகற்களே சான்று. மூன்று அடுக்குகளில் புடைப்புச் சிற்பங்களைக்கொண்டுள்ள நடுகற்கள் கருநாடகப் பாணியைச் சேர்ந்தவை.

தமிழகப்பாணியில் இவ்வாறு இல்லை. முதல் (கீழ்) அடுக்கில் நடுகல் யாருக்காக எடுக்கப்பட்டுள்ளதோ அந்த வீரனின் சிற்பமும், இரண்டாம் அடுக்கில் வீரன் மேலுலகம் செல்கின்ற காட்சியும், மூன்றாவது அடுக்கில் வீரன் மேலுலகம் சென்றுவிட்டதைக்குறிக்கும் வகையில் சிவலிங்கமும் நந்தியும் வடிக்கப்பட்டிருக்கும்.

முதல் நடுகல்:

இங்கே, முதல் நடுகல் ஒரு புலிகுத்திக்கல். முதல் அடுக்கில் கால்நடைகளைக் காக்கும் பணியில் புலியுடன் போராடும் வீரனின் சிற்பம். இரண்டாம் அடுக்கில், தேவமகளிரின் உருவங்கள். வீரனை அவர்கள் மேலுலகத்துக்கு அழைத்துச் செல்வதன் குறியீடு. மூன்றாவது அடுக்கில் சிவலிங்கமும் நந்தியும்.

இரண்டாம் நடுகல்:

இரண்டாம் நடுகல்லில் முதல் அடுக்கில் வீரன் ஒருவன் காளையின் கொம்பைப் பிடித்துள்ளதுபோல் சிற்பம். இது காளையுடன் போரிடுவதைக் குறிக்க வாய்ப்பில்லை. மாடுபிடிச் சண்டை என்னும் தொறுப்பூசலில் வீரன் ஈடுபட்டதைக் குறிக்கலாம். இரண்டாம் அடுக்கில் தேவமகளிர். மூன்றாம் அடுக்கில் மேலுலகம் சென்றுவிட்ட வீரனே சிவலிங்கத்தை வழிபடும் காட்சி. வீரனின் வலமும் இடமும், நிலவும் கதிரும் பொறிக்கப்பட்டுள்ளன.

வழக்கமாகக் கல்வெட்டுகளில் காணப்பெறும் “சந்திராதித்தவரை” என்னும் தொடரின் குறியீடு.

மூன்றாம் நடுகல்:

மூன்றாம் நடுகல்லில் முதல் அடுக்கில் பெண் ஒருத்தி, புலியுடன் சண்டையிடும் காட்சி. பெண்ணுக்கு எடுத்த அரிதான புலிகுத்திக் கல். இரண்டாம் அடுக்கில் தேவ மகளிர். மூன்றாம் அடுக்கில் சிவலிங்கமும் நந்தியும்.

அந்தியூர்-சிவன் கோயில்:

அந்தியூரில் உள்ள சிவன் கோயிலில் இறைவன் செல்லீசுவரர், இறைவி செல்லீசுவரி. கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்புகளுடன் உள்ள கோயில். வேசர விமானம் (வட்ட வடிவில் உள்ளது). அதிட்டானப்பகுதியில் ஜகதி என்னும் உறுப்பு தரைக்குக் கீழ் மறைந்துள்ளது. அதனையடுத்து முப்பட்டைக் குமுதம் உள்ளது. குமுதத்தையடுத்து ஒரு கண்டம், ஒரு பட்டிகை, மீண்டும் ஒரு கண்டம், இறுதியில் தாமரை இதழ்முனை கொண்ட வேதி என்னும் உறுப்புகளோடு பாதபந்த அதிட்டானம் என்னும் வகையில் அதிட்டானம் அமைந்துள்ளது. சுவர்களில் அழகான தேவகோட்டமும், தேவகோட்டத்துக்கு இருபுறங்களிலும் அழகான தூண்களும் அமைந்துள்ளன. சுவர்ப்பகுதியின் இறுதியில் கர்ணகூடுகளும், அவற்றுக்கு மேலே யாளி வரிசையுடன் கற்றளியின் ”பிரஸ்தரம்” என்னும் உறுப்பு முடிவுறுகிறது. அதற்குமேல் செங்கல், சுதை ஆகியவற்றாலான கிரீவம், சிகரம், கலசம் ஆகிய விமான உறுப்புகள் உள்ளன.

தேவகோட்டமும் சுவர்த்தூண்களும்

கர்ணகூடுகளும்-யாளிவரிசையும்

கல்வெட்டுகள்:

இக்கோயிலில் மூன்று கல்வெட்டுகள் பதிவாகியுள்ளன. இரு கல்வெட்டுகள், கொங்குப்பாண்டியன் வீரபாண்டியனுடைய காலத்தைச் சேர்ந்தவை. மூன்றாவது உம்மத்தூர் அரசர் வீரநஞ்சராயர் காலத்தது.

முதல் கல்வெட்டு-கண்மாளர்க்கு உரிமைகள்:

இக்கல்வெட்டு கொங்குப் பாண்டிய அரசன் வீரபாண்டியனின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. காலம் கி.பி. 1280. வழக்கமாகக் கொடைகளைப் பற்றிப் பேசும் கல்வெட்டாக அமையாமல், 13-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில், வட கொங்கில் நிலவிய சமுதாயச் சூழலை எடுத்துக்காட்டும் வண்ணம் அமைந்திருப்பது இக்கல்வெட்டின் சிறப்பாகும். சில சமுதாயத்தினருக்குச் சில உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. அவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தினர்தாம் கண்மாளர்கள். கம்மாளர், பஞ்சகம்மாளர் என்று தற்போது அழைக்கப்படும் இச்சமுதாயத்தினர்க்குக் காலுக்குச் செருப்பு அணிந்துகொள்ளும் உரிமையில்லை. தம்முடைய வீடுகளுக்குக் காரை (சாந்து) பூசிக்கொள்ள உரிமையில்லை. தம் வீடுகளில் நடைபெறும் நன்மை தீமை நிகழ்வுகளின்போது சங்கு ஊதவும், பேரிகை கொட்டுவித்துக் கொள்ளவும் உரிமையில்லை. இந்த உரிமைகளை வழங்கி அரசன் நேரடியாக வாய்மொழி ஆணை பிறப்பிக்கிறான். உடன், ஆணை ஓலையில் எழுதப்படுகிறது. அரசன் நேரடியாக ஆணை பிறப்பித்தல் கல்வெட்டுகளில் காணப்பெறும் சில சொற்றொடர்கள் வாயிலாக உணர்த்தப்பெறும். “நாம்”, “நம்மோலை”, “சொன்னோம்” போன்றவை அவை. இக்கல்வெட்டின் படிகள் ஒரே நேரத்தில் பேரூர், குடிமங்கலம், கரூர், கடத்தூர், மொடக்கூர், பாரியூர், அவினாசி ஆகிய ஊர்களிலும் உள்ளன என்பது மேலும் ஒரு சிறப்பு. இவ்வாறு பல ஊர்களின் கோயில்களிலும் கல்வெட்டுகளில் இந்த ஆணை பொறிக்கப்பட்டதனின்றும், வடகொங்கைச் சேர்ந்த வடகரை நாட்டில் இருந்த கண்மாளர்கள், தங்கள் உரிமைக்காக அரசனிடம் போராடி முறையிட்டு உரிமையைப் பெற்றார்கள் எனக் கருதவேண்டியுள்ளது.

கண்மாளர் உரிமை - “பேரிகையுள்ளிட்ட” சொற்றொடர்

கல்வெட்டின் பாடம்:

1 **ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்ரவத்தி கோனேரின்மை கொண்டான் வடகொங்கில் வடகரைனாட்டில் கண்மாளற்கு பதினஞ்சாவது தங்களுக்கு நன்மை தின்மைக்கு இரட்டைச் சங்கும் ஊதி பேரிகையுள்ளிட்டனவுங் கொட்டுவித்துக் கொ**

2 **ள்ளவும் தாங்க(ள்) புறப்பட வேண்டுமிடங்களுக்கு (பா)தரக்ஷை கோத்துக்கொள்ளவும் தங்கள் வீடுகள் சாந்திட்டுக்கொள்ளவும் சொன்னோம் இப்படிக்கு நம்மோலை பிடிபாடாகக்கொண்டு சந்த்ராதித்யவரை செல்வதாக தங்களுக்கு வேண்டும்மிடங்க**

3 **ளிலே கல்லிலும் செம்பிலும் பொறித்துக் கொள்ளுவாராகவும்**

இரண்டாம் கல்வெட்டு-சந்தியா தீபம் கொடை:

இக்கல்வெட்டு கொங்குப் பாண்டிய அரசன் வீரபாண்டியனின் பதினொன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. காலம் கி.பி. 1276. சந்தியா தீபம் எரிப்பதற்காகப் பத்துப் பணம் கொடையாக அளிக்கப்பட்டதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. கல்வெட்டில் அந்தியூர் வடகரை நாட்டுப்பிரிவில் இருந்தது என்னும் குறிப்புள்ளது. மேலும், நரம்பர் என்னும் சமூகத்தினர் இருந்த செய்தியும் உள்ளது. இந்த நரம்பர்களில் நாட்டுக் காமிண்டன் மற்றும் காமிண்டன் பதவியிலிருந்த இருவர் கொடையளித்துள்ளனர்.

கல்வெட்டில் "**யோகம் ஆகையில்**" என்னும் தொடர்

மூன்றாம் கல்வெட்டு-சமாதிக்கு நிலம் கொடை:

இக்கல்வெட்டு உம்மத்தூர் அரசர் வீரநஞ்சராயர் காலத்தது. காலம் கி.பி. 1500 ரௌத்திரி வருடம். பொன்னாங்கட்டியார் வேங்கடநாதர் என்பவருக்குச் சமாதியிட நிலம் வாங்கிச் சமாதி எழுப்பி, அந்நிலத்தைச் செல்லீசுவரர் கோயிலுக்குக் கொடையாக அளித்த செய்தியைக் கல்வெட்டு சொல்கிறது. சமாதியானதைக் கல்வெட்டு "யோகம் ஆகையில்" எனக்குறிப்பிடுகிறது.

கல்வெட்டுகளின் நிலை:

கல்வெட்டுகளின் இன்றைய நிலை நமக்கு அளிப்பது வருத்தமே. ஒரு கல்வெட்டுகூட முழுதும் படிக்கும் வகையில் இல்லை. எழுத்துகளின் மீது பல ஆண்டுகளாகக் காவி வண்ணம் பூசப்பட்டதால் எழுத்துகள் மறைந்துவிட்டன. சுதையும் செங்கல்லும் கொண்டுள்ள கட்டுமானத்தில் வெள்ளைச் சுண்ணமோ காவிச் சுண்ணமோ பூசுதல் வழக்கம். கல் கட்டுமானத்தின்மீது எவ்விதப்பூச்சும் பூசாமல் விட்டுவைத்தலே அதன் மெய்யான அழகையும், சிற்பச் சிறப்புகளையும், கல்வெட்டுகளின் முழுமையையும் எடுத்துக்காட்டவல்லது. ஆனால், பல கோயில்களில் இந்த வழிமுறை பின்பற்றப்படுவதில்லை. கண்மாளர் கல்வெட்டினை நூலில் கண்டதோடு சரி. நேரில் படித்து மகிழ இயலவில்லை. ஓரிரு சொற்கள் பார்வையில் பட்டன. மகாபாரதக் கதையில், வனவாசத்தின்போது கண்ணனுக்குச் சோறு கிடைக்கவில்லை; சோற்றுப்பருக்கை மட்டுமே கிடைத்தது என்பதுபோல.

அந்தியூரில் ஒரு வீரபத்திரர் கோயில்:

சிவன் கோயிலுக்கருகிலேயே ஒரு வீரபத்திரர் கோயில் காணப்பட்டது. வீரபத்திரர் வழிபாடு இப்பகுதியில் இருந்துள்ளமை பற்றிய சான்றினை முன்னரே தேவர்மலைக் கோயிலில் கண்டிருக்கிறோம். அந்தியூரில் ஒரு தனிக்கோயிலே காணப்பட்டது. எளிமையான கற்றளி. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றில் சுவர்ப்பகுதியில் அரைத்தூண்கள் உள்ளன. கருவறை விமானம் சற்றே மாறுபட்டிருந்தது. வட்ட வடிவிலான வேசர விமானத்துடன் சாலை அமைப்பும் கலந்த ஒரு கலவையான தோற்றம். அறநிலையத்துறையில் பணியாற்றும் திரு. தணிகாசலம் என்பவர்- கோயில்களின் பழமை, வரலாறு பற்றிய ஆர்வமுள்ளவர்- புறக்கணிக்கப்பட்ட இக்கோயிலை முயற்சியெடுத்துப் பேணிவருகிறார்.

வீரபத்திரர் கோயில் - அந்தியூர்

வீரபத்திரர் கோயில் - மற்றொரு தோற்றம்

நடுகல் சிற்பம்:

மாரியம்மன் கோயில் மண்டபம் ஒன்றை இடித்ததனால் கிடைத்த கற்றூண்களைச் சிவன் கோயிலின் முன்புறத்துள்ள திறந்த வெளியில் குவித்து வைத்திருக்கிறார்கள். இந்தக் குவியலுக்கிடையில் ஒரு வீரனின் நடுகல் சிற்பமும் காணப்பட்டது.

நடுகல் சிற்பம் - கேட்பாரற்ற நிலையில்

தொல்பழங்காலக் கல்திட்டையும் இராஜகம்பளத்தாரின் மாலக்கோயிலும்: அந்தியூர்-சத்தி சாலையில், அந்தியூரை அடுத்துள்ள தோப்பூரில் சாலைக்கருகிலேயே ஒரு மாலக்கோயில் காணப்பட்டது. மாலக்கோயிலின் இந்தப்பதிவு நிகழாமலே போயிருக்கும். ஏனெனில், நாங்கள் பயணம் சென்ற “கார்” இதைக்கடந்து சென்றுவிட்ட நிலையில், குவியலாக நின்ற கல் தூண்கள் நொடிப்பொழுதில் வரலாற்று ஆர்வலர் ஃபவுசியா அவர்களின் கண்களில் பட்டுவிடவே நாங்கள் வண்டியைப் பின்னுக்குக் கொண்டுவந்து பார்க்க நேரிட்டது. ஈரோடு மாவட்டப்பகுதியில் நாயக்கர் இனத்தார், இறந்துபோன தம் உறவினர் நினைவைப் போற்றும் வகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நினைவுக்கல எழுப்பி வழிபடுகிறார்கள் (இறந்தவர்களைப் புதைத்த அல்லது எரியூட்டிய இடம் வேறு; நினைவுக்கல் எழுப்புகின்ற இடம் வேறு). இந்த இடம் மாலக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. முன்னர் ஒருமுறை, பவானி வட்டத்தில் கள ஆய்வுக்குச் சென்றபோது, சின்னப்புலியூர் என்னும் சிற்றூரில்

இத்தகைய மாலக்கோயிலைப் பார்த்த நினைவு வந்தது (அதன் ஒளிப்படம் கீழே காண்க). தோப்பூரில், நாம் பார்த்த மாலக்கோயில் இராஜகம்பளத்தார் குலத்தவர்க்குரியது. மிகப்பெரியதொரு பரப்பில் நூற்றுக்கணக்கான நினைவுக்கற்கள். இதில் உள்ள சிறப்பு என்னவெனில், இந்த மாலக்கோயிலை, இங்கே முன்னரே இருந்ததொல்பழங்காலக் கல்திட்டையொன்றைச் (DOLMEN) சுற்றி அமைத்திருக்கிறார்கள். பெருங்கற்கால நினைவுச் சின்னம் இருப்பது தெரியாமலேயே, அந்த மரபைப் பேணும் வகையில் மாலக்கோயிலை அமைத்திருப்பது தற்செயல் என்றாலும் பொருத்தமான ஒன்றே. பழங்காலத்து எளிய கருங்கற்களும், புதிய பளபளப்பூட்டிய தற்காலத்துக் கருங்கற்களும் கலந்து காணப்பட்ட நினைவுக்கற்களின் இடையில் எழுத்துப் பொறிக்கப்பட்ட ஒரு கல் பார்வையைக் கவர்ந்தது. உடன் கொண்டுசென்ற மைதா மாவினை அக்கல்மீது பூசியபின்னர் எழுத்துகள் தெளிவாகத் தெரிந்தன.

மாலக்கோயிலில் ஒரு கல்வெட்டு
எழுத்துகள் புலப்படா நிலையில்

கல்வெட்டு எழுத்துகள் காணும் நிலையில்

மாலக்கோயில் - பின்புலத்தில் பெருங்கற்காலக் கல்திட்டை

மாலக்கோயில்

கல்வெட்டின் பாடம்:

1 சாஷனம் க
2 ல் போட்டது
3 மல்லக்காள்
4 1904 வ
5 ருஷம் மா
6 ர்கழி மீ
7 27 உ மஞ்
8 ஞ்சள் நாயக்
9 கனூர் சூர
10 நாயக்கன்
11 மகன் பட்
12 டகார் கஞ்
13 ச நாயக்க
14 ன் கல்

முடிவுரை:

அந்தியூரை மையப்புள்ளியாகக் கொண்டு சுற்றியுள்ள பகுதிகளில், நாங்கள் கேள்விப்பட்ட சில செய்திகளின் அடிப்படையில், நாங்கள் மேற்கொண்ட தொல்லியல் தடயங்களின் தேடல் பயணம் எங்களுக்கு மிகுந்த நிறைவைத் தந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. கொங்குப்பகுதியின் தொன்மைத் தடயங்களை இயன்றவரை வெளிக்கொணரும் எங்கள் விருப்பமும் முயற்சியும் தொடர்கின்றன.

தொடர்பு: திரு. **துரை சுந்தரம்**, கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
(doraisundaram18@gmail.com); அலை பேசி: 9444939156

2. ஊத்துக்குளிப் பகுதியில் தொல்லியல் தடயங்கள்

– து. சுந்தரம்

முன்னுரை:

அண்மையில், கோவையைச் சேர்ந்த அசோக் என்னும் இளைஞர், ஊத்துக்குளியில் இருக்கும் பழங்காலக் கிணறு ஒன்றைப் பார்வையிட்டு அது பற்றிய கருத்துச் சொல்லவேண்டி ஊத்துக்குளிக்கு அழைத்துச் சென்றார். ஊத்துக்குளியில் கைத்தமலை முருகன் கோயிலுக்குச் செல்லும் பாதையில் சாலையோரத்திலேயே இந்தக் கிணறு அமைந்துள்ளது. கிணறு பல காலமாக நீரின்றிப், பொறுப்பறியா மக்களால் குப்பை கொட்டுமிடமாக மாற்றப்பட்டு வந்துள்ளது. அண்மையில், இப்பகுதியில், சுற்றுச் சூழல், இயற்கை உணவு, இயற்கை வேளாண்மை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட இளைஞர் குழுவொன்று, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நல்ல பணிகளைச் செய்து வருகின்றது. அக்குழுவினர், மேற்படி கிணற்றைக் கண்ணுற்று, குப்பைகளை முழுதும் அகற்றியதோடு இதன் வரலாறு பற்றி அறிந்து வெளிப்படுத்தும் முயற்சியும் மேற்கொண்டு வருகின்றனர். தற்போது, கிணறு தூய்மையாகக் காணப்படுகிறது. மழை பெய்தபின் சிறிது நீரும் காணப்படுகிறது.

பழங்கிணறு-படிக்கிணறு:

இக்கிணற்றின் ஒட்டுமொத்தத் தோற்றமே இதன் பழமையை எடுத்துக் காட்டுகிறது. கிணறு முழுதும் கல்கட்டுமானத்தைக் கொண்டுள்ளது. ”படிக்கிணறு” (STEP-WELL) என்னும் வகையைச் சேர்ந்தது. வடநாட்டில் குஜராத், இராஜஸ்தான், மகாராட்டிரம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், கருநாடகத்தில் விஜய நகர அரசின் தலை நகராய் விளங்கிய ஹம்பியிலும் படிக்கிணறு வகைக் கிணறுகள் உள்ளன. மொத்த எண்ணிக்கை பத்துக்கு மேல் இரா எனத்தெரிகிறது. இவை, எண்ணற்ற படிகளைக்கொண்ட வடிவமைப்புக்கும், அழகான கட்டிடக் கலைக்கும் பேர் பெற்றவை. தமிழகத்தில் இத்தகைய படிக்கிணறுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்தில் திருவெள்ளறை என்னும் ஊரில் உள்ள படிக்கிணறு “நாலுமூலைக் கிணறு” என்றும், “ஸ்வஸ்திகா கிணறு” என்றும் அழைக்கப்பெறுகின்றது. கல்வெட்டில் இக்கிணறு “மாற்பிடுகு பெருங்கிணறு” என்று குறிக்கப்படுகிறது. இது பல்லவ மன்னன் தந்திவர்மன்

காலத்தில் கம்பன் அரையன் என்பான் வெட்டுவித்தது. மற்றொன்று மயிலாடுதுறையில் உள்ள குளம் ஒன்று படிக்கிணறு வடிவத்தை ஒத்துள்ளது.

ஹம்பி - படிக்கிணறு

திருவெள்ளறை-மாற்பிடுகு பெருங்கிணறு

மயிலாடுதுறை - படிக்கிணறு வடிவமுள்ள குளம்

திருவெள்ளறைக் கிணறு - உட்புறத்தோற்றம்

ஊத்துக்குளிப் படிக்கிணற்றின் சிறப்பு:

தமிழகத்தில் உள்ள மேற்குறித்த திருவெள்ளறை மாற்பிடுகுப் பெருங்கிணற்றை (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு-பல்லவர் காலம்) ஒத்த வடிவமைப்பில் ஊத்துக்குளிக் கிணறும் அமைந்திருப்பது ஒரு சிறப்பு. திருவெள்ளறைக் கிணற்றில் மையத்தில் சதுரமாக உள்ள கிணற்றுப்பகுதியைச் சுற்றிலும் நான்கு பக்கங்களில் படிகளோடு கூடிய நான்கு வழிகள் கீழிறங்கிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஊத்துக்குளிக் கிணற்றுக்கு ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது. இந்த வேற்றுமை தவிர இரண்டுமே ஒத்த தோற்றத்தைக் கொண்டுள்ளன. இரண்டிலுமே, கிணற்றின் சுற்று வடிவ விளிம்பின் (எல்லைச் சுவர்) மேற்பகுதியில் சதுரப் பரப்பாயில்லாமல் உருள் வடிவம் கொண்டுள்ளது. இதைப் பார்க்கையில், தஞ்சைப் பெருங்கோயிலின் அதிட்டானப்பகுதியில்

உள்ள உருள் குமுதப்படையின் தோற்றம் நினைவுக்கு வரும். அழகான கட்டுமானம்.

ஊத்துக்குளிப் படிக்கிணறு-பல தோற்றங்கள்

கிணற்றுக்குள் வேலைப்பாடுள்ள தூண்கள்:

திருவெள்ளறைக் கிணற்றின் சுற்றுவடிவ விளிம்புகள் சிற்பங்கள் எவையுமின்றி வெற்று விளிம்புகளாயுள்ளன. ஆனால், ஊத்துக்குளிக் கிணற்றின் விளிம்புகள் சிற்பங்களைக்கொண்டிருக்கின்றன. சதுரப்பகுதியின் நான்கு விளிம்புகளிலும் நான்கு நந்திச் சிற்பங்களும், நுழைவு வாயிலின் விளிம்புகள் இரண்டில் இரண்டு யாளிச் சிற்பங்களும் உள்ளன. இவை தவிர, தரையிலிருந்து முதன்முதலாய்க் கீழிறங்கும் நுழைவுப்பகுதியில் இரண்டு யானைச் சிற்பங்கள் உள்ளன. கிணற்றின் உள்பகுதியில், வேலைப்பாடுகள் அமைந்த இரு தூண்களும் அவற்றின் குறுக்கே விட்டம்போல் கிடத்தப்பட்ட ஒரு கல்லும் சேர்ந்து ஒரு தோரணவாயில் போலத் தோற்றம் அளிக்கும் அமைப்பும் காணப்படுகிறது. இந்தத் தூண் தோரணம், கிணற்றின் மேல்

பகுதியில் நீரை இறைப்பதற்காக அமைக்கப்பட்ட ஏற்றத்தைத் தாங்கிக் கொண்டுள்ளது. ஏற்றத்தின் கிடைமட்டக் கல்துண்டுகள் தூண்களையும் தாண்டி நீண்டுள்ளன. கிணற்றின் இரு பக்கங்களில், தரையிலிருந்து நேரடியாக இறங்கும் வண்ணம் ஆறு பெரிய கற்கள் செருகப்பட்டுள்ளன. தூண்கள், அடிப்பகுதியில் சதுரம், நாகபந்தம், பதினாறு பட்டைகள் கொண்ட சித்திரக் கண்டக் கால்கள், கலசம், தாடி, தாமரை, பலகை ஆகிய கட்டடக்கலைக் கூறுகளைக் கொண்டுள்ளன. தூணின் உச்சியில் யாளி முகம் காணப்படுகிறது. தூணின் சதுரப்பகுதியில் அன்னம், சிங்கம், சூலம் போன்ற புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இது போன்ற தூண் வேலைப்பாடு திருவெள்ளறைக் கிணற்றில் இல்லை.

கிணற்றின் உட்புறச் சுவர்கள் முழுதும் ஆங்காங்கே சிறு சிறு புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மனித முகம், நின்ற நிலையில் மனித உருவம், வணங்கும் நிலையில் மனித உருவம், லிங்கம், பூதகணத்தின் முகம், பிள்ளையார், குட்டியை ஏந்திய குரங்கு, குத்துக்காலிட்ட நிலையில் சிங்க உருவம், மீன் உருவம், ஆமை உருவம், நாயும் பன்றியும் இணைந்த உருவம், யாளி, தனித்த ஒரு நாயின் உருவம், இரண்டு யானைகள் போரிடும் காட்சி ஆகியவை புடைப்புச் சிற்பங்களாய் உள்ளன.

புடைப்புச் சிற்பங்கள் சில

கிணற்றின் காலம்:

ஊத்துக்குளிக் கிணறு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. எனவே, நானூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

இளைஞர்களின் நற்பணி:

ஊத்துக்குளிக் கிணறு, முன்பே தொல்லியல் துறை சார்ந்த ஆய்வர்களால் பார்வையிடப்பட்டுள்ளது. ஆனால், நானூறு ஆண்டுப்பழமையுள்ள இக்கிணறு பற்றி மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் செய்திகள் வெளியாகவில்லை என்றே தோன்றுகிறது. கிணற்றின் வரலாற்றுச் சிறப்பு மக்களை எட்டவேண்டும். இதன் சிறப்புணர்ந்து ஊர் மக்கள் இக்கிணற்றை முறையாகப் பாதுகாத்து, எதிர்வரும் சந்ததியினர்க்குக் கொண்டு சேர்க்கவேண்டும்.

கிணறு, பராமரிப்பின்றிப் புறக்கணிக்கப்பட்டுக் குப்பை கொட்டுமிடமாகக் கிடந்த அவல நிலையில், “இயல்வாகை” என்னும் பெயரில் இயங்கும் இளைஞர் அணியினர், பெரும் முயற்சியெடுத்து நான்கைந்து முறை கிணற்றைத் தூய்மைப்படுத்தி இன்றைக்குள்ள நிலைக்குக் கொணர்ந்துள்ளனர். அவர்களோடு இணைந்து பணியாற்றியவர்கள் “பசுமை வனம்” என்னும் மற்றொரு குழுவினர் ஆவர். பள்ளிக் குழந்தைகளும் இந்தப் பணியில் சேர்ந்துகொண்டனர் என்பது சிறப்பு. வரலாற்றை வெளிப்படுத்த ஆர்வம் கொண்டுள்ள இவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள்.

மேலும் சில தொல்லியல் தடயங்கள்:

கோவை நண்பரும் வரலாற்று ஆர்வலருமான பாஸ்கரன் அவர்கள், தாம் ஊத்துக்குளிப் பகுதியில் பயணம் மேற்கொண்டபோது, கல்திட்டை, கல்வட்டம் ஆகிய பெருங்கற்காலச் சின்னங்கள் இருப்பதைக் கண்டதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அவரிடம் தொலைபேசியில் பேசி, அச்சின்னங்கள் இருக்குமிடத்தைப் பற்றி அறிந்துகொண்டபின், அவற்றைப்பார்க்க முடிவு செய்து, என்னை அழைத்துவந்த கோவை அசோக்குடனும் இயல்வாகைக் குழுவைச் சேர்ந்த அசோக், அழகேசுவரி, ஈரோட்டைச் சேர்ந்த, இயற்கை வேளாண்பொருள் அங்காடி நடத்தும் ஜெகதீசன் ஆகியோருடனும் பயணப்பட்டோம். மாடுகட்டிப்பாளையம் என்னும் ஊர்ப்பகுதியில் மேலே குறிப்பிட்ட பெருங்கற்காலச் சின்னங்களைக் காணுவது நோக்கம். உடன் வந்த அனைவருக்கும் வரலாற்று எச்சங்களாக இன்றும் காணப்படும் பெருங்கற்காலச் சின்னங்கள் பற்றிய அறிமுகம் இல்லை. அவர்களுக்கு அவற்றைப் பற்றிய சில செய்திகள் இங்கு பகிர்ந்துகொள்ளப் படுகின்றன.

பெருங்கற்காலச் சின்னங்கள்:

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சங்ககாலம் அல்லது வரலாற்றுக் காலம் என்று குறிப்பிடப்பெறும் காலத்துக்கு முன்னர் தமிழகத்தில் இரும்புப் பயன்பாடு விளங்கிய காலகட்டத்தில் மக்களின் வாழ்வியலில், இறந்தோர் நினைவாக ஈமச் சின்னங்களை அமைத்து வழிபடும் மரபு இருந்துள்ளது. இறந்தவர்களை நேரடியாக மண்ணில் புதைக்கும் வழக்கம் அப்போது இருக்கவில்லை. இறந்தவர்களின் உடலைக் குறிப்பிட்ட ஒரு வெளியில் இடுவதுதான் வழக்கமாக இருந்தது. இயற்கைச் சூழலில் விலங்குகளும், பறவைகளும் உடலைத் தின்று முடித்தபின்னர், எலும்புகளைக் கொணர்ந்து புதைவிடத்தில் புதைப்பர். இறந்தோர் பயன்படுத்திய சிறு பொருள்களையும் அந்தப் புதைவிடத்திலேயே வைப்பர். புதைவிடத்தின் அடையாளம் தெரியவேண்டி அதைச் சுற்றிலும் பெரும் பலகைக் கற்பாறைகளை நான்கு பக்கங்களிலும் நிறுத்தி, அதன் மேற்பகுதியைப் பெரியதொரு பலகைக் கல்லைக் கொண்டு மூடிவிடுவர். முகப்புப் பகுதியில், முழுதும் மூடாமல் வாயில் போன்று திறப்பு இருக்கும்படி அமைத்திருப்பார்கள். இந்த அமைப்பு, கல்திட்டை எனப்படும். தரையின் மேல் பகுதியில் திட்டை போன்று இருப்பதால் இது கல்திட்டை. ஆங்கிலத்தில் “DOLMEN” என்பார்கள். இறந்தவர்கள் ஆவி வடிவில் இருந்து நன்மையும் வளமும் சேர்ப்பார்கள் என்பதான ஒரு நம்பிக்கையின்பால் எழுந்த வழக்கம். அடுத்து இன்னொரு வகைச் சின்னங்களில், புதைவிடத்தைச் சுற்றிலும் பெரும் பெரும் உருண்டைக் கற்களை வட்டமாக அடுக்கி அடையாளப்படுத்துவர். இது கல்வட்டம் எனப்படும். ஆங்கிலத்தில் இதனை “CAIRN CIRCLE” என்பார்கள். இந்த நினைவுச் சின்னங்களில் பெரிய பெரிய கற்கள் பயன்பட்டமை கருதி இவற்றைப் பெருங்கற்சின்னங்கள் அழைக்கிறார்கள்.

பனியம்பள்ளியில் கல்திட்டைகள்:

மாடுகட்டிப்பாளையத்தை நோக்கி தொட்டம்பட்டி வழியாகப் பயணம் செய்யும்போது, மாடுகட்டிப்பாளையம் ஊரை நெருங்கும் முன்னரே ஒரு சாலைப்பிரிவு காணப்பட்டது. அங்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் பனியம்பள்ளி ஊராட்சி நீருந்து நிலையக் கட்டிடமும் அருகில் உயர்நிலை நீர்த்தொட்டியும் இருந்தன. அந்த இடத்தில் சாலையோரம் இரு கல்திட்டைகள் புலப்பட்டன.

முதல் கல்திட்டை:

முதல் கல்திட்டையில், சாலையிலிருந்து பார்க்கும் நேர்ப்பார்வையில், சாய்ந்த நிலையில் சுவர்போல இணைந்த இரண்டு பலகைக் கற்களும், அதன் மேல்

ஒரு மூடு கல்லும் புலப்பட்டன. சற்று அருகில் சென்று அடுத்த பக்கத்தைப் பார்வையிடுகையில் அது, கல்திட்டையின் திறப்பு வாயில் என்பது புலப்பட்டது. மூன்றாவது பக்கத்தைப் பார்க்கையில், அங்கு, சுவர்போல ஒழுங்கான பலகைக் கற்கள் காணப்படவில்லை. சற்று ஒழுங்கற்ற இரண்டு பாறைக்கற்கள் சாய்ந்த நிலையில் காணப்பட்டன. நான்காவது பக்கத்தைச் சரியாகப் பார்க்கவொண்ணா நிலையில் சிறு சிறு வேப்ப மரங்களும் புதர்ச் செடிகளும் மூடியவாறு காணப்பட்டது. கலைந்துபோன நிலையில் கற்கள் இருப்பதாகத் தெரிந்தது.

முதல் கல்திட்டை

முதல் கல்திட்டை-வேறு தோற்றங்கள்

கல்திட்டைக்குள் ஒரு நடுகல்:

முகப்பிலுள்ள வாயிலுக்கருகில் சென்று பார்த்தால் ஒரு வியப்பான காட்சி. ஆண் உருவம் ஒன்றும், பெண் உருவம் ஒன்றும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்ட ஒரு நடுகல் சிற்பத்தின் அழகான தோற்றம். ஆணின் உருவம், இடப்புறமாகக் கொண்டை முடிந்து, மீசையுடன் காணப்படுகிறது. செவிகளிலும், மார்பிலும் அணிகலன்கள் உள்ளன. கைகளிலும் தோளிலும் வளைகள் உள்ளன. இடையில் ஆடைக்கச்சு உள்ளது. வலது கையில் ஒரு நீண்ட வாளினைத் தரையில் ஊன்றியவாறு வீரன் நிற்கிறான். அவனது இடையிலும் ஒரு குறுவாள் காணப்படுகிறது. அவனது இடது கை தொங்கிய நிலையில் காணப்படுகிறது. விரல்களில் மோதிரங்கள் தெரிகின்றன. பெண்ணின் உருவம் வலப்புறமாகக் கொண்டை முடிந்து தலையில் அணிகலன்களோடு காணப்படுகிறது. கழுத்திலும் இடையிலும் அணிகலன்கள் உள்ளன. கைகளில் வளைகள் உள்ளன. கைகளில் எதையும் ஏந்தியிருப்பதாகத் தெரியவில்லை. வலது கையை மடக்கியவாறு உயர்த்தியும், இடதுகையை நேராகத் தொங்கவிட்டும் நிற்கிறாள். இடையாடை கீழே கால்வரை காணப்படுகிறது. கால்களில் கழல்கள் உள்ளன. வீரனுக்கு மட்டும் எடுக்கப்பட்ட நடுகல்லாக இருப்பின் பெண்ணின் கைகளில் மதுக்குடுவை ஒன்று காணப்படுவது வழக்கம். இங்கு அவ்வாறில்லாமல் ஆண், பெண் இருவர் சிற்பங்கள் ஒன்றாகக் காணப்படுவதால், இது ஒரு சதிக்கல்லாக இருக்கக்கூடும். அல்லது மனைவியோடு காட்டப்பெற்ற வீரனின் நடுகல்லாக இருக்கக்கூடும்.

கல்திட்டைக்குள் ஒரு நடுகல் சிற்பம்

இரண்டாம் கல்திட்டை:

இரண்டாம் கல்திட்டையிலும் நான்குபுறமும் பலகைக்கல் சுவர்களும், முன்புறம் திறப்பு வாயிலும் உள்ளன. இங்கும் ஒரு நடுகல் சிற்பம் உள்ளது. அது வெளிப்புறத்தில் சாய்க்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதிலும் ஆண், பெண் உருவங்கள் உள்ளன. உருவங்கள் தெளிவாக இல்லை. ஆடை, அணிகள் புலப்படுகின்றன. பெண்ணின் இடப்புறம் காலடியில் ஒரு சிறிய மனித உருவம்போல் தோன்றுகிறது. அது ஒரு குழந்தையின் உருவமாயிருக்குமோ என்னும் ஓர் ஐயத்தை ஏற்படுத்துகிறது.

இரண்டாம் கல்திட்டையின் சில தோற்றங்கள்

இரண்டாம் கல்திட்டை அருகில் உள்ள நடுகல் சிற்பம்

மாடுகட்டிப்பாளையம் பெருங்கற்காலச் சின்னங்கள்:

அடுத்து, பனியம்பள்ளியிலிருந்து மாடுகட்டிப்பாளையம் ஊரை நோக்கிப் பயணப்பட்டோம். ஓரிரு கி.மீ. தொலைவில் ஊர் இருந்தது. அங்கு சிலரிடம் கல்வட்ட அமைப்பை எடுத்துச் சொல்லி, அவ்வாறு ஏதேனும் கற்சின்னங்கள் உள்ளனவா எனக்கேட்டோம். சிலர் சாலையிலிருந்து சற்றுத்தள்ளியிருந்த இரயில் பாதைக்கருகில் பெருங்கற்கள் காணப்படுவதாகக் கூறவே அங்கு சென்று பார்த்தோம். கல்வட்டங்கள் இருந்ததற்கான தடயங்கள் அங்கு இருந்தன. இரயில் பாதை அமைக்கும் பணியில் நிறையக் கற்கள் கலைக்கப்பட்டுச் சிதறல்களாக இருந்தன. பெரும்பாலும் கல்வட்டங்களில் காணப்பெறும் கற்கள், ஓர் ஒழுங்கு முறையில் வடிக்கப்பட்ட உருண்டைக் கற்களாக அமையும் இங்கு அவ்வாறான உருண்டைக் கற்கள் காணப்படவில்லை. ஒழுங்கற்ற வடிவில் பெருங்கற்கள் இருந்தன. கல்வட்டத்தின் ஒரு முழுத்தோற்றம் அங்கு எங்களுக்குக் கிட்டவில்லை.

இரயில் பாதைக்கருகில் பெருங்கற்களின் எச்சங்கள்

கல்வட்டங்கள்:

அங்கிருந்து அகன்று, விஜயமங்கலம் சாலையில் சற்றுத் தொலைவு சென்றதுமே, சாலையோரம் வலது புறத்தில் ஒரு காட்சி எங்களைப் பெருவியப்பில் ஆழ்த்தியது. சாலையோர வேலிக்கப்பால், செடிகளோ புதர்களோ இன்றிச் செம்மண் நிலம் ஒன்று கண்முன்னால் பரந்துகிடந்தது. அந்த நிலத்தில் கல்வட்டங்கள் இரண்டு மூன்று, சிதையாமல் வட்ட வடிவத்துடன் அருமையாகத் தோற்றமளித்தன. அந்த நிலப்பரப்பிற்குள் செல்ல இயலாதவாறு தார்ச்சாலைக்கருகில் நெடுகவும் நெருக்கமான வேலி இருந்தது. எனவே, நாங்கள் வேலியை ஒட்டி நடந்துசென்று ஒரு வீட்டை அடைந்தோம். வீட்டு உடைமையாளர்தாம் அந்த நிலத்துக்கு உடையவரும். அவரிடம் பேசி, அவருடைய ஒப்புதலோடு அவர் திறந்துவிட்ட வேலித்திறப்பினுள் நுழைந்துசென்று கல்வட்டங்களைப் பார்வையிட்டோம்.

கல்வட்டங்கள்

ஆட்டுப்பட்டியின் அழகான தோற்றம்

மூன்று கல்வட்டங்கள் நல்ல நிலையிலும், ஒரு கல்வட்டம் அரைவட்டப்பகுதியாகச் சிதைவுற்றும், மற்றொன்று கற்கள் சிதறிய நிலையிலும் காணப்பட்டன. நிலத்தில், ஒரு ஆட்டுப்பட்டி அழகாகக் காட்சியளித்தது. நிலத்து உடைமையாளர் பெயர் மகேசுவரன். அவருடைய பாட்டன் காலத்திலிருந்து அந்தக் கல்வட்டங்கள் இருந்துள்ளன என்றும், நிலத்தைப் பண்படுத்தும் ஒவ்வொரு முறையும் கல்வட்ட அமைப்புகளைச் சிதைக்காமல் விட்டுவைத்திருப்பதாகவும் அவர் கூறியது எங்களுக்கு மிக வியப்பையும் மகிழ்ச்சியையும் ஒருசேர அளித்தது. அத்தி பூத்தாற்போல் ஒரு சிலர் இதுபோன்ற நன்மையாளர்களாயிருக்கின்றனர்.

கல்வட்டங்கள்

தொடர்ந்து இக்கல்வட்டங்களை இன்றுள்ளவாறே பேணவேண்டும் என்னும் கோரிக்கையோடு அவருக்கு நன்றியும் வாழ்த்தும் சொல்லி விடைபெற்றோம்.

தொடர்பு: திரு. **துரை சுந்தரம்**, கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
(doraisundaram18@gmail.com); **அலை பேசி**: 9444939156

3. மறுதால்தலை பிராமி கல்வெட்டும் சமணர் கற்படுக்கைகளும்

– முனைவர். சுபாஷிணி

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டைக்கு வடகிழக்கே 9 கி.மீ தொலைவில் சீவலப்பேரி என்ற ஊரில் மறுதால்தலை என்ற சிறு குன்று உள்ளது. தாமிரபரணி, கடனாநதி, சிற்றாறு ஆகிய மூன்று நதிகள் இவ்வூரின் அருகில் இணைகின்றன. இவ்வூரில் உள்ள சிறு குன்றுகளில் ஒன்றில் மேற்குப் பகுதியில் பஞ்சபாண்டவர் படுக்கை என்றழைக்கப்படும் இயற்கையாய் அமைந்த குகைத்தளம் ஒன்றுள்ளது. இதில் சமண முனிவர்களுக்கென்று அமைக்கப்பட்ட கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டை முதன் முதலாக 1906ம் ஆண்டில் அப்போதைய நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெமைடு என்பவர் கண்டறிந்தார்.

குகைத்தளத்துப் பாறையின் நெற்றிப் பகுதியில் பெரிய எழுத்துக்களில் ஒருவரியில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. சில எழுத்துக்கள் ஏறக்குறைய 40 செ.மீ உயரம் உள்ளவை. இக்கல்வெட்டின் காலம் கி.பி.1ம் நூற்றாண்டாகும்.

"வெண்காஸிபன் கொடுபித கல்கஞ்சனம்"

வெண்காசிபன் என்பவன் இங்குள்ள குகைத்தளத்தில் ஒரு கட்டட அமைப்பு அமைத்துக் கொடுத்துள்ளான் என்பது இதன் பொருளாகும்.

சமஸ்கிருதத்தில் "கஞ்சனம்" என்பது ஒருவகை கோயில் அமைப்பைக் குறிக்கும். பளபளப்பாக்கப்பட்ட வெண்கலத் தகட்டையும் குறிக்கும். இக்கல்வெட்டில் படுக்கை அல்லது ஏதோ ஒரு கட்டடப் பகுதியைக் குறிக்கிறது எனக் கொள்ளலாம். காசிபன் என்ற சொல்லில் உள்ள "சி" என்ற எழுத்து அசோகன் பிராமி எழுத்தாகும்.

இத்தொடரில் உள்ள எழுத்துக்கள் ஒரே சீராக இல்லாமல் பெரிதாகவும் ஒழுங்கற்ற முறையிலும் பொறிக்கப்பட்டுள்ளன. தரைப்பகுதிக்கும் கல்வெட்டுப் பகுதிக்குமிடையில் சுமார் 40 அடி இடைவெளி அமைந்துள்ளது.

இந்த சிறு குன்றின் அருகிலேயே உள்ள மலைப்பகுதியில் பாகுபலியின் சிற்பம் ஒன்றும் உள்ளது. பாகுபலியின் சிற்பம் இன்று சாஸ்தாவாக மாற்றம் கண்டு சாஸ்தா தெய்வ வழிபாடு இன்று நடைபெறுகின்றது. இப்பகுதி மக்கள் குலதெய்வ வழிபாடு செய்யும் இடமாகவும் இப்பகுதி அமைந்திருக்கின்றது.

தொடர்பு: முனைவர். சுபாஷிணி (ksubashini@gmail.com)

4. கள்ளிகுடி கல்வெட்டு

– கல்வெட்டுத் தகவல்

முனைவர் கி. காளைராசன்:
திருப்பணிகள் செய்து வரும் இராமநாதபுரம் மெய்யன்பரிடம் இருந்த கோயில் திருப்பணிகள் தொடர்பான படங்களில் திருவாடானை வட்டம் கள்ளிகுடியில் உள்ள அருள்மிகு உத்தமபாண்டீசுவரர் கோயில் கல்வெட்டு படமும் ஒன்று கிடைத்தது. கல்வெட்டின் படம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திருவாடானை வட்டம் கள்ளிகுடியில் உள்ள
அருள்மிகு உத்தமபாண்டீசுவரர் கோயில் கல்வெட்டு



படம் உதவி: முனைவர் காளைராசன்

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு துரை சுந்தரம், கோவை:
கல்வெட்டுப்படம் தெளிவாக உள்ளது.

கல்வெட்டின் பாடம்:

1 **தொளிப்ப வில்லவர் செம்பியர் வி**
2 **..றப் பணிய இருநேமி அளவு மொ**
3 **ச நாடக மன்னிவளர மணிமுடிசூடி வி**
4 **ல் மாடக்குளக்கீழ் மதுரைக் கோலியி (பா)**
5 **திருவாய் மொழிந்தருளினபடி இத்தேவற்**
6 **ம் ஆண்டு முதல் அந்தராயம் உள்பட**
7 **டும் நிமந்தக்களுக்கு இன்னாட்டு ..(கை)**

குறிப்பு: முதல் மூன்றுவரிகளும் பாண்டிய அரசனின் மெய்க்கீர்த்தி வரிகள். வில்லவர்(சேரர்), செம்பியர் (சோழர்), இருவரும் பணியுமாறு தன் ஆணைச் சக்கரத்தை நடாத்துகின்றவன் என்னும் பொருள் அமைகிறது. ஆனால், அரசன் யாரென்பது தெரியவில்லை (இவ்வாறான கல்வெட்டுகளில் சுட்டப்பெறும் அரசரை மெய்க்கீர்த்தி வழியே இனம் காண மெய்க்கீர்த்திகளின் தொகுப்பு ஒன்று இன்றியமையாதது).

அரசன் கோயிலின் இறைவர்க்குக் கொடையாக அந்தராயம் போன்ற வரிகளின் வருமானத்தை அளிப்பதாகக் கொள்ளலாம். மாடக்குளத்தின் மதுரைக் கோயிலில் அரசன் வீற்றிருந்து வாய்மொழி ஆணையிடுகிறான். கோயிலுக்கு வேண்டும் நிமந்தங்களுக்கும் ஏற்பாடு செய்கிறான். கல்வெட்டில் பெரும்பாலும் 'நிவந்தம்' என்பது நிமந்தம் என்றே எழுதப்படுகிறது. நிபந்தம் என்னும் சொல்லும் காணப்படுவதுண்டு.

முனைவர் நா. கணேசன்:
கல்வெட்டில், கோயிலி(ல்) என்பது கோலியி(ல்) என இடவல மாற்றமாகப் பிழையாக வந்துள்ளது. பாண்டியன் மதுரை அரண்மனையில் இருந்து நிவந்தம் கொடுத்துள்ளான்.

திரு. நூ.த.லோக சுந்தரம்:
இக்கல்வெட்டுப்படிப்பு (பொது ஆண்டு 1190 -1218 ஆட்சி புரிந்த) சடையவர்மன் குலசேகரபாண்டியன் என்ற மன்னனின் மெய்க்கீர்த்தி ஆகும் என அறிய முடிகின்றது. மதுரைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாண்டிய-சோழர் மெய்க்கீர்த்திகள் தொகுப்பில் (http://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0134.html) முழு மெய்க்கீர்த்தியையும் காணலாம். அவ்வரிகள் கீழே:

1.9 **சடையவர்மன் குலசேகர பாண்டியன்** (1190 - 1218) - 3
1.9.3 (14)

ஸ்வஸ்திஸ்ரீ
பூவின் கிழத்தி மேவிவீற் றிருப்ப
மேதினி மாது நீதியிற் புணர
வயப்போர் மடந்தை சயப்புயத் திருப்ப
மாக்கலை மடந்தை வாக்கினில் விளங்கத்
திசையிரு நான்கும் சையிலா வெறிப்ப
மறைநெறி வளர மனுநெறி திகழ
அறநெறிச் சமயங்கள் ஆறும் தழைப்பக்
கானில் வேங்கை வில்லுடன் தொடர்ந்துற
மீனம் கனகாசலத்து வீற் றிருப்ப
எண்கிரி சூழ்ந்த எழுகடல் எழுபொழில்
வெண்குடை நிழற்ற செங்கோல் நடப்பக்
கொடுங்கலி நடுங்கி நெடும்பிலத் **தொளிப்ப**
வில்லவர் செம்பியர் விராடர் மராடர்
பல்லவர் திறையுடன் முறைமுறை பணிய
ருநேமி யளவும் ஒருநேமியோங்க
ன்னமுதாகிய யலிசை நாடகம்
மன்னி வளர மணிமுடி சூடி
விளங்கு கதிரொளி வீரசிம்மா சனத்து
கற்பகநிழற்கிழ் கலைவல்லோர் புகழ்
மன்னவர்தேவியர் வணங்கி நின்றேத்தும்
அன்ன மென்னடை அவனி முழுதுடை
யாளொடும் வீற்றிருந் தருளிய
மாமுதல் மதிக்குலம் விளக்கிய கோமுதல்
கோச்சாடய பன்மரான திரிபுனச்
சக்கரவர்த்திகள் ஸரீகுலசேகர தேவர்க்கு
யாண்டு பதின்முன்றாவதின் எதிராமாண்டு . . .

12 வரியில் காணும் **"தொளிப்ப வில்லவர் செம்பியர்"** என முடியும் வரி தான் மிக மிகத் தெளிவாக இந்த மன்னனைத்தான் ஐயமின்றிக் காட்டுகின்றது. சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்கு மூன்று விதமாக மெய்க்கீர்த்திகள் உண்டு அதனில் இது மூன்றாவது விதம் ஆகும்.

தகவல் வழங்கியோர்:

முனைவர் கி. காளைராசன் (kalairajan26@gmail.com),
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு துரை சுந்தரம் (doraisundaram18@gmail.com),
முனைவர் கணேசன் (naa.ganesan@gmail.com),
திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

5. திருவாரூர் கொடுங்கைக் கல்வெட்டு

– கல்வெட்டுத் தகவல்

திருவாரூர் ருணவிமோசன ஈசுவரர் கொடுங்கைக் கல்வெட்டு

படம் உதவி: முனைவர் காளைராசன்

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு துரை சுந்தரம், கோவை:
கல்வெட்டுப் படம் படிப்பது சற்றுக் கடினமாக இருந்தது. படித்தவரையில் அதன் பாடம் கீழே தந்துள்ளேன். உயரத்தில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளதே ஒழியச் சிறப்பான செய்தி இல்லை. நிலக்கொடையைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டுப்பாடம்:

1 **.......கவும் இவ்வூர் வெள்ளாளன்.........................**

2 **ஞ்னூறும் இந்நிலம் ஒன்றரைக்கும் இத்தேவர் பண்டாரத்தே கிரையத் திரவியமும்**

3 **... சிகாமணி வளநாட்டு வேளாநாட்டு ப்ரஹ்மதேயம் (களை?)ச் சாத்தந்குடி ஸபையோா(ம்)**

4 **....நிலம் தாங்கள் வேண்டுங் குடிகளுக்கு (ஊர்)க்காலால் அடுத்து முதலாந நெல்**

5 **............................திருவமுது........ இருநாழியாக ....**

6 **.........யும் ....த்து................நில்ம்**

குறிப்புகள் :

சிவப்பு மையில் காட்டப்பெற்றவை கிரந்த எழுத்துகள்.

கல்வெட்டு நிலக்கொடை பற்றியது. ஒரு வெள்ளாளன் கொடுத்த கொடையாகலாம்.

இரண்டாம் வரியில் உள்ள "ஞ்ஞூறும்" என்பது "ஐஞ்ஞூறும்" என்பதன் குறைவடிவம். ஐந்நூறு குழியாக இருக்கலாம்.

நிலம் ஒன்றரை என்பது ஒன்றரை மா -நிலமாக இருக்கலாம்.

கொடை நிலம், பிரமதேயச் சபையினர் விற்ற நிலமாக இருத்தல்வேண்டும். நிலத்தை விற்றுக் கிடைத்த பொருள் கோயிலின் கருவூலத்தில் (பண்டாரத்தே) சேர்க்கப்படுகிறது. "கிரையத்திரவியம்" என்னும் தொடரால் இது விளக்கம் பெறுகிறது.

இத்தேவர் என்பது கோயிலின் இறைவரைக் குறிக்கும்.

பிரமதேயத்தின் பெயர் மூன்றாவது வரியில் சாத்தன்குடி என்னும் பகுதிப்பெயரில் சுட்டப்பெறுகிறது. இந்தப் பிரமதேய ஊர் சோழ நாட்டின் சத்திரிய சிகாமணி வள நாட்டில் வேளாநாடு என்னும் நாட்டுப்பிரிவில் இருந்தது.

கொடை நிலத்தை (வேண்டும்) உழுகுடிகளுக்குக் கொடுத்து உழவால் வந்த விளைச்சலில் கோயிலின் அமுதுபடிக்காக நெல் அளந்து தரப்படவேண்டும். நெல்லின் அளவு இரு நாழி குறிக்கப்படுகிறது. ஊரில் வழக்கிலிருக்கும் அளவு கருவியான ஊர்க்காலால் நெல் அளக்கப்படவேண்டும். கால் என்பது நெல் அளக்கும் கருவியைக்குறிக்கும். இக்கருவிகள் ஊருக்குப் பொதுவாக ஒன்றும், கோயிலுக்குப் பொதுவாக ஒன்றும் எனப் பலவாறு அமையும். கருவிகளுக்குத் தனியே பெயரும் அமைவதுண்டு. இராசராசன் கால், ஆடவல்லான் கால் ஆகிய பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரின் "திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வரலாறு" என்னும் நூலின் குறிப்புப்படி, திருவாரூர் வட்டம் சத்திரிய சிகாமணி வளநாடாகவும், வேளாநாடாகவும் இருந்துள்ளது.

தகவல் வழங்கியோர்:

முனைவர் கி. காளைராசன் (kalairajan26@gmail.com),

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு துரை சுந்தரம் (doraisundaram18@gmail.com),

6. கல்லணை ஆஞ்சநேயர் கோயில் கல்வெட்டு

– து. சுந்தரம், நூ த லோ சு

முன்னுரை:

இணையக் குழுக்களுள் ஒன்றான மின்தமிழ் குழுவின் உறுப்பினர் திரு. நூ.த.லோக சுந்தரம் அவர்கள் ஒரு கல்வெட்டுப் படத்தை வெளியிட்டு அதன் பாடத்தைப் படித்துத் தருமாறு கேட்டிருந்தார். அந்தக் கல்வெட்டு, பல சுவையான செய்திகளுக்கு அடித்தளமாய் இருந்தது. அது பற்றிய ஒரு பகிர்வு இங்கே.

படம் தெரிவு: மயிலை நூ த லோ சு

கல்லணையில் ஓர் ஆஞ்சநேயர் கோயில்:

கல்லணை வரலாற்றுப் புகழ்பெற்றது. சோழ மன்னன் கரிகாலன் கட்டியது. கல்லணையில் ஆஞ்சநேயர் கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலின் ஒரு மூலையில் காணப்படும் கல்வெட்டு ஒன்று வரலாற்றுச் சிறப்புடையது. கி.பி. 1804-ஆம் ஆண்டு, கல்லணையில் இருக்கும் ஒரு மதகு ஆங்கிலேயர் ஒருவரால் செப்பனிடப்பட்ட செய்தியை அக்கல்வெட்டு சொல்கிறது.

கல்லணைக் கல்வெட்டு:

கல்வெட்டின் படத்தைக் கீழே காணலாம். கல்வெட்டு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் ஏழு வரிகள் ஆங்கிலத்திலும், அவற்றை அடுத்து ஐந்து வரிகள் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டின் பாடம் வருமாறு:



படம் தெரிவு: மயிலை நூ த லோ சு

அ) ஆங்கிலக் கல்வெட்டின் பாடம்:

1 Repaird this COLLING
2 LAH & Erected the 268
3 Upright Stones
4 By Capt. J.L. Calddel
5 A.D. 1804

ஆ) தமிழ்க் கல்வெட்டின் பாடம்:

1 1804 இல் - த.ர
2 ராச (?) - கெவுணர்
3 மெண்டாரவற்க
4 ள் உத்திரவுப்படி
5 க்கி மகண ச- ராச -மே
6 ம்பன் ஜெம்சு (?) ல
7......................

கல்வெட்டின் செய்திகள்:

ஆங்கிலக் கல்வெட்டு, கி.பி. 1804-ஆம் ஆண்டில் கல்லணையின் மதகு ஒன்றை ஆங்கிலேயரான காப்டன் ஜே.எல். கால்டெல் என்பவர் செப்பனிட்டதாகக் கூறுகிறது. செப்பனிடும் பணியின்போது 268 கற்கள் சீரமைத்து வைக்கப்பட்டன என்பதாகக் கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக அறிகிறோம். ஆங்கிலக் கல்வெட்டில் மதகு என்பதற்கு ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தாமல் தமிழ்ச் சொல்லான "கலிங்கு" என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது சிறப்பானதொன்று. அதை ஆங்கில எழுத்துகளால் "கலிங்" என்று எழுதியுள்ளனர். "கலிங்கு" என்னும் சொல் மதகைக் குறிக்கும். இச்சொல், கல்வெட்டுகளில் மிகுதியாகப் பயின்றுவரும் சொல்லாகும். ஆங்கிலக் கல்வெட்டில் எழுத்துப்பிழை இருப்பதைக் காணலாம்.

தமிழ்க் கல்வெட்டு வரிகளிலிருந்து, முழுமையான செய்தியை அறிய இயலாது. சொற்றொடர்கள் முழுமையானதாக இல்லை. கி.பி. 1804-ஆம் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. மதகு செப்பனிடுதல் பற்றிய சொற்றொடர்கள் இல்லை. அரசு ஆணையின்படி என்னும் தொடர் மூலம் செப்பனிடும் பணி அரசு ஆணையின்படி நிறைவேற்றப்பட்டது. என்பது அறியப்படுகிறது. தமிழ்க் கல்வெட்டில், ஆங்கில அதிகாரியின் பெயர் முழுமையானதாக இல்லை. அவருடைய பெயரின் முன்னொட்டாகவுள்ள "ஜே" என்னும் எழுத்தின் விரிவான "ஜேம்சு" என்பது குறிக்கப்பட்டுள்ளது. 1800 களில் "ஜே" என்பது போன்ற நெடில் எழுத்துகளைக் குறிலாகவே எழுதும் வழக்கம் இருந்துள்ளது. முதல் வரியின் இறுதி எழுத்துகளும், இரண்டாம் வரியின் முதலில் உள்ள "ராச" என்னும் எழுத்துகளும், சென்ற நூற்றாண்டு வரை மூத்த வயதினர் எழுதும் வழக்கப்படி "மகா-ராஜ=ராஜ-ஸ்ரீ" என்பது போன்ற ஒரு தொடரைக் குறிப்பதாகலாம். 2, 3 , 4 வரிகளில் உள்ள "கெவுணர்மெண்டாரவற்கள்" என்பது, "கெவர்ண்மெண்(ட்)டாரவர்கள்" என்பதன் பிழையான வடிவம் என்று கூறலாம். மேம்பன் என்னும் சொல், "கேப்டன்" என்பதைக்குறிப்பதாகலாம். ஐந்தாம் வரியில் காணப்படும் தொடரான "மகண ச-ராச-" என்பது, மீண்டும் "மகா-ராஜ=ராஜ-ஸ்ரீ" என்பதையொத்த ஒரு தொடராகலாம்.

ஆஞ்சநேயர் கோயிலின் பின்னணி:

கல்லணையைச் செப்பனிடும் பணியின்போது, 19-ஆவது திறப்பில் நடைபெற்ற பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எத்துணை முயன்றும் பணியை முடிக்க இயலவில்லை. ஆங்கிலேய அதிகாரி ஒரு கனவு கண்டிருக்கிறார். கனவில் காட்சியளித்த ஆஞ்சநேயர், 19-ஆவது திறப்புக்கருகில் தமக்கு ஒரு கோயில் எழுப்புமாறும் அந்தத் திறப்பைத் தாம் காத்துத் தருவதாகவும்

சொல்லியிருக்கிறார். அதிகாரி அதைப் பொருட்படுத்தாமல் பணியைத்தொடர்ந்துள்ளார். ஓரிரு நாட்களில், குரங்குகள் சில குழுவாக அவரைத் தாக்கிய நிகழ்வு நடந்துள்ளது. அவருக்கு வந்த கனவு மேஸ்திரி ஒருவருக்கும் வந்துள்ளது. பணியின்போது ஓரிடத்தில் தோண்டியதில் அங்கு ஓர் ஆஞ்சநேயரின் திருமேனி கிடைத்துள்ளது. அதன் பிறகே, கோயில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும், வேளாண்மைக்காக இவ்வணையிலிருந்து நீர் திறந்துவிடப்படும்போது, இந்த ஆஞ்சநேயருக்குப் பூசைகள் நடைபெறுவதும், ஒவ்வோர் ஆண்டும் பயிர் விளைந்ததும் முதல் நெற்கதிரை ஆஞ்சநேயருக்குப் படையலிட்டுப் பூசை நடைபெறுவதும் வழக்கம்.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கதீட்ரலும் ஜே.எல். கால்டெல்லும்:
சென்னையில் கதீட்ரல் சாலையில் அமைந்திருக்கும் செயிண்ட் ஜார்ஜ் கதீட்ரலைக் கட்டியவர் ஜேம்ஸ் எல். கால்ட்வெல் என்பவராவர். கி.பி. 1815-இல் முதன் முதலாக இக்கிறித்தவக்கோயில் வழிபாட்டுக்காகத் திறந்துவைக்கப்பட்டது. 200 ஆண்டுகளைத் தாண்டிய இக்கோயிலைக் கட்டிய ஜேம்ஸ் கால்ட்வெல், இந்த ஆகஸ்ட் மாதம் 20-27 தேதிகள் அடங்கிய சென்னை வாரக்கொண்டாட்டங்களின்போது நினைவு கூரத்தக்கவர். இந்த ஜேம்ஸ் கால்ட்வெல்லும், கல்லணையைச் செப்பனிட்ட ஜேம்ஸ் கால்டெல்லும் ஒருவராயிருக்கக் கூடுமா? ஆய்வுக்குரியது.

31-08-2017 அன்று இணைத்த புதிய செய்தி:
முனைவர் நா.கணேசன் (ஹூஸ்டன்) அவர்கள் ஜேம்ஸ்.எல். கால்ட்வெல் பற்றிய செய்திகளைப் பகிர்ந்துள்ளார். அதன் அடிப்படையில் இக்கட்டுரை ஆசிரியர், செயிண்ட் ஜார்ஜ் கதிட்ரலைக் கட்டியவரும் கல்லணையைச் செப்பனிட்டவரும் ஒருவரே என்று கருதி இப்புதிய செய்தி இணைக்கப்படுகிறது. கால்ட்டெல் என்னும் ஆங்கிலப்பெயர் இதுவரை கேள்விப்பட்டிராத, எங்கும் படித்திராத பெயர் என்பதையும் இங்கு கருதவேண்டும்.

ஜேம்ஸ் எல். கால்ட்வெல் என்னும் பொறியாளரின் முழுப்பெயர் ஜேம்ஸ் லில்லிமேன் கால்ட்வெல் (JAMES LILLIMAN CALDWELL) என்பதாகும். 1799-ஆம் ஆண்டில் திப்பு சுல்தான் மீது ஆங்கிலேயர் படையெடுத்து நடந்த போரில் (போரில் திப்பு இறந்துபடுகிறார்) கலந்துகொண்டு காயமுற்றவர். பின்னர், கல்லணையை 'சர்வே' செய்து 1804-இல் கல்லணையை மேம்படுதினார்.

அதன்பிறகு, சென்னையில் செயிண்ட் ஜார்ஜ் கதீட்ரலை வடிவமைத்தார். 1858-இல் 'ஜெனரல்' என்னும் உயர்பதவி பெற்றார். 1863-இல் மறைந்தார். இக்கருத்தில் வரலாற்றுப்பிழை நேர்ந்துள்ளதாகக் கருதும் வரலாற்று ஆய்வாளர்கள் தகுந்த சான்றுகளை முன்வைக்கும்போது கருத்துகள் மாறக்கூடும். வரலாற்றைச் செப்பனிடத் தொடர்ந்த ஆய்வுகளும் தேவை. ஆய்வு முடிவுக்ள் மாறுவதும் இயல்பு.

துணை நின்றவை :

1 www.Columbuslost.com (https://www.columbuslost.com/Temples/Hanuman-Temple-inside-a-Dam-in-Kumbhakonam/info) & http://devrajbandla.photoshelter.com/image/I0000TLhINGvhwIw

2 An Anglican treasure –Article by Sriram V. The Hindu-April 24, 2015.

நன்றி : முனைவர் திரு.நா.கணேசன், ஹூஸ்டன்.

தகவல் வழங்கியோர்:

கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு துரை சுந்தரம் (doraisundaram18@gmail.com),

திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

முனைவர் கணேசன் (naa.ganesan@gmail.com)

7. வீரக்கை என்னும் சதிக்கல்

– **து. சுந்தரம்**

முன்னுரை:

இரண்டு ஆண்டுகளுக்குமுன், திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டத்திலிருக்கும் சேவூரில் “தினமலர்” நாளிதழின் திருப்பூர்ப் பகுதிச் செய்தியாளர் மகேஷ் அவர்கள் தாம் பார்த்திருந்த ஒரு நடுகல் சிற்பத்தைப்பற்றித் தந்த தகவலின் அடிப்படையில், கட்டுரை ஆசிரியரும் அவிநாசியைச் சேர்ந்த வரலாற்று ஆர்வலரான ஜெயசங்கரும் சேவூரில் கள ஆய்வு மேற்கொண்டனர்.

வெட்டப்பட்ட ஒரு கையின் சிற்பம்:

சேவூர்-புளியம்பட்டிச் சாலையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு அருகில் சாலையோரம், “தினமலர்” செய்தியாளர் குறிப்பிட்ட அந்த நடுகல் சிற்பம் இருந்தது. இது 13.4.2014 அன்று வைக்கப்பட்ட நடுகல். தேதி, நடுகல்லில் பொறிக்கப்பட்டிருந்தது. கருங்கல்லில் நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட சிற்பத்துடன் கூடிய நெடிய பலகைக்கல். சந்திரன் மற்றும் சூரியன் ஆகியவற்றின் உருவங்கள் கல்லின் உச்சிப்பகுதியில் செதுக்கப்பட்டு, அதன் கீழ்ப்புறம் இரு பெண்கள் மலர்கொண்டு பூசிக்கும் தோற்றத்தில் ஒரு சிவலிங்கமும் அதன் கீழாக உயர்த்திய நிலையில் ஒரு கையும் செதுக்கப்பட்டிருந்தன.

மக்களிடை வழங்கும் செய்தி:

அங்குள்ள மக்களிடம் இந்த நடுகல்லைப்பற்றிக்கேட்டபோது, அவர்கள் சொன்னதாவது: இந்த நடுகல்லில் காணப்படுவதுபோலவே சிற்பங்கள் செதுக்கப்பட்ட பழங்கால நடுகல் ஒன்று முன்பு இங்கு சாலையோரம் இருந்தது. சரக்குந்து ஊர்தியொன்றால் அது தாக்குண்டு உடைந்து போனது. உடைந்த துண்டுகளை ஆற்றில் எறிந்துவிட்டனர். பழமையான **நடுகல் திப்புசுல்தான் காலற்றதாகும்.** வீரன் ஒருவன் கை வெட்டுப்பட்ட நிலையில் இறந்துபடுகிறான். அவன் நினைவாக, கையை முன்னிலைப்படுத்தி எழுப்பப்பட்ட நடுகல். பழங்கல்லில் இருந்தவாறே உருவங்களை அமைத்து, தற்போது இக்கல் எழுப்பப்பட்டுள்ளது. மக்கள் **சாமிக்கல்** என்று அழைத்து வழிபடுகின்றனர். பழங்கல் பாதுகாக்கப்படவில்லையே என்னும் வருத்தம் தோன்றினாலும் அதன் நினைவைக் காக்கின்ற முயற்சியாகப் புதியதொரு கல்லையாவது பழமையின் கருத்து மறையாமல் இருக்கும் வண்ணம்

நாட்டியுள்ளனர் என்பது ஆறுதல் தருகிறது. **பழங்கல்லின் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு ஆகும்.**

சேவூர் நடுகல்

மீளாய்வு:

மேற்படி நடுகல்லில், வீரனின் உருவம் எதுவும் காணப்படாததும், கை மட்டுமே மையப்படுத்தப்பட்டுள்ளதும், இந்நடுகல் வழக்கத்துக்கு மாறாயுள்ள ஒரு நடுகல் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதோடல்லாமல், மீளாய்வு நோக்கில் கருத்துகளைத் தேடவேண்டும் என்ற எண்ணத்தையும் வலுவாக்கியது. நடுகல்லில் காணப்படும் கை ஓர் ஆணின் கையல்ல. பெண்ணின் கை. கையில் வளையல்கள் காணப்படுகின்றன. வீரர்களுக்கு எடுக்கப்படும் நடுகற்களில், குறிப்பாகக் கையை மட்டும் புடைப்புச் சிற்பமாகக் கொண்ட நடுகல் பற்றிய செய்தி கேள்விப்பட்டிராத ஒன்று. எனவே, இந்த நடுகல் வேறு வகையினதாக இருக்கவேண்டும்; இதுபற்றி மக்களிடையே வழங்கும் செய்திகள் சரியானவையாக இருக்கவாய்ப்பில்லை. இந்தக்கோணத்தில் தேடுதல் தொடர்ந்த வேளையில், **1918-ஆம் ஆண்டின் தொல்லியல் ஆண்டறிக்கையில்** ஒரு குறிப்பு, மேற்படி நடுகல்லைப்பற்றிய தெளிவைத்

தந்தது. 1917-ஆம் ஆண்டு, **ஆந்திரப்பகுதியில் அனந்தபூர் மாவட்டத்தில் வனவோலு என்னும் ஊரில் கோட்டைக்கருகில் ஒரு சதிக்கல் கல்வெட்டு** கண்டறியப்பட்டுப் பதிவானது பற்றி எழுதப்பட்டிருந்தது.

வீரக்கை (HERO-HAND) என்னும் சதிக்கல்:

பெனுகொண்டா என்னும் ஊரில், இராமதேவ நாயக்கன் என்பான் இறந்ததும், அவன் மனைவி கங்காசானி என்பவள் தீப்பாய்ந்தாள். அவளுடைய இச்செயலைப் பெருமைப்படுத்தும் வகையில், திப்ப நாயக்கன் என்பவன் ஒரு நந்தவனத்தை அமைத்து அதன் முன்பாக ஒரு **வீரக்கை (HERO-HAND)** நடுகல்லை நிறுவினான். இச்செய்தியைக் கொண்ட **கல்வெட்டு கன்னட மொழியில்** எழுதப்பட்டுள்ளது. **கல்வெட்டின் காலம் கி.பி. 1405.**

குற்றாலத்தைச் சேர்ந்த **சொ. சந்திரவாணன்** என்பவர், தம்முடைய **"தமிழகத்தில் சதி"** என்னும் ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிடுவதாவது: உடன் உயிர் விடும் பழக்கம் மன்னரில் தொடங்கி அனைவரிடமும் பன்னெடுங்காலம் இருந்துள்ளது. தீப்பாய்ந்த அம்மன், மாலையிட்ட அம்மன், பாவாடைக்காரி (பூவாடைக்காரி, பூ=தீ) என்று பலவாறு வணங்கப்படும் பெண் தெய்வங்கள் இவ்வாறு உடன் உயிர் நீத்த "சதி"ப் பெண்களே. கணவனோடு சுமங்கலியாகச் சுவர்க்கம் புகுதல், சமுதாயம் "சதி"ப்பெண்களைத் தெய்வமாகப் போற்றுதல் ஆகிய நம்பிக்கையின் அடிப்படையில் "சதி" என்னும் மரபு சமுதாயத்தில் தொடர்ந்தது.

தமிழகத்தில் பெரும்பாலும், **கையில் வாள் பிடித்த நிலையில் ஆணின் உருவமும், பூச்செண்டு, கண்ணாடி, குங்குமச்சிமிழ், அல்லது பழம் போன்றதோர் உருண்டைப்பொருளைக் கையில் பிடித்த நிலையில் பெண்ணின் உருவமும்** பொறிக்கப்பட்ட சதிக்கற்கள் காணப்படுகின்றன. சில சதிக்கற்களில் கல்வெட்டுப் பொறிப்பும் உண்டு. பொறிப்புகளில் **"கணவனைப் பிரியாதாள்", "துணைவனைப் பிரியாதாள்"** ஆகிய தொடர்கள் காணப்படுகின்றன. ஆளுருவங்களே அன்றி, ஒருசில மங்கலப்பொருள்களால் உணர்த்தியும் சதிக்கற்கள் அமைவதுண்டு. **ஒரு பெண்ணின் வலது கை, தோளிலிருந்து "ட" வடிவம் போல உயர்த்திக்காட்டப்பட்டு,** பூணிடப்பட்ட கம்பத்தில் அந்தக்கை இணைக்கப்பட்டுக் காணப்படுவதுண்டு. சென்னை அருங்காட்சியகத்தில் இது போன்ற கம்பங்கள் உள்ளன. இக்கம்பங்கள் உள்ள இடங்கள், **"வீரமாத்தி"** என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றன. ஒரு கல்வெட்டு **"தோளும் கையும் கொடுத்த கம்பம்" என்று இதைக்குறிப்பிடுகிறது.**

இந்திய அளவில் சதிக் கற்கள்:

இறந்த கணவனின் காலைத் தழுவியவாறு “சதி”



இந்திய அளவில், இந்தியாவின் மைய மாநிலப்பகுதி, குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் சதிக்கற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்விடங்களில் பெரும்பாலும், சதிக்கற்கள் ஓரிரு அடுக்குகள் கொண்டதாக உள்ளன. மேல் அடுக்கில், ஒரு பெண்ணின் கை புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டிருக்கும். செங்கோணத்தில் (90 பாகை) மடித்த நிலையில் தோளும், செங்குத்தாக உயர்த்திய நிலையில் முன்கையும் காணப்படும். சில போது, பெண் தன் கையில் பெருவிரலுக்கும் முன்விரலுக்கும் இடையில் எலுமிச்சம் பழமொன்றை ஏந்தியிருப்பாள். கைக்கு மேற்புறம், நிலவும், கதிரும் வடிக்கப்பட்டிருக்கும். சில போது, நிலவு, கதிர் ஆகியவற்றோடு பூச்செண்டு, தேங்காய் ஆகியன காணப்படும். அருகில் சிவலிங்கம் இருப்பதும் உண்டு. இன்னொரு அடுக்கில், வீரன் வாளொடு நின்ற நிலையிலும், அவனருகில் அவன் மனைவி (சதி) நின்ற நிலையிலும் இருப்பது போன்ற தோற்றம். சில போது, மற்றுமொரு அடுக்கில், வீரன் குதிரையின் மீது அமர்ந்த நிலையில் (போர்க்காட்சியை உணர்த்துவது) இருப்பது போன்ற தோற்றம். வீரனின் தலைக்குமேல் குடை இருந்தால், அவன் அரசனாகவோ அல்லது படைத்தலைவனாகவோ இருப்பான். இறந்துபோன கணவனின் காலைத் தழுவிய நிலையில் மனைவி இருப்பதாக வடிக்கப்பட்ட சதிக்கற்களும் உள்ளன. ”சதி”ப்பெண்ணை வணங்குகின்றவர்களுக்கு அவள் நலமும், வளமும் சேர்ப்பாள் என்பது மக்கள் நம்பிக்கை.

கருநாடகத்தில் சதிக்கற்கள்:

சாமராஜநகர் சதிக்கல்தோளும் கையும் கொடுத்த கம்பம்-கையில் ஏந்திய எலுமிச்சை

கருநாடகத்தில் வீரக்கற்கள் என்னும் நடுகற்களைப்போலவே சதிக்கற்கள் என்னும் நடுகற்கள் மிகுதியும் காணப்படுகின்றன. சென்ற ஆண்டு நண்பர்களோடு "ஹம்பி" என்னும் விஜயநகரம் சென்றபோது, **சாமராஜ நகரம்** என்னும் ஊருக்கு நாலுகல் தொலைவில் சாலையோரம் ஒரு நடுகல்லைப் பார்த்தோம். மகிழுந்தை நிறுத்தி அதனை ஒளிப்படம் எடுத்துக்கொண்டோம். அப்போது அது ஒரு நடுகல் என்ற பொதுக்கருத்து மட்டுமே மனதில் நின்றது. சேவூர் நடுகல்லை மீளாய்வு செய்கையில், சாமராஜநகரத்து நடுகல், **"தோளும் கையும் கொடுத்த கம்பம்" என்ற வகையைச் சேர்ந்த "சதிக்கல்"** லுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு என்பது உணரப்பட்டது. இந்தச் சதிக்கல் சிதைவு ஏதுமின்றித் தெளிவான புடைப்புச் சிற்பங்களைக் கொண்டுள்ளது. "சதி" என்னும் மரபுப்படி, உயிர் நீத்த பெண்ணின் வளைகள் அணிந்த "ட" வடிவக் கை; அக்கை பிணைக்கப்பட்ட, வேலைப்பாடுகளோடு காணப்படும் கம்பம்; இறந்து பட்ட வீரனைத் தேவமகளிர் விண்ணுலகத்துக்கு அழைத்துச் செல்லும் காட்சி; வீரன் விண்ணுலகு அடைந்ததைக் குறிப்பால் உணர்த்தும் சிவலிங்க வழிபாடு; நடுகல்லின் கீழ்ப்பகுதியில் "சதி"ப் பெண்ணை வணங்குகின்ற பெண்மக்கள் ஆகிய அனைத்துக் கூறுகளும் இச்சிற்பத்தில் உள்ளன. இந்தச் சதிக்கல்லில் "சதி"ப்பெண் தன் கையில் பெருவிரலுக்கும் முன்விரலுக்கும் இடையில் எலுமிச்சம் பழமொன்றை ஏந்தியிருப்பது சிறப்பான கூறு.

சதிக்கற்களில் உள்ள உருவங்கள் உணர்த்தும் உள்ளுறைக் கருத்துகள்:
சதிக்கற்களில் காணப்பெறும் புடைப்புச் சிற்ப உருவங்கள் பல கருத்துகளை உணர்த்துவதாக அமைகின்றன. நிலவு, கதிர், சிவலிங்கம் ஆகியவை சுவர்க்கம் என்னும் விண்ணுலகைக் குறிப்பன. பெண்ணின் கையில் உள்ள வளை, "சதி"ப்பெண்ணை வணங்குவோருக்கு அவள் அருளும் ஆசியைக்குறிக்கும்.

சேவூர் நடுகல்லும் சதிக்கல்லே:
மேற்குறித்த செய்திகளின் அடிப்படையில், சேவூரில் காணப்படும் நடுகல், ஒரு சதிக்கல் என்பது தெளிவாகிறது. நடுகல்லில் மேற்பகுதியில் நிலவும், கதிரும் காணப்படுகின்றன. அதனை அடுத்து, இரு பெண்கள் சிவலிங்க வழிபாடு செய்யும் காட்சி உள்ளது. அதனை அடுத்து, வளை அணிந்த "சதி"ப்பெண்ணின் கை. **வீரக்கை (HERO-HAND) என்னும் சதிக்கல்லின் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதில் ஐயமில்லை**. திப்புசுல்தான் காலத்தைச் சேர்ந்த ஒரு சதிக்கல்லின் மூல நடுகல்லான அரியதொரு தொல்லியல் சின்னத்தை நாம் இழக்க நேர்ந்தது வருத்தமளித்தாலும், வியப்பை அளிக்காது. காரணம், தொல்லியல் சார்ந்த எவ்வளவோ எச்சங்களை அவற்றின் அருமை அறியாதார் அழிப்பதும், அருமை அறிந்தவர் அவற்றை அழிவிலிருந்து காக்கும்

வழியறியாது விழிப்பதும் தொடர்ந்து நடைபெறுகின்றனவே. தொல்லியல் துறையும், அரசும் அக்கறை கொள்ளவேண்டும். சேவூரின் வீரக்கை வகைச் சதிக்கல்லின் மூலவடிவத்தை மறந்துபோகாமல் நினைவூட்டும் வண்ணம் அதே வடிவில் படியெடுத்ததுபோல் மற்றொரு நடுகல்லை மக்கள் அதே இடத்தில் வைத்து வழிபடுவதைப் பாராட்டியே ஆகவேண்டும்.

நன்றி:

1. இணையம் வழி பார்த்த ஓர் ஆய்வுப்பதிவு.

The iconography of Sati: An Archaeological study of sati memorial Pillars of Central Asia-by Ameeta Singh, Sarojini Naidu Govt. Girls College, Bhopal.

2. தமிழகத்தில் சதி-ஆய்வுக்கட்டுரை-.சந்திரவாணன்.

3. இணையத்தில் கிடைத்த படங்களுக்காக.

தொடர்பு: கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு து.சுந்தரம் (doraisundaram18@gmail.com)

8. காஞ்சியில் பல்லவர்கால பாணியில் அமைந்த கற்றளிகள்

– நூ த லோ சு

என்னுடைய 77 வது பிறந்த நாள் வழிப்பாட்டில் இம்முறை காஞ்சியில் உள்ள கோயில்களைக் கொண்டேன் (13.08.17). அன்று எடுத்த படங்களின் வரிசையில் "**சொக்கீசுவரர்**" கோயிலும் உள்ளது. இருப்பிட வரைபடங்கள் வைத்துள்ளேன் காண்க.

இக்கோயிலுக்கு நான் சென்ற போது வழிபாடு நேரம் கடந்துவிட்டபடியால், வழியை மூடிவிட்டு காக்கி உடையணிந்த கோயில் காவற்காரர் எங்களை உள்ளே விடவில்லை (வேறுசிலர் சென்றுதான் வந்தார்கள்; அவர்கள் காமாட்சியம்மன் கோயில் நிருவாகத்துடன் தொடர்புடையவர் போலும்!!!).

ஏறக்குறைய 8 அடி ஆழப் பள்ளத்தில் பல்லவர் கால கற்றளி பாணி ஒக்கச் சிறிய கோயில் கூகுளில் வரைபட தொகுப்பில் இருப்பிடத் தகவலில் உள்ளது. ஆனால் படம் இதுவரை யாரும் போடவில்லை நான் குறுநிலை உதவியாளன் எனும் நிலையில் முயலுவேன். தினமும் ஆயிரக்கணக்கில் காமாட்சி அம்மனை வழிபடுவோர் சிலராவது இது என்ன ஓர் கோயில் என இதனைப்பார்க்க முயலக்கூடும். உள்ளே செல்லாததால் ஒரு படம் தான் உள்ளது.

சொக்கீசுவரர் கோயில்



மாடத்துச் சிற்பங்களில் ஆடை புனைந்துள்ளதால் வழிபாட்டில் உள்ளதாகத் தெரிகின்றது. காமாட்சி அம்மன் கோயிலின் வெளிச்சுற்று தெருவில் அக்கினி மூலையில் சரியாக கிழக்குப்பார்த்த முகமாக உள்ளது. காமாட்சி அம்மன் கோயிலே கிழக்கும் பார்க்காது மேற்கும் பார்க்காது ஈசான மூலை (மகத தேசம், புத்தரின் நாடு பார்க்கின்றது). ஏனெனில், அது ஒருகாலத்தில் புத்த பள்ளியாக இருந்தது (பார்க்க: "பௌத்தமும் தமிழும்", மயிலை சீனி வேங்கடசாமி).

மேலும், இந்த காமாட்சி அம்மன் கோயிலுள் ஓர் தூணில் உள்ளதைக் காட்டி இதுதான் ஆழ்வார்கள் பாடிய திவ்யதேசம் என்கின்றனர். அதுபோல, உலகளந்த பெருமாள் கோயிலில் மூன்று திருமாலின் திவ்வியதேசங்கள் இருக்கின்றதாகக் குறுங்கோயில்களும் காட்டியுள்ளனர். ஏகாம்பரேசுவரர் கோயிலிலும் ஓர் மூலையில் மேடையில் ஓர் படிமம் வைத்து அதையும் திவ்யதேசம் என்கிறார்கள். காமாட்சி அம்மன் கோயிலின் மேற்குப்புறமாகச் சென்றால் (சிறு வழி), குமரக்கோட்டம் அடைந்து விடலாம். அங்கு முருகன் கோயிலில் காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் அரங்கேறிய மண்டபம் உள்ளது.

காஞ்சியில் பல்லவர்கால பாணி கற்றளிகள் பற்பலவற்றினை யாரும் பார்ப்பதில்லை. காஞ்சி கைலாச நாதர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில் ஆகியவற்றையாவது பலரும் பல்லவர்கால பாணியுடைய அரிய கோயில்கள் என அறிந்து பார்க்கவாவது வருகின்றனர். ஆனால், கோடானுகோடி மக்களில் ஏறக்குறைய பல்லவர்கால பாணியில், அதே காஞ்சியில் உள்ள கீழ்க்கண்ட கோயில்களை 99.99% அறியார். அந்த ஊரில் தொடர்ந்து பல்லாண்டுகள் வாழ்பவரும் கூட இவற்றின் அருமை அறியார். அவ்வழி சில கற்றளிகள் பற்றி இங்கு வைத்தல் தகும் எனும் நிலையில், இவற்றைக் காண்க.

Siva Shrines In India and Beyond Part-2, Rao Bahadur Pammal Sambandha Mudaliar, 1946 என்ற நூலில் காணப்படும் மேலும் சில தகவல்கள் கீழே:

1. மாதங்கேசுவரர் கோயில் :-

காஞ்சீபுரம் கஸ்பாவுக்கு வெளியில் உள்ளது, வைகுண்டப் பெருமாள் கோயிலுக்குத் தென்மேற்கில், மருத்துவ மனைக்குப் போகும் வழியில் உள்ளது; கர்ப்பக்கிரகம் மகாபலிபுரம் கோயிலைப் போன்றது. நந்திவர்மன் எனும் பல்லவ அரசனால் சற்றேறக்குறைய எட்டாம் நூற்றாண்டில் கட்டப் பட்டதாம். இக்கோயிலும் முக்தீசுவரர் கோயிலும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. இங்கு மணற் கல்லாலாய சிற்பங்கள் இருக்கின்றன. கைலாசநாதர் கோயிலுக்கு முற்பட்டதென்பர். சிறிய கோயில்; மேற்குபார்த்தது. மாதங்க முனிவர் பூசித்த படியால் மாதங்கேசுவரர் எனப்பெயர் பெற்றதாம் ; இங்கு தேவி சந்நிதியில்லை.

மாதங்கேசுவரர் கோயில்

மாதங்கேசுவரர் கோயில்

2. ஐராவதேசுவரர் கோயில் :-

ராஜ வீதிக்குக் கிழக்கில் கச்சேசுவரர் கோயிலுக்குச் சமீபத்தில் வடக்கில் உள்ளது. ஒரு தந்தத்தை இழக்க ஐராவதம் பரமசிவத்தைப் பூசித்து அத்தந்தம் பெற்ற ஸ்தலம். பல்லவ கட்டிடம் , எட்டாம் ஆண்டின் கடைசியில் கட்டப்பட்டது. மிகவும் சிறிய கோயில். கோயில் பூர்த்தியாக வில்லை.

ஐராவதேசுவரர் கோயில்

ஐராவதேசுவரர் கோயில்

ஐராவதேசுவரர் கோயில்

3. முக்தீசுவரர் கோயில் :-

இது ஒரு பழைய பல்லவா லயம், வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு அருகிலுள்ளது, இரயில் நிலையத்திற்குப் போகும் பாதையில் மாதங்கேசுவரர் கோயிலுக்கு வடக்கிலுள்ளது, நந்திவர்மன் காலத்து கல்வெட்டு இங்கு ஒன்றுளது. இதன் பூர்வீகப் பெயர் தர்மமகாதேவி ஆலயம், தர்மமகாதேவி எனும் பல்லவ அரசியால் கட்டப்பட்டது போலும். சுமார் 1200 - வருடங்களுக்கு முற்பட்ட கட்டடம் ; சிலர் இதைக் கைலாச நாதர் கோயிலுக்கு முற்பட்டதென்று எண்ணுகின்றனர். கோயில் சிறியது. ஈசான தேவதை பூசித்த ஸ்தலம்.

முக்தீசுவரர் கோயில்

4. சுரகரீசுவரர் கோயில் :-

கோயிற் கட்டடத்தின் தரையமைப்பு, அக நாழிகையை (கருப்பக்கிருகத்தை)யும் அதன் முன்புறத்தில் சிறிய இடைகழியையும் உடையது. கருப்பக்கிருகத்தைச் சார்ந்தஇடைகழிக்கு இடைநாழிகை (அர்த்த மண்டபம்) என்பது பெயர். அகநாழிகை (கருப்பக்கிருகம்) பெரும்பாலும் சதுரமான அமைப்புடையது. மிகச் சில, வட்ட வடிவமாக இருக்கும். காஞ்சிபுரத்துச் சுரகரீசுவரர் கோயிலின் தரையமைப்பு வட்டவடிமான அகநாழிகை கொண்டது (தமிழர் வளர்த்த அழகு கலைகள், மயிலை சீனி வேங்கடசாமி).

சுரகரீசுவரர் கோயில்

"மாதங்கேசுவரர் கோயில்" (மாதங்கம் = யானை; இங்கு ஐராவதம்); மற்றும் "ஐராவதேசுவரர் கோயில்" -- மாதங்க+ஈசுவரர் = மாதங்ககேசுவரர் (வடமொழி புணர்ப்பு = அ ஆ முன் இ ஈ வர ஓர் ஏ தோன்றும்) எனவே ஒரே ஊரில் மாதங்கேசுவரர், ஐராவதேசுவரர் கோயில் என இரு பழம் கோயில்களைக் காணமுடிகின்றது. சிலப்பதிகாரத்தில் காவிரி பூம்பட்டினத்தில் இந்திரனின் ஐராவதம் என்கிற வெள்ளை யானையை மக்கள் வழிபட 'வெள்ளையானைக் கோட்டம்' இருந்துள்ளது (பார்க்க: "அமரர் தருக்கோட்டம், வெள்ளையானைக்

கோட்டம்"- சிலப்பதிகாரம், கனாத்திறம் உரைத்த காதை, 9). இவையன்றி, முக்தீசுவரர் கோயில், சுரகரீசுவரர் கோயில் இவை எல்லாம் கைலாச நாதர் கோயில், வைகுந்த பெருமாள் ஆலயம் போல தொல்லியல் துறையினரின் பராமரிப்பில் உள்ளன.

தொடர்பு: திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

9. மானம்பாடி அருள்மிகு நாகநாத ஸ்வாமி திருக்கோயில்

– நூ த லோ சு

கோயில் நிர்வாகத்தால் புனரமைப்பு என்ற பெயரில் சிதைக்கப்பட்ட கோயில் தான் மானம்பாடி அருள்மிகு நாகநாத ஸ்வாமி திருக்கோயில். அதன் சிதைக்கப்பட்ட பகுதிகளின் சில புகைப்படங்கள்.

10. தாராபுரம்-கோட்டையும் கோட்டைக் கோயிலும்

— து. சுந்தரம்

முன்னுரை:
கோவை வாணவராயர் அறக்கட்டளையினர் நடத்திவரும் வரலாற்றுச் சுற்றுலா நிகழ்ச்சியாகக் கடந்த 28-05-2017 அன்று தாராபுரம் பகுதியில் உள்ள தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களைக் காணச் சென்றிருந்தோம். அதுபற்றிய ஒரு பகிர்வு இங்கே.

தாராபுரம்:
தாராபுரம். கொங்குநாட்டின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஒரு பழமையான ஊர். கோயமுத்தூர் உருவாவதற்கு முன்புவரை தாராபுரம்தான் தலைநகராயிருந்தது. தாராபுரத்தின் பழமையைச் சோழ அரசன் முதலாம் பராந்தகனோடு தொடர்புப் படுத்தலாம். ஏனெனில், முதலாம் பராந்தகன் பெயரால் தாராபுரத்துக்குப் பராந்தகபுரம் என்றொரு பெயர் இருந்ததாகக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளதாகத் தொல்லியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதன் பின்னர், இவ்வூருக்கு **இராஜராஜபுரம்** என்ற பெயர் வழங்கியது. இடையில், இவ்வூருக்கு **இராஜமகேந்திரபுரம்** என்ற பெயர் இருந்துள்ளது என அறிஞர் வைத்தியநாதன் குறிப்பிட்டுள்ளார். அதற்கான கல்வெட்டுச் சான்றும் உள்ளதென அவர் கூறியுள்ளார். இப்போது கல்வெட்டு இல்லை. இவற்றுக்கிடையில், தாராபுரத்துக்கு **விலாடபுரம், விலாடபுரி** ஆகிய பெயர்களும் இருந்ததாகத் தொன்மப்புனைவுகள் (Myth) கூறுகின்றன.

கங்கர்கள் காலத்தில் தாராபுரம்:
கி.பி. ஆறாம் நூற்றாண்டு காலகட்டத்தில், கங்கர்கள் கொங்குநாட்டை ஆட்சி செய்தபோது, கங்கரின் தலைநகராக ஸ்கந்தபுரம் என்ற ஊர் இருந்தது. இது பற்றிக் கொங்குமண்டல சதகத்தில் குறிப்புள்ளதாகத் தெரிகிறது. இந்த ஸ்கந்தபுரம் எந்த ஊர் என்று தெரியாத நிலையில் பல ஊகங்கள் உலவின. தாராபுரமும் ஸ்கந்தபுரமாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. டணாயக்கன் கோட்டை, திருமுருகன் பூண்டி ஆகிய ஊர்களும் இவ்வாறே கருதப்பட்டன.

தாராபுரம்-ஓர் அடிக்கீழ்தளம்:
தாராபுரத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. இடைக்காலத்தில், இவ்வூர் ஓர் அடிக்கீழ்தளமாக இருந்துள்ளது. வணிகர்கள் பெருவழியில் பயணம் சென்றபோது அவர்களின் பாதுகாப்புக்காகப் படைகள் தங்கியிருந்த இடமே

அடிக்கீழ்தளம் என்றழைக்கப்பட்டுள்ளது. இதற்கான கல்வெட்டுச் சான்று இருந்தபோதிலும், இவ்வூர்க் கல்வெட்டுகளில் குறிப்பு இல்லை. திருமுருகன்பூண்டிக் கோயில் கல்வெட்டிலும், பொன்னிவாடிக் கோயில் கல்வெட்டிலும் சான்றுகள் உள்ளன. பொன்னிவாடிக் கல்வெட்டு கீழ்வருமாறு:

1 ......ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ரா
2 சேன்திரதேவன் யாண்டு பதின
3 ஞ்சாவது இராசராசபுரத்து அடிக்கீழ்த்தள
4 த்து விலைய ....

க.வெ. எண்; 146- இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1967-68.

இவ்வூர் வணிகர்கள் பொன்னிவாடி, கொழிஞ்சிவாடி ஆகிய ஊர்க் கோவில்களுக்குக் கொடையளித்த செய்திகள் உள்ளன. இச்செய்திகளின் அடிப்படையில், தாராபுரம், வணிகப் பெருவழியொன்றில் அமைந்திருந்தமையும், வணிகச் சிறப்பு பெற்ற நகரமாய் இருந்தமையும் பெறப்படுகின்றன. இடைக்காலத்தில், கொங்குநாட்டில் இருந்த ஒன்பது மாநகர்களில் தாராபுரமும் ஒன்று என்பது இவ்வூரின் மற்றொரு சிறப்பு.

கோட்டைமேடும் உத்தரவீரராகவப் பெருமாள் கோயிலும்:
தாராபுரத்தில் கோட்டைமேடு என்னும் இடத்தில் அமைந்திருந்த உத்தர வீரராகவப் பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். கோயிலுக்குள்ளேயே ஒரு பழமையான கருவறையோடு கூடிய கோயில் அமைப்பு உள்ளது. அதில் ஆதி கேசவப்பெருமாள் என்னும் இறைவர் இருக்கிறார். உத்தர வீரராகவப் பெருமாள் கோயிலைப் பொறுத்தவரை இந்த ஆதிகேசவப் பெருமாள்தான் மூலவர். இக்கோயில் கட்டிட அமைப்பு பழமையானது. கோட்டை பற்றிய செய்திகள் இடைக்காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை. கல்வெட்டுகளில் இக்கோயிலின் பெயர் உத்தமராகவப் பெருமாள் என்னும் இறைவன் பெயரால் சுட்டப்பெறுகிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் இரண்டு மட்டுமே இக்கோயிலைச் சார்ந்தவை. மற்றவை, வேறு எங்கோ இருந்தவை; இங்கு கொணர்ந்து பதிக்கப்பட்டவை. கல்வெட்டுத் துறை இவற்றைப் பதிவு செய்திருந்தபோதிலும், இவை முன்பு எங்கிருந்தன என்ற குறிப்பைப் பதிக்கவில்லை.

உத்தர வீரராகவபெருமாள் கோயில் முகப்பு

ஆதிகேசவப்பெருமாள்-பழங்கோயிலின் சுவர்ப்பகுதி

ஆதிகேசவப்பெருமாள்-பழங்கோயிலின் உட்புறம்

ஆதிகேசவப்பெருமாள்-பழங்கோயிலின் சுவர்க்கோட்டம்

கல்வெட்டுகள்:

கோயில் திருப்பணிகளின்போது சுவர்களில் பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. ஆங்காங்கே இடைச் செருகல்களாகச் சில துண்டுக்கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை, இக்கோயிலுக்குரியன அல்ல என்பது இக்கல்வெட்டுகளின் பாடங்களிலிருந்து (வாசகம்) தெரியவருகிறது. ஒரு கல்வெட்டில், தாராபுரத்துக்குப் பெருந்தொலைவில் உள்ள உடுமலைப் பகுதியில் அமைந்திருக்கும் தளிஞ்சியைச் சேர்ந்த வணிகர்கள் கொடை கொடுத்த செய்தி காணப்படுகிறது. இதே போன்ற பாடங்கள் கொண்ட கல்வெட்டு குண்டடம் கோயிலிலும் இருந்துள்ளது. ஆனால், தற்போது

அக்கோயிலில் கல்வெட்டுகள் எவையுமில்லை. எனவே, குண்டடம் கோயில் கல்வெட்டு இக்கோயிலில் வைக்கப்பட்டிருக்கலாம். கரைவழி நாட்டு (தற்போதைய உடுமலைப்பகுதி) ஏழூர் என்னும் ஓர் ஊர் அழிந்துபோனதாகக் குறிப்புகள் உள்ளன. அவ்வூரைபற்றிய குறிப்பு இக்கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது. இக்கோயிலுக்குரியவையாக இரண்டு கல்வெட்டுகளே உள்ளன என்று முன்னரே குறிப்பிட்டோம். அவற்றில் ஒன்று, விஜயநகர அரசர் காலத்தைச் சேர்ந்தது. அதில், இக்கோயிலுக்குக் கொடையாகக் கொழுமம்-சங்கிராம நல்லூரில் நிலம் அளிக்கப்பட்டுள்ள செய்தி உள்ளது. மற்றொரு கல்வெட்டு, வீர நஞ்சராய உடையார் காலத்தது. அதில், இங்கு ஒரு தெப்பக்குளம் தானமாகக் கொடுத்த செய்தி உள்ளது. இவ்விரு கல்வெட்டுகளின் அடிப்படையில், இக்கோயிலும், கோட்டையும் விஜயநகரர்/நாயக்கர் காலத்தில் உருவானவை எனக்கருதலாம். வேற்றிடங்களுக்குரிய கல்வெட்டுகள் இங்குக் காணப்படுவதால், அவ்வாறான வேற்றிடங்களிலிருந்து கொணர்ந்த கற்களைக் கொண்டு கோயிலும் கோட்டையும் கட்டப்பட்டன என்று கருத இடம் உண்டு.

மெக்கன்சி, புக்கானன் – ஆங்கிலேயர்காலக் குறிப்புகள்:

இக்கோயிலைப் பற்றி மெக்கன்சி குறிப்பிட்டுள்ளார். **கி.பி. 1800-இல் புக்கானன்** இங்கு வந்துள்ளார். அவர் தம் பயணக்குறிப்பில் தாராபுரம் கோட்டையைப் பற்றி எழுதியுள்ளார். கெஜட்டியர் குறிப்பில், **ஐதர் அலி இக்கோட்டையை அழித்ததாகக் குறிப்புள்ளது. கி.பி. 1804-இல் மீண்டும் இங்குக் கோட்டை ஹூக்ளி என்னும் ஆங்கிலேய ஆட்சியாளரால் கட்டப்பட்டது.** அதன்பிறகே, தாராபுரம் கோவை மாவட்டத்தின் தலைநகரானது. 1828-ஆம் ஆண்டு வரை கோவையில் நீதிமன்றம் இருக்கவில்லை. கோவைக்கான நீதிமன்றம் தாராபுரத்தில்தான் இயங்கியது. **கொங்குநாட்டிலேயே முதன்முதலில் கத்தோலிக்கர் கோயில் கி.பி. 1609-இல் இவ்வூரில்தான் கட்டப்பெற்றது.** மதுரையை மையமாகக் கொண்டுதான் கிறித்தவம் கொங்கு நாட்டில் பரவியது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு முதன்முதலில் கத்தோலிக்கக் கோயில் கட்டப்பட்ட் செய்தி மேற்படி கருத்துக்கு மாற்றாக விளங்குவது ஆய்வுக்குரியது. **கைபீது என்னும் ஆவணங்களில் தாராபுரம், துக்கடி தாராபுரம் என்று குறிக்கப்பெற்றுள்ளது துக்கடி என்பது கோட்டையுள்ள இடத்தைக் குறிக்கும்.**

சமணத் தடயங்கள்-ஆஞ்சநேயர் வழிபாடு:

இங்குள்ள கருப்பராயன் கோயிலுக்கருகில் சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் இருந்துள்ளனவாகக் கூறப்படுகிறது. தாராபுரத்தில், நவ ஆஞ்சநேயர்

கோயில்கள் உள்ளன. விஜய நகரர் காலத்தில்தான் தமிழகத்தில் ஆஞ்சநேயர் வழிபாடு வந்துள்ளது.

தாராபுரம்-பெயர்க்காரணம்:

தாராபுரத்தின் மிகப் பழமையான பெயர் பராந்தகபுரம் என்பது. இராஜராஜபுரம் என்பது இடைக்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் சோழர்காலப்பெயர். இப்பெயர் நாளடைவில் தாராபுரம் என்று மருவியது. இதே இராஜராஜபுரம் என்னும் பெயர் தஞ்சை மாவட்டத்தில் தாராசுரம் என மருவியுள்ளது. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மற்றொரு இராஜராஜபுரம், ராதாபுரம் என்று மருவியுள்ளது. வேறு வேறு பகுதிகளில் சிறு மாற்றங்களுடன் பெயர் மருவியதற்கு அவ்வப்பகுதிகளின் மக்களின் பேச்சு மொழியில் நிகழும் வேறுபாடே காரணம். தாராபுரத்துக்கருகில் உள்ள தில்லாபுரி என்னும் ஒரு சிற்றூரில் தில்லாபுரியம்மன் கோயில் வளாகத்தில் இருந்த ஒரு பிற்காலக் கல்வெட்டில் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு),

> **...................... கொங்கு வஞ்சி விலாட புர**
> **ம் ராசராசபுரம் விலாதபுரம் நரையனூர் னா**
> **டு ....**

என்று குறிக்கப்படுகிறது. தாராபுரத்துக்கு வஞ்சி என்னும் பெயரும் இருந்துள்ளது என்பதை அறிகிறோம். கரூருக்கும் வஞ்சி என்னும் பெயர் வழங்கியுள்ளது. கொங்கு நாட்டைச் சேரர் கைப்பற்றியபோது சேரநாட்டு வஞ்சியின் பெயரை அடியொற்றிக் கரூருக்கும் வஞ்சி என்னும் அடைமொழியைத் தந்துள்ளனர். **"கருவூரான வஞ்சி"** என்பது வழக்கு.

கோயிலில் உள்ள தகவல் பலகைச் செய்தி (தலபுராணம்):

கொங்கு நாட்டின் 24 நாடுகளில் ஒன்றான நரையனூர் நாடு கொங்குநாட்டுக்கே தலைநகர். புராண காலத்தில் பாண்டவர்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தது விராடபுரம் என்னும் தாராபுரம். சோழர், பண்டியர், போசளர் (ஹொய்சளர்), விஜய நகர அரசர், மதுரை நாயக்கர் ஆகியோர் தாராபுரத்தை ஆட்சி செய்துள்ளனர். கொங்கு நாட்டு அரசராக ஆட்சி ஏற்பவர்கள் இக்கோவிலில் முழுக்கிட்ட ("அபிஷேகம்") பிறகே ஆட்சியைத் தொடங்குவார்கள். கடத்தூர், கொங்கூர், கொழுமம் ஆகிய ஊர்களில் இக்கோயிலுக்குக் கொடை நிலங்கள் இருந்துள்ளன. அந்நியர் படையெடுப்பால் கோயில் முழுதும் சிதைந்தபோது, கி.பி. 1387-இல் விசய நகர இரண்டாம் அரசர் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளார். கி.பி. 1321-இல் இக்கோயில் சமணப்பள்ளியாக இருந்ததற்குச்

சான்று உள்ளதென வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கி.பி. 2-ஆம் ஆண்டில் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டில்?) கங்கர் என்ற இரட்டையர் கொங்கு வஞ்சி விராடபுரத்தை ஆட்சி செய்துள்ளனர். கங்கர் ஆட்சி செய்ததால் கந்தபுரம் என்று பெயர்பெற்றது. (ஆசிரியர் குறிப்பு: தலபுராணம் என்பது, செவிவழித் தொன்மப் புனைவுகளை உள்ளடக்கியது. சில புராணங்களில் வரலாற்றுண்மைகள் இப்புனைவுக் கதைகளுள் மறைந்து கிடக்கவும் வாய்ப்புள்ளது. தக்கச் சான்றுகளாலும், ஏரணமுறைகளாலும் (Logical) மெய்யான வரலாற்றுச் செய்திகள் வெளிப்படக்கூடும்.)

துண்டுக் கல்வெட்டுகள்

கல்வெட்டு-1

பாடம் :

1 (ம)ங்கலத்து ஸபையோம் பெரி
2 ..ஸ உள்ளிட்டாற்கு இத்திரு ந

கல்வெட்டு-1

குறிப்பு: ஒரு சதுர்வேதிமங்கலத்தின் சபையாரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கல்வெட்டு-2

பாடம் :

1 (நா)ட்டு ப்ரஹ்மதேசம் ஸ்ரீ ..ஜா.....
2 (கோ)யில் சிவப்ராஹ்மணர்களில் திரு(க்கு)..

கல்வெட்டு-2

குறிப்பு: ஒரு பிரமதேயம் (பிராமணர்க்குக் கொடையாகத் தந்த ஊர்) குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு-3

பாடம் :

1 (நி)லத்துக்கு கிழக்
2 இ னான்கு எல்லை
3 (கு)ம் இவர்கள் புகா

கல்வெட்டு-3

குறிப்பு: நிலத்தின் நான்கு எல்லை பற்றிய குறிப்பு, ஒரு நிலக்கொடையைக் குறிக்கும்.

கல்வெட்டு-4

பாடம் :

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவத்தி
2 னார்க்கு பொக்கலூர்க்கால் (நா)
3 நாள்படிக்கும் திருபணிக்கும்
4 (படம்) நத்தவரி மண்டலமுத...

கல்வெட்டு-4

குறிப்பு: திரிபுவனச்சக்கரவத்தி என்னும் பெயரில் தாராபுரம் பகுதியில் உள்ள கல்வெட்டுகள் கொங்குச் சோழர்கள் வீரராசேந்திரனையும், குலோத்துங்கனையும் குறிக்கும். பொங்கலூர்க்கால் நாடு குறிக்கப்பெறுகிறது. கோயிலின் நாள் (அமுது) படிக்கும் திருப்பணிகளுக்கும் கொடையாகச் சில வரிகளினின்றும் கிடைக்கப்பெறும் வருமானம் அளிக்கப்படுகிறது. நத்தவரி, மண்டலமுதல்மைப்பேறு என்பவை அந்த வரிகளாகும்.

கல்வெட்டு-5

பாடம் :

1 ...யாழ்வியான பிள்ளை
2 (ய)க்கி மூன்று சலாகை அச்சு
3 ..கம் செல்வதாகவு இ த

கல்வெட்டு-5

குறிப்பு : கொடை ஒன்று மூன்று காசு வடிவில் கொடுக்கப்படுகிறது. அக்காசினின்றும் பெறப்படும் பொலிசை (வட்டி) கொடையை நிறைவேற்றப் பயன்படுகிறது. 11-13 நூற்றாண்டுகளில் புழக்கத்திலிருந்த ஸ்ரீயக்கி சலாகை அச்சு என்னும் நாணயம் இங்கே குறிப்பிடப்பெறுகிறது.

கல்வெட்டு-6

பாடம் :

1 ..ன நரையனூர் நாட்டுப்பிராந்த(க)

2 .ப்புக்கும் திருமடை விளாகத்துக்கும்

3 .தென்பாற்கெல்லை கீழை வாசல் (போ)

4 (அ)முதுபடி சாத்துப்படி பலபடி நிமந்த..

கல்வெட்டு-6

குறிப்பு : நரையனூர் நாட்டுப் பிராந்தக(புரம்) குறிக்கப்படுகிறது. இப்பெயர் இராசராசபுரத்தைக் (தாராபுரம்) குறிப்பதாகும். கோயிலுக்கு அமுதுபடி, சாத்துப்படி ஆகியவற்றுக்காக நிலக்கொடை அளிக்கப்படுகிறது.

மேற்படி துண்டுக்கலவெட்டுகளின் வாயிலாகத் தாராபுரத்துக் கோட்டைக்கோயிலைப் பற்றிய செய்திகள் தெளிவாகவில்லை. கொங்குச் சோழன் வீரராசேந்திரன் கல்வெட்டுகள் இரண்டு, கொங்குப்பாண்டியன் வீரபாண்டியன் கல்வெட்டு ஒன்று, விசயநகர அரசர் கல்வெட்டு ஒன்று, நாயக்கர் காலக் கல்வெட்டு ஒன்று, மைசூர் உடையார் காலக் கல்வெட்டு ஒன்று எனத் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்ட ஆறு கல்வெட்டுகளும் தற்போது கோயிலில் காணப்படவில்லை. ஒற்றைத் துண்டுக்கற்களில் காணப்படும் கல்வெட்டெழுத்துகள் மட்டுமே உள்ளன. பெரும்பாலான கோயில்களில், ஆங்கிலேயர் காலத்திலும், பின்னர் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பாதிவரையிலும் பதிவு செய்யப்பட்ட

கல்வெட்டுகளெல்லாம் காலப்போக்கில் கோயில்கள் புதுப்பிக்கப் படும்போது முறையாகக் காக்கப்படாமல் அழிந்து போயின என்பது அவலம்.

பதினாறு கால் மண்டபம்:

கோட்டைக் கோயிலான உத்தர வீரராகவப் பெருமாள் கோயிலுக்கு மிக அருகிலேயே ஒரு பழங்கால மண்டபம் காணப்படுகிறது. சுற்றிலும் வேறு கட்டுமானங்கள் எவையுமின்றித் தனித்து நிற்கும் இம்மண்டபம் நாயக்கர் காலப் பாணியில் பதினாறு கால்கள் கொண்டு அமைந்துள்ளது. தூண்கள் சற்றே சாயத்தொடங்கியுள்ளன. மேற்கூரையின் கற்கள் சற்றுக் கலைந்துபோயுள்ளன. மேற்கூரையில் செடிகளும் கற்றாழையும் முளைத்து, இன்னும் சற்றுக்காலத்தில் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படும் இந்த மண்டபத்தைப் பற்றிச் சரியான செய்திகள் இல்லை. மண்டபத்தின் அதிட்டானப்பகுதியின் கட்டுமானக் கற்கள் கட்டிலிருந்து விலகி, ஜகதி, உருள் குமுதம் ஆகிய பகுதிகளின் துண்டுக் கற்கள் சிதறுண்டு கிடந்தன. அவ்வாறான துண்டுக் கற்களில் எழுத்துகள் காணப்படவே, கல்வெட்டு ஆர்வலர்கள் மகிழ்ச்சியோடு சுற்றிச் சுற்றி வந்து ஆய்ந்து பார்த்தனர். மண்ணோடு கிடந்தமையால் எழுத்துகள் முதல் பார்வையில் படிக்க இயலவில்லை. ஆர்வலர் ஒருவர் அருகிலுள்ள வீட்டிலிருந்து கடலை மாவு வாங்கிவந்து கற்களின் மீது தேய்த்துப் பார்க்கையில் எழுத்துகள் படிக்கும் வகையில் தெரிந்தன.

பதினாறுகால் மண்டபம்

மண்டபக் கல்வெட்டுகள்

கல்வெட்டு-1

பாடம் :

> **ன் ணாயக்கர் நரைனூர் நாட்டு ப்ரஹ்மதேசம் ஸ்ரீ**
> **மறு நிலத்திலே பஹுதான்ய வருஷத்து முதல்**

கல்வெட்டு-1

கல்வெட்டு-2

பாடம் :

> **காரியம் நரையனூர் நாட்டு ப்ரஹ்மதேசம் ஸ்ரீ உடை**
> **ம் நெல்லும் போன வழியும் பல உபாதியும் ஊ**
> **தோம் இ னிலம் இரண்டு மாவுக்கும் வரும் மே**
> **யே பிடிபாடாகக் கொண்டு செம்பிலும் சிலை**

கல்வெட்டு-2

கல்வெட்டு-3

பாடம் :

ஆதிகேசவப் பெருமாளுக்கு தான.. அடிமையு(ஞ்)
ம் சுவடியிலும் கழித்துத் தந்தோம் இதற்க்கு சந்த்ரா

கல்வெட்டு-3

கல்வெட்டு-4

பாடம் :

புறத்து அனந்த ....(பட்டருக்கு)
நாள் முதலாக இ நிலத்துக்கு வரும் நி செயிப்பான் (இம்)
தாம் இம்மரியாதிக்கு நம் சுவடியிலும் கழித்து
றயிலியாக தன்தோம் யி மரியாதி நான் யிவ(ரு)

கல்வெட்டு-4

குறிப்பு: மேலேயுள்ள நான்கு கல்வெட்டுகளின் பாடங்களை ஆய்ந்து பார்க்கையில், இக்கல்வெட்டுகள் இம்மண்டபத்துக்கு உரியனவல்ல என்பது புலனாகிறது. "நரையனூர் நாட்டு ப்ரஹ்மதேசம் ஸ்ரீ உடை..." என்னும் தொடர், நரையனூ நாட்டுப் பிரமதேசம் ஸ்ரீ உடையபிராட்டிச் சதுர்வேதி மங்கலம் என்னும் கொழிஞ்சிவாடியைக் குறிக்கும். இது கொழிஞ்சிவாடி சொக்கநாதர் கோயில் கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படுகிறது. எனவே, இக்கல்வெட்டுகள் கொழிஞ்சிவாடிக் கோயிலுக்குரியன எனக் கருதலாம். மூன்றாம் கல்வெட்டில், கோட்டைக் கோயிலின் மூலவரான ஆதிகேசவப்பெருமாள் பெயர் வருவதால் இக்கல்வெட்டு ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடை பற்றியது எனலாம். இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதி கொண்டு இவை கி.பி. 13 அல்லது 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தன எனக் கருதலாம். இக்கல்வெட்டுகளில் நிலக்கொடை பற்றிய செய்தி வருகிறது. இறையிலியாக (வரி நீக்கம்) நிலம் அளிக்கப்படுகிறது.

நன்றி : செய்திகள் உதவி: முனைவர் இரா.ஜெகதீசன் அவர்கள், வாணவராயர் அறக்கட்டளை, கோவை.

தொடர்பு: கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு து.சுந்தரம் (doraisundaram18@gmail.com)

11. விஜயநகரர் ஆட்சியில் கொங்குநாடு

– து. சுந்தரம்

முன்னுரை:

23-09-2017 அன்று, கோவை வாணவராயர் அறக்கட்டளை சார்பாக, ”விஜய நகரர் ஆட்சியில் கொங்கு நாடு” என்னும் தலைப்பில் முனைவர். ஜெ. சௌந்தரராஜன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். இவர் சென்னைப்பல்கலைப் பேராசிரியர். யு.ஜி.சி. நல்கையில் விஜய நகரர் கட்டடக் கலை பற்றி ஆய்வு மேற்கொண்டவர். அவருடைய உரைக் கருத்துகள் இங்கே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

இந்தியக் கட்டடக்கலை – ஒரு முன்னோட்டம்:

இந்தியக் கட்டடக்கலை சிந்து சமவெளிப் பண்பாட்டில் தொடங்குகிறது. கி.மு. 2250 முதல் இந்தப் பண்பாடு தொடங்குகிறது. 1919-1922 காலகட்டத்தில் ஜான் மார்ஷல் அகழாய்வு செய்ததில் கட்டடங்களின் கூறுகள் வெளிப்பட்டன. ஆனால், அவை "CIVIL ARCHITECTURE" வகையைச் சேர்ந்தவை. கோயில் கட்டடக் கலைக்கான சான்றுகள் எவையும் கிட்டவில்லை. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகியன பாக்கிஸ்தான் பகுதிகள். நேருவின் அறிவுரையால், 500 இடங்களில் மேற்பரப்பு ஆய்வுகள் நடந்தன. கட்டட அடித்தளத்தின் எச்சங்களும், தூண்களின் எச்சங்களும் கிடைத்தன. அடுத்து, அசோகர் காலத்தில் சைத்தியங்கள் (புத்தர் கோயில்கள்) கட்டப்பெற்றன. கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை கட்டுமானங்கள் நிறைய ஏற்பட்டன. சாரநாத், சாஞ்சி, கயா, நாளந்தா, அமராவதி, பூம்புகார் ஆகிய இடங்கள் குறிப்பிடத் தக்கவை. அசோகனின் மகனும், மகளும் இலங்கை செல்லும்போது புகாரில் விகாரையில் வழிபட்டுள்ளனர். ஜைனத்துக்கும் பல்வேறு இடங்களில் கோயில்கள். கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், பக்தி இயக்கம் வளர்ச்சியுற்றபோது கோயில்கள் கட்டப்பெற்றன. கி.பி. 5-8 நூற்றாண்டுகளில் குகைத் தளக் கட்டுமானங்களும் (NATURAL CAVERNS) , குடைவரைக் கோயில் கட்டுமானங்களும் ஏற்பட்டன. இவ்வகைக் கட்டுமானங்கள் சாளுக்கியரால் தொடங்கப்பெற்றன.

தமிழகத்தில் கட்டடக் கலை:

பல்லவர்களும், முற்காலப் பாண்டியர்களும், சோழர்களும் தொடர்ந்தனர். கட்டடக் கலை மூன்று வகையினது. திராவிடம், வேசரம், நாகரம். திராவிடம் தென்னகத்துக்குரியவை. மற்ற இரண்டும் வடநாட்டுக்குரியவை.

தென்னகத்தில், விஜயநகரப் பேரரசு உருவானபோது, அவர்களுடைய கட்டடக் கலைப்பாணி, பல்லவர், பாண்டியர், சோழர் ஆகியோரின் மரபு அல்லது பாணியைச் சேர்த்து ஒரு புது வளர்ச்சியாக உருவெடுத்தது.

விஜய நகர் அரசு – உருவாதல்:

விஜய நகரம் (அரசு) கி.பி. 1334-இல் உருவானது. ஹரிஹரர், புக்கர் ஆகியோரால். சங்கமச் சகோதரர்கள். விஜய நகரம் பேரரசாக உருவெடுத்தது. கி.பி. 1358 முதல் கி.பி. 1667 வரை தென்னிந்தியா முழுதும் ஆளுகை. சங்கம, சாளுவ, துளுவ, அரவீடு ஆகிய நான்கு அரசர்குடிகள் இப்பேரரசை ஆட்சி செய்தனர்.

தில்லியிலும், தக்கணத்திலும் சுல்தான்களின் ஆட்சியில், இந்துப் பேரரசான விஜயநகர் மீது சுல்தான்களின் தாக்குதல் தொல்லைகள். அகமது நகர், கோல்கொண்டா, பிஜப்பூர், பிதார் ஆகிய நான்கு சுல்தான்கள், அனைத்துப்

பக்கங்களிலிருந்தும் ஒருங்கே வன்மையாகத் தாக்கியதில் ஈடுகொடுக்கமுடியாமல் விஜய நகர் வீழ்ந்தது. இந்த நான்கு சுல்தான்களும் பாமினி சுல்தான்கள் என்னும் பொதுப்பெயர் கொண்டவர்கள். போர் நடைபெற்ற இடம் தலைக்கோட்டை. இராபர்ட் சிவெல், விஜய நகர் அரசு, சுல்தான்களால் அழிக்கப்படாதிருந்தால், ஒரு மிகப்பெரிய வலுவான, இந்திய நாடு முழுமையையும் ஆளத்தக்க அரசாக உருவெடுத்திருக்கவேண்டியது என்று குறிப்பிடுகிறார். விஜய நகர் அரசின் அழிவு பற்றி ROBERT SEWELL, "THE FORGOTTEN EMPIRE" என்னும் தம்முடைய நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

விஜய நகரக் கட்டடக் கலை:

விஜய நகரக் கட்டடக் கலை, மூவகையில் முன்னர் இருந்தவற்றைவிட வளர்ச்சியுற்றது எனலாம். அவை CIVIL ARCHITECTURE, RELIGIOUS ARCHITECTURE, MILITARY ARCHITECTURE. கோயிற்கட்டடக் கலையில், விஜய நகரப் பாணியில் புதிய அமைப்பு மண்டபங்கள். 16 கால், 100 கால், 1000 கால் மண்டபங்கள் எனப் பல்வேறு மண்டபங்கள் கட்டப்பெற்றன. இவை, உற்சவ மண்டபங்கள், நாட்டிய மண்டபங்கள் எனப் பலவகையானவை. மொத்தம் 14 வகைகள் உள்ளன. கோயில்களில் முன்பில்லாத கட்டுமானங்களாகக் குளங்கள், கோபுரங்கள் ஆகியன எழுந்தன. ஹம்பியில் நிறையக் கோயில்கள் பெரிய அளவில் கட்டப்பட்டன.

ஹம்பி 26 கி.மீ. பரப்புடையது. இயற்கை அரண் கொண்டது. மூன்று பக்கங்களில் மலைக்குன்றுகள், நாலாவது பக்கம் துங்கபத்திரை ஆறு. MILITARY ARCHITECTURE - FORTIFICATIONS வகையில் கோட்டைகளும், மதில்களும், அகழிகளும் விஜய நகர் அரசு காலத்தில் கட்டப்பெற்றன.

ஹம்பி



மதுரை, தஞ்சை, செஞ்சி போன்று எட்டு நாயக்கர் அரசுகள் விஜய நகர் அரசின் கீழ் இயங்கியபோது இவ்வாறான கோட்டைகள் பெருகின. கோயில் தூண்களில் இசைத்தூண்கள், ஒரே கல்லில் வேலைப்பாடுகளோடு கூடிய தூண்கள், யாளித் தூண்கள் ஆகியன புதியதாகத் தோன்றின. அதிட்டானப் பகுதியில், யாளி வரிகள், யானை வரிகள் ஆகியவை நிறைய இருந்தன. இராமாயணக் கதைக் காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டன. இதே காட்சிகள் கோயில் சுவர்களில் ஓவியங்களாகவும் வரையப்பட்டன. சிவபுராணம், விஷ்ணு புராணம் ஆகிய நூல்களிலிருந்து காட்சிகள் எடுத்தாளப்பட்டுத் தூண் சிற்பங்களாக வடிக்கப்பட்டன. கோபுரங்கள் 11, 13 நிலை மாடங்களைக்கொண்டு உயர்ந்து நின்றன. இவை இராய கோபுரங்கள் எனப்பெயர் பெற்றன.

ஹம்பியில் உள்ள அரசியர் குளிக்கும் குளம், தாமரை மகால் (LOTUS MAHAL) , ஆகியவை CIVIL ARCHITECTURE வகையைச் சார்ந்தவை. தாமரை மகால், GUEST HOUSE போன்றது.

அரசியர் குளிக்கும் குளம்



இக்கட்டடத்தில் தற்போதுள்ள குளிர் சாதன அமைப்பு, கட்டுமானத்திலேயே உள்ளடங்கியது. தூண்கள், சுவர் ஆகியவற்றின் பூச்சு, கண்டசர்க்கரை, முட்டை, சுண்ணாம்பு போன்ற பத்து வகைப் பொருள்கள் கொண்ட சாந்துக் கலவையால் ஆனது. எனவே, எப்போதும் குளிர்ச்சி நிலவும் அமைப்பு. ஹம்பியில் உள்ள யானைக் கூடங்கள்(யானைக்கொட்டடி), அரசு இயந்திரத்துக்கான நிருவாகக் கட்டிடங்களே என அறிஞர்கள் கருதுகின்றனர்.

தாமரை மகால்

யானைக் கூடங்கள்

கட்டிடங்கள் உயரமாகக் கட்டப்பட்டன. இந்த உயரம், காற்று, ஒளி, குளிர்ச்சி ஆகியவற்றுக்குக் காரணமாய் அமைகிறது. கோபுரங்களின்மீது கட்டப்படும் சுதைக் கட்டுமான வேலைப்பாடுகள் ஆயிரம் ஆண்டுகள் நிலைக்கும் தன்மையுடையவை. விஜயநகர் காலத்தில் வீரபத்திரர், காளி, துர்க்கை ஆகிய கடவுளர்களின் கோயில்கள் மற்றும் சிற்பங்கள் தனிச் சிறப்புள்ளவை. லேபாக்ஷி வீரபத்திரர் கோயில் குறிப்பிடத்தக்க ஒன்று. சிருங்கேரியில் உள்ள கோயில், கட்டடக்கலைகள் பல இணைந்து கட்டப்பட்டது. கோயில்களில் தேர்கள் விஜயநகர் காலச் சிறப்பு அடையாளங்கள். அதுபோலவே, கோயில்களில் ஓவியங்களும். கோயிற்சுவர்கள், மேற்கூரைகள் ஆகியவற்றில் ஓவியங்கள் வரையப்பட்டன. இராசி ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை.

விஜய நகர் ஆட்சியில் நாயக்கர்களின் தனி ஆட்சி:
விஜய நகர் ஆட்சியின் பெரும்பரப்பின் நிர்வாகம், ஆங்காங்கே நாயக்கர்களை நியமித்து அவர்களைச் சுதந்திரமாக ஆட்சி செய்ய அனுமதித்ததனால் சிறப்புற நடைபெற்றது எனலாம். இல்லையெனில், பெரியதொரு நிலப்பரப்பைச் செம்மையாக விஜய நகர் மையத்திலிருந்து அரசு ஆளுகை, கட்டுப்பாட்டில் வைத்திருக்க இயலாது. எட்டு நாயக்கர்களுக்குத் தனி உரிமைகள் தந்தனர். நாயக்கர்களின் வருவாயில் ஒரு பகுதி விஜய நகர் அரசுக்கு. விஜய நகர அரசு கேட்கும்போதெல்லாம் நாயக்கர்கள் படையுதவி அளிக்கக் கடமைப்பட்டவர்கள். கொங்கு நாடு, மதுரை நாயக்கர் ஆட்சியின் கீழ் வந்தது. மதுரை நாயக்கர் ஆட்சியின் காலம் கி.பி. 1529-1736 ஆகும். திருமலை நாயக்கர் குறிப்பிடத்தக்கவர். இவரது ஆட்சிக்காலம் கி.பி. 1623-1659. நாயக்கர் ஆட்சியில், கொங்குநாட்டில் பெரும் கோயில்கள் எழுந்தன; சீரமைக்கப்பட்டன. அவினாசி, பேரூர், பவானி, தாரமங்கலம் ஆகிய ஊர்க்கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. விஜய நகர் ஆட்சியின் தொடக்கத்தின்போது தெலுங்கு மொழியினர் தமிழகத்தில் குடியேறியதும், பின்னர் தொடர்ந்த நாயக்கர் ஆட்சியில் கன்னட மொழி மக்கள் கொங்கு நாட்டில் குடிபெயர்ந்ததும் நிகழ்ந்தன. நாயக்கர் ஆட்சிக்கு முன்பே, கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஹொய்சளர் ஆட்சியில் கன்னட மக்கள் கொங்குப்பகுதியில் குடிபெயர்ந்த நிகழ்ச்சியும் உண்டு. கோவை, சத்தி, ஈரோடு, கோபி, சேலம், நாமக்கல் ஆகிய பகுதிகளில் கன்னட மக்கள் குடிபெயர்ந்தனர். கொங்குப்பகுதி பழங்காலந்தொட்டு பருத்தி விளைந்த இடமாதலால் அதைச் சார்ந்த ஆடைத்தொழில் (நெசவு) பெருமளவில் வளர்ந்தது. SILK ROAD என்று வணிகத்தில் குறிப்பிடுவார்கள். கோவையில் ROBERT STANES என்பவர் இத்தொழிலின் முன்னோடி எனலாம்.

விஜய நகரர் காலத்தில், தமிழ் அல்லாத மாற்று மொழியாளர்கள் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். நாலாயிரப்பிரபந்தம் நாயக்கர் காலத்தில் தமிழகத்தில் மிகுதியும் பரவியது. நாயக்கர் காலச் சுவர் ஓவியங்களில், ஓவியங்களின் கீழ் தமிழ் எழுத்துகளால் சிறு குறிப்புகள் எழுதப்பட்டன. புராணக்கதை பற்றிய ஓவியங்களில் இவ்வாறு விளக்கக் குறிப்புகளைக் காணலாம்.
விஜய நகர அரசர்கள் இந்துக் கடவுளர்களை வணங்கும் பற்றாளர்களாக இருப்பினும், சமயப் பொறை கொண்டவர்கள். பிற சமயங்களைப் புறக்கணியாமல் அணைத்துச் செல்லும் இயல்பினராயிருந்தனர். பிஜப்பூரில், விஜயநகரர் தர்கா கட்டியுள்ளனர்.

விஜய நகர ஆட்சி-கொங்குப் பகுதி:
கொங்குநாட்டைப் பொறுத்தவரை, கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாக மூன்று அரசர்கள் அறியப்படுகிறார்கள். வீரநஞ்சராயர், வீரசிக்கராயர், பிரதாப ஹரிஹரராயர் ஆகியோர். விஜய நகரர் ஆட்சிக்காலத்தில் கொங்குப்பகுதியில் கல்வி வளர்ச்சியுற்றது. இலக்கியங்கள், சமற்கிருதத்திலும் தெலுங்கிலும் இயற்றப்பட்டன. கொங்கு மண்ணின் – தமிழகத்தின் - தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது தெளிவு. கல்வெட்டுகளில், பிரசஸ்தி என்னும் மெய்க்கீர்த்திகள் தெலுங்கு மொழியிலேயே அமைந்தன.

படங்கள் உதவி: விக்கிப்பீடியா

தொடர்பு: கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு து.சுந்தரம் (doraisundaram18@gmail.com)

12. கங்கைகொண்டசோழபுரச் சலுப்பையும் சாளுக்கியரும்

– து. சுந்தரம்

முன்னுரை:

தஞ்சாவூரில் இயங்கிவரும் தொல்லியல் கழகம், ஒவ்வொரு ஆண்டும் தொல்லியல் கருத்தரங்கம் ஒன்றைத் தமிழகத்தின் முதன்மையான பல்வேறு ஊர்களில் நடத்திவருகின்றது. தமிழகம் முழுதுமுள்ள பல்வேறு பகுதிகளில் உள்ளோர், தம் ஊர்ப்பகுதியின் வரலாற்றிடங்கள் அன்றிப் பிற ஊர்ப்பகுதிகளின் வரலாறு பற்றியும் ஓரளவு தெரிந்துகொள்ள இக்கருத்தரங்கங்கள் துணை செய்கின்றன. பெரும்பாலும், வரலாற்று ஆர்வலர்கள் முதன்மை ஊர்களைப் பற்றி வரலாற்றடிப்படையில் செய்திகளைத் தெரிந்து வைத்திருப்பார்கள். ஆனால், முதன்மை ஊர்களை ஒட்டியுள்ள பகுதிகளின் உள்ளூர் வரலாற்றுச் செய்திகளையும் நாட்டார் வரலாற்றுச் செய்திகளையும் தெரிந்துகொள்ள அவர்களுக்கு வாய்ப்பில்லை. அவ்வாறான வாய்ப்பினை மேற்சொன்ன கருத்தரங்கங்கள் தருகின்றன. அண்மையில் ஜூலை மாதம் கங்கைகொண்டசோழபுரத்தில் நடைபெற்ற தொல்லியல் கருத்தரங்கில் கலந்துகொண்டபோது, கருத்தரங்க விழாக்குழுவினர் கங்கைகொண்டசோழபுரத்தின் புறவூர்ப் பகுதியொன்றுக்கு அழைத்துச் சென்று காட்டினார்கள். முதலாம் இராசேந்திரன் எடுப்பித்த கங்கைகொண்டசோழ ஈசுவரம் என்னும் பெரிய கோயிலைப் பற்றிச் சற்று அறிந்திருக்கும் நமக்கு, இராசேந்திரசோழன் போரில் வென்ற சாளுக்கியரோடு தொடர்புள்ள ஒரு சில செய்திகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பும் இப்பயணத்தால் கிட்டியது. அது பற்றிய ஒரு பகிர்வு இங்கே.

சலுப்பை-அழகர்கோயில்:

கருத்தரங்கப் பார்வையாளர்கள், கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து இரு பேருந்துகள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டோம். பயணத்தில், முன்னுரையில் கூறியவாறு கங்கைகொண்டசோழபுரத்தைச் சுற்றிலுமுள்ள புறவூர்கள வந்தன. கருவாலப்பர்கோயில், சத்திரம், குண்டவெளி, கொல்லாபுரம், இளையபெருமாள் நல்லூர், மீன் சுருட்டி ஆகிய ஊர்கள். சிறிய கிராமத்துச் சாலைகள். இருபுறமும் பசுமையான வயல்வெளிகளை எதிர்பார்த்தால் ஏமாற்றமே. நீரில்லை; அதனால் வயல்களும் இல்லை. "யூகலிப்டஸ்" என்னும் தைல மரங்களும், சவுக்கு மரங்களும் , முந்திரி மரங்களும் சாலையின் இருமருங்கிலும் ஆங்காங்கே காணப்பட்டன. எளிமையான கிராமங்கள். ஆள் நடமாட்டமின்றி, அரவமின்றிக் காணப்பட்டன. நீர்நிலைகளான குளங்களை

வறண்ட குழிகளாய்க் கண்டபோது, கல்வெட்டுகளில், ஆயிரம் ஆயிரம் கலங்களாய் நெல் குவித்த இடைக்காலச் சோழரின் ஊர்களைப்பற்றிப் படித்த செய்திகள் நினைவுக்கு வந்து நெஞ்சை வருத்தின. இளையபெருமாள் நல்லூரை அடுத்து அழகர்கோயில் என்னும் இடத்தை அணுகினோம். மதுரையில் ஓர் அழகர்கோயில் போல இங்கும் ஓர் அழகர்கோயிலா என்னும் வியப்பு ஏற்பட்டது. ஆனால், இந்த அழகர்கோயில், வைணவக்கோயில் அல்ல என்றதும் வியப்பு கூடுதலானது. இது ஒரு சித்தர் சமாதியுற்ற இடம். தோரணவாயிலாகக் கட்டியிருக்கும் நுழைவாயில். "**அருள்மிகு ஸ்ரீ துறவுமேல் அழகர் திருக்கோயில்-சலுப்பை**" என்னும் தலைப்பெழுத்து. கருத்தரங்கின் உள்ளூர்ச் செயலராய் இயங்கிய திரு.கோமகன் என்பார், இக்கோயிலைப் பற்றிய சில செய்திகளைக் கூறினார்.

சலுப்பை - துரவுமேல் அழகர் கோயில் - முகப்பு



சலுப்பை-பெயர்க்காரணம்:

கோயில் அமைந்திருக்கும் இடம் சலுப்பை என்னும் பெயரில் அமைந்த கிராமம். இராசேந்திரசோழன் சாளுக்கியரை வெற்றிகொண்டதால் இப்பகுதி, சோழநாட்டின் **சளுக்கியகுலநாசனி மண்டலம்** என்னும் பெயர் பெற்றது. இப்பெயரின் முதற்பகுதியே சுருக்கப்பெயராய் அமைந்து சளுக்கி என்று வழங்கிற்று. நாளடைவில், **சளுக்கி**, சலுப்பி என்றாகிப் பின்னர் சலுப்பை எனத் திரிந்து நிலைத்துப்போனது.

கோயிலின் நுழைவுப்பகுதி

துறவுமேல்:

துறவுமேல் என்பதற்கான விளக்கம் புதுமையானது. துறவி ஒருவர் இறந்து சமாதியானதால் “**துறவு**” என்னும் சொல்லொட்டு வந்தது என நினைத்தோம். அது பிழையானது. “**துரவு**” என்பதே சரியான சொல்; **துரவு என்பது கிணற்றைக் குறிக்கும் சொல்.** துரவு என்பது மக்கள் வழக்கில் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் சொல்லே. ”தோப்பும் துரவும்” என்னும் தொடர் நாம் அறிந்த ஒன்று. கல்வெட்டுகளிலும் துரவு என்னும் சொல் காணப்படுகிறது. செவி வழிச் செய்தியின்படி, இப்பகுதி காடாக இருந்தபோது துறவி ஒருவர் இங்கு தவத்தில் இருந்தார். இந்த இடத்துக்கு அண்மையில் ஒரு வைணவக்கோயிலும், ஒரு பார்ப்பனச்சேரியும் அமைந்திருந்தன. ஒரு நாள், பார்ப்பனச் சேரியிலிருந்து இரு பார்ப்பனப் பெண்கள் கிணற்றில் நீரெடுக்க வந்திருந்தபோது, துறவிக்கருகில் காணப்பட்ட ஒரு குடம், இவர்கள் பார்வையில் பொன்னிறமாகத் தோற்றம் தரவே, அப்பெண்கள் அதை எடுக்க முயன்றனர். தவ நிலையில் இருப்பினும், துறவி இந்நிகழ்ச்சியை உள்ளறிவால் உணர்ந்ததும் தவம் கலைந்துபோனது. துறவியின் சினம் அறமாய் எழுந்து அப்பெண்களை அழித்தது. இறந்த பெண்களிருவரும் கிணற்றில் இரண்டு தாமரை மலர்களாய் மாறினர். தவத்தினால் இறை நிலை எய்த இயலாது தவம் கலைந்துபோனதால் துறவி வெறுப்புற்றுக் கிணற்றுள் ஒன்றிப்போகிறார். கால்நடை மேய்ப்பர்களின் கனவில் தோன்றி தாம்

மறைந்த கிணற்றை மூடி வழிபடவேண்டுமென்று கூறுகிறார். அவ்வாறே, கிணறு மூடப்பட்டுப் பீடம் அமைக்கப்பட்டு வழிபடுதல் நடைபெறுகிறது. எனவே, கோயில் கருவறையில் உருவ வழிபாடு இல்லை. பீடம் மட்டுமே உண்டு. துறவி, துரவுமேல் அழகராக வணங்கப்படுகிறார். இவரது வழிபாட்டுச் சடங்குகளில் உயிர்ப்பலி இல்லை. ஆனால், இவரது காவல் தெய்வங்களான வீரபத்திரசாமி, கருப்புசாமி ஆகியோருக்கு உயிர்ப்பலி நடைபெறுகிறது.

குதிரைச் சிற்பங்கள்

யானைச் சிற்பம்:

துரவுமேல் அழகராகிய சித்தருக்குப் பாதுகாப்பாக விளங்கும் யானையின் சிற்பம் ஒன்று கோயிலின் எதிர்ப்புற வளாகத்தில், ஏறத்தாழ எழுபது அடி உயரத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது. சுடுமண்/சுதைச் சிற்பமாகலாம். பழமையான சிற்பம்தான். காலக்கணிப்புக்குச் சான்றில்லை. இந்த யானையும், கோவில் வளாகத்தினுள் உள்ள குதிரையும் இரவில் வேட்டைக்குப் போய்த்திரும்புவதாக நம்பிக்கை. யானைக்கு உதவியாக ஒரு நாயும் உண்டு. ஒருமுறை, பலாக்காயைத் திருடவந்த கள்வனை நாய் குரைத்து இருப்பைக் காட்ட, யானை தன் துதிக்கைகொண்டு கள்வனை வளைத்துப்பிடிக்கிறது. இந்நிகழ்ச்சியை அழகுறக்காட்டும் சிற்பத்தொகுதி நாட்டார் கலை வண்ணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. யானையின் கழுத்தைச் சங்கிலியும், சிறு சலங்கை மணி கோர்த்த கயிறும், சற்றுப் பெரிய மணிகள் கோர்த்த கயிறும் அணி செய்கின்றன. யானையின் முதுகில் (பட்டுத்?) துணி போர்த்தப்பெற்று, உடலின் இருமருங்கிலும் பெரிய மணிகள் (சங்கிலியால் இணைத்தவை) தொங்குகின்றன. மணிகளின் கீழ் இசைக்கருவிகளை இசைத்த நிலையில் பக்கத்துக்கு மூன்றாக ஆறு பூதகணங்கள் அல்லது மனித உருவங்கள் காணப்படுகின்றன. யானையின் இடது கால் கள்வனின் காலை மிதித்துப் பிடித்துத் துதிக்கையால் வளைத்து நெருக்குகிறது. கள்வனின் காலருகில் நாயும் பலாக்காயும் காணப்படுகின்றன.

யானைச் சிற்பம்

காவல் நாய்

கள்வன் - யானையின் பிடியில்

இசைக் கலைஞர்கள்

சளுக்கியக் காளி:

இக்கோயிலின் சிறப்பு ஒன்றுண்டு. சாளுக்கியரை வெற்றிகொண்ட இராசேந்திர சோழன் சாளுக்கியரிடமிருந்து கொண்டுவந்த காளிச் சிற்பம் இக்கோயிலில் உள்ளது. கோயிலின் நுழைவுப்பகுதியிலேயே தனிக் கருவறையில் இச்சிற்பம் உள்ளது. எட்டுக்கைகளுடன், எருமை அரக்கனைக் கொல்லும் "மகிஷாசுர மர்த்தனி" யாக இக்காளி காட்சி தருகிறாள். வழக்கத்தில் எல்லாக் காளிச் சிற்பங்களிலும் காலடியில் எருமைத்தலை இருப்பதாகக் காட்டப்படும். ஆனால், இந்தச் சிற்பத்தில் எருமைத் தலையும் மனித உடலுமாக அரக்கன் காட்டப்படுகிறான். மனித உடலும், எருமைத் தலையும் இணைந்த சிற்ப அமைப்பு சாளுக்கியச் சிற்பக்கலை மரபிலே காணப்படும் என்று திரு. கோமகன் சுட்டிக்காட்டினார். கங்கைகொண்ட சோழபுரத்தின் வடவெல்லைக் காளியாக இச்சிற்பம் வணங்கப்படுகிறது.

டாக்டர் மா.இராசமாணிக்கனார், “சோழர் வரலாறு” என்னும் தம் நூலில், இராசேந்திரசோழன் தன் தலைநகரின் நான்கு புறங்களிலும் நான்கு காளிகளை நிறுத்தினான் என்றும், வடவெல்லைக் காளி சலுப்பையிலும், தெற்கெல்லைக் காளி வீராரெட்டி என்னும் கிராமத்திலும் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். கிழக்கெல்லைக் காளி செங்கல்மேடு என்னும் ஊரிலும், மேற்கெல்லைக் காளி இடைக்கட்டு என்னும் ஊரிலும் உள்ளதாக “நம்ம கங்கைகொண்டசோழபுரம் சோழநாடு” என்னும் முக நூல் குறிப்பு சுட்டுகிறது.

சளுக்கியக் காளியும் எருமை அரக்கனும்

அகோரவீரபத்திரர்-கருப்பராயர்:

அடுத்துள்ள தனிக்கருவறையில் பெரிய உருவத்துடன் அகோரவீரபத்திரரின் சிற்பம். பூசையாளர் கூறியதுபோல், இருளில் வீரபத்திரரின் கண்கள் மின்னிக்கொண்டிருந்தன. வீரபத்திரர் கருவறைக்கு முன்பாகவே, கருப்பராயர் சிற்பம் உள்ளது. வளாகத்தில் சுடுமண் சிற்பங்களாகக் குதிரைச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

வீரபத்திரர்

துரவு மேல் அழகர்-பீட வடிவில்:

கோயிலின் முதன்மைத் தெய்வமாக வழிபடப்படும் துரவு மேல அழகரின் அடையாளமாக வெள்ளித் தகடு போர்த்திய ஒரு பீடம் உள்ளது.

சித்தரின் துரவுப் பீடம்

கலிங்கச் சிற்பங்கள்:

அடுத்து நாங்கள் சென்ற இடம் செங்கமேடு என்னும் ஊர்ப்பகுதி. இங்கே, இராசேந்திரசோழனின் வெற்றியின் அடையாளமாகக் கலிங்க நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. செந்நிற மணற்கற்களால் ஆன இச்சிற்பங்கள் கலிங்க நாட்டுக் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குவன என்று தொல்லியல் துறை அறிவிப்புப் பலகை தெரிவிக்கிறது. இன்றைய ஒரிசா மாநிலத்தின் வடபகுதியே அன்றைய கலிங்கநாடு.

சோழர் காளி:

இங்கே, கலிங்கச் சிற்பங்கள் தவிர, தனிச் சிறு கோயிலில் வணங்கப்படும் சோழர் கலைப்பாணிக் காளியின் சிற்பத்தைக் காணும் வாய்ப்புப் பெற்றோம். ஓர் ஆள் உயரத்துக்கும் மேலாக ஓங்கி உயர்ந்து காணப்பட்ட காளிச் சிற்பம் அருமையானதொன்று. தீக்கதிர் முடியும் (ஜ்வாலா கேசம்), எட்டுக்கைகளும்

கலிங்கச் சிற்பங்கள்




சோழர் காலக் கொற்றவை

கொற்றவையின் செவியில் "பிரேத குண்டலம்"

கொண்டவளாக ஆற்றல் வாய்ந்த தோற்றம். வலது காலைக் குத்திட்டு மடித்த நிலையிலும் இடது காலை அரக்கனின் உடல்மீது மிதித்த நிலையிலும் கொற்றவை காணப்படுகிறாள். வலது செவியில் “பிரேதகுண்டலம்” என்று

குறிப்பிடப்பெறுகிற, பிணத்தையே காதணியாகக் கொண்ட அரிய தோற்றத்துடன் கொற்றவை காட்சி தருகிறாள்.

கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் வரலாற்றுச் சுவடுகள்:
வரலாற்றுச் சுவடுகளைத் தம்மகத்தே கொண்ட பல ஊர்கள் கங்கைகொண்ட சோழபுரத்தின் புறவூர்களாக இன்றும் எஞ்சியுள்ளன. கடாரம்கொண்டான், வீரசோழபுரம், வானவன் நல்லூர், சோழன்மாதேவி, விக்கிரமங்கலம் (விக்கிரமசோழமங்கலம்), ஆயுதக்களம், சுண்ணாம்புக்குழி, உள்கோட்டை, யுத்தப்பள்ளம் ஆகியவை அத்தகைய ஊர்கள். பல ஊர்கள், அரசர், அரசியர் பெயரைத்தாங்கியுள்ளன. படைகளுக்கு வேண்டிய ஆயுதங்கள் உருவான ஊர் ஆயுதக்களம்; கட்டடங்கள் கட்ட சுண்ணாம்பைத் தந்தது சுண்ணாம்புக்குழி என்னும் ஊர்; கோட்டை இருந்த இடம் உள்கோட்டை; போர் நிகழ்ந்த இடத்தை நினைவூட்டுகின்ற யுத்தப்பள்ளம். வடநாடு நோக்கிச் சென்ற பெருவழியில் அமைந்த சத்திரம் என்னும் ஊர் தங்குமிடமாகச் சத்திரங்களைக் கொண்டிருந்தது போலும். கங்கைகொண்ட சோழபுரத்தின் மதிற்சுவர்களின் இடிபாடுகளிலிருந்து எடுத்த கற்களே தற்போதுள்ள அணைக்கரையில் அணைகட்டப் பயன்பட்டன என்று கருதப்படுகிறது.
கங்கைகொண்டசோழபுரத்தில் இருக்கும் மாளிகைமேடு என்னும் பகுதியில் அகழாய்வு நடத்தப்பெற்று, இராசேந்திரனின் மாளிகை(அரண்மனை) கண்டறியப்பட்டுள்ளது. மேற்சொன்ன புறவூர்களுள் தகுதிபெற்ற ஊர்களில் அகழாய்வு நடைபெற்றால் மேலும் பல வரலாற்றுச் செய்திகள் வெளிப்படும் என்னும் சிந்தனையோடு கங்கைகொண்டசோழபுரத்தின் புறவூர்களைப் பார்க்கச் சென்ற எங்கள் பயணத்தைக் கொற்றவை முடித்துவைத்தாள்.

கட்டுரை ஆக்கத்துக்குத் துணை நின்றவர்க்கு நன்றி.

1.திரு. கோமகன், பொறிஞர், கங்கைகொண்டசோழபுரம்
2. நம்ம கங்கைகொண்டசோழபுரம் சோழநாடு-முகநூல்
3. தேவர்களம்- வலைப்பூ

தொடர்பு: கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு து.சுந்தரம் (doraisundaram18@gmail.com)

13. அரேபியர் வணிகமும் இந்திய மேலைக் கடற்கரையும்

– து. சுந்தரம்

முன்னுரை:
அண்மையில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலையின் வெளியீடான “நிகமம்” என்னும் நூலைப் படித்துக்கொண்டிருந்தபோது, அந்நூலில் மேற்படிப் பல்கலையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் வீ.செல்வகுமார் என்பவர் எழுதிய **”கெனிசா தாள் ஆவணங்கள்”** என்னும் ஆய்வுக்கட்டுரை ஈர்த்தது. வணிக வரலாற்று ஆய்வுகளை உள்ளடக்கிய பல கட்டுரைகளின் தொகுப்பு நூலே “நிகமம்”. அது பற்றிய ஒரு பகிர்வு இங்கே. ”நிகமம்” என்னும் சொல் வணிகக் குழுவினரைக் குறிப்பதாகும். தமிழ் நாட்டில் பல இடங்களின் பெயர்கள் நெகமம் என்றிருப்பதைக் காணலாம். நிகமம் என்பதே நெகமம் என் மருவியுள்ளது. தமிழகத்தில், சமணக்குகைத்தளங்களில் காணப்பெறும் தமிழ்த் தொல்லெழுத்தான தமிழியில் (தமிழ் பிராமி) பொறிக்கப்பட்ட, மாங்குளம் கல்வெட்டில் **“வெள் அறை நிகம(த்)தோர்”** என்னும் தொடர் உள்ளது. தமிழகத்தின் கடல்சார் வணிகம் பற்றிய செய்திகளுக்கு அயல்நாடுகளில் சான்றுகள் கி.மு. முதல் நூற்றாண்டளவிலேயே கிடைத்துள்ளன. மேற்படி **”கெனிசா தாள் ஆவணங்கள்”** என்னும் ஆய்வுக்கட்டுரை, இடைக்காலத் தென்னிந்திய வரலாற்றை (வணிக வரலாற்றை) அறிய உதவும் அரேபிய ஆவணங்களைப் பற்றிக் கூறுகிறது.

கெனிசா தாள் ஆவணங்கள்-Genizah manuscripts:

எகிப்து நாட்டின் பழைய கெய்ரோ நகரில், பென் எஸ்ரா (Ben Ezra) என்னும் பெயரில் யூதர்களின் வழிபாட்டிடம் (யூதப்பள்ளி) (Synagogue) ஒன்றுள்ளது. அங்கு, 1890-இல் இலட்சக் கணக்கான துண்டுத் தாள் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கடித ஆவணங்கள். ஹீப்ரு, அரபு ஆகிய மொழிகளில் எழுதப்பட்டவை. கெனிசா (Genizah) என்பது யூதப்பள்ளிகளில் பழைய ஆவணங்களைச் சேர்த்துவைக்கும் அறையைக் குறிக்கும். இந்த கெனிசா ஆவணங்களில் இந்தியாவுடன் தொடர்புடைய வணிகர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவர்களில், ஆபிரகாம் பென் ஈஜு

(Abraham Ben Yiju), மட்முன் பி. ஹசன் பந்தர் (Madmun B. Hassan Bundar) ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். இவர்களின் கடிதங்கள் ஹீப்ரு மொழியில் உள்ளன. இவற்றில், இந்தியாவைச் சேர்ந்த நகோடா இரமிஷ்ட் (Nakhodah Ramisht), நம்பியார் என்பவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. மேலும், மேற்குக் கடற்கரை, குஜராத், கர்நாடகக் கல்வெட்டுகளில் சுட்டப்பெறும் பட்டணஸ்வாமி எனப்படும் நகரத்தலைவர் பற்றிய குறிப்புகளும் இந்த ஆவணங்களில் உள்ளன.

அமெரிக்க எழுத்தாளரான அமிதவ் கோஷ், தம் பயண நூலில் அரேபியரான பென் ஈஜு என்னும் கடல் வணிகரைப்பற்றி எழுதியுள்ளார். பென் ஈஜு சில காலம் இந்தியாவில் தங்கியிருந்துள்ளார். மேலைக்கடற்கரையில் இவருக்கு ஒரு தொழிற்சாலை இருந்துள்ளது. அஷு என்ற ஒரு நாயர் பெண்ணை மணந்துள்ளார். பொம்மா (Bomma) என்னும் ஓர் அடிமை அவருக்கு இருந்தார். இந்த அடிமை, துளு நாட்டைச் சேர்ந்தவர் எனக்கருதப்படுகிறது. இவ்வணிகருடைய கடிதங்கள் கி.பி. 1132 முதல் கி.பி. 1149 வரை நடந்த நிகழ்வுகளைக் கூறுகின்றன. ஹசன் பந்தர், ஏடன் துறைமுகத்தில் பென் ஈஜுவின் வணிகப்பிரதிநிதியாக இருந்தார்.

இந்திய வணிகர்கள் யார்?

1) நம்பியார்

செல்வகுமார் அவர்களின் கட்டுரையில், மேற்படி இந்திய வணிகர்களைப் பற்றிய செய்திகள் இல்லை. இந்திய வணிகர்களைப் பற்றிய தேடலில் சில கூடுதல் செய்திகள் கிடைத்தன. பென் ஈஜு, ஹசன் பந்தருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ஒரு பொதி (வணிகப் பொருள் பொதி?)யினை நகோடா ரமிஷ்ட்டின் கப்பலிலும், மற்றொரு பொதியினை நம்பியார் கப்பலிலும் அனுப்பியதாகக் குறிப்பிடுகிறார். நம்பியார் என்னும் குடியினர், நாயர் குடியினரைப்போன்றவர். மலபார் பகுதியில், இடைக்காலத்தில், இக்குடியினர் இருவரும் வைசியரைப்போல் வணிகத்தில் ஒருபோதும் ஈடுபட்டவரல்லர். இவர்கள், தற்காப்புக் கலையில் ஈடுபட்டவராவர். எனவே, நம்பியார் என்பவர், மலபார்ப் பகுதியிலிருந்துகொண்டு கப்பல் உடைமையாளராய் பென் ஈஜுவின் வணிகச் செயல்களில் பங்கு கொண்டிருக்க வாய்ப்பில்லை. மாறாக, நம்பியார் மங்களூர்ப் பகுதியில் இருந்துகொண்டு பென் ஈஜுவுக்காக அவர் சார்பில் இயங்கியவர் எனலாம். தற்போதைய “பினாமி” என்பதுபோல. நம்பியார், நாயர் வகுப்பினர் கடல் பயணம் மேற்கொள்ளாதவர் என்பதும், அவர்களுக்குச் சமற்கிருதம் அல்லாது அரபு மொழி தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் இந்தக் கருதுகோளுக்கு வலு சேர்க்கும். கூடுதலாக, நகோடா என்னும்

சொல்லொட்டு இவர் பெயரில் இல்லை என்பதும், இரமிஷ்ட் என்பார் பெயரில் மட்டுமே நகோடா இணைந்துள்ளதையும் நோக்கவேண்டும். **இரண்பீர் சக்கரவர்த்தி என்னும் வரலாற்றாளர், நகோடா என்னும் சொல் "நகூடா", "நாவித்தகா" என்னும் சொற்களோடு தொடர்புடையது என்றும், இவை (நகூடர், நாவித்தகர்) கப்பல் உடை+மையாளராய் வணிகம் செய்தவர்களைக் குறிப்பன என்றும் தம் ஆய்வில் நிறுவுகிறார்.** (கட்டுரை ஆசிரியர் குறிப்பு: நாவித்தகர் என்பது கப்பலை (மரக்கலத்தை)க் குறிக்கும் "நாவாய்" என்னும் சொல்லோடு பொருந்துவதாக உள்ளது கருதற்பாலது.)

2) நகோடா இரமிஷ்ட்

நகோடா என்பது கப்பல் உடைமையாளராய் வணிகம் செய்தவரைக் குறிப்பதால், நகோடா இரமிஷ்ட் குஜராத் பகுதியைச் சேர்ந்த இந்திய வணிகர் எனக் கருதப்படுகிறது. ஒரு சில தாள் ஆவணங்கள் குஜராத்திய எழுத்துகளைக் கொண்டுள்ளன என்றும் கருதப்படுகிறது.

3) பட்டணஸ்வாமி

பட்டணஸ்வாமி என்னும் பெயர் துறைமுகத் தலைவர் என்னும் ஒரு பதவிப் பெயராகலாம் என்று கருதப்படுகிறது. கருநாடகக் கல்வெட்டுகளில் இச்சொல் பயில்கிறது என்னும் செய்தியின் அடிப்படையில் கட்டுரை ஆசிரியர் சில கன்னடக் கல்வெட்டுகளிலும், வேறு நூலாதாரங்களிலும் தேடுதலை மேற்கொண்டபோது சில செய்திகள் கிடைக்கப்பெற்றன. போசளர்கள் (ஹொய்சளர்கள்) கருநாடகத்தில் இடைக்காலத்தில் கி.பி. 1346 வரை ஆட்சி செய்தவர்கள். அவர்களது ஆட்சிக்காலத்தில் பட்டணஸ்வாமி என்னும் பதவி இருந்துள்ளது. இப்பதவியில் இருந்தோர், நகரத் தலைவர்களாய் (இன்றைய "மேயர்" பதவி போன்றது) இருந்துள்ளனர். இக்காலகட்டத்தில், நகரம் என்பது வணிக நகரம் ஆகும். வணிகச் சந்தைகள் கொண்டது. நானாதேசிகள், ஐந்நூற்றுவர் போன்ற வணிகக் குழுக்கள் தங்கி வணிகத்தில் ஈடுபட்ட இடங்கள். துறைமுக நகரங்களும் இவற்றில் அடங்கும் எனலாம். வணிகத்தொடர்புள்ள இந்த நகரங்களின் தலைவர்கள் பட்டணஸ்வாமி என அழைக்கப்பட்டனர். இவர்கள் அரசுக்கும் வணிகர் குழுக்களுக்கும் பாலமாய் இயங்கியவர்கள் எனலாம். வணிகத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வரி வருவாய், வணிகச் சந்தைகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டனர் என்றும் கருதப்படுகிறது.

கன்னடக் கல்வெட்டுகளில் பட்டணஸ்வாமிகள்

1 சாமராஜநகரம் வட்டம்-பசவாபுரம் கல்வெட்டு எண் : 236 காலம்-போசளர் : கி.பி 1316
கல்வெட்டு வரி 19,20
..பட்டணசாமி கெம்பசெட்டிய
மக மாத செட்டி ......
(கெம்பசெட்டியின் மகன் மாத செட்டி)

2 சாமராஜநகரம் வட்டம்-அரகலவாடி கல்வெட்டு எண் : 301 காலம்: கி.பி 1555
கல்வெட்டு வரி 4,5,6
வீரநஞ்சராய மஹாராயர குமாரராத சிக்கராயரு
தெரக்கணாம்பிய பட்டணஸ்வாமி பைர செட்டிய
மக திருமலெசெட்டியரிகே கொட்ட கிராம...
(உம்மத்தூர் அரசர் சிக்கராயர் தெரக்கணாம்பி
நகரத்தின் பட்டணசாமி பைரசெட்டியின் மகன்
திருமலை செட்டிக்குக் கொடுத்த கிராமம்)

3 யளந்தூர் வட்டம்-யளந்தூர் கல்வெட்டு எண்: 5 காலம்: கி.பி. 1244
இது தமிழ்க் கல்வெட்டு.
கல்வெட்டு வரி 6
....பட்டணசாமி மகன் சாங்கண்...

4 யளந்தூர் வட்டம்-யளந்தூர் கல்வெட்டு எண்: 62 காலம் போசளர் கி.பி. 1328
கல்வெட்டு வரி 43
மான்யவாகி பட்டணஸ்வாமிகளு......

5 யளந்தூர் வட்டம்-கணிகனூ கல்வெட்டு எண்: 172 காலம்: கி.பி. 13-ஆம் நூ.ஆ. இது தமிழ்க் கல்வெட்டு
கல்வெட்டு வரி 4
.......பட்டணசாமி திருவிளக்கால் பொன் மூன்றும்
வைத்தார்

6 யளந்தூர் வட்டம்-அம்பளி கல்வெட்டு எண்: 210 காலம் போசளர்: கி.பி. 1244
இது தமிழ்க்கல்வெட்டு
கல்வெட்டு வரி 6
பட்டணசாமி மகன் .....

7 கொள்ளேகாலம் வட்டம்-காமகெரெ கல்வெட்டு எண்: 57 விஜயநகரர் காலம் : கி.பி. 1366

கல்வெட்டு வரி 10,11,12

.....மாம்பள்ளி மொடஹள்ளி, கொங்க

பட்டணத சமஸ்த நானாதேசிகளு ...

பட்டணஸ்வாமி ...

மாம்பள்ளி, மொடஹள்ளி, கொங்கபட்டணம் ஆகிய நகரங்களின் நானாதேசி

வணிகரும் பட்டணசாமிகளும்

8 கொள்ளேகாலம் வட்டம்-காமகெரெ கல்வெட்டு எண்: 62 விஜயநகரர் காலம் : கி.பி. 1354

கல்வெட்டு வரி 10,11,12

...மோடிஹள்ளி சிங்கண நல்லூர

பட்டணஸ்வாமி ராக்கண்ண

சிங்கண நல்லூரின் பட்டணசாமி ராக்கண்ண(ன்) என்பவர்

9 கொள்ளேகாலம் வட்டம்-குரஹட்டி ஹொசூர் கல்வெட்டு எண்: 76 காலம் : கி.பி. 16-ஆம் நூ.ஆ.

கல்வெட்டு வரி 4,5

....ஆலம்பாடி பட்டணஸ்வாமி நஞ்ச...

ஆலம்பாடி என்னும் நகரத்தின் பட்டணசாமி. அவரது பெயர் “நஞ்ச” எனத் தொடங்குகிறது.

10 ஹுணசூர் வட்டம்-மரதூர் கல்வெட்டு எண்: 14 காலம்: கி.பி. 15-ஆம் நூ.ஆ.

கல்வெட்டு வரி 1

.... பட்டணசாமி நாகி செட்டி....

மேற்படி கல்வெட்டுகளின் செய்திகள்:

மேற்படி கல்வெட்டுகளிலிருந்து நகரங்களின் தலைவர்களாயிருந்த பட்டணஸ்வாமிகளில் பலர் செட்டிகள் என்னும் வணிகர்கள் என்பது புலனாகிறது. ஒரு கல்வெட்டில், பட்டணஸ்வாமி ஒருவர் நானாதேசி வணிகருடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறார் என்பதையும் காண்கிறோம். எனவே, பட்டணஸ்வாமி என்னும் பதவியிலிருந்தோர் வணிகக் குழுவினரைச் சார்ந்தோரே என்பதாகக் கருதலாம். வணிகராயிருப்பதனால், அவர் அரசுடன் இயைந்து வணிக நடவடிக்கைகளைச் சிறப்புறக் கண்காணித்திருக்கக் கூடும்

என்பதும் புலனாகிறது. அரபு நாட்டைச் சேர்ந்த கப்பல் உடைமையாளரான வணிகர்கள், கருநாடகப்பகுதியில் தங்கள் வணிக நடவடிக்கைகளை நகரத்தலைவர்களான பட்டணஸ்வாமிகளின் தொடர்போடு மேற்கொண்டிருக்கவேண்டும் எனக் கருதலாம்.

நன்றி - துணை நின்றவை:

1. The Mystery of Nambiyar Nakhuda (from website "Historic Alleys" by Maddy)
2. Sri Kshetra Hombuja (blog)

தொடர்பு: கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு து.சுந்தரம் (doraisundaram18@gmail.com)

14. சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம்

– நூ த லோ சு

சென்னை சைதாப்பேட்டை (முன்னர் இது சயீதுகான் பேட்டை என அறியப்பட்டது என்பது விக்கிப்பீடியா மூலம் தெரிகிறது) பகுதியில் அடையாற்றின் குறுக்கே எழுப்பப்பட்ட பாலம் 1726 ல் கட்டப்பட்டது. இது சென்னையின் மிகப் பழமையான, நீளமானபாலம் ஆகும். இதனைச் சிலரே அறிந்திருப்பார்கள் எனலாம். இப்பாலத்தின் பழைய ஓவியங்கள் சிலவற்றை இணையத்தில் கண்டேன். பலரும் அறிந்திரார் எனும் கருத்தில் இங்கு வைத்துள்ளேன். அவற்றுடன் கல்வெட்டுச் சான்றுகளுடன் முறையான ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட பதிவுகளும் வைக்கப்படுகின்றது.

சென்னை சைதாப்பேட்டையில் அடையாறு ஆற்றின்மேல், நீளமான, வழக்கம் போல் நீரோட்டத்திற்கு 90 பாகையில் குறுக்காகவும் வடக்கு தெற்காகவும் கட்டப்பட்ட பாலம் "மார்மலாங்கு பாலம்" என வழங்கப்பட்டது. பொது ஆண்டு 1726 (உரோம எண்ணில்: MDCCXXVI) ஆண்டு எனக்குறிக்கப்பட்ட கல்வெட்டு சான்றும் உள்ளது. பழமையான இப்பாலம் புதுப்பிக்கப்பட்டு இன்று 47 ஆண்டுகளுக்குமேல் ஆகின்றது.

தொல்லியல் துறையினர் வழி, சென்னை மாநகரக் கல்வெட்டு ஆவண எண் 208/1967 என்கின்ற நூலகதட்டுகளில் வைத்துள்ள, "சென்னை" மாநகர கல்வெட்டுகள்" எனும் தலைப்புடன் முனைவர் இரா. நாகசாமி பதிப்பாசிரியராக, தமிழ்நாடு தொல்லியல் துறை வெளியீடாக 2009 இல் வழிவந்த நூலில் கீழ்க்காணும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது

மாவட்டம்: சென்னை
வட்டம்: தென்சென்னை
ஊர்: சைதாப்பேட்டை
கல்வெட்டு: 4 *
பதிப்பு: 274 Antiques From Santhome & மயிலாப்பூர் பகுதி- II, பக்கம் 119
மொழி: பாரசீகம்
ஆண்டு: கிபி 1726
இடம்: சைதாப்பேட்டை பாலத்தின் கிழக்குப்பக்க சுவரில் பதிக்கப்பட்ட கல்லில் உள்ளது

The Marmalong Bridge - William Hodges (1744–1797)
Yale Center for British Art
http://collections.britishart.yale.edu/vufind/Record/1666698

The Armenian Bridge, near St.Thomas's Mount, Madras - 1798
Copyright : The British Library Board
http://www.rarebooksocietyofindia.org/postDetail.php?id=196174216674_10152469706471675

Plate 10 from the second set of Thomas and William Daniell's 'Oriental Scenery'. The old bridge on the Adyar River was originally built in 1726 by an Armenian, as recorded by a Latin inscription on it, and has been replaced by the Marmalong Bridge. The Little Mount in the distance is connected with the story of the martyrdom of the Apostle St Thomas who went to India after the Crucifixion and lived there periodically. It is crowned by a Portuguese church built in 1612.

Marmalong Bridge, Madras - Justinian Gantz (1802–1862)
http://www.artnet.com/artists/justinian-gantz/marmalong-bridge-madras-ct6JFpsGl6lmoaDsNzbZqw2

Marmalong Bridge before the new one was constructed (1966) by Sridhar Venkataraman

Maraimalai Adigal Bridge (Photo by R Muthusamy)

ஆர்மீனிய நாட்டைச் சேர்ந்த வணிகர் "கோச பீடற்சு உசுகன்" (Coja Petrus Uscan) என்பவர் மக்களின் நன்மைக்காக இப்பாலத்தைக்காட்டியுள்ளதாய் இந்தக் கல்வெட்டு குறிக்கின்றது.

மார்மலாங்கு பாலம் அடிக்கல் அரபி+இலத்தீன் மொழிகளில்

1 HUNC PONTUM
2 EDIFIKARI JUSSIT
3 PRO BONO PUBLICO
4 COJA PETRUS USCAN
5 NATIONE ARMEN
6 ANNO SALVTIS
7 MDCCXXVI

Plaque Commemorating the construction of Marmalong Bridge by Coja Petrus Uscan
(multinlingual inscriptions in Persian, Latin and Armenian)

இப்பாலத்தின் போக்குவரத்துக்கான சேவைத் தகுதி குறைந்து வந்தபோது, பொது ஆண்டு 1960 களில் மிகவும் புதிதாக "மறைமலை அடிகள் பாலம்" என பெயருடன் மாபெரும் பாலமொன்று "அண்ணாசாலை" என்ற பெயருடைய (முன்னர் ஆங்கிலேயர்களால் கோட்டைக்கும் பரங்கி** (பிரங்கிமலை) மலைக்கும் இடையே அமைக்கப்பட்ட) மவுண்டு சாலையில் கட்டப்பட்டு, தற்கால மாநகராட்சி வாகன பயணத்திற்கு 47 ஆண்டுகளாகப் பயனில் உள்ளது.

* மற்ற மூன்று முறையே சிவன் (காரணீசுவரர்), திருமால் (சீனுவாசப்பெருமாள்), விநாயகர் (சித்தி விநாயகர்) கோயில்களில் காணப்பட்டு படி எடுக்கப்படவை

** பிரங்கி என்றால் வெளிநாட்டினர் எனப்பொருள் இந்தியில் (பறங்கியர் எனவும் தமிழில் வழங்கும்). சில விஷமிகள் பிருங்கி முனி எனும் புராணங்களில் காணும் கற்பனை பெயர்களுடனும் தொடர்பு காட்ட முயன்றுள்ளனர்.

படங்கள்: கூகுள் தேடலில் கிடைத்தவை

தொடர்பு: திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

15. குன்று முட்டிய குரீஇயும், குறிச்சி புக்க மானும்

— நூ த லோ சு

> "சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி பதிப்பாசிரியர், திரு. S. வையாபுரிபிள்ளை, B.A.,B.L., அவர்களால், பரிசோதிக்கப்பட்டு திரு. S. கனகசபாபதி பிள்ளையவர்களால் வெளியிடப் பெற்ற தொல்காப்பியப் பொருளதிகார முதற்பாகம், பயிலும் பலர்க்கும் பேருபகாரமாக விளங்குகின்றது. அதனை, ஊன்றிப் படித்து வருங்கால், அதனுட் பொருந்தாப் பாடங்கள் சில விளங்குவதைக் கண்டேன். அப்பாடங்களை அவ்வாறே கொள்ளின், உண்மைப் பொருள் காணவியலாது குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான் போலவும், பயில்வோர் இடற்படுவர் ஆதலின், உண்மைப் பாடங் களை வெளியிடின், அவர்க்கு நன்மை பயக்கும் என்று கருதி இதனை எழுதலானேன்."

என்று 'தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பாராய்ச்சி' (தமிழ்ப் பொழில் (13/5), பக்கம்: 161-170; https://books.google.com/books/about?id=eUYkDwAAQBAJ) மற்றும் 'தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பாராய்ச்சி' (https://ta.wikisource.org/s/8r4h) ஆகிய கட்டுரைகளில் புலவர் கா. கோவிந்தன் குறிப்பிடுகிறார்.

"குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான் போலவும், பயில்வோர் இடற்படுவர்" என்பதன் உட்பொருள் படிக்கும் பொழுது எளிதில் விளங்குவதில்லை. அதனை அறியாமல் உவமையின் சிறப்பும் விளங்குவதில்லை.

"குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான் போலவும்"

"குரீஇ"

குரீ இ- செய்யுள்களில் குருவி எனும் சொல்லின் நீட்டிய விளி நிலை
குரீ இ - இ கர உயிர் அளபெடை= அதாவது இயல்பான தனது 2 நொடி ஒலிக்கும் ரீ (ர்+ஈ) யின் கால அளவினைக் காட்டிலும் ஓர் நொடி மேலும் நீட்டி ஒலிக்க இ எனும் மேலும் ஓர் எழுத்து அடுத்து வைத்து நெடிலின் நிலை காட்டும் தொல்காப்பிய இயல் மரபு.

அதற்கும் மேலும் ஒரு நொடி (4 நொடி) இகர ஒலி நீட்டிக்க வேண்டுமானாலும், இரண்டு இ (இஇ) இட்டால் 4 நொடிநேரம் நீட்டி

ஒலிக்கலாம் என்பது பெறப்படும் பொருள். ஆனால், இது பாடல் வரிகளில் பொதுவாகத் தேவைப்படாது. உரை நடைகளில் கொள்ளலாம். பால் கறவை மாடு 'மாஆஆஆ' எனக் கூவினது எனக்கூறல், அது மிக நீண்டு ஒலிக்கும் நிலையை எழுத்திலும் காட்ட முடியக்கூடிய ஒரு நிலைப்பாடு.

ஓர் முறை என் இனிய நண்பர், மேலை நாட்டினர், ஓர் பாடலில் 'ஞேஎ ' என ஓர் சொல் பயனில் வர, இதுபற்றி வினா வைக்க, அது அந்தப்பாடல் வரியில் அதன் வழியில் நோக்க, ஓர் ஆட்டு இடையன் தன் ஆட்டு மந்தையை ஓட்டிச் செல்லும் போது எழுப்பும் 'போலி ஒலிக்குறிப்பு' எனக்காட்டியது மலரும் நினைவாகின்றது.

மேலும், "குன்று முட்டிய குரீஇ" என்பது
சிறிதே களிப்பாக (மண்வகை) உள்ள மணற்படுகைகள் உள்ள,
சிறிதே உயர்ந்த = மண் அரித்தெடுத்த ஆற்றுப்படுகை சுவற்றினில் சிலவகை தவிட்டு நிறக் குருவிகள் மைனாக்கள் (கூடு) வளை கட்டி வாழும்.
இருப்பிடம் தேர்வு செய்து கொண்டு தன இன பிணையுடன் வாழ மண்சுவற்றினை தன் அலகினால் குத்திக்குத்தி வளை அமைக்கும் செயலைக் குறிக்கின்றது இவ்வடி.

வேறு,
குன்று / குன்றம் எனும் சொல் சில இடப்பெயர்களில் மிக்க தவறுதலாக பொருந்தாத நிலையில் உள்ளமை போல் காணலாம். அப்பெயர் எவ்வடி (எப்படி) வந்தது என்பதனுக்கு எடுத்துக்காட்டு, முதுகுன்றம் (விருத்தாசலம்- இது ஒரு வேதாரணியம் போல் பொருந்தாத வடமொழி மொழி சொல்மாற்றம்). இந்த இடப்பெயர் அருகில் எந்தவிதமான பெரு / சிறு மலையோ சிறு குன்றோ இல்லாதபோது அவ்வடி முதுகுன்றம் எவ்வாறு அமையும் என ஆய்ந்தபோதுதான் விளங்கியபொருள் புற்று = மிக மிக்க உயரமாகக் குன்றாக வளர்ந்துள்ள கரையான் புற்று அவற்றை நம்முன்னோர் மண்ணின் 5 பெரும்பூதங்களில் எடுத்துக்காட்டாகக் கொண்டு வணங்கி வந்தனர் என்பது உணரலாம்.

தேவாரத்தில் மூவர் முதலிகளாலும் பாடப்பெற்ற 'முதுகுன்றம்' எனும் தலம் நடுநாட்டில் மணிமுத்தாறு எனும் ஓர் ஆற்றங்கரையில் 'அம்மணிகத்து ஒவ்வூர்'.

இன்றும் எல்லா ஊர்களிலும் உள்ள கரையான் புற்றுகள் வணங்கப்படும் தெய்வமாகி உள்ளது மறுக்கமுடியாத உண்மை அல்லவா? குன்று எனும் சொல் மண் வகையில் அதாவது கடின கல் வகை அல்லாது, உயர்ந்து காணும் ஓர் சுவரினுக்கு ஈடான ஒன்றிணைக்கக் குறித்தது. இப்போது 'மண்' எனும் ஐந்து பெரு பூதங்களில் ஒன்றாகும். மண்ணிற்கு அடுத்த போட்டியாக வந்துள்ளது இந்த விருத்தாசலம். மற்றவை காஞ்சியம், திருவாரூர், திருஒற்றியூர், திருவான்மியூர் என மிக நீளும்; நூற்றுக்கணக்கில் எங்கிருந்தாலும் புற்று வணங்கப் படுகின்றதோ அங்கெல்லாம்.

இன்று நாம் 'மைனா' எனக்குறிப்பது ஓர் வகை 'குரீஇ'. அதாவது கண்ணின் கடையில் மை தீட்டிய தோற்றம் காட்டும் குருவி ஆகும் என, கீழே குறுந்தொகை 72 பாடலில் காணலாம். ஆனால் நற்றிணை 56 பாடலில் வெளிப்படையாகவே கண்ணகத்து எழுதிய என வருவதால் அறிக.

குன்று முட்டிய குரீஇ யின் இடர் நிலைக்காரணம்:
மிக வலிமைக் குறைந்த மண் சுவர்களில் = மண் அரித்த ஆற்றின் சுவர்களில் (Walls of Revin), குரீஇ க்கள் வளை அமைத்து வாழும் போது, மழைபெய்தலாலோ, மிக்கு காய்ந்து விடுவதாலோ அவ்வகை மண் சுவர்கள் இளுத்து விழ (இளகி) வளைக்குள் மாட்டிக்கொண்டோ, வேறுவிதமாகவோ குஞ்சுகளோ, தாய் தந்தைப் பறவைகளோ உயிர் நீக்க நேரிடும். அதாவது, தான் முற்றிலும் அறியாது தானறிந்த கிட்டிய ஒன்றின் துணைகொண்டு அமைத்துக்கொண்ட இல்லமே தனக்கு சிலபோது இடராவது போல் என்பது எடுத்துக்காட்டு தாங்கும் பொருள்.

திருவண்ணாமலை அருளாளர் இரமண மகரிசி அடுத்து வந்த ஓர் மடத்து தமிழ் அறிஞர் இயற்றிய தமிழ் வெண்பா யாப்பினில் அமைந்த தத்துவ நூலில் 'சிலந்தி தான் பின்னிய வலையில் தானே மடிவதுபோல்' எனும் எடுத்துக்காட்டு மேலதற்கு இணையானது எனலாம். புறம் 19 பாடலில் இந்த குரீஇ இனம் இடர்படுவதைப் பாடியுள்ளமைக் காண்க.

சங்க நூல்களில், **குரீஇ** எனும்சொல் களவழி நாற்பதிலும், புறம் 19 பாடலிலும், நற்றிணை 366 பாடலிலும் குன்று எனும் சொல்லுடன் இணைந்து வருவது காண்க.

குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி - 72 குறிஞ்சிப்பாட்டு

பருவிரும்பு பிணித்துச் செல்வரக் **குரீஇ**த் - 80 நெடுநல்வாடை

நிரைபறைக் **குரீஇ** யினம் காலைப் போகி - 11 அகநானுறு 303

பெருவரை அடுக்கத்துக் **குரீஇ** ஓப்பி - 5 அகநானுறு 388

*குன்றத்து இறுத்த **குரீஇ** இனம் போல - 8 புறநானூறு 19

தூக்கணம் **குரீஇ**த் தூங்குகூடு ஏய்ப்ப - 11 புறநானூறு 225

மனைஉறை **குரீஇ** க் கறையணற் சேவல் - 4 புறநானூறு 318

கூம்பிய சிறகர் மனையுறை **குரீஇ** - 2 குறுந்தொகை 46

குரீஇ ஒப்புவாள் பெருமழைக் கண்ணே - 5 குறுந்தொகை 72

உள்ளூர்க் **குரீஇத்** துள்ளுநடைச் சேவல் - 2 குறுந்தொகை 85

முடங்கல் இறைய தூங்கணங் **குரீஇ** - 5 குறுந்தொகை 374

கண்ணகத்து எழுதிய **குரீஇப்** போல - 4 நற்றிணை 56

உள் இறைக் **குரீஇக்** கார் அணற் சேவல் - 1 நற்றிணை 181

உள் ஊர்க் **குரீஇக்** கரு உடைத்தன்ன - 6 நற்றிணை 231

முதுக் குறைக் **குரீஇ** முயன்று செய் குடம்பை - 9 நற்றிணை 366

எண்ணருங் குன்றிற் **குரீஇ**யினம் போன்றவே களவழி நாற்பது 7

'குன்று முட்டிய **குரீஇப்** போலவும்' என்பதைப் பயன்கொண்டவர்களின் பயன்பாட்டில் பொதுவாக இடர்ப்படுதலுக்கு காட்ட வந்த ஓர் முதுமொழி அது. அவ்வளவே அவரவர் தம் எடுத்துக் காட்டுகளுக்கு பயன் கொண்ட சூழ்நிலைகள்தான் வேறு, வேறு, வேறு.

அவர்களின் பயன்பாட்டில் நுணுகிக் கூர்ந்து நோக்க, சாதாரண மக்கள் முதலில் அவர்தம் மனதில் பளிச்சிடும் கருத்தினைத்தான் வைத்துள்ளனர் என்பதோடு, அவர்கள் கற்பனையான ஒன்றை உலகத்தில் நடவாத ஒன்றை தனக்கு துணையாகக் காட்ட முன் நிறுத்துகின்றனர் என்பதுதான் தகும் மெய்நிலையும் கூட.

மலையைப்பார்த்து நாய் குரைக்கின்றது என்பது ஓர் எடுத்துக்காட்டு வரி. இது கற்பனையில் விளைந்ததேயன்றி எந்த நாயும் மலையைப்பார்த்துக் குரைப்பதில்லை, குரைக்காது. குரைத்தல் என்பதே கிடையாது.

அதுபோல்தான் குருவி எங்கேயாவது பறந்து போய் ஓர் குன்றின் மீது முட்டுமா? இதனை யாரவது பார்த்ததுண்டா? இல்லை, இல்லை, இல்லை அல்லவா? ஒரு கருத்தை நடக்காத ஒன்றினை நடந்ததாகக் காட்டுவது

தன்கருத்தினுக்கு ஆதரவாக வந்த ஓர் வகை கற்பனை எடுத்துக்காட்டு அவ்வளவே.

*இங்கு சங்கநூல்களின் வரிகளை வைத்திட்டேன் அதனில்,
"குன்றத்து இறுத்த குரீஇ இனம் போல" -- வரி எண் 8 - புறநானூறு 19 பாடல் வரியில் ஓர் குருவி தங்கியது பற்றியல்ல ஓர் முழு இனமும் (குரீஇ இனம்) தங்குவதற்குக் குன்றினை கையாண்டமைக் காணலாம் ஏதோ பயித்தியமாக முட்டியது பற்றியல்ல, மாறாக தம்மினம் தங்குவது தொடர்புடையதுதான். இவ்வடி பழமையான ஆசிரியரது மட்டுமல்ல கேவல(சாதாரண) நிலையினைக் காட்டுவது அல்ல அல்ல அல்ல.

"குறிச்சி புக்க மான்"

'குறிச்சி' என்பது குறவர்கள் வாழும் இடம். குறிஞ்சி என்றால் மலையும் அது சார்ந்த இடமும் ஆகும் என்பது நன்கே அறிவீர். பழம் சங்க நூல்களில் குறிச்சி எனும் சொல் காணவில்லை. சேக்கிழார் போன்ற 12-13 நூற்றாண்டு புலவர் பெருமக்களால் இயற்றப்பட்ட நூல்களில்தான் குன்றக் குறவர்கள் வாழ்விடமாகக் காண்கின்றது.

குறவர் இனத்தவர்களுக்கு பயிர்த்தொழில் பெரிதும் தெரியாது, விலங்குகளை வேட்டையாடி வாழ்வதே பெரும் வாழ்க்கை எனலாம். மலைகளில் சிறு சிறு படிபோல் அமைத்த தட்டு வடிவ புலங்களில் தினை, வரகு, சாமை முதலிய சிறுதானியங்களையும் விளைவிப்பர். காட்டு விலங்குகளிலிருந்தது பாதுகாத்து வாழ கூட்டங்களாகவே கூடி வாழ்வர். பலபோது இவர்களின் வாழ்விடம் பாதுகாப்பிற்காக ஓர் வேலி போன்ற மிக எளிதான அமைப்பினைக் கொண்டதும் ஆகும். இவ்வகை வாழ்விடங்களை 'குறிச்சி' என்பார் சேக்கிழார் பெருமான்.

இந்த குறவர் நாளும் வேட்டையே தொழிலாக, விலங்குகள் இயல்பாக வாழும் இடங்களுக்கு தேடிச் சென்று வேட்டை ஆடுவர். பின் குறிச்சிக்குத் திரும்புவர். வேட்டையில் விற்பன்னரான அவர்கள் வாழ்விடத்திலேயே அறியாது புகுந்து விட்ட மானின் நிலை என்னவாகும், தப்பித்தல் என்பது நடவாது. இதனைக்காட்டவே குறிச்சியில் புகுந்த மான் மிக எளிதாக வேட்டையாடப்படுவது (இடர்ப்படுவது)நடக்கும் என்பதைக்காட்ட வந்ததே அந்த முதுசொல் 'குறிச்சி புக்க மான்'.

இவை திருத்தொண்டர் புராணம் அதனில், கண்ணப்பநாயனார் புராணம் பகுதியில் காணலாம்:

இருங் குறவர் பெருங்**குறிச்சி** க்கு இறைவன் ஆய - 12.692
கொண்ட சீர் விழவு பொங்கக் **குறிச்சி**யை வலம் கொண்டார்கள் - 12.687
சினை மலர்க் காவுகள் ஆடி செறிகுடிக் **குறிச்சி** சூழ்ந்த - 12.674
வில் தொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் **குறிச்சி** வாழ்க்கை மனைவியும் தத்தை என்பாள் 12.657

இவ்வெடுத்துக்காட்டுகளில் மிக்க தெளிவாக கானவர், வேடர் வாழும் இடம் குறிச்சி என வழங்கப்பட்டமை காண்கின்றோம்.
இது ஓர் உரைகாரரின் எடுத்துக்காட்டு முதுசொல் ஆட்சி, இதனில் உள்ள இரு சூழ்நிலையும் வேறு வேறு வகைத்ததாயதை இணைத்துப் பயன்கொண்ட நிலை என்பதை அறியலாம்.

இவ்வாறாக இதற்கு விளக்கம் அளிப்பது, செம்மொழியாம் தமிழில் ஆய்வுக்கு ஊன் அளித்தமைக்கு ஈடாகப் பழம் சொற்களின் மறை நிலைப் பொருள்களைக் காட்ட ஓர் வாய்ப்பு அமைந்தது, ஓர் தமிழ் மொழிசார் மாநாட்டில் வைக்கப் படும் பேராளர் என என் கருத்துரையை வைக்க வாய்ப்பு அமைந்தமைக்கு நிகரானது என்பேன்.

தொடர்பு: திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

16. கோழியூர்க் கதைகள்

– தேமொழி

வைதீக இந்து சமயமும், அதன் உட்பிரிவுகளும் எண்ணிலடங்கா புராணங்கள் என்ற தொன்மப்புனைவுகளின் பிறப்பிடம். தொன்மப் புனைவுகளின் நோக்கம் சமயப்பற்றை, இறைநம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பனையுடன் இணைத்து, அவற்றில் சில நன்னெறிகளைக் கலந்து மக்களுக்குக் கதைவடிவில் கொடுப்பது. வெறும் கருத்துகளாகப் படிப்பதைவிட கதைகள் வடிவில் கொடுக்கப்படும் கருத்துகள் மக்கள் நினைவில் தங்கும்.

எடுத்துக்காட்டாக, ஒற்றுமையாய் வாழவேண்டும் என்பதை வலியுறுத்த வேடனின் வலையில் அகப்பட்ட பறவைகள் அனைத்தும் ஒன்றாகப் பறந்து தப்பிவிடுவது, பிரிந்திருந்த காளைகள் சிங்கத்தை எதிர்கொள்ள ஒற்றுமையாக அதனை எதிர்ப்பது, வெற்றி உறுதி என நினைத்துத் தூங்கி ஓய்வெடுத்த முயலை, மிக மெதுவாக ஊர்ந்தே வெற்றி கண்ட ஆமையின் கதை எனச் சிறுவயதிலிருந்து பலகதைகள் நன்னெறிக் கதைகளாகப் படித்துள்ளோம்.

சமயம் அடிப்படையில் உள்ள கதைகளும் நன்னெறிகளை நுழைத்துச் சொல்லும் வகையில் அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகத் தந்தை சொல் மீறாத இராமன் அரசபதவியை விட்டு காட்டுக்குச் சென்றது, எத்தகைய இடர் ஏற்பட்டாலும் உண்மையையே பேசிய அரிச்சந்திரன், ஏழை நண்பன் குசேலன் தன்னைக் காணவந்த பொழுது பேதம் பாராமல் நட்புப் பாராட்டி, நண்பன் கொண்டு வந்த அவலை விருப்பத்துடன் ஏற்று உண்ட கண்ணன், தனக்கு வாழ்வளித்த காரணத்திற்காக தன் சகோதரர்களையும் எதிர்த்துப் போரிட்டக் கர்ணன் என்ற கதைகளும் காட்ட விரும்பியது அது போன்ற நன்னெறிகளே.

இருப்பினும் காலப்போக்கில் தங்கள் நோக்கங்களை மக்களின் மனதில் திணிக்கும் நோக்கில் மனிதநேயத்திற்குப் புறம்பான கதைகளும் புராணங்களில் இடம்பெறத் துவங்கின. இவை இக்கால மறுவாசிப்பில், உள்நோக்கத்துடன் சமூகத்தில் ஒரு சிலரை ஒடுக்கும் நோக்கில் புனையப்பட்டவை என்று அறியும் பொழுது, இன்றைய சூழல் அவற்றை ஏற்க மறுக்கும் மனப்பான்மையையும் தோற்றுவித்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக, வர்ணாசிரமக் கொள்கைகளை வலியுறுத்தும் நோக்கில், துரோணரை மானசீகக் குருவாக மனதில் ஏற்றுக் கொண்டு, சத்திரியர்கள் மட்டும் கற்க வேண்டிய

வில்வித்தையைத் தானே தன்முயற்சியில் கற்று அதில் சிறந்து விளங்கிய ஏகலைவனின் கட்டைவிரலை காணிக்கையாகக் கேட்ட துரோணரின் செய்கை, கற்பைச் சோதனை செய்யும் நோக்கில் சீதை தீக்குளிக்க வேண்டிய கட்டாயத்தைக் காட்டும் கதை, குலநெறிகளுக்குப் புறம்பாகத் தவம் செய்த காரணத்திற்காக இராமனால் கொல்லப்பட்ட சம்பூகன் போன்ற கதைகள் கூறப்பட்டதன் நோக்கம் இக்கால வாசிப்பாளர்களுக்கு அதிர்ச்சியைத் தரும்.

தலபுராணங்கள்:
இவ்வாறே, புராணங்களின் வரிசையில் திருத்தலங்களின் பெருமை கூறும் தலபுராணங்கள் எனப்படும் தொன்மப்புனைகதைகள் ஒவ்வொரு கோயில்களுக்கும் உண்டு. இது கோயிலொழுகு, அதாவது கோயிலின் தொன்ம வரலாறு கூறுதல் என அறியப்படும். கோயிலொழுகுகள் கொண்ட தொன்மப்புனைவுகளில் ஊரின் வரலாறும் கலந்து இயற்றப்படுவதன் நோக்கம் கோயில்களின் பழம்பெருமையினையும் வரலாற்றுச் சிறப்பினையும் மக்களுக்கு விளக்குவதற்காக எடுக்கப்படும் ஒரு முயற்சி. இக்கதைகளில் வரலாற்றுக் குறிப்புகளுடன் இயற்கையில் நிகழ இயலாத நிகழ்வுகளும் பிணைந்திருப்பது வழக்கம்.

தேவாரப்பாடல்களில் பாடப்படும் பாடல்பெற்ற தலங்கள் என்ற முறையை ஒட்டி பிற்காலத்தில் எழுதப்பட்டவை திருத்தலபுராணங்கள். எழுதப்படும் பாடல்கள் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவி ஆகியோரின் அருட்செயல்கள், அடியார்களை ஆட்கொண்ட முறை, தேவர்கள் மற்றும் முனிவர்களுக்குக் கருணையுடன் துயர் தீர்த்த செய்கைகள் அதற்கு உதவிய கோயிலின் குளம், மரம், விலங்கு ஆகிய சிறப்புக்களை எடுத்தியம்பும். மனிதர்கள் மட்டுமன்றி விலங்கினங்களையும் கடவுள் உய்வித்த கதைகளும் பல உள்ளன. மேலும் இந்திய அளவிலான இதிகாச புராணக்கதைகளின் சிற்சில பகுதிகள் குறிப்பிட்ட ஊர்களில் நிகழ்ந்ததாகவும் காட்டப்படும். எடுத்துக்காட்டாகப் பாண்டவர்கள் வனவாசம் இருந்த பகுதி, சீதையைத் தேடி இராமன் சென்ற வழியில் உள்ள இடங்கள் என இந்துமதக் கதைகள் இந்தியமண்ணில் பல பகுதிகளுடன் தொடர்பு காட்டி இணைக்கப்படும். வசிட்டரும், அகத்தியரும், விசுவாமித்திரரும் பல கால எல்லைகளையும் கடந்து இந்தியாவின் பல பகுதிகளில் பயணித்திருப்பதும் வியப்பூட்டும் வகையில் அமைந்திருக்கும். இத்தகைய தலவரலாறு கூறும் செய்திகளை, ஐதீகங்களை அடிப்படையாகக் கொண்டு கோயில் வழிபாடு, பூசை, விழாக்கள், விரதங்கள், சாங்கியங்கள், சடங்குகள் போன்றவையும் மேற்கொள்ளப்படுகின்றன.

கோயிலொழுகு இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பொது ஆண்டு பன்னிரண்டாம் நூற்றாண்டு காலகட்டத்திற்குப் பிறகு எனக் கருதப்படுகிறது. தமிழில் பெரும்பற்றப்புலியூர் நம்பி எழுதிய திருவிளையாடற்புராணம் இவ்வரிசையில் முதலாவது எனப்படுகிறது. இடையே தலபுராணங்களின் வளர்ச்சி சற்றே தொய்வடைந்தாலும், விஜயநகர நாயக்க மன்னர்களின் ஆட்சியில் தமிழகத்தில் மீண்டும் அவை வளர்ச்சியடைந்தன. நாட்டுப் படலம், நகரப் படலம் போன்றவற்றை உள்ளடக்கி இலக்கியச் சுவையுடன், குறிப்பிட்ட ஊரின் இயற்கையழகு பற்றியும், நிலவளம் பற்றியும், மக்களின் வாழ்க்கை பற்றியும் சிறப்பித்துச் மிகச் சிறந்த புலவர்களால் பாடப்பட்ட தலபுராணங்கள் அவ்வூர் மக்களைக் கவர்ந்தன, பெருமை கொள்ளச் செய்தன.

டாக்டர். உ.வே.சாமிநாதையரின் ஆசிரியரும், 19-ம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவருமான திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் (1815-1876) திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தலபுராணங்கள் பாடினார். தங்கள் ஊர்களின் கோயில்களுக்கு இவரால் திருத்தல வரலாறு பாடப்பெறுவதை அவ்வூர் மக்கள் பெருமையாகக் கருதியதாகவும் தெரிகிறது. "தமிழ் மரபு அறக்கட்டளை" நிறுவனம் தமிழக கோயில்களின் தலபுராணங்களை திரட்டும் திட்டத்தின் கீழ் பல திருத்தலபுராணங்களை (http://www.tamilheritage.org/thfcms/index.php/2008-09-27-01-35-50) சேகரித்துள்ளது.

வரலாறும் புனைவும் கலப்பதால் இந்த இலக்கியங்களில் பொதுவாக வழக்கில் உள்ள பல கதைகளின் சாயல்கள் அமைந்துவிடும். அத்துடன் காலக்கோட்டில் அக்கறை செலுத்தாமல் புனையப்பட்ட வரலாறுகள் வரலாற்றுக் குழப்பத்தையும் உருவாக்கும். கதைகளைப் பிணைத்து ஒன்றின் மீது ஒன்று ஏற்றி கால எல்லைகளைப் பற்றிக் கவலை கொள்ளாது திருத்தல வரலாறுகள் புனையப்பட்டதற்கு ஓர் எடுத்துக்காட்டாக கோழியூர் என்னும் உறையூர் குறித்த தலவரலாற்றுக் கதைகளை அடுத்து நாம் காணுவோம்.

பீடார் உறந்தை என்ற கோழியூரின் தலவரலாற்றுக் கதைகள்:
சோழநாட்டின் மிகப்பழமையான தலைநகர் உறந்தை என்றழைக்கப்பட்ட உறையூர். சங்ககாலத்துத் தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய, கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியப் பட்டினப்பாலை என்ற நூலில்,

"*குளம் தொட்டு வளம் பெருக்கி*
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கி

கோயிலொடு குடி நிறீஇ

வாயிலொடு புழை அமைத்து" (பட்டினப்பாலை: 284-287)

எனக் கரிகாலன் காலத்திலேயே உறந்தை புதுப்பிக்கப் பட்டதாகப் பட்டினப்பாலை கூறுகிறது.

உறையூருக்குக் கோழி அல்லது கோழியூர் என்ற பெயரும் உண்டு. உறைந்தை, குக்கிடபுரி, வாரணபுரி, வாரணம், உரபுரம், திருமுக்கீசுரம், நிகளாபுரி என்று மேலும் பல பெயர்களும் உறையூருக்கு உண்டு. சேவல் ஒன்று யானையைத் தனது கால் நகங்களினாலும் அலகினாலும் கொத்திக் குதறி யானையின் கண்களைக் குருடாக்கி புறமுதுகிட்டு ஓடுமாறு துரத்தி வெற்றிகொண்டதால் கோழியூர் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படும். இக்கதையை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலும் காணலாம்.

"காவுந்தி யையையுந் தேவியுங் கணவனும்

முறம் செவி வாரணம் முன் சமம் முருக்கிய

புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்"(246-248)

(சிலப்பதிகாரம்/புகார்க் காண்டம்/10. நாடுகாண் காதை)

என்ற வரிகளில், தவத்தானே மிக்க சிறப்பினையுடைய கவுந்தியடிகளும் கண்ணகியும் கோவலனும், முறம் போலுஞ் செவியினையுடைய யானையை முன்னர்ச் சமரிடத்துக் கெடுத்த, புறத்தே சிறகினையுடைய கோழி என்னும் நகரின்கண் விரும்பிப் புக்கார் என இளங்கோவடிகள் கோழியூர் கதையையும் குறிப்பிடுகிறார்.

உறையூரில் வாழ்ந்தவர்களாகப் பல சங்ககாலப் புலவர்களையும் அவர்கள் பெயரில் இருந்து நாம் அடையாளம் காணலாம். ஏணிச்சேரி முடமோசியார், கதுவாய்ச் சாத்தனார், சல்லியங்குமரனார், சிறுகந்தனார், பல்காயனார், மருத்துவன் தாமோதரனார், முதுகண்ணன் சாத்தனார் போன்ற புலவர்கள் பெயருடன் உறையூர் இணைந்தே வரும்.

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் காலத்தே, சோழர்களுக்கு உறந்தை, பூம்புகார் என இரண்டு தலைநகர்கள் இருந்தன. அவற்றில் ஒன்றான உறந்தை என்னும் உறையூர், பண்டையச் சிறப்பு நலிவுற்று இக்காலத்தில் திருச்சி மாநகரின் ஒரு பகுதியாகிப்போனது.

"மாட மதுரையும் பீடுஆர் உறந்தையும்

கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்"(3-4)

(சிலப்பதிகாரம்/புகார்க் காண்டம்/8. வேனிற் காதை) எனச் சோழர் தலைநகராகப் புகாரும், உறந்தையும் இருந்ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிடப்படுகிறது. மேலும்,

"............... பாணர்
பைதல் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்,
கோழி யோனே, கோப்பெருஞ் சோழன்"
(புறநானூறு - 212 பாடல்)

பாணரின் சுற்றத்திற்கு வழங்கி உதவுபவனாக இருக்கின்ற கோழியூரின் கோப்பெருஞ்சோழன் எனப் பிசிராந்தையார் பாடும் பாடலை புறநானூறு காட்டுகிறது.

கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக்கோன் குலசேகரன்
சொல்லினின் தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்க ளாவரே
(பெருமாள் திருமொழி 2ம் பத்து 10 ஆம் பாடல்)

என்ற பெருமாள் திருமொழி பாடல் கோழியின் மன்னவன் குலசேகரன் என்ற செய்தியைக் கூறுகிறது.

இனி கோழியூரின் திருத்தலவரலாறு என்று "108 - வைணவ திவ்யதேச ஸ்தல வரலாறு" என்ற நூல் காட்டும் பகுதியைக் காணலாம்.

உறையூர் என்னும் திருக்கோழி:

" கோழியும் கடலும் கோயில் கொண்ட
கோவலரே யொப்பர் குன்றமன்ன
பாழியும் தோழுமோர் நான்குடையர்
பண்டிவர் தம்மையுங் கண்டறியோம்
வாழியரோ விவர் வண்ண மென்னில்
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழியொன் றேந்தியோர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா" (1762)
(பெரிய திருமொழி 9-2-5)

பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார், திருநாகையில் (நாகபட்டினம்) உள்ள சுந்தர்ராஜப் பெருமாளின் பேரழகானது திருக்கோழியில் கோயில் கொண்டுள்ள பெருமானின் அழகுக்கு ஒப்பானதாகும் என்று கூறுகிறார்.

வரலாறு:

(தலவரலாறு கூறும் இப்பகுதி, நூலில் உள்ளவாறே எழுத்து மாறாமல் இங்குக் கொடுக்கப்படுகிறது - [1])

> உறையூரில் தர்மவர்மாவின் வம்சத்தில் பிறந்த நந்தசோழன் என்னும் மன்னன் மிகச் சிறந்த பக்திமானாக அரங்கனுக்குத் தொண்டு செய்வதில் பேரவா கொண்டவனாயிருந்தான். புத்திரப்பேறில்லாத பெரும் கவலை மட்டும் அவன் நெஞ்சைவிட்டு நீங்காதிருக்கவே இதற்கும் ஸ்ரீரங்கநாதனே பதில் சொல்லட்டும் என்று காத்திருந்தான். பக்தனுக்கருளும் பரந்தாமன் வைகுண்டத்தில் இலட்சுமி தேவியைக் கடைக்கண்ணால் நோக்கி நந்தசோழனுக்கு புத்திரியாகுமாறு அருள, உறையூரில் தாமரை ஓடையில் தாமரைப் பூவில் குழந்தையாக அவதரிக்க வேட்டைக்குச் சென்ற நந்தசோழன் அம்மகவைக்கண்டெடுத்தான். கமல மலரில் கண்டெடுத்தமையால் கமலவல்லி என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வர, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த கமலவல்லி திருமணப் பருவம் எய்தினாள்.
>
> ஒருநாள் ஸ்ரீரெங்கநாதன் குதிரை மீதேறி பலாச வனத்தில் வேட்டைக்கு வந்ததுபோல் உலாவர, தோழிமாருடன் அப்பக்கம் வந்த கமலவல்லி, எம்பெருமான் பேரழகைக்கண்டு யார் இவர் என வியந்தனள். தன் பேரழகை முழுவதும் எம்பெருமான் கமலவல்லிக்கு காட்டிமறைய, காதல் மோகத்தில் பக்தி வெள்ளத்தில் கலக்கலானாள் கமலவல்லி. மகளின் நிலைகண்டு என்னசெய்வதென்று தெரியாது மன்னன் திகைத்து சிந்தனையில் மூழ்கியிருக்க, அவன் கனவில் வந்த பெருமான் குழந்தைப் பேறில்லா நின் குறை தீர்க்கவே யாம் திருமகளை அனுப்பினோம். என் சன்னதிக்கு அழைத்துக் கொண்டுவா, ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்ல, மிகவியந்து மகளைப் பலவாறாய் துதித்துப் போற்றி நகரை அலங்கரித்து கமலவல்லியைத் திருமணக்கோலத்தில் ஸ்ரீரங்கம் அழைத்துவர, கோவிலினுள் நுழைந்ததும் கமலவல்லி மண்ணில்புக்கு மறைந்து அரங்கனோடு இரண்டறக் கலந்தாள். சேனை பரிவாரங்களுடன் இந்தக் காட்சியைக்

கண்ட மன்னன் தான் பெற்ற பெரும் பேற்றை எண்ணி வியந்து ஸ்ரீரங்கத்திற்கு எண்ணற்ற திருப்பணிகள் செய்து உறையூர் வந்து கமலவல்லி அழகிய மணவாளன் திருமண நினைவாக மாபெரும் கோவில் எழுப்பினான். ஸ்ரீரங்கநாதனே அழகொழுகும் மாப்பிள்ளையாக வந்து திருமணம் செய்து கொண்டதால் அழகிய மணவாளன் ஆனார் (இவரே மீண்டும் ஒரு முறை வயலாளி மணவாளன் ஆவார். அதனைத் திருவாலி திருநகரி ஸ்தல வரலாற்றில் காணலாம்).

இந்நிகழ்ச்சி நடைபெற்றது துவாபரயுகத்தின் முடிவிலென்பர். கலியுகத்தில் ஒரு சமயம் இந்த உறையூரில் மண்மாரி பெய்து பட்டனம் முழுகிப்போக அதன்பின் சோழ மன்னர்கள் கங்கை கொண்டானைத் தலைநகர் ஆக்கி ஆண்டுவருங்காலை இந்த உறையூரில் ஒரு சோழ மன்னனால் கட்டப்பட்ட கோவிலைத்தான் இப்போது நாம் காண்கிறோம். இவன் இக் கோவிலில் அழகிய மணவாளனையும் (ஸ்ரீ ரங்கநாதனின் திருமணக்கோலம்) கமல வல்லியையும் பிரதிட்டை செய்தான். இம்மன்னனின் பெயர் இன்னதென்றறியுமாறில்லை.

'இம்மன்னனின் பெயர் இன்னதென்றறியுமாறில்லை' என்று சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை, கற்பனைக் கதைகளை வரலாற்றுடன் ஒப்பிட்டு சான்று காண முயலும் பொழுது ஏற்படும் துயரன்றி வேறில்லை. **துவாபரயுகத்தின் முடிவில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி என்றால், கமலவல்லியின் தந்தையான உறையூர் நந்தசோழன் பற்றிய குறிப்புகள் சங்கப்பாடல்களில் ஏன் இடம்பெறவில்லை என ஓரிருவருக்கு ஐயம் வந்தால் கூட போதுமானது.** ஸ்ரீரெங்கநாதன் குதிரை மீதேறி வந்தார் என்பதில் இருந்து, தற்கால குதிரை என்ற விலங்கை மக்கள் அறிந்திருந்ததாகக் காட்டப்படும் நந்தசோழனின் காலத்தை, இந்தியாவில் குதிரைகள் இருந்திராத காலமான சிந்து சமவெளி நாகரிக காலத்திற்கும் பிற்பட்ட காலத்திற்குத் தள்ளலாம். அதாவது இந்த நிகழ்ச்சியை பொது ஆண்டுக்கு முன் கி.மு. 3,000 ஆண்டுகள் காலகட்டத்திற்குப் பின்னர் என நாம் கொள்ள வேண்டும். சிந்து சமவெளி நாகரிக காலம் என்பது இந்தியாவில் குதிரைகள் அற்ற காலம் என அறியப்படுகிறது, சிந்துசமவெளி அகழாய்விலும் குதிரை இருந்ததற்கான தடயங்கள் இன்றுவரை கிடைத்ததில்லை. **அப்படி என்றால், கி.மு. 3000 க்குப் பின்னர் என்பதுதான் துவாபரயுகமா?**

மேலும், துவாபரயுகத்தின் முடிவில் உறையூரில் நடைபெற்ற நிகழ்வாகக் கூறப்படும் இதே கதை, திருவாலி திருநகரி வயலாளி மணவாளன் என மற்றொரு கதையிலும் காட்டப் படுவதாகவும் தெரிகிறது. மேலும் குழந்தையற்றவர் ஒருவர், மாலவனின் அருளலால் அவருக்கு மகளாகத் திருமகள் பிறக்கிறார், திருமாலை அவள் மணக்க விரும்புவது, திருவரங்கத்திற்கு அவளை அழைத்துவரச் சொல்லி மணமுடிக்கத் திருமால் வேண்டிக் கொள்வது, திருவரங்கக் கோவிலில் மணமகள் இறைவனுடன் இரண்டறக் கலந்து மறைந்துவிடல் என்பது போன்ற நிகழ்வுகள் தவறாமல் அனைவருக்கும் பெரியாழ்வார் அவர் மகள் ஆண்டாள் கதையையும் நினைவூட்டும். ஒத்த சாயல் கொண்ட கதைகள் திருத்தல தொன்மப் புனைவுகளில் இருப்பதற்கு இத்தலவரலாறு சான்றாக அமைகிறது.

மேலும் சில உறையூர் தலவரலாற்றுக் கதைகள்:
இளவரசி கமலவல்லி, அவளது தந்தையாகிய உறையூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழ மன்னன் நந்தசோழன், அவரது மாப்பிள்ளை திருவரங்கம் அழகிய மணவாளன் குறித்த தலபுராணக் கதையுடன் மேலும் சில உறையூர்க் கதைகளும் உள்ளன.

சிபிச் சக்கரவர்த்தி இந்த உறையூரிலிருந்து ஆட்சி புரிந்ததாகவும் கூறப்படுவதுண்டு. மற்றொரு கதையில், சோழன் இளஞ்சேட்சென்னி உறையூர் மன்னனாக இருந்த பொழுது, இறைவனின் பூஜைக்கு வைத்திருந்த மலர்களை அரசி தலையில் சூடிக்கொண்டதால் இறைவன் சினந்து இந்த ஊரை அழித்துவிட்டதாகவும், இறைவன் சினத்தால் நெருப்பு மாரி பெய்து உறையூர் அழிந்ததாக மற்றுமொரு தலவரலாறுமுண்டு. பலவகையில் கூறப்படும் இக்கதையில் மலைக்கோட்டை இறைவன் தாயுமானவரான சிவனும், சில சமயம் உறையூர் வெக்காளி அம்மனும் வருவதுண்டு. உறையூரில் நெருப்புமழைக்குப் பதிலாக மண்மழை பொழிந்ததாகவும் கதையுண்டு. மண்மழை கதை பல வேறுபாடுகளுடன் கூறப்படுகிறது.

இக்கதைகளில் ஒன்றில், நாகலோகத்திலிருந்த செவ்வந்தி மலர்ச்செடி ஒன்று சாரமா முனிவரால் உறையூருக்குக் கொணரப்பட்டு இறைவனுக்காகப் பராமரிக்கப்படும் அவரது பூந்தோட்டத்தில் வளர்கிறது. பூவணிகம் செய்யும் பிராந்தகன் என்பவன் இறைவன் பூசைக்காக உள்ள அம்மலர்களைத் திருடுவதைத் தொழிலாகக் கொள்கிறான். அவற்றை அரசியாருக்குக் காணிக்கையாகக் கொடுத்து அவரது நன்மதிப்பைப் பெறுகிறான். மலர்கள் மறைவதன் உண்மைப் பின்புலம் அறிந்த முனிவர் உறையூரை ஆட்சி

செய்யும் பராந்தகச் சோழ மன்னனிடம் முறையிடுகிறார் (வன்பராந்தகன் என்றும் இந்த மன்னனின் பெயர் குறிப்பிடப்படுகிறது, அத்துடன் இளஞ்சேட்சென்னி என்று கூறப்பட்டவரும் இக்கதையில் பராந்தகனாக மாறிவிட்டார்). மன்னன் முனிவரது குறைக்குச் செவிசாய்க்கவில்லை. உள்ளம் நொந்து இறைவனிடம் முறையிடுகிறார் முனிவர். தனது அடியாரை நோகவைத்த மன்னனின் மேல் சினம் கொண்ட திருசிரமலை சிவன், அமர்ந்திருந்த கிழக்கு நிலையில் இருந்து மேற்கில் உள்ள உறையூரை நோக்கித் திரும்பியமர்ந்து உறையூரில் மண்மழை பொழியச் செய்கிறார். அரசன் உறையூருடன் அழிகின்றான்.

கருவுற்றிருந்த அரசி புவனமாதேவி காவிரியில் தற்கொலை செய்யக் குதிக்கின்றாள். ஆனால், பார்ப்பனர் ஒருவரால் காப்பாற்றப்பட்ட அரசி ஆண் முழந்தை ஒன்றை ஈன்றெடுக்கிறாள், இக்குழந்தையே சோழர்களில் சிறந்த மன்னனாகக் கருதப்படும் திருமாவளவன் என்னும் கரிகால் சோழன். வீடு வாசலை இழந்த உறையூர் மக்கள், அவர்களை எல்லையம்மனாக காத்து வரும் வெக்காளி அம்மனிடம் தஞ்சம் புகுந்தனர். அம்மன் தாயுமானவரிடம் சினம் தவிர்த்து மக்களிடம் கருணை காட்டும்படியாக வேண்ட, சிவன் சினம் தணித்து மண்மாரியை நிறுத்தினார். வீடின்றி வெட்டவெளியில் துயருற்ற மக்களுக்காக வெக்காளியம்மன், தானும் வானத்தையே கூரையாகக் கொண்டு, கூரையற்ற கோவிலில் குடியிருக்கத் தொடங்கினார் (உறையூர் வெக்காளியம்மன் கோவிலுக்கு கூரையில்லாத தலவரலாறு இது).

தங்கள் தவவலிமையால் கல்மழையும், மண்மழையும் பெய்வித்து சமணர்கள் உறையூரை அழித்தார்கள் என்பது ஒரு கதை. உறையூர் அழிந்ததாக வேறுசில இலக்கியக் குறிப்புகளும் உள்ளன. சமணர் தவ வலிமையினால் கல்மழையும் மண்மழையும் பொழியச் செய்து உறையூரை அழித்தார்கள் என தக்காயபரணி கூறுகிறது.

மலைகொண் டெழுகுவார் கடல்கொண் டெழுவார்
மிசைவந்து சிலா வருணஞ் சொரிவார்
நிலைகொண் டெழுவார் கொலைகொண் டெழுவார்
இவறிற் பிறர் யாவர் நிசாசரரே(தக்கயாகப்பரணி 70)

இப்பாடலின் பொருளைக் கொண்டு அபிதானசிந்தாமணி ஆசிரியர் உறையூர் மண்மாரி பொழிந்ததில் அழிந்தது என விளக்கம் தருகிறார் எனவும் கருதப்படுகிறது.

பராந்தகச் சோழனின் (கி.பி 907-953) தலைநகரம் உறையூர் என்பது **உதயேந்திரச் செப்பேடு** அளிக்கும் தகவல். பின்னர் **முதலாம் மாறவர்மன் சுந்த பாண்டியன்(கி.பி 1216 – 1235)** உறையூரையும் தஞ்சையையும் தீக்கிரையாக்கினான் என்பது **திருக்கோயிலூர் கல்வெட்டு** தரும் செய்தி.

சங்க காலச் சோழ மன்னர்களுள் காலத்தால் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப் பெறுபவனான உருவப்ப∴றேர் இளஞ்சேட்சென்னி, "உருவப் ப∴றேர் இளையோன் சிறுவன் தாய்வயிற் றிருந்து தாயம்" எய்திய (பொருநராற்றுப்படை: 130,132) கரிகால் வளவன் பிறப்பு குறித்த கதை, தக்கயாகப்பரணி செய்தி, அபிதானசிந்தாமணி சமணர் மண்மழை குறிப்பு, உதயேந்திரச் செப்பேடு குறிப்பிடும் பராந்தகனின் தலைநகர் உறையூர் என்ற தகவல், தீயால் அழிந்த உறையூர் குறித்த திருக்கோயிலூர் கல்வெட்டு செய்தி இவையாவற்றையும், வரலாறு குறிப்பிடும் வரிசையில் காலக்கோட்டில் கொள்ளாமல் இணைத்தவை உறையூர் கதைகள், அதனுடன் உறையூர் சோழ மன்னனின் மகளின் திருவரங்கத் திருமணக் கதையையும் இணைந்துள்ளவை திருச்சிப் பகுதி ஊர்களின் தலபுராணக் கதைகள்.

இதில் கோழியூரின் தலவரலாறுகளில் ஒன்றான, சிலப்பதிகாரம் காட்டும் யானையைத் துரத்திய கோழியின் கதை மற்றொருவடிவம் பிற்கால சோழ மன்னனான ஆதித்த சோழனுடனும் இணைக்கப்படுகிறது. உறையூரை ஆண்ட ஆதித்த சோழன் தன் பட்டத்து யானையின் மீது வரும்போது, வில்வ

மரத்தின் நிழலில் மறைந்து இருந்த சிவன் உறையூரின் மேன்மையை மன்னனுக்கு உணர்த்த விரும்பி, அம் மரத்தின் கீழ் மேய்ந்து கொண்டிருந்த கோழியை நோக்க, அது வெறிகொண்டு கொண்டு பட்டத்து யானையைக் குத்தி வீழ்த்தியது. இச்செயலைக் கண்டு வியந்த ஆதித்த சோழன் உறையூருக்குக் கோழியின் வீரத்தைச் சிறப்பிக்க திருக்கோழி எனப் பெயரிட்டான் என்கிறது இக்கதை. கோழியும் யானையும் போரிடும் கதையைக் கூறும் சிற்பமொன்று **உறையூர் பஞ்சவர்ணசாமி கோயிலில்** செதுக்கப்பட்டுள்ளது.

பரகேசரி விசயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் (கி.பி 871 - 907) ஆட்சி புரிந்தது பிற்காலம். ஆனால் கோழி யானை கதை சிலப்பதிகாரத்திலேயே இளங்கோவடிகளால் கூறப்படுகிறது என்பது ஒன்றே தலபுராணக் கதைகள் தொன்மப்புனைவுகளும் வரலாறும் கலந்து இயற்றப்படுவதைக் காட்டும் சான்று.

துணைநூல்கள்:

[1] 108, வைணவ திவ்யதேச ஸ்தல வரலாறு, பக்கம் 54 - 57:
http://www.tamilvu.org/ta/library-l4211-html-l4211ind-141584
[2] திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீதாயுமானவர், சக்தி விகடன் - 26.09.2007:
http://www.vikatan.com/news/article.php?aid=18882

படம் உதவி:
http://www.shivatemples.com/sofc/sc005.php
(http://4.bp.blogspot.com/-JUKuFxAD-Q0/UpItWGwUl2I/AAAAAAAAAH4/XeGCP__iMt4/s320/2.jpg)

தொடர்பு: **தேமொழி** (themozhi@yahoo.com)

17. பழந்தமிழ்ப் பாடல்களாக உரைகாரர் காட்டும் விடுகதைகள்

— நூ த லோ சு

பழந்தமிழ்ப் பாடல்களாக உரைகாரர் காட்டும் விடுகதைகள் - நச்சினார்க்கினியர் உரை வழி கண்ட சில . . .

புகுமுன்-முன்குறிப்பு:
பல ஆண்டுகளுக்கு முன் செவ்விய மொழியாம் நம் தமிழுக்கு மதுரைத் திட்டம் எனும் பயன் மிகு மின்னூலகத் திட்டத்திற்காக நூற்றுக்கணக்கான நூல்களை பல்வேறு நூலகங்களில் தேடிய நிலையில் கண்ட பெருநூல் தொகுப்புகளில், பல பழம் ஆசிரியர்கள் தம் தொல்காப்பிய உரைகளும் கண்டேன். அவற்றைப் பார்க்கும் நேரம், அவற்றின் ஊடே உரைவிளக்கும் நிலையில் காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகளாக பற்பல நூல்களின் பாடல்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் தற்காலம் யாவரும் தொடர்பு கொள்நிலையில் பலவகை ஊடகங்களில் கிட்டுவன நீங்கலாக, இவை யாவும் எந்தநூலைச் சார்ந்தவை என என்னால் அறிய இயலா நிலையில் உள்ளன எனப்பட்டனவற்றைத் தொகுக்க தொடங்கினேன். ஆனால், எவர்க்கும் எந்நாளும் நேரும் தடைகள் இயற்கையாக வந்து தொகுப்புப் பணி ஒரு சிறு தூரமே சென்றது. 'நச்சினார்க்கு இனியனாரின் மேற்கோள்கள் தொகுப்பு' எனும் தலைப்பின் ஓட்டம் நின்றது. இத்தொகுப்பில் இனம் தெரியாத நூல்களின் பாடல்களுடன் நூற்பாக்களும் அடங்கும். அத்தொகுப்பின் முன்னோட்டமாக வைத்த பத்தியை இங்குக் காண்க. அதனில் நகைச்சுவை எனும் மெய்ப்பாட்டில் வருவனவற்றால் தமிழ் மொழி மீது சிலருக்கு ஆர்வம் பிறக்கலாம் எனும் கருத்தில் வைக்கும் விடுகதைப் பாடல்கள் இவை.

வழங்கு பழம் சங்கநூல்களில் விரவாது, தனிப்பாடல்களாகவோ மற்றும் யாதோ ஒரு பிற்கால நூல்தம் பாடல் வரிகளாகத் தோன்றுவன மட்டும் ஈங்கு படைக்கப் பட்டுள்ளன. புறத்திரட்டு, பெருந்தொகை, நீதித்திரட்டு, பன்னூல் திரட்டு, தனிப்பாடல் திரட்டு, சீட்டுக்கவித் திரட்டு என்பன சில திரட்டு நூல்கள். அழிந்துபட்ட பல நூல்களினின்று மேற்கோளாக மேற்கண்ட திரட்டு நூல்களில் குறையாக உதிர்ந்தனவாகக் கிடைத்த தொன்மை வாய்ந்த பாடல்களைத் தொகுத்து அவற்றின் சிற்சில கீற்றுக்களாவது நமக்குக் கிடைக்கச் செய்து பெரியதொரு தொண்டு புரிந்துள்ளன. இவ்வகையில்

முத்தொள்ளாயிரம், வளையாபதி, போல்வனவற்றின் பாடல்கள் சிற்சிலவாவது கிட்டினமை அறிந்திருப்பீர்.

பல உரைஆசிரியர்தம் மேற்கோள்கள் வழி மட்டும் சேர்மமாகவே காண்பவற்றில் மேற்படி உரையில், நூல்பெயர் மட்டும் அறிந்து, அவற்றின் தனிப்பாக்களாய் ஆனால் சிறுதொகுதி அளவாவது ஆவன, அவ்வத் தலைப்புகளில் படைக்கப்பட்டு தகடூர் யாத்திரை, பெரும்பொருள்-விளக்கம், ஆசிரியமாலை, குண்டலகேசிப் போல்வன (இவை என்னால்) மதுரை திட்டத்தில் பதியப்பட்டுள்ளன காணலாம்.

நச்சினார்க்கினியர் உரைமேற்கோள் பாடல்கள் திரட்டு - பகுதி 1:
கீழ்க்காணும் பாடல்களில் அடியில் காணும் எண் எந்நூற்பாவின் கீழ் ஆசிரியர் இப்பாடல்களைக் காட்டினார் என்பதனை காட்டும் குறிப்பே. இப்பாடல்கள் அவை தாங்கு நூல்பெயர் அறியப்பட வேண்டிய தனிப்பாடல்களின் அல்லது அவற்றின் வரிப்பகுதிகளின் தொகுப்பெனவே கொள்க. புகுநிலையோரும் எளிதாகப் படிக்க சந்தி பிரிக்கப்பட்டன.

"நச்சினார்க்கினியனார் உரை வளம்" என பெருந்தொகுப்பாக கண்டன நச்சினார்க்கினியர் உரையுள் காணும் மேற்கோள்கள் சில...

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல்

(1)
அதனில் நூற்பா 176,

"பிறை கவ்வி மலை நடக்கும்"
[= யானை (பிசி), ஒப்போடு புணர்ந்த உவமம்]

வினா: இது எது எவ்வடி ???
விடை: எறும்பி

(2)
நூற்பா 176 அதனிலேயே,

"முத்துப்போல் பூத்து முகிழில் கிளிவண்ணம்
நெய்த்(து) ஓர் குருதி நிறம் கொண்டு வித்துதிர்த்து"
[=கமுகு (பிசி), ஒப்போடு புணர்ந்த உவமம்]

வினா: இது என்ன எப்பொருளைக் காட்டும் ???
விடை: பாக்கு

(3)
நூற்பா 176 அதனிலேயே,

"நீராடான் பார்ப்பான் நிறம் செய்யான் நீராடின் ஊராடு நீரில் காக்கை"
[=நெருப்பு (பிசி), தோன்றுவது கிளந்த துணிவு]

வினா: இது என்ன பொருள் ???
விடை: நெருப்பு

(4)
நூற்பா 180 அதனில்,

"குடத்தலையர் செவ்வாயில் கொம்(பு) எழுந்தார் கையின்
அடக்கிய மூக்கினார் தாம்"
[=குஞ்சரம்-குறிப்புமொழி, எழுத்தாலும் சொல்லலும் பொருள் அரியாவாகி பொருள் புறத்தே நின்றது]

வினா: இது எது எவ்வடி ???
விடை: எறும்பி

"இந்நான்கு பாடல்களில் வரும் விடுகதைகளுக்கும் தமிழ்மொழி புலமை குறைவுள்ளோரும் முயல்வதில் தவறில்லை. விடை காண முயலலாம். எனினும் விடைகளை அங்கேயே விளக்கம் பகுதியில் காண்க. இந்நாளில் பலரும் விடை காண்பது மிக மிக அரிதானதாகும். நானும் இடர்ப்பட்டவனே. ஆனாலும் ஆசிரியர் காட்டிய குறிப்புவழி விளக்கம் அளிக்க வல்லவனவற்றை இங்கு வைத்துள்ளேன்

விளக்கம்:
(1) யானை:
– "பிறை கவ்வி";

வெண்மை நிறத்துடன் மெல்லிய திங்களின் பிறைக் கீற்றுப்போல் வளைந்து தன் வாயிலிருந்து கிளம்பி வெளியாகி வருதலால்; அதனை யானை தனது வாயிலால் கவ்வியது போல் தோன்றுதல். இஃது, உருவகம்.
எந்த உயிரினத்தாலும் கவ்வ முடியாத நிலவினை வாயினில் பற்றுவதாகக் காட்டுவது.

— "மலைநடக்கும்";
உருவில் பெரியதாகி கரிய நிறத்துடன் ஓர் சிறு குன்றுபோல் அசைந்த நடையில் வருதலால்; இதனில் இரு முரண் தொடைகளை காணலாம்.
எங்கும் மலையோ குன்றோ தனது நிலையிலிருந்து நகராத ஒன்றினை நடந்து வருவதாகக் காட்டுவது.

[[வேறு:
தென்னிந்திய யானைக்கும் ஆப்பிரிக்க யானைக்கும் வேறுபாடுகள் மூன்று:—
(i) அதன் காதுகள்— ஆப்பிரிக்க யானையின் மேல் காது தலையில் சேரும் இடம் கிடையாக சென்று தலையுடன் இணையும். ஆனால் தமிழகத்து (தென்னிந்திய) யானையின் காதுகள் மனிதரைப்போல் 'ஒ'கர வடிவில் வளைந்த நிலையில் தலையுடன் இணையும்.

(ii) அதன் நெற்றி— ஆப்பிரிக்க யானையின் நெற்றியின் மேல்பகுதி இரு பக்கமும் பந்துகள் போன்ற அமைப்பு குறைந்தும், சற்றே பின் நோக்கிச் சாய்ந்திருக்கும். ஆனால் தமிழகத்து யானையின் நெற்றியில் இருபக்கமும் உருண்ட பந்துகள்போன்ற அமைப்புடன் சாய்த்து நெடிதாக சாய்த்து உயர்ந்து காணும்.

(iii) அதன் தந்தம்— ஆப்பிரிக்க இனத்தினில் ஆண் பெண் இரு பாலுக்கும் தந்தம் உண்டு. ஆனால் தமிழக யானைக்கு சில ஆணிற்கு மட்டுமே தந்தம்

வளரும். மேலும் சில வைரம் பாயாது வளருமாம். பெண்களுக்குக் கிடையா.]]

(2) கமுகு:

— "முத்துப்போல் பூத்து முகிழில் கிளிவண்ணம் நெய்த்(து) ஓர் குருதி நிறம் கொண்டு வித்துதிர்த்து";

பாக்கு மரம் இதன் பூ வெண்மையாகப் பூத்து, பின் பச்சைநிற உருண்டை காய்களாகத் திரண்டு, பின் அவையே சிவந்த நிறத்தை அடைவது பேசப்படுகின்றது.

[[வேறு:

பாக்கு மரம் பூக்கும் காலங்களில் அதன் தோப்பிலிருந்து நல்ல மணம் வீசுமாம். இவ்வாறாக ஒரு மங்களூர் வாழ் பெண்மணி ஒருமுறை எனது கோவை இரயில் பயணம் ஒன்றில் காட்டியதும் உண்டு.]]

(3) நெருப்பு:

— "ஊராடு நீரில் காக்கை";

நாளும் முத்தீ பேணுதல் தம் தொழிலாகக் கொண்டவர் பார்ப்பனர். தீயுடனேயே நீங்கா தொடர்புடையவராதலால் அவர்களின் நெருப்பு பிணைப்பினால் அவர் பெயரே நெருப்பினுக்கும் ஆகு பெயராகியது.

அதாவது,

பார்ப்பான் என்றால் தீ = நெருப்பு,

நிறம் செய்யான் = சிவந்த நிறமுடையவன்,

நீரும் நெருப்பும் எதிரெதிரானது. ஒன்று இருக்குமிடம் மற்றொன்று கூடாது. ஒருவேளை இரண்டும் கலந்தால், அதாவது நெருப்பின் மேல் நீர் விழுந்தாலோ அல்லது நீரில் நெருப்பு விழுந்தாலோ, நெருப்பு காக்கையாகிவிடுமாம். அதாவது, ஊராடு நீரில் காக்கை என்பது, சிவப்பு நிறம் மாறி கரிய நிறம் பெற்றுவிடும் என்று காட்டுகின்றது.

>[[வேறு:
இந்த நூற்பா மறைமுகமாகப் பார்ப்பனர் பொதுவாக மற்ற இனத்தினருடன் கலக்கக்கூடாது. அப்படிக் கலந்தால் அவர்கள் கருநிறமுடையவராகி தன் பண்பை முற்றிலும் இழந்துவிடுவார் எனக்காட்ட இயற்றப்பட்டிருக்க வேண்டும்]]

(4) யானை:



– "குடத்தலையர் செவ்வாயில் கொம்(பு) எழுந்தார் கையின் அடக்கிய மூக்கினார் தாம்";

யானைகளுக்கு நடு உச்சி தலையின் இடையில் கிண்ணம்போல் இரு குழி ஒன்று உண்டு. தெருக்களில் வரும் யானைகளை விளையாட்டாகச் சிறுவர்களை முதுகில் ஏற்றி அவரிடம் பெறும் சிறு காசுகளை யானை தனது துதிக்கையால் பெற்று தர, பின் பாகன் பெற்று இந்தக் கிண்ணம் (குடம்) போன்ற குழியில்தான் போட்டுவைப்பதை நாளும் காணலாம்.

ஆக, குழி உடையத் தலையை பெற்றது யானை என்பதை 'குடத்தலையன்' என்பது குறிக்கிறது. தனது சிவந்த வாயிலிருந்து எழும் இரு தந்தங்களை உடையது என்பதை 'செவ்வாயில் கொம்பெழுந்தான்' என்பது குறிக்கிறது. யானை அதன் மிகத் திறனுடன் பயன்கொள்ளவல்ல துகிக்கையானால் பல்வேறு பணிகளை செய்து கொள்ளும் திறனுடையது என்பதை யாவரும் அறிவர். அதன் முகத்தின் நுனியில்தான் அதன் மூக்கு உள்ளது. அதன் வழிதான் உயிர் மூச்சுவிடுகின்றது. அதனால் கையில் அடக்கிய மூக்கினார் என்றது இந்தப் புதிர்.

தொடர்பு: திரு. நூ.த.லோக சுந்தரம் (selvindls61@gmail.com)

18. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு

– ஆமோஸ் நவீன் இளையராஜா

திருநெல்வேலி கிராமப்புற விவசாயிகள் பேச்சு வழக்கில் வரும் சொற்கள்:

1. அடிதண்டா - பழையகால மரக்கதவுகளை உட்பக்கமாக பூட்டப் பயன்படும் இரும்பாலான தாழ்ப்பாள்
2. ஆட்டு உரல் - தானியங்களை இடிக்கப் பயன்படுத்தும் கல்லினால் ஆன பொருள்
3. இரைப்பெட்டி - கிணற்றிலிருந்து தண்ணீர் இரைக்கப் பயன்படும் வாளி
4. ஈருவலி - பெண்கள் தலைமுடியில் இருக்கும் ஈரு,பேன் போன்றவற்றை எடுக்கப் பயன்படுத்தும் மரத்தாலான பொருள்
5. உரக்குழி,எருக்கிடங்கு - ஆடு,மாடுகளின் கழிவுகளை உரமாகத் தேக்கிவைக்கும் குழி,பள்ளம் ஆகும்
6. உரப்பெட்டி - உரலில் தானியங்களை அரைக்கும்போது அவை உரலை விட்டுச் சிந்தாமல் இருக்க உரலை மூடும் மூடி
7. உலைமூடி - சோற்றுப் பானையை மூடப்பயன்படும் மரக்குச்சியால் ஆன முடி
8. ஊதி(சீட்டி) - சீழ்கை, விசில்
9. எருதுப்பறை - எருதுகளைக் கட்டி வைக்கும் அறை, தொழுவம்
10. எறப்பு - ஓலைக் குடிசைகளில் மேற் கூரையில் பொருட்கள் வைக்கக் குழிபோல் அமைத்த இடம்
11. ஏர்மாடு - வயல்வெளியை உழுவதற்குப் பயன்படும் மாடு

12. ஓலைப்பாய் - பனையோலையில் செய்யப்பட்ட பாய்
13. கங்காணி - வயல் வேலை செய்யும் பணியாளர்களைக் கண்காணிப்பவர்
14. கருக்குமட்டை - பனை ஓலைகளைத் தாங்கி நிற்கும் தண்டுப்பகுதி
15. கழுந்து - உரலில் தானியங்கள் இடிக்கப் பயன்படுத்தும் சிறிய அளவிலான உலக்கை
16. காவோலை - பனைமரத்தின் காய்ந்த ஓலை
17. கிண்ணிப்பெட்டி - பனை ஓலையால் செய்யப்பட்ட சிறிய கிண்ணம் போன்றது
18. குடைவண்டி - மாடுகள் மிரண்டு மாட்டுவண்டி குடைசாய்தல்
19. கூறுவடி - அறுவடை செய்யும் ஆட்களைத் தலைமையேற்று நடத்துபவர்
20. கெண்டி - சிறு குழந்தைகள் பால்,நீர் அருந்தப் பயன்படுத்துவது
21. கைவண்டி - மனிதர்கள் இழுக்கும் சுமை வண்டி
22. கொங்கணி - விவசாயிகள் மழையில் நனையாமல் இருக்கத் தலையில் போட்டுக் கொள்வது
23. கொத்து - நெல் அறுவடை வேலை செய்தவர்களுக்கு சம்பளமாகக் கொடுக்கப்படும் நெல்மணிகள்
24. கோஸ்பெட்டி - வில் வண்டி ஓட்டுநர் அமரும் இடம்
25. சக்கடா வண்டி - பொருட்களைச் சுமக்க பயன்படும் மாட்டு வண்டி
26. சரப்பள்ளி - கழுத்தில் அணியும் அணிகலன்(நெக்லஸ்)
27. சருவச்சட்டி - நீர் பிடித்து வைக்கப் பயன்படும் பாத்திரம்
28. சால் ஓட்டுவது - உழுது நீர் பாய்ச்சிய வயல் வெளியை சமன்படுத்துவது
29. சிப்பல் தட்டு - சோற்றை வடிக்கச் சிறிய ஓட்டைகள் அடங்கிய மூடி
30. சில்லாட்டை - பனைமர பாளையின் மேல் சுற்றியிருக்கும் தண்டுப்பகுதி
31. சினுக்குவாலி - பெண்கள் தலை முடியில் சிக்கெடுப்பதற்கு பயன்படுத்தும் கம்பி
32. சும்மாடு - தலையில் பாரம் சுமப்பவர்கள் துணியை சுற்றி தலை மேல் வைப்பதைக் குறிக்கும்
33. சுளவு - தானியங்களைப் புடைக்க பனையோலையால் செய்யப்பட்ட பொருள்
34. செரட்டாப்பை/செரட்டகப்பை - தேங்காய் முடியால் செய்யப்பட்ட கரண்டி
35. தலைப்பாக்கட்டு - துண்டு போன்ற துணியைத் தலைப்பாகையாக கட்டுவது
36. தார்க்கம்பு - மாட்டை அடிக்கப் பயன்படுத்தும் சாட்டைக் கம்பு
37. தார்பாய்ச்சி கட்டுவது - விவசாய வேலை செய்யும்போது வேட்டி அவிழ்ந்துவிடாமல் இருக்கக் கால்களுக்கு இடையே கொண்டு போய் முதுகுப்பக்கம் சொருகிக் கொள்வது

38. திருவல் - தானியங்களை திரிக்கப் பயன்படும் கல்லால் ஆன பொருள்
39. தீயிடுக்கி - விறகு அடுப்பில் விறகு எரியும்போது அதை ஒழுங்கு படுத்த பயன்படும் பொருள்
40. துவையல் - கெட்டி சட்னி
41. தேங்காய்ச்சில்லு- பாதி தேங்காயில் பாதியாக வெட்டிய தேங்காய் பத்தை
42. தோண்டி - சிறு குழந்தைகள் நீர் பிடிக்கப் பயன்படுத்தும் சிறிய குடங்கள்
43. நார்க்கட்டில் - பனைஓலை மட்டையை உரித்து எடுக்கும் நாரில் இருந்து செய்யப்படும் கட்டில்
44. நார்ப்பெட்டி- பனைநாரில் செய்த சிறிய பெட்டி
45. நெத்து - உளுந்து அறுவடைக்குத் தயாராக இருப்பதைக் குறிப்பது
46. நொங்கு - நுங்கு
47. நோக்கா - வண்டியுடன் மாடுகளை இணைக்கும் தடித்த மரக்கட்டை
48. பப்பாங்கி - வாகனங்களின் ஒலிப்பான்(ஏர் ஹார்ன்)
49. பயித்தங்கா - உளுந்து செடியில் உளுந்து காயாக இருப்பதைக் குறிப்பது
50. பன்னருவா - நெற்கதிரை அறுவடை செய்யப் பயன்படும் அரிவாள்
51. பாம்படம் - வயோதிக பெண்களின் காதணிகள்
52. பாளையருவா - பனைமரத்தின் பாளையை சீவப் பயன்படுத்தும் அரிவாள்
53. பிரிமனை - சாதம்,குழம்பு செய்த பாத்திரங்கள் தரையில் விழாமல் இருக்க அடியில் வைக்கப்படும் பொருள்
54. பைதா வண்டி- மாட்டு வண்டிகளில் மரச்சக்கரங்களுக்கு பதிலாக லாரி டயர்கள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கும்
55. பைனி - பதநீர்
56. பொட்டணம் - பொட்டலம், பார்சல்
57. பொட்டிக்கடை - சிறு கடைகள்
58. பொறவாசல் - வீட்டின் பின்புற வாசல்
59. மம்பட்டி - மண்வெட்டி
60. மறுகால் பாயுது - குளத்திலுள்ள நீர் கால்வாய்க்கும் போவதைக் குறிப்பது
61. முளவாட்டி - வீடுகளில் சமையல் பொருட்களை வைக்கப் பயன்படுத்தும் பெட்டி
62. மூக்கனாங் கயிறு - மாடுகளின் மூக்கில் ஊணைத்து கட்டப்பட்டிருக்கும் கயிறு சரடு என்றும் கூறுவர்
63. லோட்டா - தண்ணீர்,காபி போன்ற பானங்கள் அருந்தப் பயன்படும் டம்ளர்
64. வட்டல் - சாப்பிடப் பயன்படும் தட்டு
65. வண்டிப் பைதா - வண்டி சக்கரங்கள்

66. வண்ணான் தாழி - சலவைத் தொழிலாளிகள் துணிகளை நனைத்து வைக்கும் மண்பாண்டம்

67. வயக்காடு - வயல் வெளியைக் குறிப்பது

68. வில்வண்டி - பயணம் செய்ய பயன்படும் மாட்டுவண்டி

69. வெங்கல உருளி - சமையலுக்குப் பயன்படுத்தும் வெண்கலத்தால் ஆன பாத்திரம்

70. வெஞ்சனம் - குழம்பு

தொடர்பு: நுண்ணறிவாளன் ஆமோஸ் நவீன் இளையராஜா

(https://www.facebook.com/amossr2)

19. வட்டார வழக்கு: வேலூர்—திருவண்ணாமலை பேச்சு வழக்கு

— சுரேஷ்குமார்

வேலூர் /திருவண்ணாமலை பேச்சு வழக்கில் வரும் சொற்கள்:

பல்லவர் / சோழர் / பாணர் /சம்புவராயர் / ஒய்சாளர் / விஜயநகர அரசு /சுல்தான்கள் /மராட்டிய அரசு / நவாப் எனப் பல்வேறு அரசாட்சிகளின் விளைவும் ஆந்திர /கர்நாடக எல்லையில் இருப்பதாலும் வட்டார தமிழ் கலவையாகவே உள்ளது.

1. அண்டை வெட்டுதல் - வரப்பின் ஓரம் வெட்டுதல்
2. அருவாமணை - அரிவாள்மணை
3. அறபார்த்தால் - அறுவடை
4. ஆச்சா - முடிந்ததா
5. ஆய்ப்ப - அகப்பை, கரண்டி
6. உரை - தானியங்களைச் சேமிக்கும் பெட்டி
7. கடை மடுக்குதல் - ஆடுகளை இரவில் வயலில் தங்க வைத்து அவற்றின் கழிவுகளை உரமாக்குதல்
8. கருக்கல் - கார்வானம்
9. கருக்கு மட்டை - பனை மட்டை
10. கலக்காய் - வேர்க்கடலை
11. கல் சட்டி - பருப்பு கடைய தேவையான சட்டி
12. கல்லோட்டு - களைவெட்டி
13. கழிநாட்டு தண்ணீர் - கழுநீர், மாட்டுக்கு வைக்கும் நீர் (சமையல் கழிவு நீர்)
14. குடு கட்டை - பனம் காய் கூடு
15. குட்டை - துண்டு
16. கேவுரு - கேழ்வரகு
17. சம்சாரி - இல்லான்
18. சீதளம் - ஜல தோஷம்
19. தொறடு - முறுக்கைக் காய் அறுக்கும் கொக்கி
20. நீச்ச தண்ணீர் - அரிசி வடித்த நீர்
21. நோம்புதல் - கேழ்வரகில் இருந்து கல் எடுத்தல்

22. பரனை - பரண்
23. பிரமனை - பானை அடியில் விழாமல் வைக்கப் படும் ஓர் வளையம்
24. பிரி விடுதல் - வைக்கோல் கொண்டு கயிறு போல் திரித்தல்
25. புடைத்தல் - அரிசி பருப்பில் கல் நீக்குதல்
26. பொம்னாட்டி- இல்லாள்
27. மக்கிளி - மக்கு (மற்கலி கோசலர் அழிப்பினால் வந்தது)
28. மம்டி - மண்வெட்டி
29. மரக்காய் - மரக்கால், நெல் அளவிடும் அளவுகோல்
30. மாங்காய் பெத்தை - மாங்காய் துண்டு
31. மாவு ருப்புதல் - இட்லி மாவு அரைத்தல்
32. மானாவாரி - வானம் வாரி (மழை நீர் மட்டும்)
33. முண்டகலப்பை - முனை மங்கிய கலப்பை (பொதுவாக அறிவிலி என திட்ட)
34. வெக்கி - வைக்கோல்
35. வேய்த்தல் - நெல் வேகவைத்தல்
36. ஜாட்டி - சாட்டை
37. ஜோபி - சட்டைப்பை

தொடர்பு: சுரேஷ்குமார் (jaisureshkumar@gmail.com)

20. சாயர்புரத்தில் வாழும் நெசவுக்கலை

– முனைவர். சுபாஷிணி

நெசவுத்தொழில் தமிழர் பண்பாட்டில் முக்கிய அங்கம் வகிக்கும் கலை. இன்றோ பல்வேறு காரணங்களினால் நெசவுத்தொழில் புகழ் மங்கி வருகின்றது. இளம் தலைமுறையினர் வெவ்வேறு துறைகளில் தங்கள் ஆர்வத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டமையால் கைத்தறி போடுதல் என்னும் கலை இன்று படிப்படியாகக் குறைந்து மறைந்து போவது நிகழ்கின்றது.

சாயர்புரத்தில் நெசவுத்தொழில் பற்றிய ஒரு பதிவு செய்வதற்குத் தூத்துக்குடி சென்றிருந்த போது புதிய அனுபவங்கள் எனக்குக் கிட்டின.

சாயர்புரத்தில் உள்ள ஓரிரு நெசவுத் தொழிற்சாலைகள் மட்டும் சில தறி இயந்திரங்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஆண்களும் பெண்களுமாகப் பாகுபாடின்றி இத்தொழிலைச்

செய்கின்றனர். கையால் போடும் தறி மட்டுமன்றி இன்று இயந்திரத்துடன் இயங்கும் நெசவு இயந்திரங்களும் வந்து விட்டன. இவை ஒரு கைத்தறி சேலையோ, கைலியோ, துண்டோ தயாரிக்கப்படும் நேரத்தை விரைவாக்குகின்றன.

சாயர்புரத்தின் ஒவ்வொரு வீடுகளிலும் முன்னர் ஒரு நெசவுத்தறி இருந்திருக்கின்றது. ஆனால் இன்றோ ஒரு சில வீடுகளில் அவை செயல்படுத்தப்படாத சூழல் இருப்பதால் குழியை மூடி நெசவு இயந்திரத்தை எடுத்து விட்டனர். ஒரு சில இல்லங்களில் இன்றும் நெசவுத் தறிகள் இருக்கின்றன.

கிராமத்திற்குள் நுழையும் முன் எங்குப் பார்த்தாலும் பளிச்சென்ற செம்மண் திடல்கள். பின்னர் பசுமையான மரங்கள். கிராமத்திற்குள் நுழைந்ததும் சின்ன சின்ன வீடுகள். தூய்மையான தெருக்கள். ஆங்காங்கே சின்னச் சின்ன தேவாலயங்கள். வித்தியாசமான காட்சியாக இது எனக்குத் தோன்றியது.

நான் தங்குவதற்காக அந்தக் கிராமத்தில் முக்கியமானவர் பெரியவர் திரு.ஆ.ந வாய்மை அவர்களின் இல்லத்தை ஏற்பாடு செய்திருந்தனர். பதிவுகள் முடித்து

அங்குச் சென்று சேர்ந்தவுடன் அப்பெரியவருடனும் அவரது மனைவியுடனும் அறிமுகம் செய்து கொண்டேன். அவர்கள் வீட்டின் மாடிப்பகுதியை முழுமையாக நூலகமாக மாற்றியுள்ளனர். கணினிகளை வைத்து கிராமத்துக் குழந்தைகள் வந்து பார்த்து படித்துச் செல்ல இலவசமாக அனுமதிக்கின்றனர். அன்பு நிறைந்த தம்பதியர்.

மறு நாள் காலையில் அவரது தமிழ் ஆய்வுகள் பற்றியும் அக்கிராமத்துப் பிரச்சனைகள் பற்றியும் பல விசயங்கள் பேசினோம். மேலும் பல நண்பர்களும் அங்கு வந்து கூடினர். நெசவுத்தொழிலை வளர்ப்பதற்காகவும் கைத்தறி பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் முயற்சிகள் தேவைப்படுகின்றன என இவர்கள் என்னிடம் தகவல் பகிர்ந்து கொண்டனர்.



பெரியவர் திரு.ஆ.ந வாய்மை அவர்கள் நெசவுத்தொழிலை அறிமுகம் செய்யும் ஒரு கூடம் போன்ற ஒரு கட்டிடம் ஒன்றை தன் சொந்தச் செலவில்

கட்டியுள்ளார். அதில் பயிற்சி வகுப்புக்கள், தொழில் முனைவர்களுக்கான ஆலோசனைகள் போன்றவற்றை நடத்தத் திட்டம் வைத்துள்ளார்.

சாயர்புரத்தில் சாலைகளில் நான் சந்தித்த பெண்கள் என்னிடம் அன்புடன் பேசினர். நான் சென்ற நாள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முதல் நாள் என்பதால் அன்று மாலை அங்கிருந்த அனைத்துத் தேவாலயங்களிலும் விளக்குகள் பொருத்தப்பட்டு பாடல்கள், ஜெபங்கள் சொற்பொழிவுகள் என ஒலிபெருக்கியில் கேட்டுக் கொண்டே இருந்தது.

இந்தப் பகுதியில் பாதிரியார் ஜி.யூ போப் அவர்கள் உருவாக்கிய பள்ளிக்கூடம் ஒன்றும் உள்ளது. அதில் கல்வி கற்று வாழ்வில் சிறந்த முன்னேற்றம் கண்டவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எனத் தயங்காமல் கூறலாம்.

சாயர்புரத்தின் நெசவுத்தொழில் மட்டுமல்ல - தமிழகத்தின் பல இடங்களில் நடைபெறுகின்ற நெசவுத்தொழில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருப்பதையும் இத்தொழிலை விட்டு மக்கள் மாற்றுத் தொழிலுக்குச் செல்வதையும் காண்கின்றோம்.

இங்குத் தயாரிக்கப்படும் கைத்தறி சேலைகளைப் பார்த்த போது அவை மிக அழகாக இருப்பதை என்னால் மறுக்கமுடியவில்லை. ஆனால் இப்போதெல்லாம் பெண்கள் கைத்தறியை விரும்புவதில்லை என்பதைக் கேட்கும் போது வருத்தம் மேலிடுகின்றது. இத்தொழிலை வளர்க்க வேண்டுமென்றால் நாம் கைத்தறி ஆடைகளை வாங்குவதை நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவரை கைத்தறிகளைப் பற்றி யோசிக்காதவர்கள் இனிமேல் அவற்றை வாங்கி அணிய முயற்சிக்கலாமே!

தொடர்பு: முனைவர். சுபாஷிணி (ksubashini@gmail.com)

21. அந்தியூரன் பழமைபேசி நினைவில் ஊரகவியல்

– பழமைபேசி

வயலும் வாழ்வும்

உரம்போல உடம்பிருக்க
உலக்கைப்போல கையிருக்க
களத்துமேட்டு காவல்விட்டு
கமலையேற்றம் ஏறும்போது
கடைக்கண்ணு பார்வையாலே
சுண்டிபோட்டு இழுத்தாரே
சண்டிமாடு அடக்கிவைக்கும்
செவளைக்காளை சின்னுமச்சான்!!





அந்தியூரன் பழமைபேசி நினைவில்...
அள்ளைப்படல்
முளைக்குச்சி
ஏர்க்கால்ச்சட்டம்
பூட்டாங்குச்சி
(காண்டி)
கொலுப்பலகை
பூட்டாங்கயிறு
திகிரி
குடம்
அச்சு
இருசு
கந்து
பழமைபேசி
சவாரித்தப்பை
பார்ச்சட்டம்
கடையாணி
நுகத்தடி
ஆரக்கால்
பட்டா
பார்ப்பிணையல்
மூக்கேர்
வட்டை
ஏர்க்கால்


அந்தியூரன் பழமைபேசி நினைவில்...
கொம்புக்கயிறு
கழுத்துச்சூடி
மூக்கணாங்கயிறு
வாய்க்கூடை (சிக்கு)
சுண்டு தும்பு
தாம்புவளை (தும்புவளையம்)
பழமைபேசி
மணிக்கயிறு
முகரை
கைக்கயிறு
குஞ்சம்
சங்கு
தாம்புக்கயிறு
அணைகயிறு
அண்ணாங்கால்
தளையல் கயிறு

உருளை
நிலைச்சட்டம்
கப்பிக்கோல்
கமலைத்தடம்
கவற்றுமடி
அற்றம்,
தட எல்லை
சால்ப்பூட்டு
ஊசிக்கால்
பட்டரை சட்சம்
வால்க் கயிறு
வடம்
கமலைக்கல்
கூனை, கமலைச்சால்
வால்ப்பை
வாலுருளி
கமலையேற்றம்
பழமைபேசி


கையடுப்பு
கண்ணடுப்பு
துருவலகு
நான்கறைப் பெட்டி
துருவுக்குற்று
துருவுபொறி
நன்னிக்கல்
போட்டடுப்பு
துருவாமணை
சாந்(த்)தம்மி

22. பெயரில் என்ன இருக்கிறது?

– தேமொழி

பெயரில் என்ன இருக்கிறது? ரோஜாவிற்கு என்ன பெயர் சூட்டினாலும் அது நறுமணம் வீசத்தான் போகிறது என்று ஷேக்ஸ்பியரின் ரோமியோ அண்ட ஜூலியட் பாடலுக்கான விளக்கமல்ல நாம் பார்க்கப்போவது. 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரை 'தமிழ்நாடு' என மாற்றவேண்டும் என இந்தியப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா எதிர்கொண்ட கேள்விகளையும் அதற்கு அவர் கொடுத்த விளக்கங்களையும் ஒரு மீள்பார்வை செய்யும் பொழுது நமக்கு இந்த வரிகள் நினைவில் நிழலாடும்.

தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தமிழர் குரல் கொடுப்பது ஜல்லிக்கட்டுக்காக நடைபெற்ற இந்நாள் மெரீனா கடற்கரைப் போராட்டம் வரையிலும் தொடர்ந்து நடந்து வருகிறது. சென்ற நூற்றாண்டில் தமிழுக்காகக் குரல் கொடுத்ததுடன் உயிரும் கொடுத்தவர்களைக் கண்டது தமிழகம். அவர்களில் ஒருவர் 'கண்டன் சங்கரலிங்கனார்'. விருதுநகரைச் சார்ந்தவரும், நாட்டுப்பற்று மிக்கவரானவருமான சங்கரலிங்கனார் காங்கிரஸ் கட்சியின் தீவிர தொண்டராக விளங்கியவர். சென்னை மாகாணத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காகப் போராட்டம் நடத்தியது சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானத்தின் 'தமிழரசுக் கழகம்'. இதுவே 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றக் கோரிக்கையின் முதல் எழுச்சியொலி. அந்நிகழ்ச்சி கொடுத்த தாக்கத்தில் "சென்னை ராஜ்ஜியம் என்பதை மாற்றி ‘தமிழ்நாடு’ எனப் பெயரிடுதல் வேண்டும்" என்ற கோரிக்கையையும் அதனுடன் மேலும் 11 கோரிக்கைகளையும் முன் வைத்து 27.07.1956 ல் விருதுநகர் தேசபந்து திடலில் உண்ணாவிரதத்தைத் துவக்கினார் சங்கரலிங்கனார். இவர் கோரிக்கை குறித்து சட்டமன்ற விவாதங்களில் பலமுறை விவாதிக்கப்பட்டாலும் ஆக்கப்பூர்வமாக முடிவு எதுவும் மாநில அரசால் எடுக்கப்படவில்லை. சங்கரலிங்கனார் முன்வைக்கும் கோரிக்கைகளில்

பத்து கோரிக்கைகள் மத்திய அரசின் அதிகாரத்தில் வருகிறது என்று முதலமைச்சர் காமராஜர் குறிப்பிட்டார்.

முதன்முதலில் தேர்தலில் வெற்றி பெற்று சட்ட மன்ற உறுப்பினராகப் பதவி ஏற்றிருந்த திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் அண்ணாதுரை, காங்கிரசின் பாராமுக நடவடிக்கையால் நம்பிக்கை இழந்திருந்த சங்கரலிங்கனாரைச் சந்தித்தார். அப்பொழுது அவர் தனது கோரிக்கைகளைக் குறிப்பாக தமிழ்நாடு என்ற பெயர்மாற்றக் கோரிக்கையை அண்ணாவாவது நிறைவேற்ற வேண்டும் என்ற தனது விருப்பத்தை அண்ணாதுரையிடம் வைத்தார். தலைவர்கள் பலர் சங்கரலிங்கனாரது உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு வற்புறுத்தியும் கொள்கைப்பிடிப்பின் காரணமாக மறுத்துவிட்டார் சங்கரலிங்கனார். உடல் நலிவுற்ற அவர் தனது இறுதிச் சடங்குகளை செய்யும் உரிமையை பொதுவுடமைக் கட்சித் தோழர்களுக்கு அளித்துவிட்டு, 76 நாட்கள் தொடர் உண்ணாவிரதத்தின் விளைவாக உடல்நலிவுற்று 13.10.1956 அன்று உயிர் துறந்தார். அவர் மறைந்த 42 நாட்கள் கழித்து 24.11.1956 அன்று மாநில சட்டமன்றத்தில் சென்னை மாகாணம் என்பதை மாற்றி ‘தமிழ்நாடு’ எனப் பெயரிட வேண்டும் என்ற தீர்மானம் வைக்கப்பட்டது. 'மெட்ராஸ்' என்பதே வழக்கத்தில் அனைவரும் பரவலாக அறிந்துள்ள பெயர், இது போன்ற பெயர் மாற்றம் குறித்து நாட்டின் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என அரசு சார்பில் கூறினார் அன்றைய தொழில்துறை அமைச்சர் திரு. ஆர்.வெங்கடராமன். அதைத் தொடர்ந்து மாநில அரசு பெயர் மாற்றத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்தது.

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் தலைமையில் 25.12.1960 அன்று கோகலே மண்டபத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றச் சிறப்பு மாநாடு நடைபெற்று தமிழகத் தலைவர்களின் ஆதரவைப் பெற்றது. மாணவர்களும் ஆர்வலர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்று வந்தனர். 1961 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம், "போராட்டத்தைக் கைவிடுங்கள். இந்தப் பெயர் மாற்ற விஷயம் பற்றி சென்னை சர்க்காரின் நிலையை 24-ஆந் தேதிக்குப் பிறகு சட்டசபையில் விளக்குகிறேன். அந்த முடிவு உங்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் இருக்கலாம். அதோடு, பிரிட்டிஷ் ராணியார் சென்னைக்கு வருகை தரும் சமயத்தில் இங்குப் போராட்டங்கள் நடப்பது நம் பண்புக்கு அழகல்ல. போராட்டத்தை அடியோடு கைவிடாவிட்டாலும், ராணியார் விஜயம் செய்யும் தினங்களிலாவது அதை நிறுத்தி வைக்கவும்" என்று தமிழரசுக் கழகத்தின்

தலைவர் திரு. ம. பொ. சி. யிடம் கேட்டுக் கொண்டார். அவரும் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு ஒத்துழைத்தார்.

"சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும்" என்று திரு. சின்னத்துரை 24.2.1961 அன்று கொண்டுவந்த தீர்மானத்தின் மீது சட்டசபையில் நடந்த விவாதத்திற்குப் பதில் அளித்தார் நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம், "இனி தமிழில் குறிப்பிடும் போதெல்லாம் 'சென்னை ராஜ்ஜியம்' 'தமிழ்நாடு' என்றே அழைக்கப்படும். ராஜ்ஜியத்திற்குள் நடைபெறும் அரசாங்கக் கடிதப் போக்குவரத்துகள் அனைத்திலும் இனி 'தமிழ்நாடு' என்ற பெயரே குறிக்கப்படும். ஆனால் ராஜ்யத்திற்கு வெளியே எழுதும்பொழுது ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே குறிப்பிடுவோம். அரசியல் சட்டத்தில் ஆங்கிலத்தில், 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயர்தான் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்ற அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டும். அதை இப்போது மாற்ற வேண்டிய அவசியமில்லை" என்று மாநில அரசின் முடிவை அறிவித்தார். இதனைச் செயலாக்கும் விதமாக மறுநாளே நிதிநிலை அறிக்கையை வெளியிடும்பொழுது சென்னை ராஜ்ஜியம் எனக் குறிப்பிடாது, "தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை" என வெளியிட்டார். தமிழக மக்களும் தற்காலிகமாக சமாதானமடைந்தனர்.

மறு ஆண்டு (26.02.1962) நடந்த தேர்தலில் அண்ணாதுரை தனது காஞ்சீபுரம் தொகுதியிலேயே தோல்வியைத் தழுவினார். சட்டமன்றத்திற்குத் தெரிவாகாமல் விட்டாலும் பாராளுமன்ற மேலவை உறுப்பினராகும் வாய்ப்பைப் பெற்றார். பாராளுமன்றத்தில் இந்திய சட்டவரைப்படி இனி 'மெட்ராஸ் ஸ்டேட்' என அழைக்காமல் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று 1963 ஆம் ஆண்டு மே மாதம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட விவாதம் தொடர்பாக அவர் ஆற்றிய உரை வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஓர் உரை. அதில் தனது தமிழ்ப்பற்றையும், அறிவுக் கூர்மையையும், வாதத்திறமையையும் முற்றிலும் வெளிப்படுத்தும் விதமாக அவர் ஆங்கிலத்தில் வைத்தக் கருத்துகள் வியக்க வைப்பது. ஒரு வழக்கறிஞரின் வாதத் திறமையை ஒத்திருந்தது அந்த உரை.

இம்மாற்றம் சென்னை மாகாணத்தில் வாழும் தெலுங்கு, மலையாளம், கன்னட மக்களின் விருப்பத்திற்கு மாறானது என்பது பாராளுமன்ற விவாதத்தில் குறிப்பிடப்படும் கருத்தாக இருந்தது. இது பொருளற்றது, மாநில அளவில் தமிழில் தகவல் பரிமாற்றம் செய்பவற்றில் தமிழ்நாடு என்று 24.2.1961

அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து நிதியறிக்கையும் தமிழ்நாட்டின் நிதிநிலையறிக்கை என்றே வெளியிடப்பட்டாகிவிட்டது.

பரிபாடல், பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இரண்டாயிரம் ஆண்டு காலத்திய பழந்தமிழ் இலக்கியங்களிலேயே தமிழர் வாழும் பகுதி தமிழர்களின் நாடு என்றுதான் குறிப்பிடப்படுகிறது. மாநிலத்தின் தலைநகர் பெயரிலேயே மாநிலத்தின் பெயர் அமைய வேண்டும் என்றால் இப்பொழுது அகமதாபாத் குஜராத்தின் தலைநகராகவும், சண்டிகார் பஞ்சாபின் தலைநகராகவும் இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தலைநகர் பெயரில் மாநிலம் இருக்க வேண்டும் என்றால் கேரளா மாநிலம் திருவனந்தபுரம் எனவும், ஆந்திரா என்பது ஹைதராபாத் எனவும், பஞ்சாப் என்பது சண்டிகார் எனவும், குஜராத் மாநிலத்தை அகமதாபாத் மாற்றம் செய்யத் தேவை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினார். அவரது பாராளுமன்ற உரையின் மிக முக்கியமான கருத்தைக் கவரும் வாதம் பின்வருவது.

எம்.என். லிங்கம் என்ற உறுப்பினர் (இவர் காங்கிரஸ் கட்சியின் கோயம்புத்தூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர்), "தமிழ்நாடு எனப் பெயர் மாற்றினால் நீங்கள் என்ன லாபம் அடைந்துவிடப்போகிறீர்கள்?" என்று கேட்டார். “எனக்கு என்ன லாபம் என்றா கேட்கிறீர்கள்? பாராளுமன்றத்திற்கு லோக்சபா என்றும், மக்களவைக்கு ராஜ்யசபா என்றும், குடியரசுத் தலைவருக்கு ராஷ்ட்ரபதி என்றும் பெயர் மாற்றம் செய்திருக்கிறீர்களே. இதனால் நீங்கள் கண்ட லாபம் என்ன? அதனால் மெட்ராஸ் ஸ்டேட் என்பதை தமிழ்நாடு என்ற மாற்றுவதால் உங்களுக்கு என்ன இழப்பு? பெயர் மாற்றம் என்னும் இந்தச் சிறு தொல்லையை, தங்களது தொன்மையான நிலத்தின் பெயர் மீட்கப்படுவதில் கோடிக்கணக்கான தமிழர் பெறப்போகும் மனமகிழ்ச்சி ஈடுகட்டாதா” என்ற எதிர்க்கேள்வி எழுப்பினார் அண்ணாதுரை.

இந்தியை ஆட்சிமொழியாகத் திணிக்கப் பலமுறை முயன்று தோல்வியுற்ற மத்திய அரசு 1965 குடியரசு தினம் முதல் இந்தி ஆட்சி மொழியாகும் என அறிவித்தது. வெகுண்டெழுந்தனர் தமிழக மக்கள். மாநில அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பல திமுக தலைவர்களை சிறையில் அடைத்தது. ஆனால் மாணவர்கள் (அன்றும்) போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்கள். இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராடிய அன்றைய மாணவர் எழுச்சி மக்களின் மனப்பான்மையில் தாம் தமிழர் என்ற எண்ணத்தை நன்கு வேரூன்றச் செய்தது. இன்றைய ஜல்லிக்கட்டு எழுச்சி போன்றே, அன்றும்

மதுரையில் துவங்கிய எழுச்சி, மாணவர்கள் காங்கிரசாரால் தாக்கப்பட்ட பின்னர் சூறாவளியாய் சுழன்றடித்து தமிழக மாணவர்களை வீறுகொண்டு எழச் செய்தது. சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் மாணவர் இராசேந்திரன் போராட்டத்தில் உயிரிழக்க, தொடர்ந்து வேகம் பெற்று பல தீக்குளிப்புகள், உயிரிழப்புகள், போராட்டங்கள், கைதுகள், சிறையடைப்புகள் என 18 நாட்கள் உள்நாட்டுப் போர் போன்ற ஒரு கொதிநிலையை எட்டி வெடித்துச் சிதறியது. பின்னர் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்கும் என்று முன்னர் பிரதமர் நேரு கொடுத்த வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்திய பின்னரே போராட்டம் ஓய்ந்தது. காமராஜர் திட்டம் என்பதை முன்மொழிந்து கட்சிப்பணியில் கவனம் செலுத்தி வந்தார் காமராஜர். அவருக்குப் பின் தலைமையேற்றவர்கள் தாக்குப்பிடிக்கமுடியாமல் திணறி, மாணவர் மீது ஏவிவிட்ட அடக்குமுறை தொடர்ந்து வந்த மாநிலத் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சிக்குச் சாவுமணி அடித்து சமாதியும் எழுப்பியது.

தமிழக வரலாற்றின் திருப்புமுனையான 1967 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் 133 தொகுதிகளில் அறுதிப்பெரும்பான்மை பெற்று, உதயசூரியனாய் உதித்தெழுந்த திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக ஆட்சியைக் கைப்பற்றியது. தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற அறிஞர் அண்ணா, அந்த சித்திரைத் திருநாளான 14.04.1967 அன்று "தமிழக அரசு தலைமைச் செயலகம்" என்ற பெயர்ப்பலகையை சென்னைக் கோட்டையின் முகப்பில் திறந்து வைத்தார். தொடர்ந்து, 18.07.1967 அன்று 'சென்னை மாநிலம் தமிழ்நாடு ஆகும்' என்ற அரசியல் தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் முன்மொழிந்தார் அறிஞர் அண்ணா. 'இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்த மாநிலத்தின் பெயரைத் தமிழ்நாடு என்ற மாற்றியமைக்க வேண்டும் என்று இந்தியப் பேரரசை உறுதியாக கேட்டுக் கொள்வதுடன் அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த அவை பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமன்றத் தலைவர் சி.பா.ஆதித்தனாரின் ஒப்புதலை அண்ணா பெற்ற பின்னர் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அண்ணாவின் குரலைத் தொடர்ந்து "தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க!" என மும்முறை முழங்கினர். "இத்தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது தமிழர்க்கு – தமிழர் வரலாற்றுக்கு – தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்காக உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனாருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவது போல் அவர் எண்ணம் ஈடேறிவிட்டது" என அறிவித்தார் முதல்வர் அண்ணாதுரை. பாராளுமன்றத்தில் சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதற்கான மசோதா பின்னர் (23.11.1968 அன்று) நிறைவேற்றப்பட்டது.

பெயர் மாற்றும் விழா 01.12.1968 அன்று 'கலைவாணர் அரங்கில்' கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்து உத்தரவிட்டு அது விழாவாக கொண்டாடப் பட்ட அன்று உடல்நலக் குறைவால் வாந்தியும் மயக்கமுமாகச் சோர்ந்திருந்தார் அண்ணா. மருத்துவர்கள் அந்த விழாவுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்க, கோபத்துடன், "என் தாய்நாட்டுக்கு பெயர் சூட்டும் இந்த நாளில் போகாமல் உயிருடன் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல்!" என்றார். கலைவாணர் அரங்கில் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று தமிழ்நாடெங்கும் தமிழ்நாடு பெயர் மாற்ற விழா கொண்டாடப்பட்டது.

அந்த நாள் தாம் தமிழரென்றும், தாம் வாழும் நாடு தமிழ்நாடு என்றும் பெருமிதத்துடன் தமிழர் உலகத்திற்கு அறிவித்த நாளாக வரலாற்றில் இடம் பெற்றது.

தகவல் கொடுத்து உதவிய கட்டுரைகள்:
1. அறிஞர் அண்ணாதுரையின் பாராளுமன்ற உரை. உதவி: திராவிட பேரவை
2. தினத்தந்தி-வரலாற்றுச் சுவடுகள், தினத்தந்தி, இரண்டாம் பதிப்பு, 2010
3. ஆனந்தவிகடன்-காலப்பெட்டகம்: 1926 முதல் 2000 வரை... , விகடன் பிரசுரம் - 574, மூன்றாம் பதிப்பு, 2011
4. அறிஞர் அண்ணாதுரை பிறந்தநாள் சிறப்பு பகிர்வு, விகடன், 16/09/2015
5. தியாகி சங்கரலிங்கனார், பி.தயாளன், 2013.

படம் உதவி: தி.மு.க. தளம்

தொடர்பு: **தேமொழி** (themozhi@yahoo.com)

23. கவிமணி ஒரு வரலாற்றாய்வாளர்

– து. சுந்தரம்

முன்னுரை:

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை ஒரு கவிஞராக அறியப்படுவதே நாம் பெரிதும் காணுகின்ற நிலை. ஆனால், அவர் சிறந்ததொரு வரலாற்று ஆராய்ச்சியாளராகவும், கல்வெட்டு ஆராய்ச்சியாளராகவும் விளங்கியுள்ளார் என்பது மிகுதியும் வெளிச்சத்துக்கு வரவில்லை என்றே கருதத்தோன்றுகிறது. பேராசிரியர் முனைவர் Y. சுப்பராயலு அவர்கள் கவிமணியைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"பொதுவாக, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையைக் கவிஞர் என்றுதான் தமிழுலகம் அறியும். வரலாறு தொடர்பான அவர் கட்டுரைகள் அவ்வளவாக அறியப்படவில்லை. இவர் தேர்ந்த கல்வெட்டாய்வாளராக இருந்தார். பல வரலாற்றுச் செய்திகளை ஆழமாக ஆராய்ந்து ஆங்கில நடையில் அவர் வெளிப்படுத்தியுள்ளார்."

அவரது வரலாறு/கல்வெட்டு ஆராய்ச்சிகள் பற்றிய ஒரு சிறிய பதிவு இங்கே.

கவிமணி மண்டபம் - தேரூர்

கவிமணி மண்டபம் அருகில் - அழகிய மணவாள விநாயகர் கோயில்

கோயிலின் மற்றொரு தோற்றம்

கவிமணியின் விநாயகர் வணக்கம்

மாணிக்கவாசகர் காலம்:
மாணிக்கவாசகரின் காலத்தை அவரது கூற்றிலிருந்தே அறியலாம்.

"மாணிக்கவாசகர் தமக்கு முன்பிருந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற தேவார ஆசிரியர் மூவரையும் முறையே குறிப்பிட்டுள்ளார் என்பது அறியப்படுகின்றதோடு, அவர் மூவருக்கும் பின்னிருந்தவர் என்பதும் தெளியப்படும்"
இதற்காக அவர் காட்டும் மேற்கோள்கள் வருமாறு:

அப்பர் பற்றிய மேற்கோள்

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதம் கொடுத்தி...
(திருவாசகம், திருச்சதகம், 89)

சூலை நோயைத் தீர்த்த (பணி தீர்த்தருளி) செய்தி, அடியார் முடியில் ஈசன் தம் பாதம் வைத்த செய்தி (அணியார் பாதம் கொடுத்தி) ஆகிய நிகழ்ச்சிகள் அப்பரையன்றி (பழைய அடியார்) வேறு யாரிடத்தும் நிகழவில்லை என்னும் கருத்தால் மாணிக்கவாசகர் காலத்தை நிறுவுகிறார்.

சம்பந்தர் பற்றிய மேற்கோள்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்
(திருவாசகம், திருவம்மானை, 8)

பண்ணார் பாடலுக்கு இறைவன் பொற்றாளம், முத்துச்சிவிகை போன்ற பரிசளித்தமை சம்பந்தரையே குறிப்பன என்கிறார்.

சுந்தரர் பற்றிய மேற்கோள்

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கருணையோடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்கும்
சோதியை................
(திருவாசகம், எண்ணப் பதிகம், 6)

'மெய்யடியார்', 'எதிர்ந்து' என்பவை, சுந்தரரின் திருமணக் காலத்தில் அந்தணர் கோலத்தில் தோன்றி ஆளோலை காட்டி எதிர்வாதம் பேசித் தடுத்தாட்கொண்ட மெய்யடியார் சுந்தரையன்றி வேறு யாரைக் குறிக்க முடியும் என்பது கவிமணியின் கேள்வி.

கல்வெட்டு ஆய்வு (சாசன ஆராய்ச்சி)-1:

திருவிதாங்கூர் தொல்லியல் தலைவராய் இருந்தவர் கோபிநாதராவ் அவர்கள். அவர், திருநந்திக்கரை செப்பேடு ஒன்றினைப் படித்துப் பொருள் கொள்ளும்போது ஓரிடத்தில் தவறியதாகக் கவிமணி எடுத்துக் கூறுகிறார். கவிமணியார் கோபிநாதராவ் அவர்களை 'திரு. கோபிநநாதராயர்' என்று குறிப்பிட்டு, இராயரவர்களை "ஒரு சிறந்த அறிஞர்; ஆராய்ச்சி வல்லுநர்; அரிய காரியங்களைச் சாதித்தவர். எனினும், அவர் தவறிய இடங்கள் இல்லாமலில்லை. அவற்றுள் ஒன்றைக் கீழே எடுத்துக்காட்டுகின்றேன்." என்று குறிப்பிடுகிறார்.

செப்பேட்டு வரிகளில் முதல் மூன்று வரிகள் கீழ் வருமாறு: (கோபிநாதராவ் அவர்கள் படித்தவாறு). மீதமுள்ள வரிகள் விரிவஞ்சிக் காட்டப்பெறவில்லை.

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமாதித்ய வரகுணர்க்கு யாண்டு எட்டு பங்குனித் திங்கள் திருநந்திக்கரை இருந்து அடிகள்.....................

2. ங்க நாடு கிழவன் மகள் ஆய்குலமாதேவியாயின முருகஞ்சேந்தியைத் திருவடி சார்த்த இவளுக்குக் குடியாக அட்டிக்குடுத்த பூ
3. ள்ளுவ நாட்டு மேற்கோட்டுப் பழங்கோப்பற்று செங்கணர் வந்தடி பல விதை பதினைங்கல வித்துப்பாடும் சாண்டன் தடி பலவிதை

கவிமணி அவர்கள் செப்பேட்டின் பொதுப்பொருள் இன்னதென்று எழுதுகிறார். அதாவது, 'தெங்க நாடு கிழவன் மகள் ஆய்குல மாதேவியாயின முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த அவளுக்கு விட்டுக்கொடுத்த 32 கலவித்துப்பாடு கொண்ட நிலத்தைப் பார்த்திப சேகர புரத்துப் பெருமக்கள் மேற்பார்வை செய்துகொள்வார்களாக' என்பது. "திருவடி சார்த்த" என்பதன் பொருளைச் சரியாக உணர்ந்தால்தான் முருகஞ் சேந்திக்கும் வரகுணதேவர்க்குமுள்ள தொடர்பும், சாசனத்தின் நோக்கமும் தெளிவுபடும் என்கிறார் கவிமணி. திரு. கோபிநாதராயரவர்கள் 'திருவடி சார்த்தல்' என்பதற்குத் 'திருமணம் செய்துகொடுத்தல்' எனக் கருத்து கொண்டு, 'வரகுணனுக்கு முருகஞ் சேந்தி மணமுடிக்கப்பட்டாள்' எனக் கூறுகின்றார். ஆனால், கவிமணி அவர்கள், வைணவர்கள் பயன்படுத்தும் 'திருவடி சேர்தல்' என்னும் தொடரைச் சுட்டி, 'திருமாலின் திருவடிகளில் சேர்தல் (இவ்வுலக வாழ்வை நீத்தல்)' எனப் பொருள்கொள்கிறார். எனவே, முருகஞ் சேந்தி என்பவள் மணவாழ்வை வெறுத்துக் கன்னிகையாகவே இருந்து கடவுள் வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முனைவதையே 'திருவடி சார்த்த' என்னும் தொடர் குறிக்கிறது என்றும், அரசன் அவ்வாறு அவளைக் கடவுளின் திருவடிகளில் காணிக்கை வைத்து அவளது நல்வாழ்வுக்காக (செலவுக்காக) நிலம் விட்டுக் கொடுத்திருக்கவேண்டும் என்று நிறுவுகிறார். தான் மணக்கப்போகும் பெண்ணுக்கு அரசன் நிலம் விட்டுக்கொடுக்கவேண்டிய தேவை என்ன என்பதாகக் கேள்வி எழுப்புகிறார்.

மேலும், செப்பேட்டு வரிகளின் இறுதியில் இரண்டு எழுத்துகள் சிதைந்து போயுள்ளதைச் சுட்டிக்காட்டி, சிதைந்த இரு எழுத்துகளைச் சரியாக ஊகம் செய்து நிரப்புகிறார். திருத்தப்பட்ட பாடம் வருமாறு;

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமாதித்ய வரகுணர்க்கு யாண்டு எட்டு பங்குனித் திங்கள் திருநந்திக்கரை இருந்து அடிகள்....................(ர்தெ)
2. ங்க நாடு கிழவன் மகள் ஆய்குலமாதேவியாயின முருகஞ்சேந்தியைத் திருவடி சார்த்த இவளுக்குக் குடியாக அட்டிக்குடுத்த பூ(மிவ)

3. ள்ளுவ நாட்டு மேற்கோட்டுப் பழங்கோப்பற்று செங்கணர் வந்தடி பல விதை பதினைங்கல வித்துப்பாடும் சாண்டன் தடி பலவிதை (நா)

முதலியார் ஓலை ஆவணங்கள்-ஆய்வு:

வேணாட்டுப்பகுதியில் வணிகத்தொழிலில் ஈடுபட்டிருந்த நகரத்தார், பின்னர் 16-ஆம் நூற்றாண்டில் நகரத்தார் நிலையிலிருந்து வேளாண் நாட்டார் தலைவர்களாய் உருவானார்கள். அப்போது அவர்களுக்கு "முதலியார்" என்னும் பட்டம் வழங்கப்பட்டிருக்கக் கூடும். (கட்டுரை ஆசிரியர் குறிப்பு: இடைக்காலத்தில் சோழர் ஆட்சியில் அரசு/நாட்டு நிருவாகத்தில் இருந்த தலைவர்கள் முதலி, பிள்ளை ஆகிய சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தனர் என்பது கல்வெட்டுகள் வாயிலாகத் தெரியவரும் வரலாற்றுச் செய்திகளாகும்.) நாஞ்சில் நாட்டின் வடக்கே அழகிய பாண்டிபுரத்தில் வாழ்ந்த முதலியார்கள் பாதுகாத்த 600 ஓலை ஆவணங்களில் வேணாட்டு அரசுடனான தொடர்பு காணப்படுகிறது. இவ்வோலை ஆவணங்கள் 17,18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவற்றில், நிலவரி, வேளாண் குத்தகை, மதுரை நாயக்கர் படையெடுப்பு, மடங்கள், கோயில்கள், கட்டாய உழைப்பு, சாதிச் சடங்குகள், அடிமை முறை ஆகியவை பற்றிய பல்வேறு வரலாற்றுச் செய்திகள் உள்ளன. முதலியார் ஓலை ஆவணங்களின் முதன்மையை உணர்ந்த கவிமணி அவர்கள், அவற்றைத் திருவனந்தபுரம் ஆவணக்காப்பகத்தில் சேர்த்துப் பாதுகாக்க ஏற்பாடு செய்தார். ஒரு நூறு ஓலைகளைப் பெயர்த்தெழுதி வைத்தார். அரசு தொடர்பான 19 ஓலைகளைக் கேரள ஆய்வுக்கழகத்தின் கட்டுரைத் தொகுப்பில் (Kerala Society Papers) வெளியிட்டு வரலாற்றுலகுக்குத் தெரியப்படுத்தினார்.

மேற்படி 600 ஓலை ஆவணங்களும் தற்போது திருவனந்தபுரம் ஆவணப்பாதுகாப்பு மையத்தில் உள்ளன. கவிமணி அவர்கள் தம் குறிப்புகளில் இவ்வோலைகளை அழகியபாண்டியபுரம் பெரியவீட்டு முதலியார் வீட்டு ஆவணங்கள் என்று குறிப்பிடுகிறார்.

இதில் சிறப்பான கூறு என்னவெனில், இவ்வோலை ஆவணங்கள் மூன்று வகையில் எழுதப்பட்டவை. தமிழ் மொழி, தமிழ் எழுத்து; மலையாள மொழி, தமிழ் எழுத்து; தமிழ் மொழி, மலையாள எழுத்து ஆகிய வடிவங்களில் எழுதப்பட்டவை. இம்மூன்று வகை ஆவணங்களையும் முறையாக ஆய்ந்து அனைத்தையும் தமிழ் எழுத்து வடிவில் பெயர்த்த திறனாளர் கவிமணி அவர்கள்.

முதலியார் ஓலைகள்

முதலியார் ஓலைகள்

அ.கா. பெருமாள், ரூ. 195

அச்சில் வராத ஆவணங்களைப் பதிவுசெய்வது என்னும் செயல்பாடு தமிழில் அருகிவிட்டது. வரலாற்றுச் செல்வங்களாகக் கருதத்தகும் இந்த ஆவணங்கள் யாவும் முறையாகத் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியவை. அ.கா. பெருமாள் அவர்கள் மிக ஆர்வத்துடனும் முயற்சியுடனும் தொகுத்துப் பதிப்பித்துள்ள இந்த ஆவணத் தொகுதி தமிழ்நாட்டில் பரவலாக உள்ள பிற ஓலை ஆவணங்களைத் திரட்டவும் பயன்படுத்தவும் தூண்டுகோலாக அமையும் என்று கருதுகிறேன். அவருக்குத் தமிழ்நாடு மற்றும் கேரள வரலாற்றாளர்கள் அனைவரும் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

(அறிமுகத்தில் Y. சுப்பராயலு)

காலச்சுவடு | ஜனவரி 2017

கவிமணி மண்டபத்தில் கவிமணியின் படம்

துணை நின்ற நூல்கள்:

1. கவிமணியின் உரைமணிகள்-பாரி நிலையம் (மூன்றாம் பதிப்பு, ஜூலை, 1977.)

2. முதலியார் ஓலைகள்-அ.கா.பெருமாள்-காலச்சுவடு பதிப்பகம்.(முதல் பதிப்பு, டிசம்பர், 2016.)

தொடர்பு: திரு. **துரை சுந்தரம்**, கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
(doraisundaram18@gmail.com); **அலை பேசி**: 9444939156

24. ரொசெட்டா ஸ்டோன்

– செல்வன்

1799ல் நெப்போலியன் எகிப்தின் மேல் படை எடுக்கிறார். வரலாற்றில் மிகுந்த ஆர்வமுடைய நெப்போலியன் தன்னுடன் பெரிய வரலாற்றறிஞர்கள் குழாமை அழைத்துச் சென்றார். எகிப்தில் உள்ள மம்மிகள், கலைப்பொருட்களை அவர் ஆராய்ந்து, சித்திரங்கள் தீட்டினர். அப்போது காமிரா இல்லை என்பதால் சித்திரங்களை வைத்தே ஆராயவேண்டியிருந்தது.

1799ல் ரொசட்டா எனும் பகுதியில் **ரொசட்டா ஸ்டோன்** எனப்படும் கல்வெட்டு ஒன்றைக் கண்டெடுத்தார் நெப்போலியன். உலக வரலாற்றின் மைல்கல்லான கண்டுபிடிப்பு ரொசட்டா ஸ்டோன். ஏனெனில் அதுநாள்வரை பண்டைய எகிப்தின் எழுத்துருவான **ஹீரோக்லிப்ஸ்** எழுத்துருவை யாராலும் படிக்க முடியவில்லை. அதனால் ஏராளமான மம்மிகள், கல்வெட்டுக்கள் கிடைத்தும் யாராலும் அவை சொல்லும் செய்திகளை அறிய முடியாது எகிப்திய வரலாற்று ஆராய்ச்சியே ஸ்தம்பித்த நிலையில் இருந்தது.

இந்நிலையில் ரொசட்டா கல்வெட்டில்

1. பண்டைய எகிப்திய ஹீரோக்லிப்ஸ் எழுத்துரு (இது எகிப்திய புரோகிதர்களின் மொழி. இன்றைய சமஸ்கிருதம் போல)
2. மக்களின் டிமாட்டிக் எழுத்துரு (மக்களின் மொழி. பிராகிருதம் போல)
3. கிரேக்க மொழி

என மூன்று மொழிகளில் ஒரே செய்தி கல்வெட்டாகச் சாசனம் செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கல்வெட்டை செதுக்கியவர் அன்றைய மன்னர் ஐந்தாம் டாலமி. பண்டைய பாரோக்கள் ஆட்சி முடிவுக்கு வந்து கிரேக்கர்கள் எகிப்தைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்தனர். அப்படிப்பட்ட கிரேக்க மன்னரே ஐந்தாம் டாலமி. ஆனால் கிரேக்கர்களை பாரோக்களாக ஏற்க எகிப்தியர்கள் மறுத்த நிலையில் தன் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைக்க தன் அருமை பெருமைகள், தான் கடவுளின் அருள் பெற்றவர் மாதிரியான செய்திகளை கல்வெட்டில் செதுக்கி எகிப்தின் மூலை முடுக்கெங்கும் நாட்டினார் ஐந்தாம் டாலமி. இது செதுக்கப்பட்ட காலம் கிபி 2ம் நூற்றாண்டு.

ஏன் மூன்று மொழிகள்?

- மன்னர் மற்றும் அதிகாரிகள் மொழி கிரேக்கம்
- மக்கள் பேசிய மொழியான டிமாடிக்
- புரோகிதர்கள், பூசாரிகள் பேசிய மொழியான ஹீரோக்லிப்ஸ் எழுத்துரு



இந்த மூன்று மொழிகளிலும் ஒரே தகவலை செதுக்கியிருந்தார் ஐந்தாம் டாலமி. இதைக் கண்டதும் பிரெஞ்சு வரலாற்று நிபுணர்கள் ஆனந்த கூத்தாடினர். ஏனெனில் பண்டைய கிரேக்க மொழியை அவர்களால் படிக்க இயலும். அதே செய்தி எகிப்திய ஹீரோக்லிப்ஸ் மொழியிலும் இருப்பதால் கிரேக்க மொழிபெயர்ப்பை வைத்து , எகிப்திய ஹீரோக்லிப்ஸ் மொழி சொல்லும் சொற்கள் என்ன என எளிதில் கண்டுபிடிக்க முடியும். அதன்பின் சொற்களை வைத்து எழுத்துருவையே முழுமையாக உருவாக்க முடிந்தால் பண்டைய ஹீரோக்லிப்ஸ் மொழியைப் படிக்க இயலும். அப்படி மட்டும் படிக்க முடிந்தால் 5,000 ஆண்டுக்கால கல்வெட்டுகள், மம்மிகள், பேபிரஸ் டாகுமெண்டுகள் என எகிப்தின பண்டைய வரலாறு முழுக்க படிக்க முடியும்.

சுருக்கமாகச் சொன்னால்:
இதுமட்டும் நடந்தால் வரலாற்றியலின் மிக, மிகப்பெரும் மைல்கல்லான அரியக் கண்டுபிடிப்பாக இருக்கும். நிலவில் மனிதன் காலடி எடுத்து வைத்தது விண்ணியலில் எப்படிப்பட்ட சாதனையாக இருக்குமோ, அதற்கொப்பான வரலாற்றுச்சாதனையாக இருக்கும்.

ஆனால் "மேன் ப்ரபோசஸ், காட் டிஸ்போசஸ்"

முதல்சோதனை ஆங்கிலேயர் வடிவில் வந்தது. நெப்போலியன் எகிப்தைக் விட்டு பிரான்ஸ் போனதும் எகிப்தின் மேல் படை எடுத்து ரொசட்டா கல்லை திருடிக்கொண்டு போனார்கள் ஆங்கிலேயர்கள். இதைக் கேள்விப்பட்ட

நெப்போலியன் கடுமையான கோபமடைந்தார். பிரெஞ்சு வரலாற்று அறிஞர்கள் கடும் விரக்தியில் ஆழ்ந்தார்கள். ஆனால் கல்லில் இருந்த எழுத்துக்கள் பிரதி எடுக்கப்பட்டிருந்ததால் அதை வைத்து ஆய்வைத் துவக்கினர். அதே சமயம் லண்டனில் ஆங்கிலேயரும் ஆய்வைத் துவக்கினார்கள். அப்போது நெப்போலியனின் பிரான்ஸ் உலக வல்லரசாக ஆகியிருந்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மட்டும் சளைத்ததா என்ன? அது சூரியன் மறையாத சாம்ராஜ்யமாக இருந்தது. இரு நாட்டு வரலாற்று நிபுணர்களுக்கும் உலக வரலாற்றியல் துறையை தலைகீழாகப் புரட்டிப்போடும் அந்த மகத்தான சாதனையான ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவை மீண்டும் கண்டுபிடிப்பது யார் என்பதற்கான போட்டி நடைபெற்றது. இரு வல்லரசுகளும் பணத்தை அள்ளிவீசின. 19ம் நூற்றாண்டின் மிகப்பெரும் வரலாற்று மேதைகள் அப்பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் எளிதாக முடிக்க முடியும் என நினைத்த பணி எத்தனைச் சிரமம் எனப் பின்னர் தான் தெரிந்தது. ஹீரோக்லிப்ஸ் எழுத்துரு சித்திர எழுத்துரு. அவற்றில் பறவைகள், சூரியன் போன்ற பல எழுத்துக்கள் காணப்பட்டன. நாம் சூரியன் என எழுதவேண்டுமெனில் சூ ரி ய ன் என எழுத்துக்களைப் பயன்படுத்துவோம். அவர்கள் ஒரு சூரியனையே வரைந்துவிடுவார்கள். ஆக இது படிக்கக்கூடிய எழுத்துருவே அல்ல என வரலாற்றறிஞர்கள் நம்பத் துவங்கினர்.

(இடப்புற தாமஸ் யங், வலப்புறம் சாம்போலின்)

இந்தச் சூழலில் தாமஸ் யங் எனும் ஆங்கிலேயர் ஒரு புதுமையான படிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அதாவது

கிரேக்க மொழிபெயர்ப்பில் டாலமி எனும் சொல் எத்தனை முறை வருகிறது எனப் பார்த்தார். 25 முறை வந்தது

அதேபோல ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவில் 25 முறை வரும் சொல் எது எனப் பார்த்தார். அப்படி ஒரு சொல் கிடைத்தது. அப்போது அது தானே ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவில் டாலமி என்பதாக இருக்கவேண்டும்?

இப்போது டாலமிக்கு முன்பாக "மன்னர் டாலமி" எனக் கிரேக்கத்தில் இருந்தால் ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவில் இருக்கும் டாலமிக்கு முன்பாக இருக்கும் வார்த்தையும் மன்னர் என்பதாகத் தானே இருக்கவேண்டும்?

ஆக இப்படிக் கணக்குப்போட்டு அவர் மொழிபெயர்க்கத் துவங்கினார். நம்ப முடியாத வகையில் வெகுவிரைவில் மொழிபெயர்த்தும் விட்டார். அதன்பின்னர் அதை சகாக்களுக்கு மகிழ்ச்சியுடன் காட்டுகையில் தலையில் இடி இறங்குவதுபோன்ற கேள்வியை ஒருவர் கேட்டார்

"பண்டைய எகிப்தியர்கள் இடமிருந்து வலமாக எழுதினரா, அல்லது வலமிருந்து இடப்புறமாக எழுதினரா?"

யாருக்குத் தெரியும்? இடமிருந்து வலமாக எழுதுவதாக நினைத்துத்தான் தாமஸ் யங் மொழிபெயர்த்திருந்தார். வலமிருந்து இடம் என்றால் அப்படியே அது தலைகீழாக மாறிவிடுமே?

பத்தாண்டு வேலை இப்படி ஒரே கேள்வியில் தரைமட்டமானதைக் கண்டு தாமஸ் யங் கண்ணீர் வடித்தார்

அதே சமயம் பிரான்ஸில் ஜான் பிரான்ஸிஸ் சாம்போலின் என இன்னொரு வரலாற்று அறிஞர். அவர் மிகுந்த ஏழை. அவரது வாழ்நாள் கனவு உலகம் பிறந்தநாள் எது எனக் கண்டுபிடிக்கவேண்டும் என்பது. அவரது காலகட்டத்தில் பைபிள்படி ஆதாம், ஏவாள் தான் முதல் மனிதர்கள். சார்லஸ் டார்வின் அப்போது பள்ளிமாணவன். அவரது பரிணாமவியல் கோட்பாடு உருவாகவே இல்லை. ஆக உலகம் தோன்றிய முதல் வாரத்திலேயே மனிதர்கள் தோன்றிவிட்டார்கள் என நம்பினார் சாம்போலின். இப்படி இருக்க

உலகின் முதல் எழுத்துரு எனக் கருதப்படும் எகிப்திய எழுத்துருவைப் படிக்க முடிந்தால் அதன் காலகட்டம் தெரியும் அல்லவா? அதைத் தெரிந்தால் உலகம் தோன்றிய ஆண்டு எது எனக் கணித்துவிடலாமே?

இன்று வேடிக்கையாக இருந்தாலும் அன்று இந்த ஆர்வம் தான் சாம்போலினை உந்தியது. அவர் மிக வறிய நிலையில் பாரிசுக்குப் போய் மேற்படிப்பு படிக்க முடியாத நிலையில் இருந்தார். அவரது சகோதரர் அந்தச் சூழலில் தான் உழைத்து அந்தக் காசில் தம்பியைப் படிக்க வைத்தார்.

பாரிசுக்குப் போன சாம்போலினுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பிரான்சின் மிகப்பெரும் வரலாற்று அறிஞர்கள் எகிப்திய எழுத்துருவைப் படிக்க முடியாது, அது வீண்வேலை என்றார்கள். தாமஸ் யங்கை பாடாய்ப்படுத்தின "இடமிருந்து வலமா, வலமிருந்து இடமா" பிரச்சனையும் அவரைத் தாக்கியது. ஆனால் இதற்கு தாமஸ் யங் கடைப்பிடித்ததை போல அல்லாது மிக, மிக எளிய உத்தி ஒன்றின் மூலம் தீர்வுகண்டார் சாம்போலின்.

"ஒரு மொழி அத்தனை சீக்கிரம் அழியாது. எகிப்திய மொழி இன்று இல்லை. ஆனால் அதன் சகோதர மொழிகள் உயிருடன் இருக்கும். அந்தச் சகோதர மொழிகளின் இலக்கணம், எழுத்துக்கள் எல்லாமே எகிப்திய ஹீரோக்லிப்ஸ் மொழியை ஒத்து இருக்கும். ஆக சகோதர மொழிகளைப் படித்தால் ஹீரோக்லிப்ஸ் மொழியைப் படிக்கலாம்" என மிக எளிய வழிமுறை ஒன்றைக் கண்டுபிடித்தார் சாம்போலின்.

இந்தியை வைத்து சமஸ்கிருதத்தை அறிவது போல இது

ஆனால் ஹீரோக்லிப்ஸ் மொழிக்குச் சகோதர மொழிகள் எதுவுமே இல்லை. இந்தச் சூழலில் இதற்கான விடை பாரிசிலேயே சாம்போலினுக்கு கிடைத்தது. ஆம் பாரிசில் எகிப்திய காப்டிக் கிறிஸ்தவர்களின் சர்ச் ஒன்று இருந்தது. அங்கே போன சாம்போலின் காப்டிக் மொழி எகிப்தின் மிகத் தொன்மையான மொழி என அறிந்தார். அம்மொழியைக் கற்றார்.

அதன்பின் காப்டிக் மொழியின் எழுத்துரு, இலக்கணம், வார்த்தை அமைப்பு ஆகியவற்றை வைத்து பண்டைய ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவை ஆராய்ந்தார். அதிசயிக்கத்தக்க வகையில் அது பொருந்திப்போனது. காப்டிக் மொழி என்பது ஹீரோக்லிப்ஸ் மொழியின் மக்கள் பேசும் வடிவம் எனக் கண்டுபிடித்தார் சாம்போலின்.

அதன்பின் ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவை முழுக்க மீள் உருவாக்கம் செய்து பண்டைய எகிப்திய மன்னன் ராம்சேஸ் என்பவரது பெயரை முதல், முதலாகப் பலத்த ஆரவாரத்துக்கு இடையே ஒரு கருத்தரங்கில் படித்துக் காட்டினார் சாம்போலின்.

அங்கே வந்த தாமஸ் யங் அவரைப் பாராட்டினார். தாமஸ் யங் கடைப்பிடித்த கணிதவியல் முறைக்கு மாற்றாகத் தற்கால மக்களின் வாழ்வியலை ஆராய்ந்து தீர்வுகண்ட சாம்போலினின் அறிவுகூர்மையை தாமஸ் யங் தொழில் போட்டி, தேச பக்தியை எல்லாம் தாண்டி பாராட்டினார்.



(ஹீரோக்லிப்ஸ் எழுத்துரு)

அதன்பின் எகிப்து சென்று ஏராளமான கல்வெட்டுக்கள், பாபைரஸ் டாக்குமென்டுகளை படித்துக்காட்டி தன் எழுத்துரு வேலை செய்கிறது என்பதை நிரூபித்தது மட்டுமல்லாது பண்டைய எகிப்தின் முழு வரலாற்றையும் கண்டறிந்தார் சாம்போலின். 1500 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முதலாக ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவை மீண்டும் படிக்க முடிந்தது. சுமார் ஐம்பது நோபல் பரிசுகள் பெறுவதற்கு ஒப்பான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கண்டுபிடிப்பு இது.

வரலாற்று அறிஞர் சாம்போலின் தனி மனிதராக எகிப்து எனும் நாகரிகத்தின் 5000 ஆண்டுக்கால வரலாற்றை நமக்கு மீண்டும் கிடைக்க செய்தார். அதற்குக் காரணம் ஐந்தாம் டாலமி எனும் 14 வயது மன்னன் எழுதிய மொக்கைக் கல்வெட்டு ஒன்றே. உலகின் வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனை இப்படி மிக யதேச்சையாக நிகழ்ந்தது.

இது குறித்த மேலதிக தகவல்களை இக்கல்லை நேரில் பார்த்த முனைவர் சுபாஷிணி பகிர்ந்து கொள்கிறார்:

எகிப்திய ஹீரோக்லிப்ஸ் எழுத்துருவை வாசிக்க முடியாது ஆய்வுலகம் தவித்துக் கொண்டிருந்த வேளையில் ஆய்வுலக அதிசயமாகக் கிடைத்ததுதான் ரொசேட்டா கல் (Rosetta Stone). எகிப்தின் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் எழுத்து ஹீரோக்லிப்ஸ். ஓவியங்களே எழுத்துக்கள் என்ற வகையில் இவை அமைந்திருக்கும். எத்தனையோ ஆண்டுகளாக ஹீரோக்லிப்ஸ் எழுத்துக்களை வாசிக்க முடியாமையினால் என்ன

எழுதப்பட்டிருக்கின்றது என்றே அறியமுடியாமல் ஆய்வுலகம் தவித்துக் கொண்டிருந்தது. இந்தப் பிரச்சனைக்கு வடிகாலாக அமைந்தது இந்த ரொசேட்டா கல். பார்ப்பதற்கு அது ஒரு பெரும் பாறை போன்ற கல் தான். ஆனால் அதில் இருப்பதோ உலகின் மிக முக்கிய ஆவணம். இதில் உள்ள செய்தி மிகச் சாமானியமானதுதான் ஆனால் அதில் உள்ள எழுத்துருதான் சிறப்பு பெற்றது. ஏனெனில் மூன்று மொழிகளின் எழுத்துருக்கள் ஒரே கல்லில் ஒரே செய்தியை வழங்கும் வகையில் இந்தக் கல் அமைக்கப்பட்டுள்ளது. கி.மு 196ல் 5ம் தாலமி முடிசூடிக்கொண்ட நிகழ்வை இந்தக் கல் ஹீரோக்லிப்ஸ், எகிப்திய டிமோட்டிக் எழுத்துரு, கிரேக்கம் ஆகிய மூன்று மொழி எழுத்துருக்களில் காட்டுகின்றது. இதில் உள்ள கிரேக்க, எகிப்திய டிமோட்டிக் எழுத்துருக்களைக் கொண்டு ஹீரோக்லிப்ஸ் எழுத்துக்களை ஆய்வாளர்கள் உடனே மொழிபெயர்த்து ஒலியை அறிந்தனர். இதுவே விடைகாணாது இருந்த பல எகிப்திய ஆராய்ச்சிகளுக்கு விடையளிக்கும் மந்திரக்கோலாக அமைந்தது. இந்த ரொசேட்டா கல் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் தான் உள்ளது.

தொடர்பு: செல்வன் (holyape@gmail.com)

25. தீதும் நன்றும் பிறர்தர வாரா - இயற்பியலாளரின் பார்வையில்

– நடராஜன் ஸ்ரீதர், முனைவர். சந்திரமோகன் ரெத்தினம்

அடிப்படை இயற்பியலின் வளர்ச்சி பல மேம்பட்ட விளக்கங்களை உலகத்திற்கு வழங்கி வருகிறது. இயற்பியலின் வளர்ச்சி பல தொழில்நுட்பங்களையும், அடிப்படைத் தேடலுக்கான பதில்களையும் வழங்கி வருகிறது. இயற்பியலின் வியத்தகுக் கணக்கீடுகள் பல அடிப்படை உண்மைகளை உலகிற்குத் தெரியப்படுத்துகிறது. மிகப்பெரிய பிரபஞ்சத்திலிருந்து மிக நுண்ணியது வரை இயற்பியல் கணக்கீடுகள் தெளிவான விளக்கங்களைத் தருகிறது. சூரியக் குடும்பத்திற்கு அப்பால் செல்லும் ஆய்வானாலும் அணுக்களைப் பிரித்து ஆராயும் அடிப்படைத் துகள் ஆய்விலும் இயற்பியல் பெரும் வெற்றிகளைப் பெற்று வருகிறது. மேலும் ஈர்ப்பு அலைகள் வரை இயற்பியல் விளக்கம் அளித்தும் ஆய்வு முடிவுகளால் நிரூபித்தும் வருகிறது. இந்த ஆய்வின் மூலம் கடவுள் துகள் வரை கண்டறியப்பட்டுள்ளது. புறநானூற்றில் உள்ள தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பதன் இயற்பியல் விளக்கத்தை இங்கு ஆராய்ந்து உள்ளோம்

முன்னுரை:

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறம்: 129)

இந்தப் பாடலில் தீதும் நன்றும் பிற தர வாரா என்ற ஒரு வியத்தகு பாடல் வரி உள்ளது. இங்கு ஒரு மாபெரும் இயற்பியல் உண்மை பொதிந்துள்ளது. இந்த வரியை ஆய்வு செய்யும்போது ஒரு கேள்வி எழுகிறது எவ்வாறு ஒருவருக்கு ஏற்படும் தீமையும் நன்மையும் பிறரைச் சார்ந்து இருப்பதில்லை எனும் ஒரு சிந்தனை வருகிறது. அவரவர்க்கு ஏற்படும் நன்மையும் தீமையும் இவ்வாறு அவரவரைச் சார்ந்தே உள்ளது என்னும் ஆழமான கேள்வியும் வருகிறது. இதற்கான பதில் இயற்பியலின் குவாண்டம் இயக்கவியலில் பொதிந்துள்ளது. குவாண்டம் இயக்கவியல் அதனுள்ளே பல சிறப்புப் பேறுகளைப் பெற்றுள்ளது 1900 களில் இருந்து தொடங்கப்பட்ட குவாண்டம் இயக்கவியல் ஆய்வுகள் இப்போது பெரும் முன்னேற்றம் பெற்றுள்ளது . கரும்பொருள் கதிரியக்க விளைவுகளை ஆராயும்போது கண்டறியப்பட்ட ஃபோட்டான் புகழ்களிலிருந்து குவாண்டம் இயக்கவியல் தொடங்குகிறது அதனடிப்படையில் பல கோட்பாடுகளும் பல ஆய்வு முடிவுகளும் குவாண்டம் இயக்கவியல் பலப்படுத்தியுள்ளன. எனவே குவாண்டம் இயக்கவியல் இந்தப் பாடலுக்கான விளக்கத்தையும் தருகிறது.

குவாண்டம் சிக்கலும் கிளாஸிக்கல் சிக்கலும்:
இயற்பியலில் சிக்கல் கருதுகோள்கள் மிகவும் அதிகமாக விவாதிக்கப்படுகிறது.

கிளாஸிக்கல் சிக்கல் வண்ணத்துப்பூச்சி விளைவால் குறிப்பிடப்படுகிறது[1]. அதாவது வண்ணத்துப்பூச்சி இறகுகளை அசைக்கும்போது இந்தப் பிரபஞ்சத்தில் பல விளைவுகளை இணைக்கிறது . பூமியில் பருவநிலை மாறுபாடுகளும் மற்ற இயக்க விளைவுகளும் இதுபோன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்ட அமைப்புச் சிக்கல்களினால் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பிரபஞ்சமே ஒன்றோடொன்று அடிப்படை கட்டமைப்பு வலைகளினால் பிண்ணப்பட்டுள்ளதாக உள்ளது. கிளாஸிக்கல் இயக்கவியல் குவாண்டம் இயக்கவியலை விடச் சிறிது மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. கிளாஸிக்கல் இயக்கவியல் பெரிய பொருட்களைப் பற்றி பேசினாலும் மறுபுறம் குவாண்டம் இயக்கவியல் அணுக்களின் இயக்கவியலையும் அதைத் தாண்டிய புலத்தின் இயக்கவியலையும் தெளிவாக விரித்துரைக்கிறது. குவாண்டம் இயக்கவியலில் சிக்கல்கள் என்பது பல பயன்பாடுகளைத் தற்போதைய மேம்பட்ட அறிவியலில் கண்டு வருகிறது. குவாண்டம் சிக்கல் ஐன்ஸ்டின் மற்றும் அவரது சகாக்களால் எடுத்துரைக்கப்பட்டது[5] .

ஐன்ஸ்டின் அவரது குவாண்டம் சிக்கல் கருதுகோளில் இரு வேறுபட்ட நிலைகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இயங்குகிறது என்பதை விளக்கினார். அதாவது ஒரு அமைப்பிலிருந்து பிரிந்த இரு நிலைகள் தனித்தனியே இயங்கினாலும் அவை ஒன்றாக இணைந்து இயங்குகிறது. ஒரு கூட்டமைப்பில் இருந்து வேறுபட்ட தர சுழல் கொண்ட இரண்டு நிலைகள் பிரிவதாக எடுத்துக்கொள்ளலாம் இவற்றில் ஒரு குவாண்டம் நிலையில் அளவீடுகள் எடுப்பதாகக் கொள்ளலாம். நிலை ஒன்றில் இவற்றின் தற் சூழல் அமைப்பு மேல்நோக்கி இருப்பதாக அளவீடு தெரிய வருகிறது. மறுபுறம் இதன் இன்னொரு நிலை பல தொலைவு பிரிந்திருந்தாலும் அதன் தற் சூழல் நிலையைக் கீழ்நோக்கி இருப்பதாக அதனை அளவிடாமலேயே எளிதாகக் கூறிவிட முடியும்.

குவாண்டம் இயக்கவியலின் ஒரு அடிப்படை கருதுகோள் உண்டு அதாவது ஒரு அலை இயக்க நிகழ்வினை அளவிடும்போது அதன் அலை இயக்க அமைப்பானது பாதிக்கப்படுகிறது. எனவே குவாண்டம் அமைப்புகளின் அளவீடுகள் என்பது அவற்றில் உண்மைத் தன்மையைப் பாதிக்கிறது. அளவீடுகள் செய்வதன் மூலம் அவற்றில் உண்மைத் தன்மையை புரிந்துகொள்ள முடிவதில்லை. இந்தக் கூற்றுக்கு மாற்றுக் கருத்தாக குவாண்டம் சிக்கல்கள் தீர்வாக அமையும். தனித்தனியே பிரிந்த இரு வேறுபட்ட நிலைகளில் ஒன்றில் செய்யப்படும் அளவீடு ஆனது மற்றொன்றில் அளவீடு செய்யப்படாத போதே கண்டறிய முடிகிறது. இது அந்த நிலையில் உண்மைத் தன்மையை உறுதி செய்கிறது. இந்த குவாண்டம் சிக்கல் பயன்பாடு அளவில் பல புதிய தரவுகளை வெளிப்படுத்துகிறது.

சமீபத்திய இயற்பியல் வளர்ச்சி இந்த குவாண்டம் சிக்கல்களைத் தகவல் தொடர்புகள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை உறுதி செய்கிறது. உதாரணமாக குவாண்டம் சிக்கலில் பெறப்பட்ட 2 துகள்கள் 144 கிலோமீட்டர் தொலைவுகளுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது [2]. இதேபோல 1200 கிலோ மீட்டர்களுக்கு இடையிலும் குவாண்டம் சிக்கல் மூலம் தயாரிக்கப்பட்ட துகள்கள் பகிரப்பட்டுள்ளது. [3, 4]. இது ஒருபுறம் இருந்தாலும் ஐன்ஸ்டின் கிளாஸிக்கல் இயக்கவியலை அடிப்படையாகக் கொண்ட மற்றுமொரு கட்டுரையில் இணைப்பு பாலத்தைப் பற்றி பேசியுள்ளார் . அதாவது கிளாஸிக்கல் சிக்கலான அமைப்பில் இணைப்பில் உள்ள இரு பெரும் அமைப்புகள் இடையில் இணைப்பு பாலம் போன்ற ஒரு அமைப்பு இருப்பதாகக் கணக்கிட்டு இருந்தார். கிளாஸிக்கல் கணித முறைகளின்

வரையறுக்கப்பட்ட இந்த நுட்பமான கணக்கீடுகள் குவாண்டம் இயக்கவியலுக்கும் விரிவாக்கம் செய்ய இயலும்.

அதாவது குவாண்டம் சிக்கலில் உருவாக்கப்பட்ட இரு துகள்கள் அவற்றுக்கு இடையில் ஒரு பாலம் போன்ற அமைப்பினை கொண்டிருக்கும். இது ஐன்ஸ்டின் ரோசன் பாலம் எனவும் வரையறுக்கப்படுகிறது[6]. இந்த இணைப்புப் பாலம் மிக நுண்ணியதாகப் பிளாங்க் நீளம் கொண்டதாக மட்டுமே இருக்கும். மேலும் இந்த அமைப்பு அந்தத் துகள்களுக்கு இடையில் மட்டுமே ஏற்புடையதாக இருக்கும். எனவே ஒரு அமைப்பிலிருந்து பிரிந்த ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்ட குவாண்டம் சிக்கல் அமைப்புகள் எப்போதும் அவற்றுக்கு இடையில் ஒன்றோடு ஒன்று தொடர்பில் இணைந்திருக்கும். ஒன்றில் ஏற்படுத்தப்படும் பாதிப்பு மற்றொன்றையும் பாதிக்கும். மேலும் குவாண்டம் இயக்கவியலின் யங் இரட்டைப் பிளவு ஆய்வு எனப்படும் மிகப்பெரும் ஆய்வு முடிவு ஒன்று உள்ளது. இந்த ஆய்வு முடிவின்படி ஒரு துகள் அலையாகவும் துகளாகவும் விளக்க முடிந்தது. இது அலைத்துகள் கோட்பாடு என அழைக்கப்படுகிறது. அலைத்துகள் கோட்பாட்டின்படி ஒரே துகள் அலையாகவும் துகளாகவும் இருப்பதை உறுதி செய்யமுடிகிறது. ஹெய்சன்பெர்க்கின் நிலையில்லாக் கோட்பாடு இதனை உறுதி செய்கிறது அதாவது துகளின் இரும்பையும் உண்பதையும் ஒரே நேரத்தில் கணக்கிட முடியாது.

மீநிலைகள் என்பதும் குவாண்டம் இயக்கவியலில் மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும். மீநிலைகள் கருத்துப்படி ஒரு நிலையை அளவீட்டுக்கு உட்படுத்தும் முன்பு அதன் துல்லியமான இருப்பைக் கணக்கிட இயலாது. அதாவது கணக்கீட்டுக்கு முன்பு அது இருப்பும் இல்லாமையும் ஆன நிலையில் உள்ளது. இதை ஸ்ரோடிஞ்சர் பூனை ஆய்வு எனவும் விளக்க முடிகிறது. இந்த ஆய்வுப்படி பூனையானது ஒரு பெட்டிக்குள் கதிரியக்கத் தனிமத்தில் இணைத்து வைத்து அடைக்கப்படுகிறது. கதிரியக்கத் தனிமத்தின் இயக்கம் முன்னரே அளவிடப்படுகிறது. அந்தப் பெட்டியை திறக்காத வரை பூனையானது உயிரோடு உள்ளதா இல்லையா என்பதைத் தெரிவிக்க முடியாது. அதாவது மூடி இருக்கும் வரை பூனையின் நிலை என்பது இறந்த மற்றும் உயிரோடு இருக்கும் மீநிலை என விளக்கமளிக்கப்படுகிறது. இந்த ஆய்வு முடிவு குவாண்டம் இயக்கவியலின் பெரும் முன்னேற்றத்தைக் கொடுத்தது [7].

இதேபோல குவாண்டம் இயக்கவியலில் மற்றுமொரு சிறப்பான கேள்வியும் உண்டு இதனைப் பகுதி பிரதிபலிப்பு கேள்வி அல்லது புதிர் எனவும் குறிப்பிடுகின்றனர் இதன் விளக்கம் என்னவெனில் ஒரு கண்ணாடித் தட்டில் விழும் ஒளிக்கற்றை பெரும்பாலும் அதன் ஊடேப் பாய்ந்து சென்றாலும் சிறு பகுதி பிரதிபலிக்கப்படுகிறது. குவாண்டமாக்கலின் மூலம் ஒளிக்கற்றைகள் அனைத்தும் ஃபோட்டான் துகள்கள் என்று வரையறுக்கப்படுகிறது. இவ்வாறாக விழும் ஃபோட்டான்களில் 4% பிரதிபலிக்கப் படுகிறது உதாரணமாக 100 ஃபோட்டான்கள் வருகையில் அவற்றின் நான்கு ஃபோட்டான்கள் பிரதிபலிக்கப்படுகிறது. ஃபோட்டான் குழு வருகைகளில் எவ்வளவு ஃபோட்டான்கள் பிரதிபலிக்கப்படுகிறது என்பது கணக்கிட முடியும் ஆனால் அவ்வாறான வெளிப்படும் பிரதிபலிக்கும் ஃபோட்டான்கள் எவையவை என அறுதியிட்டுக் கூறமுடியாது. குவாண்டம் கணக்கீட்டியல் முறைகளும் 4% பிரதிபலிப்பினை உறுதிசெய்தாலும் மொத்த எண்ணிக்கையிலான ஃபோட்டான்களில் எந்த 4% ஃபோட்டான்கள் பிரதிபலிக்கிறது என்பதையும் ஏன் அவை மட்டும் சிறப்பாக பிரதிபலிக்கப்படும் நிலைக்குச் செல்கிறது என்பதையும் விளக்க முடிவதில்லை. [8].

குவாண்டம் தகவல்கள் என்பது ஒரு குவாண்டம் இயக்கத்தில் உள்ள அடிப்படை தரவுகளை பெற்றுள்ளது. ஒரு அமைப்பில் உள்ள குவாண்டம் தகவல்கள் எப்போதும் அழிவது இல்லை. இது தகவல் அழிவின்மை விதியை உறுதி செய்கிறது[9]. தகவல் அழிவின்மை விதியின் படி குவாண்டம் தகவல்கள் எந்த நிலையிலும் அந்த குவாண்டம் அமைப்பில் இருந்துகொண்டே இருக்கும்.இந்தத் தகவல்கள் அந்தக் குவாண்டம் அமைப்பின் இருப்பினையும் இயக்கத்தையும் உறுதி செய்கிறது. எத்துணைப் பொருட்களையும் உள்ளிழுத்து அழிக்கக்கூடிய கருந்துளைகளுக்கு அருகிலும் குவாண்டம் தகவல் அழிவின்மை விதி நிலைபெறுகிறது. கருந்துளைகள் தன்னை நெருங்கும் அத்துணைப் பொருட்களையும் தனது ஓர்மை புள்ளியுள் அழித்துவிடுகிறது. ஆயினும் உள்ளே விழும் பொருள்களில் குவாண்டம் தகவல்கள் அதனிலிருந்து ஹாக்கிங் கதிர்வீச்சு மூலம் வெளிவருகிறது[10]. எனவே குவாண்டம் தகவல்கள் பிரபஞ்சத்தில் எந்த நிலையிலும் அழிவது இல்லை. இதன் காரணமாக ஒரு மனிதனின் அடிப்படை குவாண்டம் தகவல்கள் எப்போதும் அழிவதில்லை. இந்த குவாண்டம் தகவல்களும் அவனது நன்மை தீமைக்கு காரணமாக அமைகிறது. இதுவும் தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பதை நிரூபிக்கிறது. இவ்வாறான விளக்கங்களின் மூலம் குவாண்டம் இயக்கவியல் அடிப்படையில் இயங்கும் அணுக்களும்

அணுக்கூட்டங்களும் அடிப்படைத் துகள்களும் ஏனைய அலை இயக்கங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டு கட்டுப்பாட்டோடு இயங்குகிறது என்பது தெளிவாகிறது. எனவே ஒருவரின் நன்மைக்கும் தீமைக்கும் அவருள்ளே உள்ள குவாண்டம் தகவல்களே காரணமாக உள்ளது. இது மாபெரும் உண்மையான தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதை விளக்குகிறது.

தீமைநன்மை:

எது தீமை மற்றும் எது நன்மை என்னும் கேள்வியின் விளக்கமாகச் சமீபத்தில் வாழ்ந்த தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி (1911-2006) பின்வரும் பதத்தை குறிப்பிட்டுள்ளார். ஒருவரின் செயலால் தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ துன்பம் விளையாத செயல்களே நல்ல செயல்கள் அல்லது நன்மை எனவும், அவ்வாறாக அமையாத செயல்கள் தீய செயல்கள் அல்லது தீமை என வரையறுக்கப்படுகிறது [11]

முடிவுரை:

அடிப்படை குவாண்டம் இயக்கவியல் என்பது நாம் புலன்களால் காணும் இயக்கங்களை விடவும் மாறுபட்டதாக அமைகிறது. இயற்பியலாளர் ரிச்சர்ட் பெய்ன்மேன் "குவாண்டம் இயக்கவியல் மனிதனின் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது"[12] என்று குறிப்பிட்டுள்ளார். அடிப்படை குவாண்டம் இயக்கவியல் பற்றிய தெளிவு வருகையில் இயற்கை அமைப்பையும் அதன் இயக்கவியலையும் மேலும் அதன் ஆற்றல் நிலைகளையும் புரிந்துகொள்ளும் தகைமை வரப்பெறுகிறது. நாம் அனைவரும் இணைக்கப்பட்ட குவாண்டம் வலையமைப்பில் இணைந்து இருப்பதால் ஒருவருக்கு ஏற்படும் நிகழ்வுகள் சமுதாய வலையமைப்பிலும் பாதிப்பு தருகிறது மேலும் குவாண்டம் உண்மை தன்மை என்பது அவரவரின் உள்ளார்ந்த நிலைப்புத்தன்மை யாக இருப்பதால் ஒருவருக்கு ஏற்படும் நன்மையோ தீமையோ பிறர் மூலம் விளைவதில்லை அவரவரின் உள்ளார்ந்த குவாண்டம் மெய் நிலையே அதனைத் தீர்மானிக்கிறது மேலும் குவாண்டம் அறிவு எனப்படும் மிக நுண்ணிய சிக்கலான இயக்கச் சமன்பாடுகளைக் கொண்ட அமைப்பு நிலையும் ஒரு நிகழ்வின் ஓட்டத்தினை தீர்மானிக்கிறது இவற்றில் அடுத்தடுத்து நிகழும் நிகழ்வுகள் எவ்வாறு நடக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமே தவிர ஏன் நடக்கின்றன என்பதை விளக்க முடிவதில்லை இதன்மூலம் அவரவரின் நன்மைக்கும் தீமைக்கும் அவரவர் காரணம் என்பது நுட்பமாக விளங்கிக் கொள்ள முடிகிறது எனவே தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பது புலனாகிறது.

மேற்கோள்கள்:

[1]Merali, Z. (2009, October 07). The butterfly effect gets entangled. Retrieved October 10, 2017, from http://www.nature.com/news/2009/091007/full/news.2009.980.html?s=news_rss

[2] Ursin, R., Tiefenbacher, F., Schmitt-Manderbach, T., Weier, H., Scheidl, T., Lindenthal, M., ... &Ömer, B. (2007). Entanglement-based quantum communication over 144 km.Nature physics,3(7),481-486.

[3]Popkin, G. (2017). Spooky action achieved at record distance. Science, 356(6343), 1110–1111.

[4]Yin, J., Cao, Y., Li, Y.-H., Liao, S.-K., Zhang, L., Ren, J.-G., ... Pan, J.-W. (2017). Satellite-based entanglement distribution over 1200 kilometers. Science, 356(6343), 1140–1144.

[5] Einstein, A., Podolsky, B., & Rosen, N. (1935). Can quantum-mechanical description of physical reality be considered complete?. Physical review, 47(10), 777.

[6] Einstein, A., & Rosen, N. (1935). The particle problem in the general theory of relativity. Physical Review, 48(1), 73.

[7]E. Schrödinger,Die gegenwärtige Situation in der Quantenmechanik, Naturwissenschaftern.23: pp. 807–812; 823–823, 844–849. (1935). English translation: John D. Trimmer,Proceedings of the American Philosophical Society124, pp. 323–38 (1980), reprinted in Quantum Theory and Measurement,p. 152 (1983)

[8] Feynman, R. P. (2006). QED: The strange theory of light and matter. Princeton University Press.

[9]Nielsen, M. A., & Chuang, I. (2002). Quantum computation and quantum information.

[10]Hawking, S. W. (1975). Particle creation by black holes. Communications in mathematical physics, 43(3), 199-220.

[11] வேதாத்திரி மகரிஷி. பிரம்மஞானம். வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.

[12]Feynman, R., & Wilczek, F. (2017).The character of physical law. MIT press.

தொடர்பு:

நடராஜன் ஸ்ரீதர், முனைவர். சந்திரமோகன் ரெத்தினம்
முதுஅறிவியல் மற்றும் இயற்பியல் ஆய்வுத்துறை
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை, தமிழ்நாடு, இந்தியா

மின்னஞ்சல் : rathinam.chandramohan@gmail.com
+91-9894391443

26. மலையாளி பழங்குடி மக்களின் இடப்பெயர்வும் தோற்றத் தொன்மங்களும்

– முனைவர். ம. செல்வபாண்டியன்

மனித இனத்தில் தொன்மைச் சமூகங்களாய் விளங்குபவர்கள் பழங்குடி மக்கள் (Tribes) ஆவர். பழங்குடிச் சமூக அமைப்பிலிருந்து தான் மனித சமுதாயம் வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை எட்டியுள்ளது எனச் சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். பழங்குடி மக்களின் வரலாற்றை ஆய்வு செய்வதன் மூலமாக மனிதக் குலத்தின் தொடக்கக் கால வரலாற்றையும் வளர்ச்சி நிலைகளையும் அறிய முடியும். உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்வியலில் ஒத்த பண்புக் கூறுகள் காணப்படினும் அந்நிலப்பரப்புகளுக்குரிய தனித்துவமான பண்புக் கூறுகளையும் பிரித்தறிய முடிகிறது.

தமிழகப் பழங்குடிச் சமூகங்கள்:

தமிழக அரசின் அட்டவணைச் சாதிகள் மற்றும் அட்டவணைப் பழங்குடிகள் அமலாக்கச் சட்டப்படி (Tamilnadu SC and ST order (Amendment) Act., (1976) தமிழ்நாட்டில் 36 பழங்குடிச் சமூகங்கள் உள்ளன. அவையாவன, அடியான், அரநாடன், இரவாளன், இருளர், ஊராளி, கணியன், கம்மாரா, காட்டு நாயக்கன், காடர், காணிக்காரன், குறும்பர், குறிச்சன், குடியர்/மலைக்குடி, குறுமன், கொச்சு வேலன், கொண்ட காபு, கொண்ட ரெட்டி, கொரகர், கோத்தர், சோளகர், தொதவர், பளியர், பள்ளியன், பள்ளேயன், பணியன், மகாமலசர், மலசர், மலை அரையன்,

மலைக்குறவன், மலைப் பண்டாரம், மலையக் கண்டி, மலையாளி, மலைவேடன், மன்னான், முதுவன், முடுவன் / முடுகர்.

2001 ம் ஆண்டின் குடிமதிப்புக் கணக்கின் படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகை 62,405,679 ஆகும். இதில் தமிழகத்திலுள்ள 36 பழங்குடிச் சமூகங்களின் மொத்த மக்கள் தொகை 6,51,321 ஆகும். இது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில்1.0 விழுக்காடாகும்.

தமிழகத்திலுள்ள மலையாளி பழங்குடி மக்களின் மொத்த மக்கள் தொகை 3,10,042 ஆகும். தமிழகப் பழங்குடி மக்களின் மக்கள் தொகையில் இது 47.6 விழுக்காடாகும். அதாவது தமிழகப் பழங்குடி மக்களில், சற்றொப்ப பாதி அளவினர் மலையாளி பழங்குடி மக்களே ஆவர்.

தமிழகப் பழங்குடிச் சமூகங்களை மூன்று வகையினங்களாகப் பிரித்துக் காணலாம். (பக்தவத்சலபாரதி, 2013 :40)

அ. தொல் பழங்குடியினர் (Aboriginal Tribes)

இம்மக்கள் வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டு தம் வாழிடங்களில் இடப்பெயர்ச்சி ஏதுமின்றி வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி சமய, வாழ்வியல் கூறுகளைக் கொண்டுள்ளனர். (காடர், தோடர், இருளர், பளியர், காட்டுநாய்க்கர், கோத்தர் போன்றோர்).

ஆ. முதுகுடியினர் (Primitive Tribes)

இம்மக்கள் தம் வாழிடங்களில் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தோற்றத் தொன்மங்களில் சாதியத்தின் முன் வடிவம் காணப்படுகின்றது. (தொதவர், கோத்தர், குறும்பர் ஆகிய மூவரும் கடவுளின் வியர்வைத் துளிகளிலிருந்து பிறந்த உடன்பிறந்தோர் எனும் தோற்றத் தொன்மம்)

இ. பழங்குடியினர் (Tribes)

ஏதாவது நெருக்கடிகளின் (அரசியல், வறுமை (பஞ்சம்), நோய்) காரணமாக சமவெளிப் பகுதியிலிருந்து மலைப்பகுதிகளுக்கோ அல்லது வேறு பிரதேசத்துக்கோ இடப்பெயர்ச்சி செய்து அங்கேயே தங்கிவிட்டவர்கள் (மலையாளி, முதுவர், பளியர், மலைப்பண்டாரம், கணியான், அடியான், குறுமன், கொரகர், காட்டு நாயக்கர், குறிச்சான் போன்றோர்) பூர்வீகத்தில் வழிபட்ட சைவ வைணவக் கடவுள்களைத் தற்போதும் வணங்கி வருகின்றனர். குறிப்பாக மலையாளி பழங்குடியினரிடையே நிலப்பிரபுத்துவ அமைப்பு இன்னும் நிலைபெற்றுள்ளது.

இந்தியா முழுவதிலுமுள்ள பழங்குடி இனங்களில், '65 சமூகங்களை அழியும் நிலையில் உள்ள பழங்குடிகள்' என மத்திய அரசு அறிவித்துள்ளது. அவற்றுள் தமிழகத்திலுள்ள காடர், தோடர், இருளர், பளியர், காட்டு நாய்க்கர், கோத்தர் ஆகிய ஆறு பழங்குடி இனங்களும் அடங்கும். சமூக, பொருளாதார நிலையில்

இவ்வினங்கள் மிகவும் பின் தங்கியுள்ளன. இவர்களது முன்னேற்றத்திற்காக அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகிறது.

தமிழகப் பழங்குடிகளின் வாழ்விடம்:

தமிழகப் பழங்குடிகள், தமிழ்நாட்டிலுள்ள 3834 கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் பழங்குடிகளின் வாழ்விடத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. மலைப்பகுதிகள், 2. அடிவாரப்பகுதிகள் 3. சமவெளிப்பகுதிகள். பெரும்பான்மையான தமிழகப் பழங்குடிகள் மலைப் பகுதிகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலை, மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அவர்களது வாழ்விடம் அமைந்துள்ளது.

கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் (Eastern Ghats) வாழும் பழங்குடி இனங்கள் ஒடிசா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பரவிக் காணப்படும் இத்தொடர் வடக்கில் மகாநதிப் பள்ளத்தாக்கில் தொடங்கி தெற்கில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகையாறு வரை நீள்கிறது. நீலகிரிக்கு அருகிலுள்ள மாயாறு பள்ளத்தாக்குப் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைகளுடன் இணைகிறது. இம்மலைகளின் மொத்தப் பரப்பளவு 152,000 சதுர கிலோ மீட்டர்களாகும்.

இந்தியாவில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் சுமார் 60 பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். கிழக்குத் தொடர்ச்சி மலையின் வடபகுதியில் (ஒடிசாவின் மகாநதி பள்ளத்தாக்கு, சத்தீஸ்கர், மத்தியபிரதேச மாநிலங்கள், ஆந்திர பிரதேசத்தின் பள்ளத்தாக்கு வரை) சுமார் 1.76 கோடி பழங்குடி மக்களும், தென்பகுதியில் (கிருஷ்ணா நதி பள்ளத்தாக்கிலிருந்து நீலகிரி மலைத்தொடர் வரை) சுமார் 20 லட்சம் பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் கிழக்குத் தொடர்ச்சி மலை, அதன் அடிவாரப் பகுதிகள், சமவெளிப்பகுதிகளில் மலையாளி, கொண்டாரெட்டி, குறிச்சான், குறுமன், சோளகர், ஊராளி, இருளர் ஆகிய 7 பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.



ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, சித்தேரி மலை, வாச்சாத்திமலை, ஜல்லூத்து மலை, கோதுமலை, கஞ்சமலை, நகரமலை, கடகமலை, பச்சைமலை, பாலமலை, கொல்லிமலை ஆகிய அனைத்து மலைகளிலும் மலையாளி பழங்குடிகளே பெரும்பாலும் வாழ்கின்றனர். அதாவது மலையாளிகள் அனைவரும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில்தான் வாழ்கின்றனர்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் (Western Ghats)வாழும் பழங்குடி இனங்கள் குஜராத், மகாராஷ்டிரா எல்லை தொடங்கி மகாராஷ்டிரா, கோவா, கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பரவிக் காணப்படும் இத்தொடர் கேரளத்தின் அகஸ்தியர் மலை வரை தொடர்ச்சியாக நீள்கிறது. இம்மலைகளின் மொத்தப் பரப்பளவு 160,000 சதுர கிலோமீட்டர்களாகும்.

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலை, அதன் அடிவாரப் பகுதிகள், சமவெளிப்பகுதிகளில் 26-க்கும் மேற்பட்ட பழங்குடி இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். காடர், பணியர், தொதுவர், குறும்பர், கோத்தர், இருளர், சோளகர், ஊராளி, காட்டு நாயக்கர், ஆகியோர் நீலகிரி மலைப்பகுதியிலும்; குன்னூர், புலையர், மலைவேடர், பளியர், பள்ளியன், பள்ளேயன், மலசர், முதுவன்,

முடுவன்/முடுவர், மன்னான் ஆகியோர் ஆனைமலை, பழனிமலை பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

பழங்குடி மக்களின் இடப்பெயர்வு:

பழங்குடி மக்களிடையே பல்வேறு காரணங்களால் இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. ஆதிமனிதன் தன் வாழ்வியல் தேவைகளுக்காகவும், இயற்கை இடர்களினாலும், பிற இனக்குழுக்களுடனான மோதல்களாலும், சமூக விலக்கம் போன்ற இதர காரணிகளாலும் இடம் பெயர்ந்தான். சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்த சமூகங்கள் அரசியல், சமூக, பொருளாதார காரணங்களால் மலைப்பகுதிகளுக்குச் சென்று வாழத் தலைப்பட்டனர். காலப்போக்கில் அப்பகுதிகளிலேயே நிலைத்து வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு பழங்குடிச் சமூகங்களிடையே நிலவும் பழமரபுக் கதைகளைத் (Legends) தொகுத்துக் காணும்போது பெரும்பான்மையும் அரசியல் காரணங்களாலேயே இத்தகைய இடப்பெயர்வு நிகழ்ந்திருப்பதை அறிய முடிகிறது.

இதனையே,'ஒருகாலகட்டத்தில் இந்தியப் பழங்குடிகளில் பலர் நகர வாழ்க்கை வாழ்ந்தவர்களாகவும் பின்னர் அரசியல் சமுதாயக் காரணங்களில் ஒதுக்கப்படும் பழங்குடிகளாக வாழ்ந்து வருபவர்களாகவும் காணப்படுகின்றனர்' (பீ. நசீம்தீன், 1989:9) எனவும், `இப் பழங்குடி மக்கள் இடம் பெயர்ந்து சென்ற சூழல் வரலாற்று நூல்களில் பெருவாரியாகப் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. பழங்குடி இன மக்கள் பெருவாரியாக மலைகளில் வசித்து வருகின்றனர். இம்மக்களில் சிலர் ஆரம்பக் காலங்களில் தாழ்ந்த சமதள நிலங்களில் வசித்து வந்தவர்கள் என்றும் அரசியல் காரணங்களால் பயந்து மலைகளில் சென்று குடியேறிவிட்டனர் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்' (சு. தாமரைப்பாண்டியன், 2008:36) எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மன்னான், முதுவர், ஆறுநாடன், காணிக்காரர், பளியர், குறும்பர், மலைக்குறவர்கள், காட்டு நாயக்கர்கள், மலைவேடர்கள், குறிச்சன், தொதுவர்கள், கொண்டகாபு மற்றும் கொண்டரெட்டி, இருளர்கள் ஆகிய பழங்குடிகள் இடம் பெயர்ந்து சென்று வாழும் வரலாற்றை ஆய்வுகள் வழி அறியமுடிகிறது.

'மலையாளி' என்ற சொல் மலைகளில் வாழ்பவன் எனப் பொருள்படும். 'மலையை ஆள்பவர்' என்ற பொருளிலும் 'மலையாளி' என்ற சொல் வழங்கப்படுகிறது. கேரளாவிலுள்ள மலையாளி மக்களுக்கும் இவர்களுக்கும்

யாதொரு தொடர்புமில்லை. இம்மக்கள் சமவெளிப் பகுதிகளிலிருந்து மலைகளில் குடியேறியவர்களாவர்.

இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இடம் பெயர்ந்த 'காராள வேளாளர்' எனத் தம்மைக் கூறிக்கொள்கின்றனர். 'கார்+ஆளர்=கார்மேகத்தை ஆள்பவர்' எனப் பொருள்படும். (க.ஆ., 05.01.2014, செல்லமுத்து, 80, பெரியபக்களம்) 'எட்கர் தர்ஸ்டன் தனது நூலில் மலையாளிகள் என்போர் 15-ஆம் நூற்றாண்டின் போது போர் முதலிய காரணங்களால் காஞ்சிபுரத்திலிருந்து இடம் பெயர்ந்த வேளாளர்கள்' (எட்கர் தர்ஸ்டன், 1993:497) எனக் குறிப்பிடுகிறார்.

மலையாளி பழங்குடியினர் குறித்து தமிழ் லெக்சிகன் கூறும் கருத்துக்கள் 'மலையாளிகள், முகமதியர் தென்னாடு வந்தபோது காஞ்சிபுரத்தில் இருந்து சென்று சேர்வராயன் மலையிற் குடியேறிய வேளாளர் வகுப்பினர்' (தமிழ் லெக்சிகன் 5.3110)

'காராளர் என்பதற்குப் பழங்காலத்தில் இருந்த ஒரு முரட்டுச்சாதியர், சேலம், தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள மலைவாசிகளான ஒரு வேடச்சாதியர்' (தமிழ் லெக்சிகன் 2. 885).

தோற்றத் தொன்மங்கள்:
மலையாளிகள் பற்றிய தோற்றத் தொன்மங்களாக எட்கர் தர்ஸ்டன் 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' எனும் தன் நூலில் பின்வரும் குறிப்புகளைத் தருகிறார்.

'சேலம் மாவட்டக் கையேடு – எச்.லெ.பனு: 'தென்னிந்தியாவில் முகமதியர் ஆட்சி மேலோங்கியபோது காஞ்சிபுரத்திலிருந்து பத்துத் தலைமுறைகளுக்கு முன்னர் மலைப்பகுதியில் குடியேறியவர்கள். காஞ்சியை விட்டுப் புறப்பட்டு வரும்போது மூன்று உடன்பிறந்தோருடன் இவர்களின் முன்னோர்கள் வந்தனர். அம்மூவருள் மூத்தவன் சேர்வராயன் மலையிலும் இரண்டாமவன் கொல்லிமலையிலும், இளையவன் பச்சைமலையிலும் தங்கினர். மலையாளிகளின் தெய்வமான கரிராமன் காஞ்சியில் இருக்கப் பிடிக்காதவனாகப் புதியதொரு இடத்திற்குக் குடிபெயர்ந்தான், அவனைப் பின் தொடர்ந்து வந்த பெரியண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன் ஆகிய மூவரும் தங்கள் குடும்பத்தோடு புறப்பட்டுச் சேலம் மாவட்டத்திற்கு வந்து பெரியண்ணன் சேர்வராயன் மலைக்கும், நடுவண்ணன் பச்சைமலைகளுக்கும், அஞ்சூர் மலைகளுக்கும், சின்னண்ணன் மஞ்சவாடிக்கும் சென்று சேர்ந்தனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மலையாளிகளின் தோற்றம் - எப்.ஆர்.ஹெமிங்வே: இவர்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பூசாரியின் சந்ததியினர் ஆவர். அப்பூசாரி அந்நாட்டு மன்னனின் உடன் பிறந்தவன். தன் உடன்பிறந்தவனான மன்னனுடன் சண்டையிட்டுக் கொண்டு தன் மூன்று மகன்களுடனும் ஒரு மகளுடனும் இப்பகுதிக்கு வந்து சேர்ந்தான். இப்பகுதியை ஆண்டு வந்த வேடர்களும் வேளாளர்களும் புதிதாக வந்த இவர்களைத் தடுக்க முற்பட்டனர். எனினும் இருசாரருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் புதிதாக வந்தவர்கள் வெற்றிவாகை சூடி மலைப்பகுதிகளில் பரவத் தொடங்கினர். பெரியண்ணன் கைக்கோளர் சாதியிலிருந்தும், நடுவண்ணன் வேடர் சாதியிலிருந்தும், சின்னண்ணன் தேவேந்திர குலத்தவரான பள்ளர் சாதியிலிருந்தும் பெண்களை மணந்தனர்.

வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு கூறும் சவ்வாது மலையில் வாழும் மலையாளிகள் தம் தோற்றம் பற்றித் தெரிவிக்கும் விவரங்கள்: காஞ்சிபுரத்தைச் சார்ந்த கார்காத்த வேளாளர்கள் தங்கள் பெண்களைக் கவர்ந்து சென்ற வேடர்களைக் கொன்று இல்லங்களுக்குத் திரும்பினர். இவர்கள் இறந்துவிட்டதாகக் கருதி இவர்களது மனைவியர் விதவைக் கோலம் பூண்டு சாவுச் சடங்குகளை நிகழ்த்திவிட்டிருந்த காரணத்தால்

சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்களாக ஆகிவிட்டதை உணர்ந்தனர். இச்சூழ்நிலையில் இவர்கள் வேடர் சாதி பெண்களை மணந்தவர்களாகச் சவ்வாது மலையில் குடியேறிப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களாக மலையாளிகளின் மூதாதையர்கள் ஆகிவிட்டனர்.

தென்னாற்காடு மாவட்ட விவரக் குறிப்பு – பிரான்சிஸ் - தென்னாற்காடு மாவட்டத்தில் வழங்கும் வழக்கு வரலாறு: இம்மலைகளில் வேடர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களை மலையாளிகள் கொன்று அவர்கள் சாதிப் பெண்களை மணந்து கொண்டனர். இவர்கள் சாதித் திருமணங்களில் வேடர் சாதிக் கணவன் இறந்தபின் மணம் நிகழ்த்தப்படுகின்றது என்பதைக் குறிக்க இன்றும் துப்பாக்கியினைச் சுடுகின்றனர் எனக் கூறுகின்றனர்.' (எட்கர் தர்ஸ்டன், 1993:497-501).

`சென்னை மாகாண பழங்குடிகளின் சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிய அறிக்கை' எனும் நூலில் அய்யப்பன் குறிப்பிடும் தோற்றத் தொன்மம்: 'சாதி விலக்குக்கு உட்பட்ட பெரியண்ணன், நடு அண்ணன், சின்னண்ணன் ஆகிய மூவரும் முறையே கைக்கோளர், வேடர், பள்ளர் பெண்களை மணந்து முறையே கல்வராயன் மலை, பச்சைமலை, கொல்லிமலைப் பகுதிகளுக்கு வந்து குடியேறினர்' என தர்ஸ்டன் கூறியுள்ளதைச் சுட்டுகிறார் (A. Ayyappan, 2000 : 143).

தமிழகப் பழங்குடி வழக்காற்றியல் – கல்வராயன் மலைப் பழங்குடி மக்கள் எனும் நூலில் முனைவர் சி.நல்லதம்பி குறிப்பிடும் தோற்றத் தொன்மம்: 'காஞ்சிபுரத்திலிருந்து விசயநகர மன்னர்களின் காலத்தில் இடம் பெயர்ந்தவர்கள், பாலாற்றைக் கடந்து கல்வராயன் மலைப்பகுதியின் எல்லையில் அரியக் கவுண்டன் பாளையப்பட்டு பகுதிமலைகளில் குடியேறினார்கள். அவ்வாறு குடியேறியவர்கள் அங்கிருந்து சவ்வாது மலை, வத்தல்மலை, சேர்வராயன் மலை, பச்சைமலை, கொல்லிமலை போன்ற ஏனைய குன்றுகளுக்குச் சென்று குடியேறியிருக்கிறார்கள். மேலும், முகலாயர்களின் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்கள் கூட்டம் காஞ்சிபுரத்திலிருந்து பாலாற்றைக் கடந்து ஓடிச்சென்று கல்வராயன் மலைப்பகுதிகளிலும், பிற மலைப்பகுதிகளிலும் குடியேறியிருக்கிறார்கள். போரின் காரணமாகக் குடியேறியவர்கள் அங்குள்ள வேடர்குலப் பெண்களுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்'. (சி. நல்லதம்பி, 2011: 30).

'தருமபுரி மாவட்டப் பழங்குடிகள்' எனும் நூலில் தி. கோவிந்தன் குறிப்பிடும் தோற்றத் தொன்மம்: 'முன்னொரு காலத்தில் காஞ்சிபுரத்தில் ஸ்ரீவைஷ்ணவ கோத்திரத்தைச் சேர்ந்த காராளர் சிலர் வசித்து வந்தனர். இவர்கள் குலதெய்வம் கரிராமன் என்னும் கரிவரதராஜப் பெருமாள். இந்தக் குலதெய்வத்தை பூசாரிகள் (இருளர்) தூக்கிச் சென்றனர். சாமி கனவில் தோன்றி இச்செய்தியைக் காராளருக்குத் தெரிவித்தது. காராளர் ஒன்றுகூடி இறைவனைப் பிரார்த்திக்க இறைவன் அருள்பெற்று உற்சவரை எடுத்துச்சென்ற பூசாரியைப் பின் தொடர்ந்தனர். அவ்வாறு புறப்படும்பொழுது தங்கள் வீட்டில் நல்விளக்கேற்றி, நிறைகுடம் வைத்து ரோஜாப்பூப் போட்டு இறைவனை வழிபட்டுத் தங்கள் மனைவியரிடம் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நல்விளக்கு அணையும், நிறைகுடம் குறையும், பூ வாடும் என்று கூறிப் புறப்பட்டனர். அவர்களுடன் ஒரு நாயும் புறப்பட்டது. வழியில் பாலாற்றில் வெள்ளம் பெருகி வரவே, நாய் கரை கடக்க மாட்டாமல் வீட்டிற்குத் திரும்பியது. நாய் மட்டும் திரும்பி வரவும் தங்கள் கணவன்மார் வராததையும் கண்ட பெண்கள், தங்கள் கணவன்மார் இறந்ததாகக் கருதித் தீ வளர்த்து இறங்கினர். இந்தச் செய்தியும் சாமி மூலம் அவர்களுக்குத் தெரிந்தது. ஆனாலும் தங்கள் தெய்வத்தை மீட்பதற்காக அவர்கள் மேலே பயணம் செய்தனர். கரிராமன் கோயிலில் (கல்ராயன்) பூசாரிகளுக்கும் காராளர்கட்கும் போர் நடந்தது. பூசாரிகள் இறந்தனர். தெய்வம் தான் அமர்ந்த இடமே பெரிது என்று சொல்லிவிட்டதால் தெய்வத்துடன் காராளர்களும் தங்கிவிட்டனர். பூசாரிகளின் மனைவிமார்களைக் காராளர் மணந்தனர்.' (தி. கோவிந்தன், 1995: 24-25).

இத்தொன்மங்களிலிருந்து பெறும் செய்திகளின் அடிப்படையில் பின்வரும் பொதுவான கருத்தினை எட்டலாம்.

வ. எண்.	**மலையாளி பழங்குடியின உடன் பிறந்தோர்**	**மணம்புரிந்து கொண்ட பெண்கள்**	**தங்கிவிட்ட மலைகள்**
1	பெரிய அண்ணன்	கைக்கோளர்குலப் பெண்கள்	கல்வராயன் மலை/ சேர்வராயன் மலை
2	நடு அண்ணன்	வேடர் குலப் பெண்கள்	பச்சைமலை
3	சின்ன அண்ணன்	பள்ளர்/தேவேந்திர குலப் பெண்கள்	கொல்லிமலை

இவற்றை உறுதி செய்யும் விதமாகப் பல்வேறு சடங்கியல் நெறிமுறைகள் மலையாளி பழங்குடி மக்களின் வாழ்வில் காணப்படுகின்றன. மலையாளி பழங்குடி மக்களின் திருமண நிகழ்முறையில் ஒவ்வொரு உறவினருக்கும் வெற்றிலை பாக்கு வைத்து திருமணத்திற்கு அழைப்பு வைக்கப்படுகிறது. இதனை 'பாக்கு பரி' என்பர். முதல் அழைப்பு நாட்டுக் கவுண்டனுக்கு வைக்கப்படுகிறது. இரண்டாவது அழைப்பு ஊர்க் கவுண்டன் மற்றும் ஊர் மூப்பனுக்கு வைக்கப்படுகிறது, மூன்றாவது அழைப்பு அண்ணன் தம்பி பாக்கு என அழைக்கப்படுகிறது. கல்வராயன், பச்சைமலை, கொல்லிமலைகள் இருக்கும் திசை நோக்கி தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு வைத்துக் காட்டி திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்து வணங்கப்படுகிறது. அதன் பின்னரே மற்றவர்களுக்கு வைக்கப்படுகிறது. (க.ஆ. 13.06.2010, அழகுமுத்து, 30, பெரிய பழமலை).

திருமணச் சடங்கின்போது கூறப்படும் 'வேடன் பொண்டாட்டி இனி காராளன் (உழவன்) பொண்டாட்டி' என்பதிலிருந்து, இவர்கள் வேடர் குலத்தவர்களை அழித்து அவர்களுடைய மனைவியரை மணம் புரிந்தது தெரியவருகிறது. கல்வராயன் மலை மலையாளிகள் மத்தியிலும் இம்முறை வழக்கிலுள்ளது.'

“மணமகளும் அவரது தோழியர்களும் ‘வேடனை விட்டுக் காராளனைக் கைப்பிடித்தோம் என்று கூறுகிறார்கள்’ (சி. நல்லதம்பி 2011:88).

பச்சைமலை மலையாளிகளின் திருமணப்பந்தலுக்கு முன் ஓர் இரும்புக் கம்பி நடப்படுகிறது. வேடர்களின் தீய ஆவிகளின் தொந்தரவிலிருந்து இது பாதுகாக்கும் என நம்பப்படுகிறது.

இத்தோற்றத் தொன்மங்களிலிருந்து, போர் முதலிய காரணங்களால் காஞ்சிபுரத்திலிருந்து வந்த காராள வேளாளர்கள், கல்வராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலை பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வ குடியினரை அழித்து அவ்வினப் பெண்களை மணந்ததால் தோன்றிய கலப்பினத்தவரே மலையாளி பழங்குடியினர் என அறியமுடிகிறது. இந்த இடப்பெயர்ச்சி நிகழ்வையே தம் வரலாறாக இம்மக்கள் கூறி வருகின்றனர். இவற்றையொத்த கதைகளும் / தொன்மங்களும் தமிழ்நாடு / இந்தியாவிலுள்ள பல்வேறு சாதிகளிடத்தும் காணப்படுகின்றன.

துணை நூற் பட்டியல்:

1. நசீம்தீன்.பீ., இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல், அன்னம், சிவகங்கை, முதற்பதிப்பு-1989.

2. எட்கர் தர்ஸ்டன் தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி-4 (மொ.பெ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு-1993.

3. கோவிந்தன்.கி., தர்மபுரி மாவட்டப் பழங்குடிகள், ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை, தருமபுரி, முதற்பதிப்பு-1995.

4. தாமரைப்பாண்டியன்.சு., தென்தமிழக நாட்டுப்புற வழக்காறுகளில் இடம் பெயர்வு, அருள் பதிப்பகம், சென்னை-78, முதற்பதிப்பு-2008.

5. நல்லதம்பி.சி., தமிழகப் பழங்குடி வரலாற்றியல் கல்வராயன் மலைப் பழங்குடி மக்கள் புலம், சென்னை-5, முதற்பதிப்பு-2011.

6. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம், புத்தாநத்தம்-621310, விரிவாக்கப்பட்ட முதற்பதிப்பு-2013.

7. Ayyappan.A., Report on the socio-economic conditions of the Aboriginal tribes of the province of Madras, The Commissioner of Museum, Chennai-8, 2000.

தகவலாளர்கள்:

1. செல்லமுத்து, ஆண், 80, பெரியபக்களம், விவசாயம், நாள் 05.01.2014.
2. அழகுமுத்து, ஆண், 30, பெரியபழமலை, விவசாயம், நாள் 13.06.2010

தொடர்பு: **ம. செல்வபாண்டியன்** (mselvapandiyan@gmail.com)

27. Kavari in Tirukkuṟaḷ and Sangam Texts

— Dr. N. Ganesan

Kavari in Tirukkuṟaḷ and Sangam Texts: Dravidian word for Gauṛ bison and Tibetan yak

Dr. Nagamanickam Ganesan

Houston, Texas, USA

Abstract: In Tolkāppiyam, solitary male mammals of the forest are listed in sūtra, Tol. *marapiyal 37*. Solitaires, called "*oruttal*", are those of deer, tiger, blackbuck, Nilgai antelope and gaur-buffalo roaming the forest alone in their peak of adolescence. In addition, crocodiles are included. For the wild bison (*Gauṛ*) and domestic buffalo, Tolkāppiyam gives the name, "*kavari*". Ancient Indians named Tibetan yak also as "*kavari*" because of its resemblances with *Gauṛ* bison. Sangam texts such as Puṟanāṉūṟu and Patiṟṟuppattu mention *kavari*, the Tibetan yak as well as *aṉṉam*, which are migratory geese superbirds crossing the mighty Himalayas twice annually to reach South India and return. Tirukkuṟaḷ 969 states that just as yak will die in the frigid weather of the Himalayas if it loses the thick fur coat, people will not survive if they lose honor in Life. Indologists remark that *kavari* 'yak' and related *camari* 'yak's tail, used as fan' do not have a clear etymology yet. This paper proposes a Dravidian source for these words derivable from *kōṭu* and its transformed form, *kavaṭi* (DEDR 1325 and 2200). Both *kōṭu* and *kavaṭi* have meanings, such as the branch of a tree, forked junction and horns of the cattle. Tribal people speaking non-literary Dravidian languages still wear the horns of the wild buffalo, and in ancient Indus Valley, deities are depicted with these horns. Several parallel examples are given to illustrate the transformation from -*ṭ*- *into* –r- as occurred in *kavaṭi* > *kavari*. Finally, Gaurī, female Gauṛa bison in Rgveda and wife of Varuṇa, is shown to be from Dravidian *kavaṭi*.

1.0 Classical Tamil Texts and North Indian Fauna

Ancient Sangam Tamil texts are well aware of North Indian places, their fauna and flora. They often mention the rivers like the mighty Ganges and Yamuna, and they also describe the lofty Himalayas. Mt. Potiyil, the abode of Avalokeśvara in Mahāyāna Buddhist texts, is mentioned. The Himalayas and Mt. Potiyil are paired together in one breath to state the Northern and Southern ends of India. The bar-headed geese and graylag geese coming to South India across the Himalayas during annual migrations are portrayed vividly in Sangam texts as *aṉṉam*. The ancient poets often wondered about them staying in the South only during winter, and never building nests or breeding in the South, but they go back to the Himalayas to lay their eggs and raise their chicks only to return the following year. Taking the case of crocodiles, five important words (*ghaṛiyāl, kumbhīra, makara*, *nakar* and *viṭaṅkar*) for crocodiles in the Northern rivers, Indus and Ganges, are shown to be of Dravidian origin. The river, Yamunā's name seems to be derived from yāmai 'turtle' which is the symbol of that river, while Gharial crocodile, variously called as *viṭaṅkar/nakar/ghaṛiyāl* is the symbol of the Ganges river.

Prof. Asko Parpola has derived both *ghaṛiyāl* and *kumbhīra***,** the names of Gharial crocodile in Sanskrit and Hindi, from Dravidian [1]. In Eastern Indian languages such as Bengali, Bihari, and Nepali, the name, *nakar* (Cf. Tamil *nakkar*) is used for the gharial (pg. 417-418, [2]). Representations of *makara* in early Indian art matches with the form of crocodiles very closely. The marsh crocodile (*Crocodylus palustris*) lives throughout the Indian subcontinent. The makara (> *magara* in Hindi) crocodile does 'high-walk' for

short distances when it comes to the banks of rivers and lakes. This *makara/magara* marsh crocodile has four strong feet, and these are explicitly shown in the following Indus valley sign, and he connects the sign with Proto-Varuṇa: “In Taittirīya Āraṇyaka 2,19, the heavenly crocodile is called "the lord of all beings (*bhūtānām adhipatir*)", an appellation which further supports identification of this **kaṇ-kāṇi* 'overseer' with the Harappan predecessor of Varuṇa.” Compare the Indus crocodile sign with the pictogrammatic Chinese reptile radical sign, 豸 and in Japanese, the "reptile radical" *ashinakimushi hen*. In English, the marsh crocodiles are called as “mugger” and dictionaries trace “mugger” ultimately to be of Dravidian origin. The most important words for 'crocodile' in South Asian languages have a Dravidian etymology. Austro-Asiatic, on the other hand, does not seem to have any relation to the terms for 'crocodile' used more widely in South Asia [3].

An entire decad of songs is in Tēvāram by Sundarar on the naked mendicant, Śiva enticing women. The commentators explain that this chapter in Tēvāram refers to the episode vividly portrayed in Liṅgapurāṇa. V. M. Subramania Aiyar wrote: “This decade was composed as the words of those ladies who fell in love with the fascinating beauty of Civaṉ when he went begging and were afraid of coming into contact with his form; this idea is mentioned by Cuntarar himself in the last verse.” It is important to note that in each of the verses, Śiva is called Viṭaṅkar. Obviously, the Tamil term viṭaṅkar (cf. iṭaṅkar) cannot be split as vi+ṭaṅka 'one made without the use of the chisel', which is just a folk etymology to assign a pure Tamil word’s origin to Sanskrit. Like nīra ‘water’, nīla ‘blue color’ in all Indian languages from Dravidian, we have alternation of –l-/-r- in vār- “to pour, to flow down, a long belt” etc., as vāl/vālam ‘tail of birds, animals’. From the same root, with the loss of word-initial v-, āli- (< vāli-) is hailstones, rain drops. Some more examples of v- loss: indu/vindu ‘drop, seed’, iṭi/viṭuku ‘thunder’, āli/vāli ‘rain drops’, aḷai/vaḷai ‘hole’, iḻutu/viḻutu ‘fat, ghee’. Similarly, viṭaṅkar ‘gharial’ loses the v- and is attested as iṭaṅkar ‘gharial’ in Sangam texts. Note that iṭi, āli-, aḷai, iṭaṅkar are in Sangam but their root words viṭi (= viṭuku, Pallava royal title), vāli-, vaḷai, viṭaṅkar respectively are attested in post-Sangam period. The word, indu (< vindu) is attested even in Rgveda itself. Without considering these root words beginning with v-, it is impossible to explain the origin of these words in Sangam which is a rather small corpus. In old Tamil texts, *viṭai* refers to the virile male of animals - bovids, caprids, antelopes, elephants. It is a verbal noun from *viṭai*- 'to enlarge, to thicken, to stiffen up, to stand with pride’ (also *viṟai-/viṭai-*, cf. DEDR 5439) [4].



Figure 1. Indus sign number 87 (Crocodile – identification by Parpola, [1])

In classical Tamil texts such as Puṟanāṉūṟu, Patiṟṟuppattu, Tolkāppiyam grammar and Tirukkuṟaḷ, the word, kavari occurs with the meaning of buffalo, Indian bison or Tibetan yak. Some examples can be given:

(1) kavir tatai cilampil tuñcum kavari
parantu ilaṅku aruviyoṭu narantam kaṉavum
āriyar tuvaṉṟiya pēricai imayam
teṉṉaṅ kumariyoṭu āyiṭai

maṉmīk kūṟunar maṟam tapak kaṭantē (Patiṟṟuppattu 11).

Yak sleeping on Himalayan slopes full of coral flower trees, dream of and chew the *narantam* grass they ate, and of wide waterfalls from which they drank, in the well renowned Himalayas where Aryans live. In the land between that mountain and southern Kumari, you have ruined the strength of arrogant kin.

(2) narantai naṟum pul mēynta kavari

kuvaḷai paim cuṉai paruki ayala (Puṟanāṉūṟu 132:4-5)

In the North, on the sky-high Himalayas, a yak enjoys eating oranges and grazes on *narantam* grass, drinks from a nearby pool.

(3) mayir nīppiṉ vāḻāk kavari māvaṉṉār

uyir nīppar māṉam variṉ (Tirukkuṟaḷ 969)

Just like the Tibetan yak perishing in the frigid weather of the Himalayas if it loses the thick fur coat, people will not survive if they lose honor in Life. It is essential to maintain Honor at all costs.

Often, the classical texts use the word, *kavari* or *veṇ-kavari* (white kavari), the fur from Yak buffalo, as the fan bristles waved in front of chieftains and deities, and used as decoration on the head of horses and above the ears of elephants.

(1) vēntu vīcu kavariyiṉ pū putal aṇiya (Naṟṟiṇai 241:6)

(2) muracu uṭaic celvar puraviccūṭṭu

mūṭṭuṟu kavari tūkki (Akanāṉūṟu 156:1-2)

(3) kavari mucci kār viri kūntal (Patiṟṟuppattu 43:1)

The white *kavari/cavari* from yak-cow hybrids of Nepal are highly valued in Indian temples. These hybrids themselves are called "*cauri*" in Nepal, and live in the transition zone between Tibetan yaks and Indian cattle. In Tamil, *cavari/cauri/camari/cāmarai* (< kavaṭi/kōṭu) is a braid, fillet of hair, plaited hair, bushy tail of the Tibetan yak used as false hair or set in decorated handle and used as a fly-flap or fan before an idol or a great personage. Cauri hybrids are comparable to gaur-cow hybrids seen in the sculptures of Indus Valley Civilization, and Sangam texts call these hybrids or gaur themselves as *āmā* 'cow-like animal'.

Figure 2. Cauri, yak-cow hybrid in Nepal

Tolkāppiyam grammar uses the mammal name, *kavari*, with interesting semantics. "*pulvāy puli uḻai maraiyē kavari colliya karāmoṭu oruttal oṉṟum*" (Tol. Poruḷ. Marapiyal). In this sūtra, the male solitary animals of spotted deer, tiger, blackbuck, Nilgai antelope, gaur-buffalo and crocodile have a name: *oruttal*. Later sutras mention another name for their males as *ēṟu*, and the females are called *piṇai*.

2.0 Significance of Kōṭu 'horn' of bison and buffalo in ancient India

The ancient Dravidian people thought of the buffalo, especially in the wild, and its cultural equivalent, the Indian gaur bison as ferocious and worthy of adulation. The Indus seals of Gharial crocodile as Master of Animals display two bisons interlocking their horns, thus providing an artificial crown of horns to the crocodile.

Figure 3. Crocodile god with Bisons providing horns (Mohenjadaro seal)

In another seal from Mohenjadaro, a little girl, wearing a ponytail and a skirt, is being thrown outwards by a powerful buffalo (R. Mackay, 1938) [5]. The same girl seems to be shown five times on a single seal from Banawali, with the intent to capture the ferociousness of battle and different stages in the war. Indus seals often depict divinities with buffalo horns. In historical times, a bison head is seated on the throne to denote Buddha, and in coins, it is shown as a royal symbol. Because of the high importance assigned to the horns of the wild buffalo and bisons in Dravidian cultures, these bovids get their name as *kavari* derivable directly from *kōṭu* 'horn'. By similarity with the shape, size and color, Himalayan yaks are named as kavari in Tamil. It is noteworthy that the prominent dorsal shape of both Indian gaur bison and Himalayan yak are quite comparable.

Figure 4. Yak grazing (dorsal comparable with Gaur)

3.0 *Gauṛa* and *Kavari* – Related names of Indian bison and buffalo

Dravidian Etymological Dictionary entries, DEDR 1325 and 2200, show the relationship between words, *kōṭu* and *kavaṭu* with almost identical semantic clustering. The meanings are horn, hump, fork like branches of a tree or road junction, and bivalve shell-fish.

DEDR 2200 Ta. kōṭu (in cpds. kōṭṭu-) horn, tusk, branch of tree, cluster, bunch, coil of hair, line, diagram, bank of stream or pool; kuvaṭu branch of a tree; kōṭṭāṉ, kōṭṭuvāṉ rock horned-owl (cf. 1657 Ta. kuṭiñai). Ko. ko·ṛ (obl. ko·ṭ-) horns (one horn is kob), half of hair on each side of parting, side in game, log, section of bamboo used as fuel, line marked out. To. horn, branch, path across stream in thicket. Ka. kōḍu horn,

tusk, branch of a tree; kōṟ horn. Tu. kōḍů, kōḍu horn. Te. kōḍu rivulet, branch of a river. Pa. kōḍ (pl. kōḍul) horn. Ga. (Oll.) kōr (pl. kōrgul) id. Go. (Tr.) kōr (obl. kōt-, pl. kōhk) horn of cattle or wild animals, branch of a tree; (W. Ph. A. Ch.) kōr (pl. kōhk), (S.) kōr (pl. kōhku), (Ma.) kōr̥u (pl. kōẖku) horn; (M.) kohk branch (Voc. 980); (LuS.) kogoo a horn. Kui kōju (pl. kōska) horn, antler. Cf. 2049 Ta. koṭi. DED (N) 1824

DEDR 1325 Ta. kavar (-v-, -nt-) to separate into various channels, deviate, depart from instructions; churn (or with 1340); (-pp-, -tt-) to branch off (as roads), fork, bifurcate; n. bifurcated branch (as of tree or river), prong; kavarppu forking, bifurcation; kavarpu differing; kavaṭu branch of tree, forked branch, separation, division; kavaṭṭi, kavaṭṭai fork of a branch, branching root; kavuṭṭi space between the thighs; kavalai forking of branches, place where several ways meet; kavai (-pp-, -tt-) to fork (as a branch); n. division, cleavage (as of hoof, a crab's claws), branch of a tree, forked stick, crossroads; kavam, kavvam churning stick; kavvu fork of a branch or horn; kappu forked branch, branch, bough, cleavage, cleft; kappi (-pp-, -tt-) to fork as a branch. Ma. kava forked branch, space between the legs; kavekka to stand astride; kavaṭi pitch-fork; kavaṭṭa the forked branch of a tree; kavaram, kavar bifurcated branch or shoot, prong of a pitch-fork; kavarikkuka to shoot forth as a forked branch; kavala place where two roads meet; kappu bifurcated branch. Ko. kav forked stick, fork of branch; kavc go·l forked stick used as potholder; kavṛ forked branch. To. kafyforked stick, double peak of a hill, hair of a god or of priest of ti·-dairy. Ka. kaval to become bifurcated or forked, branch off; n. bifurcation, forked or lateral branch, forked stick, divided state, couple, pair; kavate forked state; kavaḍu, kave = kaval n. Tu. kaba space between the fingers; kabarů forked or lateral branch, forked stick; forked; kabe forked stick; cloven, forked; (B-K.) kappu fork of a wooden post. Te. kava pair, couple; kavalu twins; kavvamu churning stick. Go. (S.) kava churning stick (Voc. 596). Malt. kapli a pair of branches, horns or antlers. DED(S, N) 1113.

The leap-frogging game of kavaṭi, where the raider holds his breath while chanting "kavaṭi, kavaṭi". The anti-raiders try to form "forks" around him and try to catch and overpower him. This is a national sport in many Indian states, including Tamil Nadu and Andhra Pradesh.

In Sangam poetry, there is a wild grass and grain called kavaṭi which does not yield good grains to eat. In Sangam poems, and in later Imperial kings' times, when enemies are vanquished, donkeys were tied in ploughs and the kavaṭi (Eleusine indica) and horsegram were sowed for planting. The intent is that the enemy lands should go waste. Kavaṭi grains look like forks coming together at a point, and hence its name. Kavaṭi is called *veḷḷai varaku* which is not productive as a food grain, but *kēḻ varaku* (= rāgi, E. coracana) is an important food millet. Eleusine indica is closely related to Eleusine coracana (finger millet or African finger millet), and the diploid E. indica is likely an ancestor of the allotetraploid E. coracana.

There are many examples in Dravidian where -ṭ- gets transformed into –r-. They include (i) nāḷam/nāṭi ‘vein, reed’ > nār/narampu, (ii) kōṭīra ‘crown’ > kurīra , a Vedic word from Dravidian according to F.B.J. Kuiper (iii) galgala/kalkala ‘wheel’ (Sumeria) > kakkaḷa/kakaṭa > cakaṭa/śakaṭa ‘wheel’, and by extension means an ox-cart also. In addition, *kakkaṭa gives birth to cakkara ‘wheel’ in Dravidian (= cakra, in Sanskrit). The phonemic Tamil script requires doubling –kk- to get the unvoiced pronunciation whereas –k- is sufficient for it in Hindi-like phonetic scripts. Similarly, we see kavaṭi > kavari for bison, buffalo and yak in Tamil and other Indic languages.

It is becoming increasingly clear that Indus civilization was not created by Munda community, and it did not have Munda language speakers, as Munda linguistic expansion into Eastern Indian states like Meghalaya or Orissa took place only 3500 years ago from South East Asia [6]. Many words exhibiting k-/ś- relationship word-initially in Sanskrit can be shown to be from Dravidian and do not exhibit ancient Munda substratum in Bronze Age Indus civilization. Taking the case of kombu/kambu > śambu which even today means shell-fish species like clams, oysters, bivalves, mussels that can be split into two just like horns of cattle, forking branches. By comparison with the shape and black color of clams and mussels, the jambu (< sambu) fruit is so named. A famous epithet of Śiva is “kapardin” having braids split into half which directly follows from kavaṭi/kavari [7]. As in the change of śambu/sambu > jambu

(Cf. jambu-dvīpa, [8]), the voicing of kavaṭi/kavari > gavaṛi/gauri "Indian bison" has happened in Rgveda. It is to be noted that the Indo-Iranian term, gaura-khar as sveta-gardhabha "white onager or wild asses" is different from gavaṛi/gauri < kavaṭi/kavari of Dravidian. Neither the buffalo nor the bison is white or pale in color. In fact, in Tamil bhakti period literature, Gauri is said to be black in color which is the natural color of buffalo and bison. In sum, gauri/kavari from *kōṭu* highlights the Dravidian cultural significance attached to the powerful bovid mammals and has a long history in the twin classical languages of India, i.e., Tamil and Sanskrit.

4.0 References:

(1) Asko Parpola, Crocodile in the Indus Civilization and later South Asian tradition, 2011, Kyoto, Japan. 53 p.

(2) J. Inglis, Tent Life in Tigerland, London, 1892. 690 p.

(3) N. Ganesan*, A Dravidian Etymology for Makara – Crocodile*, Prof. V. I. Subramanian Commemoration Volume, Int. School of Dravidian Linguistics, 2011. https://archive.org/details/MakaraADravidianEtymology2011

(4) N. Ganesan, Indus Crocodile Religion as seen in the Iron Age Tamil Nadu, 16th World Sanskrit Conference Proceedings, Bangkok, Thailand, 2016. https://archive.org/stream/IVCReligionInIronAgeTamilNaduByNGanesan-2016-16thWSC/IVC_Religion_in_IronAge_TamilNadu_by_NGanesan_2016_16th_WSC#page/n0/mode/2up

(5) On the little girl being tossed away by the mighty buffalo in mythological scene from Mohenjadaro and Banawali. http://nganesan.blogspot.com/2008/01/eru-tazuval.html

(6) Roger Blench, Reconstructing Austroasiatic prehistory, Chapter in Jenny, M. & P. Sidwell (eds.) 2015. Handbook of the Austroasiatic Languages. Leiden: Brill. http://www.rogerblench.info/Archaeology/SE%20Asia/Blench%20AA%20prehistory%20final.pdf

(7) Asko Parpola, Sanskrit kaparda- 'braided hair': Yet another Harappan symbol of royalty surviving in Vedic "Vrātya rituals" in "The volatile world of sovereignty: The Vratya problem and kingship in South Asia." Pontillo, T., Bignami, C., Dore, M. & Mucciarelli, E. (eds.). New Delhi: D. K. Printworld.

(8) N. Ganesan, Some K-initial Dravidian loans in Sanskrit: Preliminary Observations on the dominant Indus Language. March 2017, The Second International Meeting on Indus Epigraphy, Victoria, BC, Canada. Indus Valley Civilization Seminar organized by Bryan Wells, Steve Bonta and Andreas Fuls.

Contact: **Dr. Nagamanickam Ganesan** (naa.ganesan@gmail.com)

28. கவிதை: பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி

– ருத்ரா இ.பரமசிவன்

"பாலை பாடிய பெருங்கடுங்கோ" அகநானுற்றில் "பாலை"பற்றிய காட்சிகளை மிக நுண்ணிய அழகுடன் பாடியிருக்கிறார். ஒரு பாடலில் (பாடல் எண் 5) "பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி," என்று கொத்துக்கொத்தாய் கண்ணாடி (கோலிக்குண்டு)போலக் காய்த்திருக்கும் அந்த அழகை அப்படியே படம்பிடித்திருக்கிறார்.

நான் கல்லிடைக்குறிச்சி தாமிரபரணி ஆற்றுக்குக் குளிக்கச்செல்லுகையில் வழியில் உள்ள திருவாவடுதுறை "ஆதீன"த்தோப்பில் உள்ள நெல்லி மரத்தின் நெல்லிக்காய் கொத்துக்களைக்கண்டு கிறங்கிப்போய் நின்றிருக்கிறேன். "கோலி" விளையாடும் பருவம் அது. அந்த ஒவ்வொரு நெல்லிக்காயும் பளிங்கு கோலிக்காய் போலத்தோன்றும். கடைகளில் கண்ணாடி சீசாவில் அழகு அழகு வண்ணங்களில் பளிங்குக்கோலிக்குண்டுகள் விற்பார்கள். அதில் ஆறேழு குண்டுகளை வாங்கி என் கால் சட்டைப்பைக்குள் பதுக்கிய பின் தான் நிம்மதி பெறுவேன்.

முளிந்த ஓமை முதையல் அம் காட்டுப்
பளிங்கத்தன்ன பல் காய் நெல்லி
மோட்டு இரும் பாறை ஈட்டு வட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் ....

[அகநானுறு 5, சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ, பாலைத் திணை, தலைவன் தன் நெஞ்சிடம் சொன்னது]

"அந்த அழகிய பழங்காட்டின் பட்டுப்போன ஓமை மரங்களிடையே நெல்லி மரத்தின் பளிங்கு போன்ற நெல்லிக்காய் கொத்துகள் அங்குள்ள உயர்ந்த பாறையில் சிறுவர்கள் விளையாடும் கழற்காய்கள் போல உதிர்ந்து கிடக்கும்" என்பதே அவ்வடிகளின் பொருள்.

ஆம் இதை என்னைப்போன்ற சிறுவர்களுக்காகவே பாடியிருக்கிறார்.

அன்று அந்த அகநானூற்றுப்பாடலில் "பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி," வரிகளைப்பார்த்ததும் "பாலைபாடிய பெருங்கடுங்கோ" எனக்காகவே அந்த வரியை மின்னலாய் பாய்ச்சியதாய் உணர்ந்தேன். அப்போது உடனே

"பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி," என்ற தலைப்பில் எழுதிய சங்கநடைச்செய்யுட் கவிதையே இது. இதில் தலைவிக்கு அந்த பளிங்கத்துக் காய்கள் ஒவ்வொன்றிலும் தலைவனின் அன்புமுகம் சுடர் விடுவதாகத் தோன்றுகிறது என்று தோழி சொல்லுகிறாள்.

பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி

-- ருத்ரா இ பரமசிவன்.

வேழம் பிழிதர புடை பெயர்ந்து
நீள் குடுமிப்பெருங்கல் சிவணிய வீழ்ந்து
புல்லிய பாசிலை இன் நீர் தடவ
சுரும்பும் மாந்தி மடி கொண்டாங்கு
அடுத்த வேழம் தூம்புக்கை நீட்டும்
சிறு கண் வியப்ப அதிர வியர்க்கும்
கான் மலி இருளிடை அவன் முகம் ஒளித்த
"பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி"
ஊழ் ஊழ் உகுக்கும் வால் நுதல் மழைக்கும்!
உன்னுள் ஒலிக்கும் மணி நா நடுங்கும்
அவன் அணித்தேர் ஆண்டு அசைஇ வருமென
மென் பூஞ்சேக்கையும் புண் ஆகியதோ
புரள் தரு புரள் தரு நின் பெயர்ச் செயலால்.
நாகம் தந்த பாலிழை கலிங்கமும்
சுடு நிலை தாளா வெம்மையூட்டிய
நோவு நுடங்கி அறைபடு அறையில்
ஆயிரங்கண் காட்டிய கிழி மை வானென
ஆற்றாது கிடந்தாள் அளியள் ஆங்கே.

பொழிப்புரை:

வேழம் பிழிதர புடை பெயர்ந்து
நீள் குடுமிப்பெருங்கல் சிவணிய வீழ்ந்து
புல்லிய பாசிலை இன் நீர் தடவ
சுரும்பும் மாந்தி மடி கொண்டாங்கு
அடுத்த வேழம் தூம்புக்கை நீட்டும்
சிறு கண் வியப்ப அதிர வியர்க்கும்

தலைவன் பொருள்தேடி செல்லும் காட்டுவழியில் குத்துக் குத்தாய் முளைத்திருக்கும் கரும்புகள் அருகில் உள்ள ஒரு நீண்ட திரண்ட பெருங்கல் ஒன்று இடம் பெயர்ந்து அவற்றின் மேல் விழுந்து பொருந்தி நசுக்கியதால் அருகில் உள்ள இலை தழைகளில் எல்லாம் இனிய நீர் இழைந்தோடியது. அதை வண்டுகள் அருந்தி மயங்கின. அருகில் வந்த ஒரு யானை தன் தும்பிக்கையை நீட்டிச் சுவைக்க முற்பட்டது. அந்த அடர்ந்த இருட்டு சூழ்ந்த காட்டில் அது தன் சிறுகண் கொண்டு வியந்து நோக்கி விதிர் விதிர்த்தது.

கான் மலி இருளிடை அவன் முகம் ஒளித்த
"பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி"
ஊழ் ஊழ் உகுக்கும் வால் நுதல் மழைக்கும்!

பொருள் தேடிச்செல்லும் தலைவனைக் கற்பனையில் இக்காட்சிகளிடையே காணும் தலைவி அங்கே உள்ள ஒரு நெல்லிமரத்துக்கிளையில் பளிங்கு உருண்டைகள் போல் தோன்றும் அந்தக் கொத்து கொத்தான நெல்லிக்காய் ஒவ்வொன்றிலும் தலைவனின் சுடர் பூத்த முகத்தைக்கண்டாள். அவளது நெற்றி முத்து முத்தாய் வியர்வைத்துளிகளை மழைபோல ஒவ்வொரு கணம் தோறும் உதிர்த்துப்பொழியும்.

தோழி இப்படிச் சொல்லிக்கொண்டே போகிறாள். மேலும் தலைவியிடம் கேட்கிறாள்.



உன்னுள் ஒலிக்கும் மணி நா நடுங்கும்
அவன் அணித்தேர் ஆண்டு அசைஇ வருமென
மென் பூஞ்சேக்கையும் புண் ஆகியதோ

"உன் உள்ளத்துள் உன் தலைவன் திரும்பி வருவது கேட்கிறதோ? தேரின் மணியின் நாவொலி நடுங்க இதோ வந்து விட்டான் என்று காதல் நோயால் நீ புரண்டு புரண்டு படுத்து மெல்லிய பூங்கட்டிலும் புண்ணானதோ?"

மேலும் அவள் நிலை கண்டு துயரத்துடன் கூறுகிறாள்.

புரள் தரு புரள் தரு நின் பெயர்ச் செயலால்.
நாகம் தந்த பாலிழை கலிங்கமும்
சுடு நிலை தாளா வெம்மையூட்டிய
நோவு நுடங்கி அறைபடு அறையில்
ஆயிரங்கண் காட்டிய கிழி மை வானென
ஆற்றாது கிடந்தாள் அளியள் ஆங்கே.

"கப்பலில் தருவிக்கப்பட்ட பால்போன்ற அவள் மெல்லிழைப்பட்டாடையும் காதல் வெப்பம் தாங்காது துவளுகின்றதோ? அத்துணி பாறையில் அறைந்து துவைக்கப்படும்போது கந்தல் கந்தலாய் எப்படி ஆயிரம் கண் கொண்டு கிழிந்த கரும் வானத்தைப்போலக் கிடக்குமோ அது போலஅவள் நைந்து கிடந்தாள்"

படங்கள்: இணையத்திலிருந்து

___

தொடர்பு:: கவிஞர் ருத்ரா இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

29. கவிதை: கொடுவரி முதலை குடை தண் துறைய

— ருத்ரா இ.பரமசிவன்

தன் பார்ப்பு தின்னும் தழல் குமிழ்
தோலின் முதலை குடை தண் துறைய
குறிஎய்தி நெடுங்கங்குல் மடி தொலைத்து மாய
உடல் உயிர் தின்னும் உயிர் உடல் தின்னும்
பிணி தந்து கொளீஇ யாங்கு சென்றனை?
அம்பணத்தன்ன கவிழ் ஓமைப் புறத்து
அரிகுரல் குருகின் பரல் ஒலி ஒழுக்கத்து
வேங்கை வரித்த திண்கால் ஓமை
அசைவுறு காலை முரண்தர முரலும்
அதிர் ஒலி ஆர்க்க சிறை சிறை படுத்து
அலமரல் செய்யும் அயற்சினை சேரும்
எக்கர் மருங்கின் காட்சிகள் ஏய்க்கும்.
எரியுண்ட குவளையன்ன அழிபடு நலன்கள்
ஆவி உண்ணும் அவிர்நிலை தீர்ப்பாய்.
ஒளி ஒளித்து ஊரும் முளிபெயர் மஞ்சும்
கதிர் விழி மறைக்கும் அடுபோர் அட்ட
இரும்பொறை நெஞ்சத்து நெக்கு வீழ்த்து
தழீஇய வருதி!அழல்படு அளியள் யானே

விளக்க உரை:

-- ருத்ரா இ.பரமசிவன்

தன் பார்ப்பு தின்னும் தழல் குமிழ் தோலின்
கொடுவரி முதலை குடை தண் துறைய
குறிஎய்தி நெடுங்கங்குல் மடி தொலைத்து மாய
உடல் உயிர் தின்னும் உயிர் உடல் தின்னும்
பிணி தந்து கொளீஇ யாங்கு சென்றனை?

தன் குட்டிகளையே தின்னும்முதலை.அது நெருப்புக்குமிழிகளும் வளைந்த வரிகளும் உடையது.அந்த முதலைகள் குடைந்து நீராடும் குளிர்ந்த நீர்த்துறைகள் உடையவனே. இந்த நீண்டநெடும் இரவில் நீ வருவாய் என

காத்திருந்து (குறி எய்தி) தூக்கம் தொலைத்து மாய்ந்து போக என் உயிர் என் உடலைத் தின்கிறதா?என் உடல் என் உயிரைத்தின்கிறதா? எனும் ஒரு வித நோயால் துன்புற்றேன். அந்நோயை எனக்கு தந்து விட்டு நீ எங்கு சென்றாய்?

அம்பணத்தன்ன கவிழ் ஓமைப் புறத்து
அரிகுரல் குருகின் பரல் ஒலி ஒழுக்கத்து
வேங்கை வரித்த திண்கால் ஓமை
அசைவுறு காலை முரண்தர முரலும்
அதிர் ஒலி ஆர்க்க சிறை சிறை படுத்து
அலமரல் செய்யும் அயற்சினை சேரும்
எக்கர் மருங்கின் காட்சிகள் ஏய்க்கும்.

மரக்கால் (அம்பணம்) எனும் ஒரு அளவைப்பாத்திரத்தை கவிழ்த்து வைத்தாற்போல் அசையாமல் கிடக்கும் பெரிய ஆமையின் முதுகுப்புறத்தின் மேல் ஓயாமல் ஒலித்து குரல் எழுப்பும் நாரையின்அந்த ஒலி மழையில் வேங்கை மரத்தின் வரிகள் போன்ற காலை உடைய ஆமை கொஞ்சம் அசைந்து கொடுக்க அவ்வேளை அந்த நாரை ஆமைக்கு உயிர் இருக்கிறதோ என்ற எண்ணத்தில் வேறுபட்ட குரல்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்து அங்கே மீண்டும் மீண்டும் பறக்கும். பிறகு பறந்து திரிந்து அருகில் உள்ள மரக்கிளைகளில் போய் அமரும்.இத்தகைய மணற்கரைத்திட்டுக் (எக்கர்) காட்சிகள் நம் கண்களை மயக்கும்.(அது போல் ஏமாற்றி செல்லுவதே உன் வழக்கம்).

எரியுண்ட குவளையன்ன அழிபடு நலன்கள்
ஆவி உண்ணும் அவிர்நிலை தீர்ப்பாய்.
ஒளி ஒளித்து ஊரும் முளிபெயர் மஞ்சும்
கதிர் விழி மறைக்கும் அடுபோர் அட்ட
இரும்பொறை நெஞ்சத்து நெக்கு வீழ்த்து
தழீஇய வருதி!அழல்படு அளியள் யானே.

மென்குவளை மலர் தீப்பற்றி எரிந்தால் எப்படியிருக்குமோ அது போல் என் அழகு நலன்கள் சிதைந்து அந்த வெப்பத்து ஆவி என்னை உண்ணும் அந்த அவிந்துபோகும் நிலையிலிருந்து எனைக்காப்பாய். பகலவன் ஒளியை ஒளித்து ஒளித்து ஊர்ந்து செல்லும் குழைவான மேகங்கள் அக்கதிரவனின் கண் பொத்தி விளையாடும்.ஆனால் அது அவன் என் மீது தொடுக்கும் கொடும் போர் ஆகும். இறுகிய பாறை போன்ற உன் உறுதியை என்னிடமா காட்டுவது? உள்ளம் இளகிய பசுந்தளிராய் என்னிடம் வந்து என்னைத்தழுவிக் கொள்வாயாக.அனல் பட்ட நிலையில் துடிக்கும் எனக்கு அன்பினை அருள்வாய்.

தொடர்பு:: கவிஞர் ருத்ரா இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

30. கவிதை: எங்கிருந்தாவது ஒரு புயல்

– ருத்ரா இ.பரமசிவன்



அது
வானத்திலிருந்து வந்து
விழுந்த
சுத்தமான ஒலித்துண்டுகள்
என்றார்கள்.
ஒலி என்றால்
அதை ஏற்படுத்திய
குரல் வளையின் தசைநார்கள்
யாருடையது
என்ற கேள்விகள் எழுந்தன.
கேள்விகள் கேட்டு
எச்சில் படுத்தாதீர்கள்
என்றார்கள்.
அது
மனித செவிகளுக்குள்
நுழைவதும்
மறுபடியும்
மனித நாக்குகளின்
உமிழ்நீர் தோய்ந்து
குரலாக வெளிவருவதும்
தீட்டோ தீட்டு என்றார்கள்.
அப்படியென்றால்
அது
எவ்வளவு புனிதம் வாய்ந்ததாய்
இருக்கவேண்டும்?
மனிதர்கள்
அதை "அறிவு"ப்புலன் கொண்டு
ஸ்பர்சிப்பதே
ஆபாசம் என்றார்கள்.
அதை "அஸ்பர்ஸயோகம்" என்று
ஒரு மாண்டுக ரிஷி
வறள வறள மந்திரம் சொன்னான்.
அது
அப்படியே
எங்கே எல்லாமோ போனது.
உள்ளூர்க்காரன்
அர்த்தம் தேடவே
பயந்தார்கள்.
வெளிதேசக்காரர்கள்
அந்த வெங்காயத்தோல்
உரித்தார்கள்.
இப்போது எல்லாம் புரிந்தது.
மனிதனுக்கு மனிதன்
யுத்தம் புரிந்தது...
இவன் சொன்னது அவனுக்கு
அதர்மம்.
அவன் சொன்னது இவனுக்கு
அதர்மம்.
ரத்தம் பீறிட்டு

வானத்தையே சிவக்க வைத்தது.
சோமாச்செடியை நசுக்கி நசுக்கி
கள் குடித்தது.
அதையே ஒருவனுக்கு
ஊற்றி ஊற்றிக் கொடுத்து
வெறி யேற்றி யுத்தம்
செய்யச்சொல்லி
மந்திரங்கள் குவித்தது.
வஜ்ராயுதங்கள்
மக்களைக் கொத்து கொத்தாய்
தலை கொய்தது.
அடுத்தவன் அணைக்கட்டுகள்
பொறாமையால்
அடித்து நொறுக்கப்பட்டது.
வெள்ளம் மனித இனத்தை
பூண்டற்று போகச்செய்தது.
எல்லாம் "ஸ்லோகங்களின்"
இரைச்சல்களால்
திரை போடப்பட்டன.
இந்த குட்டு உடைந்ததை
தெரிந்து கொண்டவர்கள் மட்டுமே
கடவுளின் புத்திரர்கள்.
இதை அறிய முற்படும்
மற்றவர்கள் காதுகளில்
ஈயத்தைக்காய்ச்சி ஊற்றுங்கள்
என்றார்கள்.
மனித சரித்திரத்தின்
அருவருத்த முகங்களைக்
காட்டும்
அவை இன்னும்
மனிதம் எனும்
வெளிச்சத்தின் மீது
சடங்கு சம்பிராயதங்களின்
கல்லறைகளாய்
அழுத்திக்கொண்டிருக்கின்றன.
எங்கிருந்தாவது
ஒரு இர்மா புயல் வேண்டும்
இவற்றை அடித்து நொறுக்க!

படம் உதவி: சமூக வலைத்தள
பகிர்வு.

தொடர்பு:: கவிஞர் ருத்ரா
இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

---

31. கவிதை: நண்பனே! நண்பனே! நண்பனே!

– ருத்ரா இ.பரமசிவன்

பெண்ணியத்தின் உரிமைக்குரல்
இது.
அது என்ன பெண்ணியம்?
பெருங்கடலில்
துளியைத்தேடினால்
அவளே தனியொரு பெண்!
அவள் கடல் அலைகளின்
மூச்சாக நிற்கும்போது
ஓ! ஆண் தோழனே
உன் காதல் பீலிகளைக்கொண்டு
அவளை
வருடிக்கொடுப்பதைக்காட்டிலும்
அவள் இதயச்சிமிழுக்குள்
உதிக்கும் ஓராயிரம் சூரியன்களுக்கு
முடிந்தால்
நீயும் உன் சிந்தனைகீற்றுகளை
தழல் பூத்துக்கொடு!
பத்தாம் பசலியாய்
"தெய்வம் தொழாள் கொழுநற்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என
ஒரு ஈசிச்சேர் கூட்டுக்குள்
அடைந்து கொள்ளாதே.
வள்ளுவர் சொன்ன உயர்வு நவிற்சி
அணியை
உன் சமுதாய முக மூடி
ஆக்கிக்கொள்ளாதே.
உனக்குப் பருப்பு சாம்பாரும்
கறிக்குழம்பும் அவள் சமைப்பது
இருக்கட்டும்!
சமுதாய எரிமலைக் குழம்பைக்கூட
அவள் அநாயசமாய்
சமைக்கத் தொடங்கிவிட்டாள்
என்பதை எப்போது புரிந்து
கொள்ளப்போகிறாய்?
உனக்கு அருகம்புல் மீசை
வரும்போது தான்
அவளும் "சமைந்து" நின்றாள்.
ஆம்..
மூளியாய் கிடக்கும் இந்த
மண்ணுக்கு
விழியின் இமையுரிக்க
அவளும் சமைந்து நின்றாள்.
இந்தச் சமுதாயம் பக்குவமாகச்
சமைக்கப்பட
ஒரு "பெண்ணிய சீற்றம்"
தேவைப்படுகிறது.
ஆண் நண்பனே
உன் ஆழ்மனத்து ஆதிக்க
வெண்கொற்றக்குடைகளை
ஒதுக்கிவைத்துவிட்டு
இந்தச்சீற்றத்தோடு சங்கமம் ஆகு!
பெண் என்பவள் வெறும்
கலித்தொகை அல்ல.
புலித்தொகையும் தான்.

ஒரு விடியலின் வீர விளிம்பை
அவள் ஒரு கோலம் போட்டு
அந்தத் தெருவாசல் மட்டும் அல்ல
உலகத்தின் எல்லா இருட்டு
மூலைகளுக்கும்
உயிர் வெளிச்சமாய் படர முடியும்.
பாலியல் உறவுகளை விட
பாலியல் நட்பே
நம் புதிய யுகத்தைப்
படைத்துக்காட்டும்!
அறிவு நுட்பத்தின் ஆட்சியில்
பெண் எனும் ஆண்
ஆளப்பிறந்தவளாய் ஆகப்போகும்
ஒரு பரிணாமம்
உன் இமையோரத்தின்
வெகு அருகில்
நங்கூரம் இட்டுக்கொண்டிருக்கிறது
பார்!
நண்பனே! நண்பனே! நண்பனே!

படம் உதவி:
http://tamil.thehindu.com/migration_catalog/9kucjr-ladies/ALTERNATES/FREE_160/ladies

____

தொடர்பு:: கவிஞர் ருத்ரா இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

____

32. கவிதை: மனிதம் சுடர்க!

– ருத்ரா இ.பரமசிவன்

நடந்து செல்.
நிமிர்ந்து செல்.
வானம் மட்டுமே உன்னை
இடிக்கும்.
அப்போதும் அந்த
வானத்தோடு கொஞ்சம் கிசு
கிசுத்துப்பார்.
அன்பும் அறிவுமே
இங்குக் கடல்கள்
இங்கு வானங்கள்
இங்கு விண்வெளி மண்டலங்கள்
என்று சொல்லிப்பார்
இப்போது
வானம் உன் காலடியில்.

உன் காலடிகள் தோறும்
அத்வைதம் தான்.
மானிடத்துள் கடவுளர்கள்.
கடவுள் எனும் பாஷ்யம்
பல்லுயிர் நேசமே.
இதில் வெட்டரிவாள்களுக்கும்
வேல் கம்புகளுக்கும்

இடமில்லை.
துப்பாக்கிகள் கூட
முறிந்து போகும்
சோளத்தட்டைகளே.
உலக மானிடம் என்ற
பேரொளியில்
சில்லறை மதங்கள்
வெறும் மூளித்தனமான
இரைச்சல்களே.
உன் கடவுள் என் கடவுள்
என்று ஜீவ அப்பத்தை
கூறு போட்டு
தின்னும் குரங்குகள் அல்ல
நாம்.
அது என்ன தான்
என்று
அறிவின் நுண்ணோக்கியிலும்
ஆய்வின் விண்ணோக்கியிலும்
உற்றுப்பார்த்துக்கொண்டே
இருக்க வேண்டும்.
இது தான்
என்று சமாதி கட்டும்போது
அதில் நசுங்கும்
சிற்றெறும்பின் குரல்
உன் காதுகளில் விழவில்லையா?
ஆம்..
அறிவு ஊர்ந்து செல்லும் இடங்கள்
எத்தனை எத்தனையோ?
அதன் தடம் தெரிந்தால் போதும்.
மாய சொப்பனங்களுக்கு
வர்ணங்கள் பூசாதே!
கலக்கங்களையும் அச்சங்களையும்
கல்வெட்டுகள் ஆக்காதே..
நகர்ந்து கொண்டே இரு.
சூரியன் ஆனாலும்
பூமி ஆனாலும்
புளூட்டோ ஆனாலும்
நகர்ந்து கொண்டேதான் இருக்கிறது.
நகர்ந்து கொண்டே இருக்கும்போது
தான்
நிற்கவும் செய்கிறீர்கள்.
அந்த இனர்ஷியா எனும்
அக ஈர்ப்பும் புற விடுப்பும்
சமம் ஆகும் ஒரு புள்ளியை
கணிதப்படுத்துவதில் தான்
விஞ்ஞானிகள்
தங்கள்
ஆயுட்காலங்களையெல்லாம்
தொலைத்து இருக்கிறார்கள்.
விருப்பு வெறுப்பு எனும்
உணர்ச்சிகள்
தீயாக உன்னைச்சூழ விடாதே!
சிவ உருவெளி எனும்
சச்சிதானந்தங்கள்
எல்லா மக்களும்
எல்லா மக்களுக்குமாக
வாழ்ந்து இன்புறுவதே.
வேறு நமைச்சல்களுக்கு
இடமில்லை.
எல்லா உயிர்களின்
ஊற்றுக்கண்ணும்
மனிதம் வழியாகத் திறக்கட்டும்.
அது திக்கெட்டும் பாயட்டும்.
மனிதம் வாழ்க!
மனிதம் சுடர்க!

தொடர்பு:: கவிஞர் ருத்ரா
இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

---

33. கவிதை: கோர(க்)ப்பூர்

– ருத்ரா இ.பரமசிவன்

இது என்ன கோரம்?
சில லட்சங்கள் பாக்கி
என்பதற்கா
இந்த மனிதப்பிஞ்சுகளின்
குரல் வளைகள்
திருகப்படவேண்டும்?

மார்க்ஸ் சொன்னார்
லாபம் ..லாபத்திற்கு மேல் லாபம்
(சூப்பர் ப்ராஃபிட்) தான்
இந்த அசுர முதலாளித்துவத்தின்
ரத்தம்.
அதற்கு
மனித ரத்தம் குடிப்பதே
தாராளமய பொருளாதாரம்.
மனிதர்கள் என்ன
சமுதாயங்கள் என்ன
எல்லாவற்றையும்
உறிஞ்சிவிடும் இந்த மிருகம்.
உலகத்து நகரங்களின்
பளபளப்பான கட்டிடங்கள்
கூட
அழகிய படமெடுத்த
பிரம்மாண்டமான
இந்த நாகப்பாம்புகள் தான்.

முதலாளித்துவம்
எவ்வளவுக்கு எவ்வளவு
அழகாயிருக்கிறதோ
அவ்வளவுக்கு அவ்வளவு அது
மானிட ஜனநாயகத்தின் நஞ்சு.
மனிதர்களே
உங்கள் மதங்கள் எல்லாம்
இந்த நச்சுப்பைகளைத்தான்
கர்ப்பப்பைக்குள்
வைத்திருக்கின்றன.
காவி மதங்களும்
அதில் தள்ளுபடியில்லை.

இந்தியாவின் பெரிய மாநிலத்தில்
நிகழ்ந்த
எவ்வளவு பெரிய கேவலம் இது?
கொத்து கொத்தாய்
ஏழு எட்டு பத்து என்று
எழுபதுக்கும் மேல்
பிஞ்சு உயிர்கள் பலியாகினவே!
இந்த எழுபத்திஒண்ணாவது
சுதந்திர தினத்தைக்கொண்டாட
இப்படி ஒரு குரூரமான
நிகழ்வு தான் நடக்க வேண்டுமா?
(இப்போது நூற்றுக்கும் மேல் பலி
)
தினந்தோறும்
எமனின் பாசக்கயிறு
அந்த ஆக்சிஜன் சிலிண்டர்களின்
கழுத்துக்களிலா வீசப்படவேண்டும்?
அந்த டாக்டர் கஃபீல் அகமது
தனி முயற்சி எடுத்து

எத்தனை உயிர்களைக்
காப்பாற்றியிருக்கிறார்!
காழ்ப்புணர்ச்சியில்
அவருக்கும் கூட எத்தனை
தொந்தரவுகள்?
அவர் முன்
உங்கள் பாரத ரத்னாக்கள் எல்லாம்
வெறும் கண்ணாடிக்கற்கள்.

மாய பிம்பம் பார்த்து
ஓட்டுகளை
மெட்ரோ நகரத்து "கம்போஸ்ட்
குப்பை" போல
குவிக்கும்
இந்திய குடிமகன்களே!
மத சாராயத்தைக் குடித்து
நீங்கள் மதி மயங்கியது போதும்.

படம் உதவி: www.hindustantimes.com/

____

தொடர்பு:: கவிஞர் ருத்ரா
இ.பரமசிவன் (ruthraasivan@gmail.com)

____

தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்வுகள்

மாணவர் மரபு மைய நிகழ்வுகள்
– முனைவர். சுபாஷிணி

தமிழ் மரபு அறக்கட்டளை - சங்கரலிங்காபுரம் அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளி தமிழ் மாணவர் மரபு மைய நிகழ்வு:

சங்கரலிங்காபுரம் அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளி **தமிழ் மாணவர் மரபு மையமும்**, உசிலம்பட்டி **எழில் அறக்கட்டளையும்** இணைந்து நடத்திய மரக்கன்றுகள் **நடும் விழா, மர விதைகளை மேற்கு மலைத்தொடர் அடிவாரத்தில் தூவும் விழா**!

பள்ளி மாணவர்களிடையே இயற்கை பாதுகாப்பு விழிப்புணர்ச்சியை மேம்படுத்தவும், மர விதைகளைச் சேகரிப்பது, மரங்களை நடுவது போன்ற செயல்களில் ஆர்வத்தை ஈடுபடுத்தும் வகையிலும் ஒரு நாள் நிகழ்வு ஒன்று தமிழகத்தின் மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, சங்கரலிங்காபுரம் எனும் சிற்றூரில் உள்ள அரசு ஆதிதிராவிட நல உயர்நிலைப்பள்ளியில் **31.08.2017 மதியம் 2:00 மணிக்கு** நிகழ்ந்தது. இந்த நிகழ்ச்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளையின் பள்ளி மாணவர் மரபு மையப் பொறுப்பாளர் ஆசிரியர் சி.மு.பாலச்சந்தர் ஏற்பாடுகள் செய்தார்.

தமிழ் மரபு அறக்கட்டளையும் எழில் அறக்கட்டளை உசிலம்பட்டி இணைந்து மாணவர்கள் முயற்சியில் செயல்படுத்திய மரம் நடும் விழாவில் 70 மரக்கன்றுகள் நடப்பட்டன.

த.ம.அ சங்கரலிங்காபுரம், மதுரை ஆதிதிராவிடர் உயர் நிலைப்பள்ளி மாணவர் மரபு மைய பொறுப்பாளர் திரு பாலச்சந்தர் மரக்கன்றுகளை நடும் விழா, விதைப்பந்துகள் தூவும் விழாவைச் சிறப்பாக செய்திருந்தார்.

ஏப்ரல் மாதம் தொடங்கி கிராமத்தில் பள்ளி மாணவர்கள் சேகரித்து வந்த சீமைக்கருவேல மரங்களின் விதைகளும் எரிக்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் பங்கு பெற்ற மாணாக்கர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினோம்.

இந்த நிகழ்வினை என் சார்பில் நேரில் சென்று த.ம.அ பிரதிநிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த **முனைவர் பேராசிரியர் ரேணுகாதேவி** அவர்களுக்கு என் தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நம்மைச் **சிறப்பித்த முனைவர் பசும்பொன் அவர்களுக்கும்** எனது நன்றி.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலித் சமூகப் பெண்களுக்கான சட்டம் தொடர்பான செய்திகளைப் பகிர்ந்து கொண்ட தோழர் எவிடன்ஸ் கதிர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இந்த நிகழ்ச்சிக்கு முதுகெலும்பு போல உழைத்த தோழர் பாலச்சந்தர் அவர்களது பணி சிறப்பானது. அவருக்கு எனது பிரத்தியேக நன்றி.

சென்ற ஆண்டு டிசம்பரில் எனது நேரடி வருகையின் போது இங்குப் பள்ளி அருங்காட்சியகத்தை - அதாவது தாவரவியல் அருங்காட்சியகத்தைத் துவக்கினோம். அதன் நீட்சியாக இப்போது இந்த நிகழ்வை முடித்திருக்கின்றோம்.

வனம் உயிர்ப்பிக்கும் விழா

வனம் உயிர்ப்பிக்கும் விழா

வனம் உயிர்ப்பிக்கும் விழா

Quick
Grid

Quick
Grid

Quick Grid

Quick Grid

அன்புடன்
முனைவர். சுபாஷிணி
[தமிழ் மரபு அறக்கட்டளை]
செப்டம்பர் 4, 2017

பள்ளி அருங்காட்சியகம்

– முனைவர். சுபாஷிணி

தமிழ் மரபு அறக்கட்டளை - பள்ளி அருங்காட்சியகம், மணலூர் அரசுப்பள்ளி கடந்த ஆண்டு இறுதியில் தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிகளில் ஒன்றாக மதுரையில் மணலூர் , சங்கரலிங்காபுரம் ஆகிய ஊர்களிலுள்ள பள்ளிகளில் மாணவர்கள் பராமரிக்கும் வகையில் பள்ளி அருங்காட்சியகங்களைத் தொடக்கினோம்.

அக்டோபர் 2017 இல் **தமிழ் மரபு அறக்கட்டளையின் வரலாற்றுப் பாதுகாவலர் குழுவின் மதுரைப் பகுதியைச் சார்ந்த செல்வி கிருத்திகா**வின் ஏற்பாட்டில் மேலும் ஒரு அரசுப் பள்ளியில் ஒரு பள்ளி அருங்காட்சியகம் தொடங்கியுள்ளோம்.

ஊராட்சி ஒன்றிய அரசுப்பள்ளி, மணலூர் கிராமம், திருப்புவனம் ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். தலைமை ஆசிரியர் - திரு. ஜோசப் அவர்களின் ஆதரவுடன், செல்வி. கிருத்திகா அவரது தனிப்பட்ட முற்சியில் இதுவரை சேகரித்த பண்டைய பொருட்களைக் காட்சிப்படுத்தி இந்த அருங்காட்சியகத்தைத் தொடக்கியுள்ளார்.

பள்ளி மாணவர்களும் இனி தங்கள் சேகரிப்புக்களைக் கொண்டு வந்து சேர்த்து இந்த அருங்காட்சியகத்தை விரிவடையச் செய்வர்.

நம் முயற்சியில் ஆர்வத்துடன் பங்காற்றிய பள்ளி நிர்வாகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் நெஞ்சார்ந்த நன்றி.

நிகழ்வில் மரங்களும் நடப்பட்டன. மாணவர்களுக்குத் த.ம.அ வின் மரபு பாதுகாவலர் குழு மதுரை கிருத்திகா அரும்பொருட்கள் பற்றி விளக்கமளித்தார் . பள்ளி அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது.

அன்புடன்
முனைவர். சுபாஷிணி
[தமிழ் மரபு அறக்கட்டளை]
அக்டோபர் 14, 2017

தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மண்ணின் குரல் மரபுக் காணொளிகள்:

[http://video-thf.blogspot.de/]

ஜூலை 22, 2017: திருஆனைக்கா - சிவப்புச்சேலை தாய்தெய்வ வழிபாடு

ஜூலை 29, 2017: பெருமுக்கல் கல்வெட்டுக்களும் பெருங்கற்கால குறியீடுகளும்

செப்டம்பர் 09, 2017: வரலாற்று ஆய்வறிஞர் திவான்

செப்டம்பர் 16, 2017: மறுதால்தலை பிராமி கல்வெட்டும் சமணர் கற்படுக்கைகளும்

செப்டம்பர் 30, 2017: மருங்கூர் - சங்ககால நகரம்

அக்டோபர் 07, 2017: நெசவுத்தொழிலும் கைத்தறியும்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மின்னூல்கள்:

[http://tamilheritagefoundation.blogspot.de/]

ஆகஸ்ட் 13, 2017: எழிலரசி கிளியோபாட்ரா

ஆகஸ்ட் 20, 2017: Kindergarten Room - மழலையர் பாடல்கள்

ஆகஸ்ட் 25, 2017: இடையன்வயல் கோபாலமடத்துச் செப்பேடு

செப்டம்பர் 02, 2017: பெர்னார்ட் ஷாவின் உன்னத மனிதன் - தமிழில்

செப்டம்பர் 22, 2017: காதல் நாற்பது - எலிஸபெத் பிரௌனிங் கவிதைகள் - தமிழில்

அக்டோபர் 14, 2017: ரிஷபா ஆதிபகவன் - ஆதி போதகர்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - வரலாறு கேட்போம்..வலையொலி வழி!:

[http://thf-podcast.blogspot.com/]

ஜூலை 18, 2017: தாலியும் மஞ்சளும்

ஜூலை 19, 2017: பழைய குருமார்கள்

ஜூலை 23, 2017: வரலாறு காட்டும் தைப்பூசத் திருவிழா

ஆகஸ்ட் 16, 2017: நில அபகரிப்பு பண்பாடு

ஆகஸ்ட் 18, 2017: வைதீகத்தின் இருண்டமுகம்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மண்ணின் குரல் மரபு ஒலிப்பதிவுகள்:

[http://voiceofthf.blogspot.de/]

அக்டோபர் 03, 2017: கொங்கு தமிழ் - 1. பகட்டுக்கு இரவல்

அக்டோபர் 05, 2017: கொங்கு தமிழ் - 2. பவளமணி

அக்டோபர் 07, 2017: கொங்கு தமிழ் - 3. வண்டி

(cc) BY-SA

THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

மின்தமிழ் மேடை

"தொல்லியல் ஆய்வால் நம் தொன்மை அறிவோம்"

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)
வெளியிடும் காலாண்டு மின்னிதழ்
மின்தமிழ்மேடை - காட்சி: 11
அக்டோபர் — 2017